உ

ஓம்.

சிவமயம்

ஸ்ரீவசிஷ்டமுநிவர், ஸ்ரீயிராமருக்கருளிச்செய்ததை
ஸ்ரீவான்மீகிமுநிவர் வடமொழியில்
முப்பத்திராயிரஞ், சுலோகமாகச்செய்த

ஞானவாசிட்டமகாராமாயணம்.

இதற்கு
ஆநந்தபோதேந்திர சுவாமிகள் வியாக்கியானஞ் செய்திருந்தபடி
திருப்பாதிரிப்புலியூர் - முத்துச்சாரங்கதேவசுவாமிகளின்
பிரதமசிஷ்ஷியராகிய
சென்னமாநகரம்.

கந்தப்பதேசிகரால்,

சிவராமபுரம் - சுப்பிரமணியசாஸ்திரியாரையும், திருவாலங்காடு
அப்பாவுதீக்ஷிதரையும், திருவஹீந்திரபுரம் - இராகவாசாரியாரை
யுங்கொண்டு, தேவர்கோட்டை - இராமசுவாமிசெட்டியாருதவி
யால்-தமிழில்மொழிபெயர்ப்பித்தது.

தருமசிவகெங்குசெட்டியார்

மோரீசு

முத்துச்சாமிபிள்ளை.

இவர்கள் கேட்டுக்கொண்டபடி
தமிழ்நடையாகத்திருத்தி.
புதுவை-ஞுவரின்மா-அச்சுக்கூடத்துத்
தமிழ்த்தலைமைப்புலவர்.

க-சுப்பராயமுதலியாரால்,

பாரதிவிலாச-அச்சுக்கூடத்தில் - பதிப்பிக்கப்பட்டது.

உ

வெற்றிவேலுற்றதுணை.

இஃது

உச்சிமேடுமுருகப்பமுதலியார்குமாரராகிய

மூத்தையமுதலியாரொன்றனைக்கும் முத்துவினைதீர்த்தமுதலியார்

பாடியது.

எண்சீர்க்கழிநெடிலடி

ஆசிரியவிருத்தம்.

சீர்மருவுசீதான்றிணைமதித்தமுதமூன்றேவாக்களித்தசிவ ஞா
  தெளிவுதருவாசிட்டமென்னும்விரிவடகலைத் தெண்டிரையினிற்பணிசைவாய்
பேர்மருவிராமசாமிக்குரிசிலெனுமாமை பிடரியிற்சுமந்தணிய ப்
  பிறங்கலைநிறுத்தி யப்பாவுதீட்சதரெனும் பீடுபெறுதுணைநாட் டி
நார்மருவுமுத்துசாரங்கதேவரகனு நாடியருள்செங்குமகி ப
  னளிநகர்வலியிற்றிரித்துதென்கலையமுதை நல்லசெனும்வள்ளவா ய்
பார்மருவுநரருக்கு முத்துச்சாமிப்பெரும் பண்பனூற்றெமடித்திரியா ற்
  பகிர்ந்திடக்கந்தப்பகுரவனுடைச்சுதன் பரிவுடனியற்றினனரோ. (௧)

சிறப்புப்பாயிரம்.



திருவளர் நிலமுதற் - பெருகியவதேக, லோவிலுருவின்மா - யாவி ளாசங்கட், கிருப்பிடமாய்ச்சர் - வாந்திரியாமியா, யொருபடலெலாவத் திரைத்தாதாரமாய் நித்தியநிருமல - மூற்றுவிளங்கும், அத்துவிதச்சித்தா - மா சத்தின்விராட், டுருவெனுமச்சுதன் - பரவையிற்றிரையென, வொருமை யிலுதித்தனன் - பெருமையிருங்கவன், பொன்மலைப்பொருட்டாய் - மன் னியைநிருபாய், வானுலத்தாதாய்த் - தானடுத்திலங்கும், இதயமேமன்றம் பதுமத்துதித்தே, யொப்பிலன்மறையுந் - தப்பில்செம்பொருளும், மூத்த நிமேளிச்சு - பெற்றவிதாமகன், பெரியதோரண்டத் - துரியசீவர்களைத், யா ங்காங்கவனித்துத் - தாங்காமகிழ்வுறீஇ, வதிந்தவக்காலம் - பொதிந்துளசீவ ர்கள், வேண்டல்வேண்டாமையி - லீண்டதுன்பின்பம், கூடிப்பிறப்பிறப் பெனுமூசல்தனில், தோய்ந்திடலன்றி - வாய்ந்திடுமற்ப, ஆயுளதனுள் - வா ய்போதந்தீஇ, திணைவிளுருஞ்சுடுபிரு விணையிலுமெலிதல், காணியவ ந்திப் - பெண்ணியசேயிடர், அகற்றிடவினைந்த - சகத்துயர்பிதாவென, விராஞ்சி - யாதரத்தோர்கணம், பொறித்தசித்திரமென - தெரிந்துடைமை யா, திருந்துசிந்தித்தோர் - மருந்தெனப்பொருடேரீஇ, ரியசாஸ்திரந், தூய்மையுற்றோங்க - வாய்மைநற்வழும், மறுவில்புட்ரைங்களும், மாறியசெயல்கள் - சாதகமாயினும், இருவினைமேனி பரித் - தருவினையொழிக்கொளு, வாதலினம்ம - வோதிடுமெதெரீஇ, மோனநிரதிசை - யானந்தமுற்றும், பேரின்பமொன்றத் - தோரின்பெருந்தா மம், அன்றிடற்றியாதினு - மொன்றிடப்படாதென, தம்பிரயத்தனன் - பெனவுதித்த, வசிட்டநாம - விசிட்டன்றனக்கே, யொப்பின்மெய்ஞ்ஞானநு செப்பினனிருந்தான், மாட்சியர்புகழுமைக் - காட்சியன்மகிழ்ந்து, துவக்சயமுறுதானைத், தயாதன்மகவில் - துயரிலுடைமரர், புமொழிக - விமலமாமணிமுடிச், சேடனுதித்திரியும் - கோடுந்தலை ட், பெருமையராக - வருமையிலுதித்த, நாராயணனெனுஞ் - சீ ருதீ, தெரிந்தனனதனைப் - பரத்துவலுக்குச், சிரியவான்மீகி - வாந், பன்னினன்பின்னும் - பொன்னனரிக்கிறைவன், கோடிவாரச, அரிட்டநேமிக்-கொரிட்டமெந்தன், வடாணையிலித், திரண்டெழுமூப்பா - னிரண்டாயிரஞ்சுலோ, ரகர-ணத்தால்விளம்பினன், சொல்லியவவற்றிற் - புல்லறநீரஇ,

திடுநிலத்திற் - பிறந்திடுமோர்பரம், வாடியகன்டாய் - [illegible]
தளிர்த்துப்பருத்துக் - கிளைத்ததுபோலத், திண்ணியவ[illegible] - [illegible]
ணியசிவர்கள், நெஞ்சிடைமுளைக்குங் - கொஞ்சமிலமல, [illegible]
ளைப் - பயிராக்கிடவும், விடயத்தோட - மடையக்கெடவும், [illegible]
துடைத்துத் - தேசுறுமணியென, பலமதுபோக்கிப் - [illegible]
யாக்கிடவுங்குணந் - தேக்கிடுசுலோக, மாயிரத்தைத்தரு - [illegible]
துதிவைராக்கிய - முதற்பிரகரணமும், யுத்திவாக்கியங்களிற் - [illegible]
வரும், மெய்த்தமுமுட்சுத்வ - வித்தகத்தன்மையுஞ், செப்பிடு[illegible]
ப்பதுசுலோகத், தறைந்தவிரண்டென - நிறைந்தமுமுட்சு, [illegible]
மோ - ரவிகாரவான்ம, ஞானப்புகறலு - மானப்பிறங்க, [illegible]
ந்-தானெனவிரண்டு, முன்னைமக்கின்றெனத் - தின்னைமைப்[illegible], [illegible]
த்தையிலுண்டெனக் - கவித்திடப்படவும், மன்னணி[illegible] - [illegible]
ன்னுறும்பாவை, திண்ணியவறிவான் - மன்னுறைநுபோல், [illegible]
ர் - சங்கமவுலகையு, முற்றியவறிவா - னுற்றநுதாக்கிற், [illegible]
மா - விளங்கிடுமன்றி, மற்றெருன்றின்றெனச் - சொற்றிய[illegible], [illegible]
ரமெனத் - தாழாதியம்பும், மூன்றுவதாய - வான்றவைற[illegible], [illegible]
பார்பாங் - காஅண்பாலுங், காட்சிப்பொருளுமா - காட்சி[illegible], [illegible]
லுமறுதி - காலந்தொட்டு, விருத்திபரிணமம் - பொருத்[illegible], [illegible]
தென்னச் - சொன்னஆவாயிர, மாயசுலோகத் - தேயநா[illegible], [illegible]
தியுஞ்சுவரிற் - பொதியத்தீட்டிய, சித்திரச்சேனை - வத்திர[illegible], [illegible]
ள்பழமையின் - மறுப்படத்தேய்ந்து, இலைச்சினைவிழிபி[illegible] - [illegible]
துபோல், புவனமியானென்னு - மவனீயெனனு, [illegible] - [illegible]
மில்சீவன், முத்தத்தன்மையிற் - பற்றியறிந்தாஞ், சித்தி[illegible] - [illegible]
வெனப், பன்னுஞ்சுலோக - மன்னுமையாயிரந், தோன்றிடு[illegible] - [illegible]
றவுபசாந்தியும், விடயமிலாமையை - புடையசிற்சொருபமும், [illegible]
மையு - மேயநின்மலமுங், குடிம்பமயக்கிற் - படுந்துனியி[illegible], [illegible]
த்தகுவனவெலாம் - வியப்பமுற்றியபின், அசைவிலாதவை[illegible] - [illegible]
நிலைமையும், எப்பொருடனக்கும் - வைப்புறுதன்மையும், [illegible]
ன - செயிரறுதிண்மையுங், காரணங்காரியங் - கருத்தகு[illegible], [illegible]
குவதுங் - கொள்ளத்தகுவது, மானவிவைகளில் - ஞானமு[illegible] - [illegible]
முண்டெனினுந் - தேகமின்மையும், பந்தமுண்டெனினும் - [illegible]
யுங், கருங்கற்போல்வெளி - தெரிந்திடாநிலைவும், [illegible]
மிலகியஞானமும், பரமப்பிரகாச - வுருவெற்பிறுனும், [illegible]

பல்லவையிருட்கல்வினை, யொப்பெனுங்குருட்டுத் - தப்பறுநிலையுங் [illegible]
லென்னும் - பேதியின்மையும், அகங்காரப்பசா - சகத்தருத்தன்மையும்
அரியமுதத்தேவருந் - தெரிதரவரிய, வொருபொருள்வளருங் - குருவிருப்ப
முமம், இயம்பியவிவைபெலா - நயம்படவமைந்த, சீவன்முத்திச் சிர்மைத்
தன்மையைப், பன்னும்படித்தநான் - காயிரத்தருந்து, மென்னுஞ்சுமேலா
கத் - தேன்றவாறுவகர, நிர்வாணப்பிர - சரணமுநீமியிவ் - வாறுயிரசரணத்
தமைந்தசுமப்பானிரண், டாயிரத்தசுலோகமா - வாரியத்தமைத்தநப், பேசி
ட்டவண்ணமை - பிறங்கியதாரு, வாசிட்டவுத்தர - ராமாயணந்தனை, [illegible]
மொழியபியத் - திடமின்மாவடைருமு, அதித்ஞம்பிர[illegible]த்தி - பதிலிலா[illegible]
திராவிடமந்தும் - பராவதிவிலாருமு, எளிதுணர்பொருட்டா - வளியு[illegible]
திறைந்து, செந்நெல்விளைவயல் - மன்னியவாளை, விண்ணுயர்தெங்கி
னறைக்கழமுதிர்தரத், தாக்கியப்போருகப் - பூக்கணைவந்துறங்கும், [illegible]
விலாகமைந்த - திறைநீரவளமும், புவியினின்றெழுந்து - கவி[illegible]
ருயர்ந்துறிறுடைத்துத் - தயங்குடைந்தருவின், அளியினமுரன்ற - [illegible]
தருவருந்தி, வொங்குநிர்த்தாவைய - கங்கையைத்தூர்க்கும், பொழிலப[illegible]
றுவு - வெபழிலுமேமாக்கைகளை, வளையினின்றெளிரு - முளைமணி[illegible],
வொழித்திழிந்தோமம் - பழிப்பில்லாவிரிஞும், சோழநன்னுட்டுத் - [illegible]
லாவிறுறை, மருங்குவைமடி - புரந்தங்கிவாமும், அப்பாவைய - [illegible]
பறவிக்கு, சுப்பிரமணியத் - தூயசாஸ்திரியையுந், திருவாவடு[illegible]
வொருமாவீங்கும், அப்பாவுநீசுத - ரிப்பாரித்தின்னும், அரியப[illegible]
துரை - முரியபாகவான்மி, மாண்டபியீங்கிளைங்கும் - பாண்டியநா[illegible],
மருந்திபருத்துறை - யொருபருங்குலங், துட்டமாந்தேவர் - [illegible]
மம்பத்பாள், [illegible] - செல்வமாமிரக்கங், கொடைய[illegible]
தன் - [illegible], [illegible] - சுதிமானவளர, [illegible]
[illegible] - ஞானமதாங், [illegible] - வொண்பொருளாபிய, [illegible]
[illegible] - [illegible], தனையங்கைநெட்டிக் - கணிவயன[illegible]
தோன், கிரித்தொருபரத்தை - பெரிக்கநம்படைவன், முண்டவிழித்[illegible] - [illegible]
ண்டி[illegible], [illegible] - கந்தரமமைந்தோன், பா[illegible]
லாத - [illegible], [illegible] - பொருத்தியத்அிக்க, [illegible]
[illegible] - பிரமசாவியன்னைல், ஒப்ப[illegible] - செப்ப[illegible],
[illegible] - மொழிபெயர்ப்பித்து, இப்பெருந்தகைமை - [illegible],
பித்தநாஸ்யாரு - நன்னெறியெல்லை, வாக்கொடைபுடையுந் - தேக்குசெந்[illegible],
[illegible] - [illegible], அத்துணர்நலத்தில் - [illegible]

இடைநிலத்திற் - பிறந்திடுமோர்மரம், வாடியமண்டாய் - [illegible]
நனீர்த்துப்பருத்துக் - கிளைத்தருபோலத், தின்னியவுரு[illegible] - [illegible]
னியசீவர்கள், நெருக்கிடைமுளைக்கும் - னெருஞ்சமிலமல, [illegible]
ளைப் - பயிராக்கிடவும், விடயத்தோட - மடையக்கிடைவும், [illegible]
துடைத்துத் - தேசுறுமணியென, படைத்துமேபோக்கிப் - [illegible]
பாக்கிடவுங்குணந் - தேக்கிடுகமேலாக, மாயிரத்தைத்துடு - [illegible]
துதிவைராக்கிய - மூதத்திரணைமும், புத்திவாக்கியங்களிற் - [illegible]
ருளும், மெய்த்தருமமோனத்வ - வித்தைத்தன்மையுஞ், செப்பிலிமை[illegible]
ப்பருசலோகத், தறைந்தவிரன்டெ - நிறைந்தகுருபரனை, [illegible]
மேமா - நவிராவான்ட, ஞானப்புரானு - மானப்பிறவ, [illegible]
ந்-தாமெனவிரண்டு, முன்னைவில்லிற்றைத் - திருப்பா[illegible], [illegible]
த்தையிலுண்டெனக் - கவிதிப்பாடிடவும், [illegible]
ன்றுறுமம்பாவை, தின்னியவறிவான் - மன்றுனைறுமேயல், [illegible]
ரி - சங்கடவுலகைப, மூத்திபவறிவா - [illegible], [illegible]
டமா - விளக்கிடமன்றி, [illegible] - [illegible], [illegible]
ரமெனத் - தாமுறிடப்பும், மூன்றுவழாய - வான்தைத்[illegible], [illegible]
பார்பாங் - காஅண்பாகும், காட்சிப்பொருளுமா - [illegible], [illegible]
லுமருதி - காலந்தொட்டு, விருத்திபரிணமம் - பொருள்[illegible], [illegible]
தென்னச் - சொன்னமூவாயிர, மாயமோரத் - தேயமா[illegible], [illegible]
நியுஞ்சவரிற் - பொறியத்திட்டிய, சித்திரச்சேனை - வத்[illegible], [illegible]
னபமுமையின் - மறுப்படத்தேற்றுது, [illegible] - [illegible]
துபோல், புவனமியாவென்று - மவனியாவ்று, [illegible] - [illegible]
மில்சீவன், முத்தத்தன்மையிற் - பற்றியதிந்துஞ், சித்திவ[illegible] - [illegible]
வெனப், பன்னுஞ்சமோக - மன்றுமையாயிரத், தேஜாக்[illegible] - [illegible]
றவுபசாந்தியும், விடயவின்மையை - புடையக்கிதொருபுரம், [illegible]
மைப - மேயநின்மலமும், குறிப்பாயக்கித் - பழுதுறுவியப்[illegible], [illegible]
த்தகுவனவெலாம் - விரப்பமுறியியில், அசைவிலா[illegible] - [illegible]
நிலைமையும், எப்பொருடனக்கும் - வைப்புறுதன்மையும், [illegible]
ன - செயிரறுதிண்மையுங், காரணகாரியங் - கருத்தறு[illegible], [illegible]
குவதுங் - கொள்ளத்தகுவது, மானவிலைகளில் - குரு[illegible]
முன்னெனிலுந் - தேகமின்மையும், பற்றுமன்டவிழும் - [illegible]
யுங், கருங்கற்போல்வெளி - தெரிந்திடறிவாயும், [illegible]
மிலகியஞானமும், பரமப்பிரகாச - வருபெறு[illegible], [illegible]

யிடையிருட்கலின்னே, யொப்பெனுங்குருட்டுத் - தப்பறுநிலையுங், கா
லென்னும் - பேதுயின்மையும், அகங்காரப்பசா - சகத்துருந்தன்மையும்
அரியமுதத்தேவருந் - தெரிதரவரிய, வொருபொருள்வளருங் - குருவிருதய
மும், இயம்பியவிவைபெறா - தயம்படவமைத்து, சிவன்முத்திச் சிர்மைத்
தன்மையைப், பன்னுப்படுத்துரான் - னாயிரத்தருத்து, தென்னுஞ்சகோ
சத் - தேசறவாருவதா, நிர்வாணப்பிர - ரணமூதிப்பில் - வாறுயிரகாணத்
தமைந்தருப்பாளிரண், டாயிரத்தக்கோவைமா - வாரியத்தமைத்துப், பெரி
ட்டவுண்மை - பிறங்கியருநா, வாபிட்டவுந்தர் - ராமாயணநலை,
மொழியறியத் - திடமின்மாணடரும், அதித்துஅம்மேித்துத்தி - யதிவிராதவு,
திராவிடமறிந்தும் - பராவதிவிராருதம், எளிதுணர்பொருட்டா - வளிபுள
நிறைந்து, செஞ்னல்விளைவயல் - மஞ்ஞியவானோ, வின்றுயர்பெருசி
றைண்டமுமிர்கரத், தாக்கியம்போருகப் - பூக்கனவத்துறங்கும், குவைற
விலாகனைந்த - நிலைதீரவளமும், புவியினிம்மிறுத்து - கவிநிறுடியா
துயர்ந்துநிறுடைத்துத் - தயங்குடைத்தருவின், அவியினமுமான்று - அமி
தருவருந்தி, னொங்குதித்தாளய - கங்கையைத்தரிக்கும், பொறிப்படம
ருவு - மெழிலுப்போர்ககைை, வளையினிஞ்ஞெளிரு - முனைபடனிலைய,
கொழித்திழுந்தோடும் - பழிப்பிக்கனிரிதும், சோமுகன்முட்டித் - குட்டி
லாவிருத்தை, மருந்துநிவாமை - பரந்தங்கிவாறும், அப்பாலையை - மேட்
பறவளித்த, கப்பிரமணியத் - தூயசாஸ்திரியையுந், திருவாலங்கா
லொருமாலித்ததும், அப்பாவுந்தைத - ரிப்பாரிற்பின்னும், அரியபடை
துவாயு - முரியாக்கொண்டு, மாண்டபிறப்பினருதம் - பாண்டியநாட்டு
மருதிருப்பெருந்துறை - பொருபருங்குவிக், குட்டமாந்தேவர் - கோடை
யம்பதிவார், ... - செல்லமாமாக்கம், கொடையுடை
நன் - னைடைருசுவீரம், ... - ... , ...
துக்குத் - தாணமதாக, ... - மென்பொருளியா, ...
யன்றேமிதுந் - சிவமாம்பிரமம், ... - ...
பேடான், இரித்தெருபுபரத்தை - யொரித்துதங்கடவுள், மூண்டவிழுத்திரி - ...
ண்டிடமடைதன, ... - ... , ...
லாத - வீரப்பசெட்டிபா, ... - பொருத்தியத்துதிக்க, ...
மகாபியாகு - மிராமவியன்னைக், ... - செப்ப ... ,
கழிபதனை - மொழிபெயர்ப்பித்து, இப்பெருத்தகைமை - ... ,
யித்துஸ்யாரு - தன்னுறப்பெய், ... - தேக்குங்குதிரதில்,
நடையும்வயுதரம் - ... , அத்துணர்நலத்தில் - ...

ரித்தே, வடமொழியிலக்கிய - மடநிகுமிலக்கண, மறைமுதனோதி - களையி
லாதுணர்ந்து, தென்மொழியடற்கலை - யன்னுறக்கண்டு, அறிவிலிலா
தியார்க் - கறிவிப்பதாகுந், திறமுந்தவமு - மறமுந்தழீஇ, நாகஸ்ரீநி
பிராஞ்செனுமிராஜ, தானியினிலைத்த - தானநற்றருமச், சங்கலவ
னென்-றெங்குந்துதிக்க, வாரியவறனூல் - சீரியதமிழின், மொழிபெயர்த்
திடுச் - செழும்புகழ்கொண்டோன், பூமிபுகழிராம - சாமிசவுந்திரியால்
பழுதறவாய்ந்த - விழுமிதாமதனை, எழுதாவெழுத்தி - லினைத்துத்தரு
கென, பூமகண்மருமம் பொலிதருமதாணியிற், சூழறப்பதித்துத் - துலங்
குநன்மரகத, மணியெனச்சூழ - மணிநிகழ்தண்டலை, யுட்புறஞ்சூழப்
பெட்புறபதித்த, பலவயிரமணியெனச் - சொலவரியவுறையுளுந், நடுப்பணி
ன்றிலங்கு-நடுநாயகமாம், பரியசெம்மணியென - வரியரதியமுமை, பொன்
னெனுந்தையன் - மனனிவீற்றிருக்குந், கமலமலர்நிறை - யமலநீர்த்தடமு
ஞ் - சங்கமீன்றிட்ட - பொங்கொளித்தரள, நிலவினற்பலவின் - பலவளர்
வயலும், ஆதியவளங்கள் - நீதியினமைந்து, மறுவினைநீத்து - நறுமண
முலவும், மருதங்கள்செறிந்து - குறைவிலாதொளிரும், [illegible]
தபுதுவைபம்பதிவாழ், அவ்வைக்குப்பொற்படாஞ் - செய்மையினைநிகழ்த்
தாதியைக்கேட்குங் - கோதில்சீர்புகழுங், கச்சிமேகம்பர்தம் - பொற்கிநல்லா
லயம், பொன்னினிவிபற்றிபூ - மன்னுறுபுகழும், மூடக்கூடாவனைத் - திடக்
கின்மூச்சாட்டாற், கோத்துநீநிலைக - மேத்துமோர்புகழும், புவிமிசைக்காவே
ரூழ்-காவிரியாற்றைப், பஞ்சிலுலைணசெய - மிஞ்சியபுகழுமமைந்த, தாயி
சங்கோத்திர - மெய்யெழில்வசியராந், தேவர்கட்கிந்திர - ஞெனுநின் செல்வத்,
துரியதோர்மாலை - யுரியதாங்குணத்தாக், இருளறவிளக்கி - லொருமைய
யொப்பான், கல்வியில்வல்லன் - மெல்லியசொல்லன், விழுப்பமுறுதல்
லொழுக்கநடையினன், இருசுடர்மாறி - யொருபுவியிருளினுஞ், சொல்லன
சொற்றவறுறுத் - தூயநன்றுவினன், காலமொன்றினிற்பல் - காரியநடா
த்து, மறிவினிற்சிறந்த - வவதானியாவன், நன்னுமையொருகால் - மன்
னிநின்றிரந்தோன், இல்லிடையனேகருக் - கிப்பிடைவளிப்போன், கம்பீர
மணியனை - யொப்புறுமொழியினன், காட்சிக்கெளியென - மருளோக்காக
நம், உமையொருபாகத் - தும்பர்பிரானடி, யனுதினம்வணங்கி - யவன்
புகழ்வழுத்திப், பஞ்சாக்கரந்தனை - நெஞ்சகமிருத்துவன், அவனடியவ
ரையப் - பவனெனமதிப்போன், வேதாகமங்களின் - விரிவாய்த்துன்று
றை, நாதாந்தப்பொரு - ளுடமெஞ்ஞானி, நாவர்தம்வாய்மொழி - பெரி
துளமதித்துக், கூறியாங்கியற்று - மாறில்சீருடையான், திருமறுமார்பன்
செவ்வியவுருவெனத், திகழ்சுப்பராயவேள் - மகிழ்சிவசிதம்பரம், கன்று

மெனவுனு - மண்ணுடலைப்புமாம், அரியமூவரையு - மூரியதம்பியராக், கொ
ண்டுசீராமன் - பண்டுருபுகழ்போல், நால்வராய்வந்து - நண்ணியபக
ழோன், மங்கலமனையா - டங்குணக்கிசைந்து, நன்கலனென்ன - மிகு
மாட்பேறுளோன், வாய்மொழியதனு - ணேயுடைந்திரியக், கண்டிடுமிணை
யில் - பண்டிதனுகும், அரியதோர்விவேகப் - பெரியசாமிக்கோ, கூறும்
வாய்மொழிநற் - றேறலாக்கொள்வோன், ஆரூரனுக்குச் - சேரமான்போ
லுஞ், சிதம்பரபூபன் - இதம்பெறுநண்பினன், அட்டலட்சுமியு - மிட்ட
மாயுலவும், மட்டிலாப்பொருணிறைந் - திட்டபொன்வாயிலான், தருமசி
வமெனுந் - தகைமிகுகுபேரன், அருந்தவத்துதித்த - பெருந்தகையாகுங்
கொங்கலர்மருமக் - கெங்குபூபதியுங், காரிணைப்பழிக்குங் - கையுந்தூய்ய
மேரிணைப்பழிக்கும் - விறன்மிகுபுயமும், நற்குணமென்பவை - யனைத்
தையுநண்ணி, சிற்குணத்தன்பு - சிறந்துறவைத்தோன், நித்தமும்பகலா
னிடைத்திடைவிடாத, சித்தமும்பரமபா - தவத்தொரணபத்தியுங், கல்விப்
பொருளைக் - கைவசப்படுத்தியுஞ், செல்வப்பொருளைச் - சித்தியாக்கியும்
நாவலர்தமிழினை - நன்குறக்கேட்டும், பூவலர்கற்பகப் - பொருந்துமிந்தி
ரனுங், காவலன்போகமுங் - கண்டுளமகிழ்வும், பூவலரக்கணைமதன்
பொற்பும்படைத்து, யாதவர்குலத்தலை - யழகுறவிலக்குவோன், பத்து
த்திக்கும் - பரவுகோபாலமால், சித்தித்தவத்தா - லீன்றருள்செல்வ, மூ
த்துச்சாமி - மூதறிவோனுந், செப்பினராகச் - சீர்சாலுமவர், செந்நெ
ற்கயல்வளர் - செங்கரும்பொடித்துப், பன்னற்கருங்குரும் - பாட்டிலோய
ப்ப, வன்னருமுத்தங் - குறிநும்பொற்புந், துன்னியவடல்கலைந் - ச்
குறும்பாதிரிப், புலிசைமடாதிபன் - போந்தமாகேசன், வீரசைவம்விளக்
கியவிறலோன், நிகமாகமோக்த - நேர்சிவாத்வைத, சித்தாந்தந்தேர் - தே
வாசிரியன், முத்திக்கொருவித் - தாகியமொய்ம்பன், பத்திக்கோர் - வா
கியபண்பன், ஆரியஞ்செந்தமி - ழாதியாங்கலைக்கடல், முத்துச்சாரங்க
தேசிகமூர்த்தியின், ஆன்மஞானப் - போதமறிவுறூஉம், பான்மைவிளங்கி
ய - பக்குவர்சிலரோ, டவர்களிற்சுகோதைய் - மாகும்மெய்ஞ்ஞான, மிக்கியவா
ய்த - மேன்மையுமுடையோன், கோலத்திருவதி - காபுரிகுணக்கிறைஞ்சு, நீல
த்திருமாணிக் - குழிகுடக்கிலுமை, எகநுதா - யகமெனவிருக்கும், விட்டப
வோங்கிய பெட்புறுபலவின், மூட்பறமேவிய - மூதீர்பழங்கனிந்திட், ட
ற்றுவீழ்ந்தாங்காங் - கருநறவொழுகித், தேற்றலைமோதுறுஞ் - சீருடை
வளையிடை, யூற்றுநீரோ - டளாயொருகால்வழிந், தேற்றநற்பணைதொ
று - மெழிர்த்துறப்பாயுஞ், சீருங்கமுகின் - றிணைகுலைபழுத்துப், பாரும்

ஓம்

ஞானவாசிட்டம்

மகாராமாயணம்

ஸ்ரீமஹாகணபதிசரணாரவிந்தாப்யாம் நம:
ஸ்ரீசரஸ்வத்யை நம: ஸ்ரீ குருப்யோ நம:
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே நம:

பிரமத்தையும்- பிரமத்தையறிந்தவர்களையும் -பிரமவித்தையின் சம்பிரதாயத்துக்குக் கர்த்தாக்களாயிருக்கின்ற - வசிஷ்டவிசுவாமித்திரவியாசவான்மீகிசுகர்முதலானவர்களையும் - ஸ்ரீராமபத்திரனையும் நமஸ்கரிக்கின்றேன்.

கடவுள்வாழ்த்து.

(அவதாரிகை) சீவர்கள் அநாதியான மகாமோகமாகிய இராத்திரியிலே தூங்கிக்கொண்டிருப்பதால்-எப்போதும் துற்சொப்பனப்பிராந்திகளுடைய பரம்பரையினால் கற்பிக்கப்பட்ட சநநம் சரை பயம் மரணம் சந்தோஷம் பொறுமை சோகமுதலிய அநேக அநர்த்தசங்கடங்களாற் சூழப்பட்டும் இந்திரியங்களும்விஷயங்களுமாகிற புலிகளாலுடைய பயங்கரமாயும் அத்தியாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதெய்விகமென்கிற தாபத்திரயமாகிய காட்டுத்தீயினுடைய சுவாலைகளாற்சூழப்பட்டும் சோகம் மோகம் பசி தாகம் சரை மரணமென்கிற சவூர்மியாகிய வலையையுடையதாயும் காமக்குரோதாதிகளாகிற வேடர்களாற்கொல்லப்படுகின்ற பிராணிகளின் கூட்டத்தையுடையதாயுமிருக்கின்ற சம்சாரமாகிறபெரிதானகாட்டில் மிகவும் மோகத்தையடைந்ததனாலே விவேகமில்லாமலும் விவேகமுண்டாவதற்குபாயமகப்படாததினாலே விசனமடைந்துமிருக்கின்ற இந்தச் சீவர்களைப்பார்த்து சாஸ்திரமாகிற சூரியோதயத்தினால் அந்தச்சீவர்களுக்கு விவேகமுண்டாவதற்காக ஸ்ரீபகவானான பிரமாவினுடைய உத்தரவினாலுந்தன்னுடைய சித்தத்தினாலும் மிகவுந்தயவுள்ளவரான ஸ்ரீவான்மீகர் இந்தச் சாஸ்திரத்தை சித்தநஞ்செய்தார். இப்படி சித்தநஞ்செய்த பெரிதான சாஸ்திரம் நிர்விக்கினமாய் நிறைவேறி

பொன்னிறம் - பற்றுறுதகைபெறு, மருதமுங்குறிஞ்சியு - மருவியவளமலி, சொன்னமாநகரெனுஞ் - சென்னமாநகர, மிந்நகரந்தனிற் - பொன்னுறுவளமும், மன்னியவறிவுந் - துன்னியபரிவு, நன்னயமெய்ப்பொருளுன்னியவடியார், தம்மைப்பத்திசெய் - இம்மையுமம்மையும், பெற்றினிதோங்குறு - நற்றவமிகுசெங், குந்தர்கள்போற்றுறு - கொள்கையின்விளங்குறு, கங்கையஞ்சடைமுடி - கயிலாயநாதர், சங்கருள்பொழிந்தரு - டவிவீற்றிருக்கும், பொங்குபொற்கோபுரக் - கோயிலுக்கடுத்த, மேன்பாலவீரசிங்காதனந்தனக்குக், காரணகருத்த - ராகியுந்தேகா, மகத்துறுமாருபெரு - மகத்துவமுடைமையும், இகத்துறுவீர - சைவருக்குருந்தொத், நமத்திருந்தருள்செயுங் - குருவாசாரிமையுந், தாங்கியபட்சச - சேத்திரவாமியா, ரோங்கியபெரிய - மடமொன்றமைந்தது, அக்கமெய்ய - நாரசீலயிலின்கீழ்ப், பக்கத்தினிமைப் - பரிசிறோங்கிய, சுகமடத்தினையன் - புடனாபர்வோர்சொலும், அம்மடந்தனிற்சுகா - தனத்திருந்தருள்செய், வின்னரசுரிமை - விளக்கியமாண்பினன், சைவசமையந் - தழைமுறைநித்தொருவேதாந்தத்தின் - விரிபொருளுணர்ந்துஞ், சித்தாந்தத்தின் - நிறைபொருளறிந்துஞ், சத்தாகியவொரு - சமரசமேவினன், கன்னியரமைக்கிற - கன்னியனாகியுஞ், சொன்னமயக்கிகச் - சொன்னவண்டலையுடையும், மன்னனினமயக்கிகு - மண்ணியமனமுந், திண்ணிதாகச் - சேரியவருளை, இன்னனிசுழறிவி - னுயரதுறவறத்தினை, நண்ணியபிரமா - நந்தமாயினையுடையோன், சின்னுள்திவ்விய - தேயதேயஞ்செலீஇப், பண்ணுறுமுயன்றுறும் பக்குவமெய்தினன், செந்தமிழாதிய - கலையுணர்தெளிவாள, வேதாகமங்களின் - விரியினிலுளாக்கும், போதநாதாந்தப் - பொருளினைவிருப்பி வந்தவர்மதியள - வறிந்துபோதிக்குஞ், சந்தக்குசைநனி - கூரியுறுசிறிய, புத்திவிளங்குறும் - புண்ணியபோதகன், இவ்வாசிரியனுக் - கோவாசிரியரு, மொப்பிலவொன்று - செப்பிடவிளங்க, அக்கிறப்புகழ்ப்பிடி - நருளினன் சச்சிதாநந்தகந்தப்பதேசிகனே.

இஃது.

பட்டாம்பாக்கம்.

மேலைமடம்-சுப்பராயவையராற்சொல்லப்பட்டு
புதுவை, குவர்ன்மா - அச்சுக்கூடத்துத்தமிழ்த்தலைமைப்
புலமை-க-சுப்பராயமுதலியாரா லாராயப்பட்டது.

ஓம்

ஞானவாசிட்ட

மகாராமாயணம்

ஸ்ரீமஹாகணபதிசரணாரவிந்தாப்யாம் நம:
ஸ்ரீசரஸ்வத்யை நம: ஸ்ரீ குருப்யோ நம:
ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே நம:

பிரமத்தையும் பிரமத்தையறிந்தவர்களாயும் பிரமவித்தையின் சம்பிரதாயத்துக்குக் கர்த்தாக்களாயுமிருக்கின்ற வசிஷ்ட விசுவாமித்திர வியாச வான்மீகி சுகர் முதலானவர்களையும் ஸ்ரீ ராமபத்திரனையும் நமஸ்கரிக்கின்றேன்.

கடவுள்வாழ்த்து.

(அவதாரிகை) சீவர்கள் அநாதியான மகாமோகமாகிற இராத்திரியில் தூங்கிக்கொண்டிருப்பதால் எப்பொழுதும் துற்சொப்பனம்போல பிராந்தியினுடைய பரம்பரையினால் கற்பிக்கப்பட்ட சநனம் சரை பயம் மரணம் சந்தோஷம் பொறுமை சோகமுதலிய அநேக அநர்த்த சங்கடங்களாற் சூழப்பட்டும் இந்திரியங்களும் விஷயங்களுமாகிற புலிகளாலே பயங்கரமாயும் அத்தியாத்மிகமாதிபௌதிகம் ஆதிதெய்விகமென்கிற தாபத்திரயமாகிய காட்டுத்தீயினுடைய சுவாலைகளாற் சூழப்பட்டும் சோகம் மோகம் பசி தாகம் சரை மரணமென்கிற ஷடூர்மியாகிய வலையையுடையதாயும் காமக்குரோதாதிகளாகிற வேடர்களாற் கொல்லப்படுகின்ற பிராணிகளின் கூட்டங்களையுடையதாயுமிருக்கின்ற சம்சாரமாகிற பெரிதான காட்டில் மிகவும் மோகத்தையடைந்தவர்களாய் விவேகமில்லாமலும் விவேகமுண்டாவதற்குபாயமகப்படாததினால் விசனமடைந்துமிருக்கின்ற இந்தச் சீவர்களைப்பார்த்து சாஸ்திரமாகிற சூரியோதயத்தினால் அந்தச்சீவர்களுக்கு விவேகமுண்டாவதற்காக ஸ்ரீ பகவானான பிரமாவினுடைய உத்தரவினாலும் தன்னுடைய சித்தத்தினாலும் மிகவும் தயவுள்ளவரான ஸ்ரீவான்மீகர் இந்தச் சாஸ்திரத்தை சித்தஞ்செய்தார். இப்படி சித்தஞ்செய்த பெரிதான சாஸ்திரம் நிர்விக்கினமாய் நிறைவேறி

விர்த்தியாகும் பொருட்டுச்சுருதி ஸ்மிருதி பெரியவர்களுடைய நடத்தை இவைகளால் சித்தித்ததாயும் சகலவிக்கினங்களையும் வேரோடுபோக்கும் படியானவல்லமையுடையதாயும் சச்சிதாநந்தமாயும் அத்விதமாயுமிருக்கின்ற பிரத்தியேகாத்மாவான பரப்பிரமத்தைவணங்குகிற மங்களத்திற்றானே இச்சாஸ்திரத்துக்கு விஷயப்பிரயோசனத்தைத்தடஸ்தலட்சண சொரூபலட்சணங்களாற்சுருக்கிக்காட்ட இச்சையுடையவராகி முன்னே எதினின்றுமிந்தப்பூதங்களுண்டாச்சுதுகளோ உண்டானபூதங்கள் யாதொன்றினாலபிழைத்திருக்கின்றதுகளோ யாதொன்றையடைந்து லயத்தையடைகின்றதுகளோ அதைப்பிரமமென்றறி) என்றுசொல்லுகிற சுருதியிற்சொல்லப்பட்ட தடஸ்தலட்சணத்தினால் சித்தித்திருக்கிற சத்தாயும் அத்துவிதமாயுமிருக்கின்றதற்பதார்த்தத்தைவணங்குகிறார் |

யதஸ்ஸர்வாணி பூதாநி ப்ரதிபாந்திஸ்திதாநி ச
யத்ரைவோபசமம்யாந்திதஸ்மைசத்தியாத்மநேநம: (௧)

இதன்பொருள் - எதார்த்தமாயும் சத்தாயும் அத்துவிதமாயும் உபாதாநகாரணமாயுமிருக்கிற எந்த ஆத்மவஸ்துவினின்றும் ஆகாசமுதலியமகாபூதங்களும் அப்பூதங்களாலுண்டாகின்ற தேகமுதலானகாரியங்களும் சிருஷ்டிகாலத்தில் எந்தப்பிரமத்தினுடையசத்தையினாலேயே இருப்பையடைந்து தோற்றுகின்றதுகளோ அப்படியே திதிகாலத்திலும் எதினுடைய சத்தையினாலேயே இருக்கின்றதுகளோ அப்படியே பிரளயகாலத்திலும் எந்தப்பிரமத்தின் சத்தாமாத்திரமாகவே சேர்ந்து மறைவையடைகின்றதுகளோ தன்னிடத்திலாரோபிக்கப்பட்ட பதார்த்தங்களுக்கெல்லாம் தான்பாரமார்த்திகசொரூபமாயும் சகலபிராணிகளுக்கும் எதார்த்தமான ஆத்மசொரூபமாயுமிருக்கின்ற அப்பிரமத்தைநமஸ்காரஞ்செய்யாநின்றேன் ❋ விநாயகர்முதலியதேவதைகளிருக்கப்பிரமத்தை வணங்குவானேனெனில் (பிரமத்தினிடத்திற் சகலதேவர்களுமொன்றாயிருக்கின்றதாகச் சுருதியிருப்பதால்) பிரமத்தை நமஸ்கரிக்கில் சகலதேவதைகளையும் நமஸ்கரித்ததாகவாகின்றமையாலிவ்வாழ்த்து எவைக்குமேலானதாயும் சகலவிக்கினங்களையும்போக்குவதாயும் மேலானபலனைத்தருவதாயுஞ்சித்தித்தது. இச்சுலோகத்தில் முதலாவதுமூன்றுவதாயிருக்கின்ற விரண்டுபதங்களாலிவ்விரண்டுபதங்களையுடைய சுருதியினாலும் முதற்பதத்தை மாத்திரமுடையவியாசசூத்திரத்தினாலுஞ்சொல்லப்பட்ட இலட்சணமேயிதுவென்று தோற்றுதலாலிவ்விலட்சணத்துக்கு அச்சுருதிசூத்திரங்களே மூலமாகையால்சா

ங்கியர்முதலியோர்களாற் சொல்லியிருக்கின்றமகத்தத்துவமுதலியகாரணத்தினாலும் பாஸ்கரனென்கின்றரிஷியினாற்சொல்லியிருக்கின்ற அவாந்தரகாரணங்களினாலும் இவ்விலட்சணத்துக்கு + அதிவியாப்தியென்கின்ற தோஷமில்லை இச்சுலோகத்தில் எதில்நின்றுமிப்பிரபஞ்ச முண்டாயிற்றோவென்று சொன்னதினாலேயே உபாதானகாரணத்துவங்கிடைக்கின்றமையால சிருஷ்டிமுதல்மூன்றையுஞ் சொன்னது மூன்றுலட்சணத்தையுங்காட்டும் பொருட்டென்றுசிலர்சொல்லுகின்றனர் நிமித்தகாரணத்துக்கும் பஞ்சமி காணப்படுகின்றமையால் நிமித்தகாரணமும் லயத்துக்காதாரமென்றுசொன்னதினால் உபாதானகாரணமும் சித்திக்கின்றது திதிக்கேதுவென்றுசொன்னதினால் ஞானமுடையவர்கள்தானே இரட்சிக்கின்றவர்களாகக் கண்டிருப்பதினால் அக்காரணம் ஞானத்தையுடையதென்று கிடைக்கின்றமையாலிச்சகத்துக்கு வேறொருகர்த்தாவில்லையென்றுசித்தித்தது ஆகையாலிம்மூன்றினாலும் உபாதானகாரணமும்நிமித்தகாரணமும் ஒன்றென்றுசித்தித்தது அவ்வொன்றையேலட்சணமென்றுசிலர்சொல்லுகின்றனர் வஸ்துசுபாவத்தைபார்க்கும்போது (சத்தியமென்றும் ஞானமென்றும் அநந்தமென்றும் பிரமலட்சணத்தைத் தொடங்கிச்சொல்லுஞ் சுருதியிலும்சன்மாத்திரமேமுன்னமிருந்ததென்றுசொல்லுஞ் சுருதியிலுங்காண்பிக்க) அத்துவிதமாயும் சன்மாத்திரமாயுமிருக்கின்றவஸ்துவைத்தெரியபடுத்துகிறநிமித்தம் (இவ்வாத்மாவிலிருந்துமாகாசமுண்டாச்சுதென்றுசொல்லுஞ்சுருதியினாலும் அவ்வாத்மாதேசசைச்சிருஷ்டித்ததென்றுசொல்லுஞ்சுருதிமுதலானத்தினாலும்) தடஸ்தலட்சணஞ் சொல்லபடுகின்றமையால (இச்சகப்பிரபஞ்சமும்பிரமசொரூபம் அப்பிரமத்திற்றானேயுண்டானது அதிற்றானேபிழைக்குது அதிற்றானேலயிக்குதென்றுமதைச்சாந்தனாயுபாசிக்கவேண்டுமென்றுஞ்சுருதியிற்காட்டப்பட்டமார்க்கத்தினால்)உற்பத்திமுதலானமூன்றுகாலத்திலுஞ் சத்திருக்கின்றமையால் காரியங்காரணத்தைவிட்டுப் பிரிந்திருக்கின்றதாய்த்தோற்றுதலினாலும் காரணத்தினுடைய இருப்பினாலேயே இருப்பையடைந்திருக்கிறதத்தினாலும் பிரமத்தினிடத்திலாரோபிக்கப்பட்டிருக்கின்றகாரியங்களெல்லாம்அவித்தையினாலுண்டாயினபொய்ம்மையாயுமிருக்கின்றன. காரணமானதத்துவமேபிரமமென்கின்றவஸ்து அதுசத்தியமென்றும் அத்தியாரோப அபவாதங்களால்பிரபஞ்சமில்லாமலிருக்கின்றதேவிஷயமாகவும் அதுவேபிரயோசனமாகவுஞ்சித்திக்குதென்றுஞ்சொல்லும் பொருட்

+ அதிவியாப்தியாவது கொம்பையுடையது கோவென்றுவிதரந்துக்குமுண்டென்றுவருவதெனவறிக.

...ஸிருஷ்டி ஸ்திதிலயங்கள் மூன்றோடுங்கூடின லட்சணத்தைச்சொன்னது. இம் ...ஜன்மாத்யஸ்ய யதோன்னைமாத்திரஞ் சொல்லிநகாரியம் விவர்த்தமென்னு ...கிறது ஆகையாற்றான் சுருதியிலுற்பத்தியைச் சொல்லுகிற முதற்பத ...லயத்தைச்சொல்லுகிறகடைப்பதமும் தோற்றமுந்தோற்றமையுமா ...ன ஆவிற்பாவத்தையுந் திரோபாவத்தையுஞ் சொல்லுகின்றதுகளேதவிர ...நாசத்தைச்சொல்லவில்லை யென்கிற அர்த்தத்தைக் காண்பித்தற்காகத் ...தோற்றுகின்றதுகளெல் அம்மறைபபையடைகின்றதுகளென்றுஞ் சொல் ...லப்பட்டது விருத்தியும் விசேஷமாகப்பரிணமித்ததுமாவிற்பாவத்திலடங்கி ...ன அபட்சயந்திரோபாவத்திலடங்கின திதியும் மதிஷ்டானசத்தையையனுசரி ...த்ததானேயிருக்கின்றமையால அத்தியாரோபத்தைக்காட்டிலும் வேறு ...விகாரஞ்சித்திக்கிறதில்லை இப்படியே உற்பத்திடபிரகரணத்தில்விஸ்தார ...மாக்ச்சகஸிருஷ்டியானதுசொலலப்படபோகின்றது. (௧)

ஞாதாக்ஞாநந் ததாக்ஞேயந் த்ரஷ்டாதரிசநத்ரிச்யபூ:
கர்த்தாஹேதுக்கிரியாயஸ்மாத் தஸ்மைஞப்த்யாத்மநேநம: (௨)

(அ - கை) முன்சுலோகத்திலாத்மாவிலிருந்துஞ் சகங்கள்தோற்றுகி ன்றனவென்று சொன்னதினாலவ்வாத்மாவுக்குச்சாமானியமாகக்காண்பித் ...ருக்கிறசிற்சொரூபத்தை சாயாநுபவசித்தமென்று துவம்பதார்த்தத்தின்த ...த்துவரூபமான அபபிரமத்தையேமீண்டும்நமஸ்கரிக்கிறார் (ஆத்மாவானவர்சி ...வசொரூபமாகிப் பிரபஞ்சத்தையடைந்து நாமரூபங்களைப் பிரகாசம்பண் ணுகிறேனென்று சுருதியிருக்கின்றதினால்) பிம்பரூபமாயுங்கூடஸ்தசித்தேகா ...சமாயுமிருக்கிறதன்னிடத்தில்தானதாவேப்பிரதிபிம்பித்துசமஷ்டியாகவும்வி யஷ்டியாகவுமிருக்கிற விஞ்ஞானமயம் மநோமயமென்னு மிரண்டுகோசரூப ...மான அந்தக்கரண உபாதியையடைந்ததனால்காய்ச்சின இரும்புக்குண்டில் பிர வேசித்திருக்கிற அக்கினியைப்போல ஆரோபிக்கப்பட்டசகத்தோடொன்றுகி அதனகஞ்ஞானத்தைநீக்கி அதைப்பிரகாசிப்பித்தலினால் ஞாதாவாகவானான் அக்கினிப்பொறிகள் போலிருக்கிற அதனதுவிருத்திகளைப்பிரகாசிப்பித்தலி னால்ஞானமாகவானான் அவ்விருத்திவிஷயரூபமாகும்போது தானுமந்தஞான மாக்கத்தினால் அவ்விஷயத்திலுருவையடைந்தவன்போல ஞேயமாகவானா ன (அ - ஸ்க) அபபிரத்தியட்சத்தல சொன்னதைபபிரத்தியட்சமாகத்தெரிவி க்கிறார் | அந்தஞாதாதானேஞாநேந்திரியங்களைக்கிரகித்துத்திருஷ்டாவாகி ...ன அந்தஞாநேந்திரியங்களின்சம்மந்தத்தினாலுண்டான விர்த்திகளைக்கி ரகித்துத்தரிசநமாகிறான் அத்தரிசநத்துக்குப்பலமாக விஷயங்களைவியாபி த்து அவ்விஷயரூபமாயிருக்கையை யநுசரித்ததனால் தானுந்திரிசியம்போ

லேயாகிறான் அப்படியந்தத் திருஷ்டாதானே கர்மேந்திரியங்களையும் பிராணனையும் சரீரத்தையுங்கிரிகித்துக்கருத்தாவாகவானான் பலத்தையநுபவிக்கிறவனாகிக்கிரியையுண்டாவதற்கு நிமித்தமாயிருக்கையினால் எதுவாகவானான் கிரியையினது நிறைவிலுங்குறைவிலும் நானே நிறைந்தவனென்றுங் குறைந்தவனென்றும் அபிமானிப்பதால் கிரியையாகவானான் (இவ்வாத்மாவானவர் பார்க்கிறவன் கேட்கிறவன் நினைக்கிறவன் செய்கிறவன் அறிகிறவன் விஞ்ஞானசொரூபன் புருடனென்றும் ஜீவிக்கின்றதனால்பிராணனென்றுபேர்பெறுகிறான், சொல்லுதலினால்வாக்காகிறான் பார்த்தலினால் கண்ணாகிறானென்றிவைமுதலியசுருதியிருக்கின்றன) இப்படிச்சகலவிவகாரங்களிலும் பிரத்தியேகாத்மாத்தன்னையும் வேறென்றையுநதோற்றுவித்தலினால்சித்துரூபமாகச்சர்வாநுபவசித்தமாயிருநதாலும் விசித்திரவுபாதிகளின்சேர்க்கையாலுண்டானஅதிகமோகத்தினால்சித்திரபடத்திலிருக்கிறபிரகாசவெளுப்புகளைபோலப் பிரித்தநுபவிக்கபடுகிறதில்லையாகையால்பிரித்தனுபவிக்கும் பொருட்டுயாதொன்றினாலென்று நிமித்தகாரணத்தைச்சொன்னார் கருத்தாமுதலியவைகளின் தோற்றமானது சித்தினுடையசந்நிதானத்தைநிமித்தமாகவுடையதேதவிர அதனசுபாவமல்ல அபபடியாகிலஇலட்சணத்துக்குக்குற்றமவருவதினாலும்மேலும் திருக்குக்குத்திரிசிய சுபாவங்கூடாததினாலுமென்றுதாற்பரியம் ஆகையால்கருத்தாமுதலானவைக்குச்சாட்சியாகவும் யதார்த்தத்தில்ஞானமாத்திரமாகவுஞ் சேவித்திடக்கிற அடபிரத்தியேகாத்மாவை நமஸ்காரஞ்செய்யாநின்றேன். (௨)

ஸ்புரந்திசீகராயஸ்மாதாநந்தஸ்யாம்பரோவநே ள
சர்வேஷாஞ்ஜீவநந்தஸ்மை பிரம்மாநந்தாத்மநேநம: (௩)

(அ-கை) சத்ரூபமானதற்பதார்த்தத்தையும் சித்ரூபமான துவம்பதார்த்தத்தையும் பரிசோதித்துத்தட்ஸ்தலட்சணத்தினது முடிவுக்கிருப்பிடமாயும் (ஆநந்தத்தைப்பிரமமென்றறியவேண்டு) மென்றுசுருதியிற்காட்டப்பட்ட நிரதிசயாநந்தரூபமாயும் முக்கியமான புருஷார்த்தமாயுமிருக்கின்ற அகண்டவாக்கியார்த்தமான பரமாத்மாவைநமஸ்கரிக்கின்றார்.

(இ-ள்) அவித்தையின்மறைப்பினாலும் காமாதிகளின் விகாரங்களாலுங் கெடுக்கப்படாமலிருக்கிற நிரதிசயாநந்தசமுத்திரமான பிரத்தியேகாத்மாவிலிருந்தும் பிரமாமுதலிய தேவர்களிடத்திலும் மநுஷியாள்முதல் ஸ்தம்பபர்யந்தமிருக்கியபிராணிகளிடத்திலும்அநேகவிதமான உயர்வுதாழ்வா

ஷய அந்தந்த விஷயங்களிந்திரியங்களுடையசம்பந்தத்தினாலுண்டாகிய அந்தக்கரணவிருத்திஞானத்தின் தெளிவினது தாரதம்மியத்தினாலும் ஆவரணத்தினாலுண்டானகெடுதலின் தாரதம்மியத்தினாலும் குளம் கண்ணாடி ரத்தின முதலானவைகளில் மலையினுடையபிரதிபிம்பங்கள் தோற்றுதல்போல வுபாதியினாலுண்டானபேதத்தினது தாரதம்மியத்தினாலுமறியப்படுகின்றமையால் சமுத்திரத்திவலைகள்போல ஆனந்தத்திவலைகளானவை தோற்றுகின்றதுகள் அதைச்சர்வ பிராணிகளாலும் பிராந்தியினால் ஆத்மாவல்லாததாகவும் ஆத்மாவினதுசிறிது அம்சமாகவும் அளவு பேதம் விசித்திர மதுக்கம் நாசம் முதலியவைகளால் அந்தத்திவலைகளனுபவிக்கப்படுகின்றன யதார்த்தத்திலேயோ அப்படியன்று பின்னையோவெனில் அப்பிரமமே உபாதியினாலுண்டானபேதத்தைத்தள்ளிவேறென்று நிஷ்கரிக்கப்பட்டு பிரமாமுதல்ஸ்தம்பபூச்சிவரையில்சகலத்துக்குஞ்சாரமாயிருக்கின்ற ஆத்மதத்வமாயிருக்கின்றது (இதற்குச்சுருதிகள் பிராணனாலும் அபானனாலும் மனுஷியன்சீவிக்கவில்லை இவ்விரண்டும் எதையாசரித்திருக்கின்றதுகளோ அதனாற்சீவிக்கிறான் இவ்வானந்தத்தின்திவலையைப்பற்றியே அன்னியமான பிராணிகளெல்லாஞ்சீவிக்கின்றதுகள் ஆனந்தரூபமானசிதாகாசமில்லாவிடில் எவன்சீவித்திருப்பன் எவன்பிராணனையடைவன) ஆகையால் ஆத்மாவுக்கும் ஆனந்தத்துக்கும் பேதபுத்தியுண்டாவதற்குக் காரணமொன்றுமில்லாமையாலும் சொரூபமும் லட்சணமும் ஒன்றானமையாலுமவ்வாத்மாதானே (யாதொருபிரமத்தினின்றும் ஆனந்தத்தையள விடமாட்டாமல்வேதவாக்குகள்மனத்தோடுகூடத்திரும்பிவிட்டதுகளோ பிரமத்தினுடைய ஆனந்தத்தையறிந்தபுருடன் ஒன்றுக்கும் பயப்படுகிறதில்லை யென்று) சுருதியில்பிரசித்தமாயும் அளவிடப்படாமலுமிருக்கின்ற பிரமானந்தமாகவும் ஆத்மாவாகவுமிருக்கின்றதினாலும் (அவனைத்தவிர ஆத்மாவென்றுவேறொருத்தரில்லை இவனைக்காட்டிலும் திருஷ்டாவேறில்லை இவனைக்காட்டிலும் அறிகிறவன்வேறில்லை) என்கிறதுமுதலானத்தைச் சொல்லுஞ் சுருதிப்பிரமாணமிருக்கின்றதனாலும் பரமபுருஷார்த்தரூபமான அந்தப் பரப்பிரமத்தைநமஸ்காரஞ்செய்யாநின்றேன். (௫)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.



வைராக்கியப்பிரகரணம்

முதற்சருக்கம்.

இச்சருக்கத்தில் சாஸ்த்திரசம்பிரதாயசுத்திக்காகத்தேவர்கள் ரிஷிகளுடையகேள்வியும்உத்தரமுமானசம்வாதமுஞ்சொல்லப்போகிறசாஸ்திரசித்திக்கனுகூலமாக இராமருக் கஞ்ஞானம் வந்தநிமித்தமுஞ் சொல்லப்படுகின்றன.

(அ - கை) இக்கடவுள்வாழ்த்தில் இச்சாஸ்திரத்துக்கு விஷயப் பிரயோசனத்தையெளிதாகத்தெரிவித்து மேலிதற்குச்சாதனங்கள்யுத்திகள் முதலியவைகளோடும் விரிவாகத்தெரியபபடுத்தவேண்டுமென்று ஆரம்பிக்கின்ற ஸ்ரீவான்மீகர் கேட்பவர்களுக்கிச்சாஸ்திரத்தில விசுவாசநடபபடுவதற்காக பிரமவித்துகளுக் கெல்லாம் சிரோஷ்டடாளான வெகுமகரிஷிகளோடு கூடியிருக்கின்ற பிரமாமுதற்சம்பிரதாயமாகவருகின்ற சிவன்முத்தியைப் பலமாகவுடையதா யிருக்கின்ற வேதததிறசொல்லப்பட்ட பிரமவித்தைக ளிஇச்சாஸ்திரமிகவும்பிரகாசஞ்செய்கின்றதைக்காட்டுகறகாரம்பிக்கிறார் | சுதீக்ஷணனொன்று நாமத்தையுடைய ஓர்பிராமணன்தன்மனத்துண்டான சந்தேகததினால் அகஸ்தியமகாரிஷியினதாச்சிரமத்தையடைந்து அன்புடன் அகஸ்தியமகாரிஷியைப்பார்த்து. தருமத்தையும் ஆடமதத்வத்தையும றிந்தவராயும் சகலசாஸ்திரங்களிலுமதிகமான நிச்சயமுடையவராயும் + பகவானுயிருக்கின்றகுருவேமோட்சத்துக்குக்கர்மங் + காரணமா ஞானஞ் + சாதனமா அல்லிரண்டுஞ்சேர்ந்துகாரணமா இம்மூன்றுக்குள் ளேதார்த்தமான ஒன்றைச்சொல்லவேண்டுமென்றுகேழ்க்க [இவ்விடததில்மோட்சமாவது பரமபுருஷார்த்தரூபமென்று பிரசித்தமாயிருக்கையினால் நிதியமாகிய நிரதிசயானந்தரூடமாகச் சொல்லவேண்டும் அதுசொற்கநதான் (ஏந்தச்சுகம் துக்கத்தோடுகூட விலலையோ மேலுந் துக்கமுண்டாகப்போகிறதில்லையோ ஆசையினாற்சம்பாதிக்கப்பட்டு மிருக்கின்றதோ

+ பகவானென்பது ஈஸ்வரத்தன்மை வீரியம் கீர்த்தி சம்பத்து ஞானம் வைராக்கியம் ஏனவாறுகுணங்களையும் பூரணமாகவுடையவனையும் சகத்துறபத்தி நாசம் சீவர்கள்வருகிறவழி போகிறவழி வித்தை அவித்தை ஏனவிவ்வாறையுமுணர்ந்தவனையுஞ்சொல்லலாம்.

+ காரணமாவது உண்டாக்குகின்றது

+ சாதனமாவது சகாயஞ்செய்தல் அதாவது ஆத்மாவைத்தோற்றுவித்தல்.

அந்தச்சுகமே சொற்கபதத்துக்கருத்தமென்று) சுருதியிருக்கின்றமையா லும் (சகலவாக்கியங்களுக்கும் அந்தச்சொற்கத்தையே பலமாகச்சொல்லியி ருக்கின்ற) ஜைமுநிசூத்திரத்தினாலும் அந்தச்சுகம் முன்சொன்னபடிசித்தி க்கின்றது இந்தச்சுகம் உண்டானதாதலால் நாசமுண்டோவென்று அனு மித்தல்கூடாது அதேனெனில் சுருதிசித்தமான அருத்தத்திற்கு அனுமா னம்பிரமாணமாகமாட்டாது அந்தச்சுகமுண்டாகவில்லையென்று சொன் னால் அதற்கு வாக்கியமுதலான சாதனத்தை உபதேசித்தது வீணாகப்போ ய்விடுமென்று கர்மமீமாம்சகர்மதப்படி மோட்சத்துக்குக்காரணம்கர்மமென் பதுமுதற்பட்சம் (கர்மத்தினாலும் புத்திரனாலும் மோட்சமடையக்கூடா தென்றும் வாக்கியரூபமானதெப்பங்கள்கிடமானதல்லவென்றும்) இவைமு தலியவற்றைச்சொல்லுகின்றசுருதிகளால் கர்மபலமனித்தியமென்றுசொல் லுகின்றமையாலும் (அந்தப்பரமாத்மாவையறிந்து காலனைத்தாண்டுகி றானென்றும் முத்திக்குஞானத்தைத்தவிர வேறேமார்க்கமில்லையென்று ம்) இவைமுதலியவற்றைச்சொல்லுஞ்சுருதியினாலும் முத்திக்குஞானத்தை த்தவிர வேறே சாதனங்களைத் தள்ளியிருக்கின்றமையால் சாஸ்திரப்பிர மாணத்தினாலுண்டாயிருக்கிற ஞானத்துக்கு ஆத்மசொரூபத்தைப்பிரகாச ப்படுத்துவதைத்தவிர வேறுபலம்பிரசித்தமில்லையென்று சொல்லுகி ன்ற வேதாந்திகளுடையமதப்படி இரண்டாம்பட்சம் ஈசாவாஸ்யோபனி டத்தில் (புருஷனானவன் இவ்விடத்திற்கர்மங்களைப்பண்ணிக்கொண்டே நூறுவருஷஞ்சீவனத்தையிச்சிக்கவேண்டுமென்று) உயிருள்ளமட்டுங்கர்ம த்தையனுஷ்டிக்கச் சொல்லியிருக்கின்றமையாலும்(ஆத்மாவையறியாதபுரு ஷர்கள் சூரியனில்லாததென்றுபிரசித்தமாயும் கண்ணைக்குருடாக்கும்படி யான இருட்டினாற்சூழப்பட்டுமிருக்கின்றவுலகங்களாகிய அந்தந்தமசைய டைகிறார்களென்)றிவைமுதலியசுருதியினாலும் பிரமவித்தாகாதவனை நிந் தித்துபிரமவித்தையைத்தோத்திரஞ்செய்கின்றமையாலும் அவ்விரண்டுக்கு ள் ஒவ்வொன்றுமோட்சசாதனமென்பதைக்கருதி (அவித்தையென்றுபேர் பெற்றகருமத்தையே உபாசிக்கின்றவர்களும் வித்தையென்று பேர்பெற்ற பிரமவித்தையிலேயேபரிசயம்பண்ணிக்கொண்டிருக்கின்றவர்களும் அந்த அந்தந்தமசையே யடைகிறார்களென்று நிந்தித்து வித்தையவித்தை யிர ண்டையுமறிகின்றவனே அவித்தையினாற்காலனைத்தாண்டி வித்தையினா ல்மோக்ஷத்தையடைகிறானென்று) சேர்ந்திருக்கின்ற இவ்விரண்டுமே மிக வுந்துக்கநிவிர்த்தியைமுன்னிட்டுக்கொண்டு நிரதிசயானந்தத்தை யடைவ தாகியமோட்சத்திற்கேதுவென்று சொல்லியிருக்கின்றமையால்வாசஸ்நேயி

கன்மகப்படி மூன்றுபாதுபட்சம் இப்படிமூன்றுபட்சத்தோடுகூடின சமு
சயங்காட்டப்பட்டுது அம்மூன்றுக்குள் நிச்சயத்துக்குக் காரணமான ஒ
ன்றையெனக்குச் சொல்லுமென்பதுகருத்து]அகஸ்தியர்சொல்லுகிறார்·
(அ - கை) சொற்கசுகத்தைச்சொல்லுகின்ற சுருதி அனேகஞ்சுருதிக்குவி
ரோதமாயிருக்கின்றமையால் இந்தச்சுகத்திலும்இந்தச்சுகம் அதிகநாளிரு
க்கிறதென்று அப்படிக்கொத்தநித்தியசுகத்தைச்சொல்லுகின்றதேதவிர
யதார்த்தமானநித்தியசுகத்தைச்சொல்லாதமையால் அம்மூன்றுள் முதற்
பட்சங்கூடாதென்றும் கர்மங்கள்சித்தசுத்தியை முன்னிட்டுக்கொண்டுஞா
னத்துக்குச் சாதகமானாலும் சுருதியினுடைய தார்ப்பரியத்துக்கு விரோத
மில்லாததினால் இரண்டாவது மூன்றாவது பட்சங்கள் ஒன்றாயிருக்குமெ
ன்றெண்ணிக்கொண்டிருக்கின்ற அகஸ்தியர்சொல்லுகிறார் | ஆகாசத்திற்ப
ட்சிகட்கிரண்டு சிறகுகளாலேயே சஞ்சாரமுண்டாகின்றது ஒவ்வொன்றி
னால்மாத்திரமுண்டாகிறதில்லை அதுபோல (அந்தவிஷ்ணுவினுடையப
ரமபதமென்று) சுருதியிற்பிரசித்தமாகவிருக்கின்ற சமுசாரமார்க்கத்தினு
டையமுடிவான கைவல்லிய மானது அதிகாரிகட்கு ஆத்மஞானம் கர்மம்
இவ்விரண்டினாலுமுண்டாகின்றது ஒவ்வொன்றினால்மாத்திரமுண்டாகி
றதில்லை அப்படியாகிலும் [கர்மங்கள் ஞானத்துக்குமுன்னேயேயிருக்க
வேண்டும் அதேனெனில் பிரவிர்த்தியும் நிவிர்த்தியும் ஒருகாலத்திற்கூ
டாததினாலும் விரோதமுள்ள அதிகாரிகளையுடையதானமையாலுந் தா
னே சித்தித்தது ஆகையாலிரண்டும்வேண்டுமென்பதற்குச்சிறகு திஷ்டாந்த
மேதவிர வெவ்வேறானகாலத்துக்கு அவைதிஷ்டாந்தமல்ல பின்யாவையெ
னில்கண்ணாடியில் பிரதிபிம்பமுண்டாவதற்கு துடைத்தல் பார்த்தலிரண்
டும் அவசியம்வேண்டியதுபோல காம்யத்தினாலுண்டான சித்தசுத்தியும் சாஸ்
திரப்பிரமாணத்தினாலுண்டாயிருக்கின்ற அகண்டாகாரவிர்த்திஞானமும்
அவித்தையாநிவிர்த்திக்கு அவசியம்வேண்டியதுகள் அதேனெனில் சித்தசு
த்தியில்லாதவர்களால் அனேகந்தரம்வேதாந்தங்களைக் கேட்டபோதிலும்
ஆத்மஞானரூபமானபலமுண்டாகிறதில்லையென்பதுகருத்து](அ - கை)
முன்சொன்னதையே திடப்படமேலுஞ்சொல்லுகிறார் | கர்மத்தினால் மா
த்திரமும் ஞானத்தினால்மாத்திரமும்மோட்சமுண்டாகிறதில்லை பின்னையோ
வெனில் அவ்விரண்டினாலுமே உண்டாகின்றது [இரண்டுமேசாதனமென்
றுபிரமவித்துக்கள்சொல்லுகிறார்களாகையால் வித்துவான்களுடைய அனு
பவத்தினாற்சித்தித்திருக்கின்றவிந்த அருத்தத்திற்குச்சந்தேகப்படவேண்டிய

தில்லை வித்தையையும் அவித்தையையுமறியவேண்டுமென்று சொன்ன சுருதியோவென்றால் சகுணப்பிரமோபாசனைக்குக் கர்மம் வேண்டுவதாகச் சொல்லியதேதவிர நிர்க்குணப்பிரமோபாசனப் பிரமவித்தைக்குக் கர்மத்தைவேண்டுவதாகச் சொல்லவில்லை அதேதெனில் முன் சொன்ன ஈசாவாசியோபநிடதத்தில் அந்தப்பிரமவித்தைக்குக் கர்மஞ்சாதகமாகத் துவக்கப்படுமேயாகில் (கிரகஸ்தன் எறிந்துவிட்டபதார்த்தத்தினால் சீவனம்பண்ணு ஒருவனுடையதனத்தையுமாசைப்படாதே என்று சொல்லப்பட்ட சந்நியாசவிதிக்கு விரோதம்வருமென்று) பாஷியத்தில் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கின்றது ஆகையாலொருவிரோதமு மில்லையிதவுபநிடதத்திற் சொன்ன அருத்தத்தைமேலெழுந்தவாரியாகக்கிரகித்தது ஞானமுங்கர்மமுஞ்சேர்ந்து சாதனமென்கிறபட்சமே யிந்தக்கிரந்தத்திற்கு முக்கியதாற்பரியமென்று பிரமிக்கவேண்டாம் ஞானமாகிறகண்ணில்லாதவர்கட்குக் கர்மமும்பிள்ளைமுதலானதும்வேண்டும் அதேதெனில் (சீவனுக்குப்பட்டுவஸ்திரமில்லையோ அவன் கம்பளியைவிடுகிறானோ வென்கிற) வசனமுதலானத்தினாலும் நிர்வாணப்பிரகரணத்திற் சிகித்துவசன்கதையில் கேவலம் ஞானத்தினாலேயே மோட்சமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றமையாலும் முன்னுக்கும் பின்னுக்கும் விரோதமவருமென்பது கருத்து] இவ்வருத்தந்தெரிவதற்காக முன்னால் நடந்த ஓர் இதியாசத்தைச் சொல்லுகிறேன் கேளும் காருண்ணியனென்கிற ஓர்பிராமணன் சகலவேதவேதாங்கங்களையுங் குருவினிடத்திலப்பியாசித்தபின்பு சந்தேகத்தினால் ஒருகர்மத்தையுஞ்செய்யாமல் மௌனமாகவிருந்தார் அவர்பிதாவாகிய அக்கினிவேசியர் அவரைப்பார்த்து வாராய்புத்திரா என்னத்தினாலுன்னுடையகர்மத்தைப்பரிபாலனம்பண்ணவில்லை கர்மங்களைச்செய்யாமலிருக்கிற நீ எப்படிமோட்சமுதலான சித்தியையடையப்போகிறாய் அக்கர்மங்களைவிட்டதற் கென்னகாரணமதைச் சொல்லத்தக்கதென்று கேட்க காருண்ணியர்சொல்லுகிறார் (சீவனிருக்கிறவரைக்கும் அக்கினிஹோத்திரத்தைச்செய்யவேண்டுமென்றும் நித்தியமுஞ் சந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டுமென்றும்) சுருதியினாலும்மிருதியினாலுமிந்தப்பிரவிர்த்திரூபமாயிருக்கிறதருமமானது விதிக்கப்பட்டிருக்கின்றது (தனத்தினாலும் புத்திரனாலும் கர்மத்தினாலும் மோட்சமுண்டாகிறதில்லை பின்னையோவெனில் முக்கியாளானசன்னியாசிகள் கர்மத்தைவிடுகிறத்தினாலேயே துக்கமில்லாமையையும் மோட்சத்தையுமடைகிறார்களென்று) நிவிர்த்திரூபதருமமானது விதிக்கப்பட்டிருக்கின்றது ஆகையாலிப்படிவிரோதப்பட்டிருக்கிற இரண்டுசுருதிகளுக்குள் என்னாலெது அனுஷ்டிக்கத்தக்கதென்று சந்தேகத்தைய

டைந்துகர்மஞ்செய்யாமலிருக்கிறேனென்று மௌனமாகவிருந்தார் அவ ரைப்பார்த்துப்புத்திராசகலசந்தேகத்துக்குமூலமான அஞ்ஞானத்தைவே ரோடுபோக்குகின்றமையால்முக்கியமான மகாராமாயணமென்கிற ஒருயி தியாசத்தைச்சொல்லுகிறேன் அதனதுசகல அருத்தத்தையு மனதில்நிச்ச யஞ்செய்து அதன்பின்புன்னிச்சைப்படிசெய் [இந்தயிதியாசமுக்கியமென் பது ஆதித்தியபுராணத்தில் பதினாறாமத்தியாயத்தில் பிரசித்தமாயிருக் கின்றது-சிவன்சொல்லுகிறார். வாராய்சண்முகா ஞானம் ஆத்மாவினுடை யதருமமுமல்லகுணமுமல்லஞானசொரூபமாகவேயிருக்கிறநான் ஆத்மாவா யும் நித்தியனாயும் எல்லாத்திலும்வியாபித்திருக்கிறவனாயும் மங்களசொரூப னாயும் ஏகனாயும் சகலபிராணிகட்கும் அந்தராத்மாவாயு மிருக்கின்றதனால் முக்கியமான ஈஸ்வரனாயிருக்கிறேன் என்னிடத்தில் பதார்த்தங்களெல்லா ங்கற்பிதமாயிருக்கின்றன விஞ்ஞானசொரூபமாயிருக்கிற இப்பிரபஞ்சத்தை ப புத்தியில்லாதவர்கள் சகமென்றுபார்க்கிறார்கள் ஞானிகளிச்சகத்தையொ ன்றான ஆத்மசொரூபமென்று பார்க்கிறார்கள் ஒருவராலுமறியக்கூடாத விவ்வருத்தமானது வசிஷ்டராலிராமனுக்கு முன்சொல்லப்பட்டதென்று சண்முகனைக்குறித்துப் பரமசிவனால்வித்தையின் சொரூபத்தையும் பிரமத த்துவத்தையும் விஸ்தாரமாக வுபதேசித்துத் தான்சொன்ன வாக்கியத்தில விசுவாசந்திடப்படுவதற்காக மிகவும்விசுவசிக்கத்தக்கதாயும்பிரசித்தமாயும் பிரமவித்தைகட்கெல்லாஞ் சிரேஷ்டமாயுமிருக்கிற இந்தமஹாராமாயணத் தைச்சம்மதியாகச் சொல்லப்பட்டிருக்கின்றது] ஆகையாலதைச்சொல்லுகி றேன்கேளும் தேவரம்பையர்கள்கூட்டத்திலுயர்ந்தவளாயும்மூலோகத்தாரு க்குள்ளகுணங்களெல்லாமுடையவளாயும் சுருசியென்னும் பெயருடையவ ளாயுமிருக்கின்றவொரு தேவரம்பையானவள் இமோர்ப்பர்வதசிகரத்திலி ருக்கும்போது ஆகாசத்திற்போகிற இந்திரதூதனைக்கண்டுவாரீர்தேவதூ தரே நீரெங்கேயிருந்துவருகிறீர் இப்போதெவ்விடத்துக்குப்போகப்போகிறீரி வையெல்லாந்தயையினாற்சொல்லவேண்டுமென்றுகேட்க [(இந்தநீயானவ ன்மகாப்பிரளயத்திலெங்கேயிருந்தாய் எங்கேயிருந்துவந்திப்பிரபஞ்சத்தை யடைந்தாய் இப்பிரபஞ்சத்திலிருந்தும் விடுபட்டெங்கேபோகப்போகிறாயெ ன்று) சுருதியிற்சொல்லியிருக்கின்ற கேள்விக்குச்சரியாகவிருக்கின்றமை யால் [இவ்விடத்திலுபாதியினாலுண்டாயிருக்கின்ற சீவபாவத்தையடைந் து எங்கேயிருந்துவருகிறாய் உபாதிபோய்விட்டபின்பு எந்தச்சொரூபத் தில் நீபோகப்போகிறாயென்றுசகலத்துக்கும் அதிஷ்டானமான பிரமதத்து வத்தை விஷயமாகவுடைய கேள்வியானது இச்சுலோகத்துக்குவேண்டிய

தாத்தோற்றுகின்றது அஃதேதினாலெனில் எல்லாந்தயையினாற்சொல்லி
வேண்டுமெனச்சொன்னதினாலென்பதுகருத்து] தேவதூதர்சொல்லுகிறா
ர் ஆசையில்லாதவராயும் தருமசொரூபராயுமிருக்கிற அரிஷ்டநேமியெ
னும் இராஜரிஷியானவர் இராச்சியத்தைப்புத்திரனுக்கீய்ந்து கந்தமாதன
பர்வதத்திற்சென்று தபசுசெய்தார் அம்மலையிலவ்வரசனுக்கவசியமாகவே
ண்டியகாரியத்தைச்செய்துவிட்டு இப்போதங்கிருந்துவருகிறநான் அதை
யிந்திரனுக்குத்தெரிவிப்பதற்காகச் செல்லுகின்றேனென்றுசொல்ல அங்
கேநடந்தகாரியத்தைச் சொல்லவேண்டுமென்றுசாருசிகேட்க தேவதூதர்
சொல்லுகிறார் அவ்வரசனம்மலையில் ஒருவராலுஞ்செய்தற்கரியதவத்தை
ச்செய்யும்போதிந்திரனானவர் அனேகதேவரம்பையர் கந்தர்வ எட்ச சித்த
கின்னராதிகளோடும் தாளம் மத்தளம் புல்லாங்குழல் முதலியநானாவித
வாத்தியங்களைக்கிரிகித்துக்கொண்டிருக்கிறசேவகர்களோடும் கூடிய விமா
னத்தைநடத்திக்கொண்டக் கந்தமாதனபர்வதத்திற்சென்று அரிஷ்டநேமி
யென்னுமரசனை விமானத்திலேற்றிக்கொண்டு சொற்கபோகத்தின்பொரு
ட்டமராவதியென்னும் நமதுபட்டணத்திற் கழைத்துவாவென்றுசொல்லி
அப்படியேயவ்வரசனதாச்சிரமத்தையடைந்து இந்திரன் சொன்னசெய்தி
யையெல்லாமவ்வரசனுக்குச்சொன்னேன் அவ்வரசனதைக்கேட்டுச்சந்தேக
த்தையடைந்துவாரீர் தேவதூதரே சொற்கத்திலிருக்கிற குணங்களையுந
தோஷங்களையுஞ்சொல்லுமதினுடைய ஏறக்குறைச்சலைப்பார்த்து பின்ன
க்கெப்படியிச்சையோ அப்படிசெய்கிறேனென்றுசொல்ல தேவதூதர்சொ
ல்லுகிறார் சொற்கத்திலுத்தமபுண்ணியத்தினாலுத்தமசுகமும் மத்திமபுண்
ணியத்தினால் மத்திமசுகமும் அதமபுண்ணியத்தினால் அதமசுகமுமனுபவிக்க
ப்படும் அன்னியாளுடைய உயர்வைச்சகியாமையும் சரியானவர்களிடத்தி
லும் உயர்ந்தவர்களிடத்திலும்விரோதமும் தாழ்ந்தவர்களிடத்திற்சந்தோ
ஷமும் உடையதாய் மேலும் புண்ணியம்போகிறவரைக்கும் இருக்கும் [ஆ
கையாலதனாலுண்டாயிருக்கிறதுக்கஞ்சகிக்கத்தக்கதல்லவென்பதுகருத்து]
புண்ணியநசிக்கும்போதிவ்வுலகில் மனுஷியாளாகச்சனிக்கிறார்கள் சொற
கத்திலிவைமுதலிய குணங்களுந தோஷங்களுமிருக்கின்றனவென அதைக்
கேட்டுத் தேவதூதரே இப்படிக்கொத்த அப்பிரயோசனமான சொர்க்கத்
தை நானிச்சிக்கவில்லை மிகவுமுக்கிரமான தவத்தைச்செய்து சர்ப்பமான
து முதிர்ந்ததோலை விடுகிறதுபோல அசுத்தமானசரீரத்தை நான் விடப்
போகிறேன் [தவத்தினாற்பாவங்கள் சேஷமில்லாமல் நசிப்பதினாலும் சுகிர்த
பலத்திலாசையில்லாமலிருக்கும்போது அச்சுகிர்தங்கள் சந்மத்தையுண்டா

கிசமாட்டாதாசையினாலும் வைராக்கியமுள்ள எனக்குத்தேகப்போனத்தி
ற்குலேயேமோட்சமுண்டாகுமென்பதரசனதுகருத்து] தேவதூதரே உமக்
கு நமஸ்காரம் நீரிவ்விமானத்தைக்கொண்டுபோமென்றுசொல்ல இச்செய்தி
யை இந்திரனதுசபையிற்சொன்னபின்பு அச்சபையிலுள்ள பெரியோர்க
ளெல்லாமாச்சரியமடைதற்கேதுவானேன் பின் பிந்திரனென்னைவிளிப்
பார்த்து அவ்வரசனை வான்மீகியினதாச்சிரமத்திற் கழைத்துக்கொண்டு
போய் வைராக்கியமுடையவரசனுக்கு ஆத்மஞானமுண்டாகும் பொருட்டு
ஆத்மதத்துவத்தையறிந்திருக்கிற வான்மீகருக்கு நான்சொல்லுகிறசெய்தி
யைச்சொல்வாய்மகரிஷியே வணக்கமும் வைராக்கியமும் சொர்க்கத்தையிச்
சியாமலுமிருக்கிற இவ்வரசனுக்கு ஆத்மதத்துவத்தைத்தெரியப்படுத்தினால்
சமுசாரதுக்கத்தினாற்பீடிக்கப்படாமல் கிரமமாகமோட்சத்தையடைவனெ
ன்றிந்திரனாற்சொல்லப்பட்டு அவ்வரசனது சமீபத்திலேவப்பட்ட நான் அப்
பர்வதத்திற்சென்று வான்மீகரிடத்திற் கொண்டுபோய்விட்டு இந்திரனது
உத்திரவைச்சொன்னேன் அவ்வரசனும்மோட்சசாதனந்தனக்கு வேண்டு
மென்று வான்மீகரிடத்திற் சொன்னான் அவ்வான்மீகர் மிகவுமன்புடனே
தேசம் புத்திரன் பொக்கிஷம் தபசு சகலமுநன்றாகவிருக்கின்றதாவென்கி
றகேள்வியோடுகூடினவார்த்தையினாற் சுகமாயிருக்கிறீராவென்று கேட்
டார் அரசன்சொல்லுகிறான்கர்மகாண்டரகசியங்களையும் பிரமதத்துவத்
தையுமறிந்தவராயும் உலகமரியாதையை யறிந்தவர்களுக்குளுத்தமராயும்
பகவானுமிருக்கின்ற குருவே உமது தரிசனத்தினாலும் தயவோடுகூடி
னகுளிர்ந்தபார்வையினாலும் நான்கிருதார்த்தனாகிவிட்டேன் உம்மையோ
ர்காரியங்கேட்டதற்கிச்சிக்கின்றேன் அதைவிக்கினமின்றிச் சொல்லவேண்
டும் சமுசாரபந்தத்தால் வந்திருக்கிறதுக்கங்களால் அடிக்கடியுண்டாகிற
நாசரூபமாயிருக்கிற உபத்திரவத்தினின்றும் நானெந்தவிதமாக நீங்குவே
னதைச்சொல்லவேண்டும் [இவ்விடத்திற்கேட்பதற் கிச்சிக்கின்றேனென்
றது முன் தூதன் சொன்னவசனத்தினாற்றானே வான்மீக ரறிந்திருந்தா
லும் (தன்வினாக்கேளாமலிருக்கும்போது ஒருவருக்கும் ஒன்றையுஞ்சொ
ல்லவேண்டாமென்று) சுருதியிருக்கின்றமையால் பராமுகமாயிருப்பரென்
றெண்ணி தூதன்சொன்னபோதிருந்தானுங்கேட்டானென்றும் விக்கின
மின்றிச் சொல்லவேண்டுமென்றது (நற்கருமங்கள் வெகுவிக்கினங்களையு
டையனவென்று) உலகவாக்கியத்தால் வந்திருக்கின்றவிக்கினம் அந்தநற்
கருமத்திலுண்டாகுமென்கிற சந்தேகத்தை நீக்குதற்காகவும் (மனுஷ்யா

ளாத்மஞானமடைவது தேவர்கட்கிஷ்டமல்லவென்று) சுருதியிருக்கின்ற
மையால் தேவர்கள்விரோதஞ்செய்தாலன்றோ விக்கினமுண்டாகலாம் நே
வேசிரானது உத்தரவிறவேயே நான்கேட்கின்றமையால அவவிக்கினமி
ல்லையென்றும் முதற்கேட்டது மோட்சசொரூபத்தை யிரண்டாவது கேட்
டது மோட்சசாதனத்தையென்பது கருத்து] வான்மீகர்சொல்லுகிறார் உம
துசம்சாரதாபநீங்குவதற்காகவசிஷ்டராம சம்வாதமாகவுண்டாயிருக்கி
ன்றசுபமாகியமோட்சோபாயமான இராமாயணத்தை ஆத்மதத்வத்தையறிந்
திருக்கிறநான்சொல்லுகிறேன்கேளும் அதனால்சீவன்முத்தியையடைவீரெ
ன்றுசொல்ல[இவ்விடத்திலிராமாயணமென்றதற்கருத்தம்கைகேயியின்வர
மென்னுங்காரணத்தினால் தன்னகர்நீங்கிவனமடைந்தவிராமர் அரக்கரை
வென்றுமீண்டுதன்னகர்சேர்ந்து நன்மையையடைந்ததுபோல சனர்க்
குமாரர்முதலியவர்கள் சாபமென்னுங்காரணத்தினால் தன்சொரூபமறந்த
ஞ்ஞானமடைந்தவவ்விராமர் ஸ்ரீவசிஷ்டருபதேசத்தினால் அஞ்ஞானாதிக
ளாகிறவரக்கரைவென்றுமீண்டுதன்சொரூபத்தையறிந்து சுகத்தையடை
ந்தாரென்றுசொல்லுகின்றமையாலவறிக. ஆத்மதத்வமறிந்தநானென்
றது [நாதாவாகச்சிந்திக்கப்படுகின்றவிவ்வாத்மசொரூபத்தையறியாத ஓர்
மனிதனாற்சொல்லப்பட்டால்நன்றாக அறியத்தக்கதல்லவென்று) சுருதியி
ருக்கின்றமையால் தத்துவஞானமில்லாதகுருவுபதேசத்தினால் சீஷன்கிர்தா
ர்த்தனாகமாட்டானென்று தான்தத்வமறிந்தவனென்றானெனவறிக. சிரவண
த்தினாலஞ்ஞானமும் மனனத்தினால்சந்தேகமும் நிதித்தியாசனத்தினால் விப
ரீதமும்நீங்கி சாட்சாத்காரத்தினால் சீவன்முத்தராகுவீரென்பதுகருத்து]
அரசன்சொல்லுகிறான் வசிட்டரிடத்திலிராமர் கேட்டாரென்பதினாலிராமர்
சீஷரென்றுதோற்றிற்று அஞ்ஞானியானவன் சீஷனாவனேதவிர அறிவுள்
ளவன் சீஷனாகமாட்டானாகையாலிராமரானவரார் யாருடையபிள்ளை எப்
படிக்கொத்தவர் பந்தத்தையுடையவரா முத்தியையுடையவரா இதைநிச்ச
யமாகச்சொல்லுமென்று கேட்க [அன்னியனான ஓர்புருஷனே யிராம
னென்னும்பெயருடையவனா அல்லது பிரசித்தராயிருக்கிறநித்தியமுத்தரா
னவிஷ்ணுவாவென்பதுகருத்து] வான்மீகிசொல்லுகிறார்பிரபுவாயிருக்கி
ற அந்தவிஷ்ணுவானவர்சாபமென்கிறகாரணத்தினாலிராச வேஷத்தைத்த
ரித்துத்தன்பத்தன் சொன்னவார்த்தையைச்சத்தியமாகச் செய்யவேண்டுமெ
ன்னுமிச்சையினாற்கிரகிக்கப்பட்டஅஞ்ஞானத்தினாலஞ்ஞானிபோல்சீவத்து
வத்தையடைந்தாரென்றுசொல்ல (அ-கை) மகரிஷிகட்குக்குற்றஞ்செய்வோ
ர்க்கன்றோ சாபமுண்டாகின்றது ஆசைநிறைவின்றியும் அஞ்ஞானியாயுமி

ருக்கின்றபுருஷனுக்குக்குற்றமுண்டாகுமேதவிர ஆவரணமின்றியுஞ் சிதா
னந்தசொருபராயுமிருக்கின்றவிஷ்ணுவுக்குக் குற்றமுண்டாக மாட்டாது
சாபத்தினாற்குற்றமுண்டாகுமெனில் சாபத்துக்கஞ்ஞானமேது அஞ்ஞா
னத்துக்குச்சாபமேதுவென்று ஒன்றுக்கொன்றேதுவானத்தினால் அந்நி
யோந்நியாசிரயதோஷம்வருமென்னுங்கருத்தினாலரசன்கேட்கிறான் | பரமா
ர்த்தத்திற்சச்சிதானந்தசொரூபராயும் விவகாரத்திலுமச்சைதன்னியமேபக்
தர்களிடத்திற்கிருபையினாலுருவமாய்ப்பரிணமித்துமிருக்கிறவிஷ்ணுவைச்ச
பித்தவனையுஞ்சாபத்துக்குக்காரணத்தையுஞ் சொல்லவேண்டுமென்றுகேட்
கவான்மீகிசொல்லுகிறார் ஓரிச்சையுமின்றி யிருக்கின்றசனற்குமாரர்சத்தி
யலோகத்திலிருந்தார் மூவுலகுக்கும்பதியாயும் பிரபுவாயுமிருக்கிறவிஷ்ணு
வானவர்வைகுண்டத்திலிருந்தவிடத்திற்குவந்தார் அவ்விடத்திலிருக்கிறபி
ரம்மாமுதலியோர்களாற்பூசிக்கப்பட்டவிஷ்ணுவானவர்தம்மைப்பூசியாமலி
ருந்தசனற்குமாரரைப்பார்த்து வாராய்சனற்குமாரா காமமின்றியிருக்கி
ன்றநீ கர்வத்தினாலசையாமலிருந்தமையால் நாணற்காட்டிற்சனித்துச்சர
சன்மாவென்னும்பெயருடையவனாகிகாமத்தினால் வியாபிக்கப்படுவாயென்
றுசபித்தார் அச்சனற்குமாரரும் விஷ்ணுவைப்பார்த்துச் சர்வக்ஞனாயிருக்
கையைவிட்டுச்சிறிதுகாலம்நீரஞ் ஞானியாகவாகுவீரென்றுசபித்தார் பிருகு
மகாரிஷி தன்மனைவியைவிஷ்ணுகொன்றதைப்பார்த்து கோபத்தினால்மய
ங்கிவிஷ்ணுவே உமக்கும்மனைவியின்வியோகம் வருமென்றுசபித்தார்
சலந்தராசுரன்மனைவியானபிருந்தையானவள் தன்கணவன்வேஷத்தினா
ல்தன்னைமோகிப்பித்துப்பதிவிரதாபங்கம்பண்ணினவிஷ்ணுவைப்பார்த்து
வாரீர்விஷ்ணுவேநீரும்மனைவியின் வியோகத்தையடைவீரென்றுசபித்தா
ள் பயோஷ்ணியென்னும் நதிக்கரையில் தேவதத்தரிஷியின் மனைவியானவள்
நரசிம்மவேஷத்தைத்தரித்திருக்கின்றவிஷ்ணுவைப்பார்த்துப் பயந்து பிராண
னைவிட்டாள் தன்மனைவிபோனதினால் துக்கித்திருக்கிறதேவதத்தரிஷியா
னவர்வருந்திச்செய்தபுண்ணியங்களால் காணத்தக்கவிஷ்ணுவைப் பார்த்து
நீரும்மனைவியின்வியோகத்தையடைவீரென்றுசபித்தார் இப்படிசனற்கு
மாரர் பிருகு பிருந்தை தேவதத்தரிஷி இவர்களால்விஷ்ணுவானவர் சாபத்
தைப்பெற்று இராமாவதாரத்தையடைந்தார் [சனற்குமாரர்சாபத்தினாலஞ்
ஞானத்தோடுகூடியமனுஷாவதாரம்வந்தது மற்ற மூவர்கள் சாபத்தினா
ல் இராமருக்குச்சீதையினுடையபிரிவானது இராவணன்கொண்டுபோன
த்தினாலும் பொய்யான அபவாதத்தினாலும் பூமியிற்போனத்தினாலும் மூன்
றாயிற்று] சாபத்துக்குக்காரணமான இதுகளெல்லாம் சொல்லப்பட்டது

இப்போது முன் கேட்கப்பட்டிருக்கிற மோக்ஷசாதனங்களையெல்லாஞ்சொல்லுகிறேன் அதைநீர்சாவதானமாயிருக்கின்ற புத்தியுடனே கேளும்.

முதற்சருக்கமுற்றிற்று.

இரண்டாவது சருக்கம்.

இச்சருக்கத்திலிச்சாஸ்திரத்துக்கதிகாரியும் பூருவராமாயணத்துடன் உத்தரராமாயணஞ்சம்பந்தப்படுவதும் பிரமதேவருத்தரவின்படிக்கு உத்தரராமாயணஞ்செய்ததுஞ் சிவன்முத்தனது நடத்தையுஞ் சொல்லப்படுகின்றன.

கடவுள்வாழ்த்து. சின்மாத்திரசொரூபியாயும் விபுவாயுமிருக்கின்ற பரமாத்மாவானவர் சொர்க்கலோகமாகவும் பூலோகமாகவும் அந்தரட்சலோகமாகவும் பிருதிவியாதிபூதங்களாகவும் தேகாதியாத்மாவாகவுமிந்திராதிதெய்வங்களாகவும் ஏனைக்கவித்தையினால் நாநாவிதமாகத்தோற்றியும் சீதார்த்தத்திலநிர்விகாரசின்மாத்திர சுபாவத்தையுடையவராயுஞ் சர்வப்பிராணிகட்குமாத்மாவாயுமிருக்கின்ற அப்பரமாத்மாவை நமஸ்காரஞ்செய்யாநின்றேன் [இச்சருக்கத்தில் மங்களஞ்செய்தது இச்சாஸ்திரத்தை மாணாக்கருக்குபதேசஞ்செய்கிற ஆரம்பத்துக்காக முன்சருக்கத்தில் மங்களஞ்செய்தது சாஸ்திரஞ்செய்கிற ஆரம்பத்துக்காக அதன்றியுமிந்தச்சாஸ்திரமுதலிலுநடுவிலுமுடிவிலுமங்களத்தையுடையதாகவிருக்கின்றதோ அந்தச்சாஸ்திரநிர்விக்கினமாய்நிறைவேறிப்பிரசித்தமாகுமென்றுமதைப்படிக்கிறவர்களுங்கேட்கிறவர்களும் வீரராயுமாயுளையுடையவர்களாயுஞ்சிரேஷ்டமானபதத்தையுமடைகிறார்களென்று மகாபாஷியத்திற்சொல்லியிருப்பதால் கூறியதுகூறலென்கிறதோஷமில்லையென்பதுகருத்து]

(அ-கை) இச்சாஸ்திரத்துக்கு ஏவனதிகாரி அஞ்ஞானியா ஞானியா முதற்சொன்னதுகூடாது ஏனெனில் அவனுக்குத்தேகத்திலாத்மபுத்தி திடமாகவிருப்பதாலுமிராகத்தையுடையவனாகையாலும் மோக்ஷத்திலிச்சையில்லை அப்படிசொல்லவேண்டாம் விஷயங்களில்தோஷத்தையறிகின்றமையாலும் ஜனனமரணாதிதுன்பத்தையறிகின்றமையாலுமவனுக்கு வைராக்கியமுண்டாகிமோக்ஷத்திலிச்சைவந்தால் அதிகாரமுண்டாகுமெனவிமாகிகள்

விஷயங்களையெல்லாமிகவுமிரட்சிக்கவேண்டுமென்றிச்சித்திருப்பதால் விஷயங்களி
ருக்கும்போதே அவைகளுடையதோஷங்களை நீக்குதற்குபாயத்தையும்உயர்
ந்தவிஷயங்களைத் தேடிக்கொண்டும் இகபரசுகங்களையுமதற்குபாயத்தை
யுமிச்சித்துக்கொண்டுபிரவர்த்திக்கிறார்களாகையால் முதற்பட்சங்கூடாது
இரண்டாம்பட்சமுங்கூடாது எனெனில் அவன்செய்யத்தக்க காரியங்களைசெ
ய்துமுடிந்தவனாகையாலும் சாஸ்திரத்தினாற்சம்பாதிக்கத்தக்கபிரயோசனம
வேண்டியதில்லாதவனாகையாலும் சாஸ்திரத்திற்பிரவர்த்திக்கமாட்டானாது ஆ
கையாலெவனதிகாரி யெனிலிவ்விருவரினும்வேறுபட்டிருக்கின்ற அதிகாரி
யைவான்மீகர்தெரிவிக்கிறார் | சமுசாரபாசத்தினாலநாதிகாலமாகச்சிறைச்
சாலையிற்கட்டுப்பட்டவன்போல்பந்தப்பட்டிருக்கிறநான் சிரவணாதியினா
ல்முக்தனாகவேண்டுமென்கிற நிச்சயமுள்ளவனிந்தச்சாஸ்திரத்துக்கதிகாரி
மிகவுமஞ்ஞானியும் ஞானியுமிதற்கதிகாரியல்லர் [ஆகையாலஞ்ஞானியே அ
னேகபுண்ணியங்களாலிராகாதிதோஷமெல்லாம் நசித்தபின்பு விவேகமு
ண்டானதினாலாத்மஞானம் வேண்டுமென்றிச்சையடைந்து வணக்கத்து
டன் பத்திரபுட்பபலாதிகளைக்கையிற்கொண்டு குருவினிடத்திற்சென்றுச
ரணமடைகின்றவனே அதிகாரியென்பது கருத்து] (அ-கை) இராகாதி
தோஷம் நசித்தபுருஷன் திரிவருணிகனேயாகிலவன் சந்நியாசஞ்செய்து
கொண்டுவேதாந்தசிரவணஞ்செய்வதற்கே அதிகாரியவனுக்குப்பூர்வராமா
யணமும் வேண்டுவதில்லை அதேனெனில் (பரமாத்மாவை வேதம்படிப்ப
தினாலும் யக்கியத்தினாலும் தானத்தினாலும் தபசினாலும் அறியவிச்சிக்கிறா
ர்களென்பது) சுருதியிற்பிரசித்தமாதலால் திரிவருணிகருக்குவேதத்தினாலே
யே சித்தசுத்தியுண்டாகுது அத்திரிவருணிகருக்குமிதிலதிகாரமில்லை எனெ
னில் வெதத்தையறியாதிருக்கிறவன் பெரிதானபரமாத்மாவை யறியமா
ட்டானென்று அத்திரிவருணிகருக்கதிகாரத்தைத் தகைந்திருப்பதால் இச்
சாஸ்திரத்துக்கதிகாரியில்லையென்பதுகூடாது அதேனெனில் திரிவருணி
கருக்குமூன்றக்கினிகளாற்செய்யத்தக்கசுருதிகருமத்திலதிகாரமிருக்கையிலு
ம்யாகஞ்செய்யாதவர்கள்செய்வதானஸ்மிருதியிற்சொல்லியிருக்கின்ற ஔபாச
சனாதிகருமத்திலுமதிகாரமிருப்பதுபோல் வேதாந்தத்திலதிகாரியானவனு
க்கும் சன்னியாசமடையாதமுமூட்சுவுக்குரிய விச்சாஸ்திரத்திலுமதிகாரமு
ண்டு இப்புராணமுமிருதிபோலவேதத்திற்குச்சமானம் அதெப்படியெனில்
வேதத்தினாலறியத்தக்கபரமாத்மாதசரதகுமாரனாகச்சனிக்கும்போது வேத
ம்வான்மீகரிடத்திராமாயணரூபமாகவுண்டாயிற்று ஆதலால் வேதத்திற்பூர்
வகாண்டத்திற்குப்பூர்வராமாயணமுழுதுஞ் சமானம் உத்தரகாண்டத்திற

கு உத்தரராமாயண முழுதுஞ்சமானம் சிறிதுமிருதிகருமங்களில் ஸ்திரீ சூத்திராளுக்கெப்படி அதிகாரமுண்டோ அப்படி இச்சாஸ்திரத்தினுடையகேள்வியிலும் புராணத்தினுடைய கேள்வியைப்போல அவர்கட்கதிகாரமுண்டு (பரமாத்மாசகலவருணாச்சிரமங்களாலு மறியத்தக்கவரென்று) சுருதியிருப்பதால் பூர்வகாண்டத்திற்சொல்லியிருக்கின்ற தருமத்தைச்செய்வதனாலுண்டாகுஞ் சித்தசுத்தியைப்போல இச்சாஸ்திரத்திலும் பூர்வராமாயணத்திற்சொல்லியிருக்கின்ற அந்தந்த வருணாச்சிரமத்துக்குரிய நிஷ்காமகருமானுஷ்டானத்தினாலுண்டாயிருக்கின்ற சித்தசுத்தியானது ஆத்மஞானஞ்சம்பாதிக்கவேண்டுமென்கிற இச்சையையுண்டுபண்ண ஏதுவாகுமென்றுபூர்வராமாயணத்துக்கும் உத்தரராமாயணத்துக்குங் காரியகாரணபாவமென்னுஞ்சம்பந்தத்தைத்தெரிவித்துச்சகலவநர்த்தங்களும் போகுமென்கிறமேறநபிரயோசனத்தைச்சொல்லுகிறார் | கதோபாயமென்னும்பெயருடையபூர்வராமாயணத்தை முன்னேவிசாரணை செய்தனுஷ்டித்தபின்புமோட்சோபாயமென்னும்பெயருடைய இந்த உத்தரராமாயணத்தை விசாரணை செய்கின்றவனுக்குச்சனனமரணாதி துன்பமில்லை [பூர்வராமாயணத்துக்குக்கதோபாயமென்றெப்படி பெயரெனில் அக்கதையினருத்தமே ஞானாதிகாரத்தைக்கொடுக்கும்படியான தருமத்தின்தத்துவ ஞானத்திலும் அதனனுஷ்டானத்திலும் ஈஸ்வர ஆராதனத்திலும் உபாயமாவதைபூர்வராமாயணத்திற்சொல்லுவதனாலென்னவறிக] ஐம்பத்தாறாயிரங்கிரந்தமுள்ள மகாராமாயணத்தில்அனாதிகாலமாயப்பிரகாசிக்கப்பட்டிருக்கிற இராகாதிதோஷங்களைப்போக்குந்தகுவலிமையுள்ள இராமசரித்திரங்களைச்சொல்லுகிற இருபத்துநாலாயிரங்கிரந்தமுள்ள பூர்வராமாயணத்தைநான்முன்னேசெய்து வணக்கமும்புத்தியுமுள்ள சிஷியனாகியபரத்துவாசன்பொருட்டுச்சமாதானத்தையடைந்தசித்தமுள்ளநான்சமுத்திரமானதுயாசகனுக்கு இரத்தினத்தைக்கொடுத்தாற்போலக்கொடுத்தேன் அப்பரத்துவாசரை மகாமேருவிலிருக்கிற ஒரு ஆரணியத்தில்பிரமாவின்முன்னேவாசித்தார் அவரைக்கேட்டின்புற்றுப்பரத்துவாசரைப்பார்த்துவேண்டியவரம்பெற்றுக்கொளீரென்றுசொல்ல பகவானே முமுட்சுக்கள்துன்பநீங்கி இன்பமடைகின்றவுபாயமே யெனக்குவரமாகருசிக்கின்றதாலதைத்தெரிவித்தல்வேண்டுமென்று பரத்துவாசர்கேட்கப் பூர்வராமாயணத்தைச்செய்தவான்மீகிரிஷியை யென்னைக்கேட்ட இந்த அருத்தசித்திக்குக்குருவாகச்சீக்கிரத்தில்வேண்டிக்கொள்ளும் அவரால்மேற்செய்யப்போகிற உத்தரராமாயணத்தை முமுட்சுக்கள்சிரவணஞ்செய்து திடமான அவனியினிற் சமுத்திரத்தைக்கடந்தாற்போலச்சகலமோக

ஞ்கலியுங்கடப்பார்களென்றுபிரமதேவர்சொல்லி பரத்துவாசரோடேன
தாச்சிரமத்திற்குவந்தார் மிகுந்தசத்துவகுணத்தையுடையவராயுஞ்சகலவு
யிர்கட்குமிதத்தைச்செய்பவராயுமிருக்கின்ற அந்தப்பிரமதேவரை அர்க்கி
யமுலிய உபசாரங்களாற்பூசிக்க அவரென்னைப்பார்த்துச்சிரேஷ்டமான
வான்மீகிமுனியே பூர்வராமாயணஞ்செய்து உத்தரராமாயணஞ்செய்வது
விரிவாயிருக்கின்றதென்று சிரமத்தினால்விடாமல்முழுதுஞ்செய்யவேண்டு
ம் அதனால் இவ்வுலகமானது சமுசாரதுன்பத்தைக்கப்பலினாற் சமுத்திரத்
தைத்தாண்டுவதுபோலத்தாண்டுமிக்காரியத்தைத்தெரிவிப்பதற்காகவே நா
ன்வந்தமையால்நீர் உலகோபகாரத்தின்பொருட்டிச்சாஸ்திரத்தைச்செய்யு
மென்றுசொல்லிப்பிரமதேவர் என்தாச்சிரமத்தில்நின்றுக்ஷணத்தில் சமு
த்திரத்திலுண்டான அலைமறைவதுபோல மறைந்தார் பின்பவர்வந்தசந்
தோஷத்தினாலென்னைமறந்துபோய்ச்சுபாவத்தையடைந்தபுத்தியினாற்றிரு
ம்பவும்பரத்துவாசரைப்பார்த்துப்பிரமதேவரென்னசொன்னாரென்றுகேட்
கவவரென்னைப்பார்த்துப்பூர்வராமாயணமெப்படிசெய்தீரோ அப்படிச்ச
முசாரசமுத்திரத்தைக்கடத்தற்குபாயமான உத்தரராமாயணத்தைச்செய்யு
மென்றுபிரமதேவராலிதுதான்சொல்லப்பட்டதென்றுசொல்லிமேலுங்கே
ட்கிறார் துன்பமான இச்சமுசாரத்திலிராமர் இலட்சுமணர் பரதர் சத்து
ருக்கனர் சீதை மற்றதசரதர்முதலியோர்களும் எப்படி விவகாரஞ் செய்து
கொண்டெந்தவுபாயத்தினால் துக்கமில்லாமலிருந்தார்களோ அதையெனக்
குத்தெரியும்படியாகச்சொன்னால்நானுமப்படியே அந்தவுபாயத்தினால் துக்
கமில்லாமலிருக்கவேண்டுமென் று பரத்துவாசர் அன்புடன் வணங்கிக் கேட்
க வாரீர் அரிஷ்டநேமியென்னுமிராசசிரேஷ்டரே அப்போது நான் பிரம
தேவருத்தரவின்படிமோட்சோபாயத்தைச்சொல்வதற்கெத்தனஞ்செய்தே
ன்வாரீர்பரத்துவாசரே கேட்டமாத்திரத்தில் ஆத்துமதத்துவத்தைமறைக்கி
ன்றமோகமாகிறமலந்தூரபோகும்படியானஉபாயத்தைச்சொல்லுகிறே
ன்கேளும் ஸ்ரீராமர் ஒன்றிலுஞ்சம்பந்தப்படாமலிருக்கின்ற புத்தியினால்
விவகாரஞ் செய்துகொண்டிருந்ததுபோல நீயும்விவகாரங்களைக்கொ
ண்டிரு இலட்சுமணர் பரதர் சத்துருக்கனர் கௌசலை சுமித்திரை சீதை
தசரதர் இராமருக்குச்சகாவாயிருக்கின்றகிருதாஸ்திரன் அவிரோதன் வசி
ஷ்டர் வாமதேவர் திருஷ்டி சயந்தன் பாசன் சத்தியன் விஜயன் விபீஷ
ணன் சுஷேணன் அநுமான் சுக்கிரீபனுடையமந்திரியாகிய இந்திரசித்து
இவர்களெல்லாரும் உள்ளில்சர்வசமமாயும் ஆசையற்றமனதுள்ளவர்களா
யும் வெளியில்பிராரத்தத்துக்குத்தக்கபடிவந்ததை அனுபவித்துக்கொண்

ரும் மகாபுருஷர்களாயும் சீவன்முத்தர்களாயு மிருந்துகொண்டு எக்கிய ம் தானம் வாங்கிறது இருக்கிறது நினைக்கிறது முதலானதுகளைச்செ ய்துகொண்டிருந்ததுபோலநீயுமி ருப்பாயானால் சகலதுக்கத்தையும்விட் டுச்சுகமாகவேயிருப்பாய் [எக்கியம் தானமென்றுசொன்னது சுருதி ஸ் மிருதிகளிற்சொல்லப்பட்டகருமத்தைச்செய்ததென்றும் வாங்கிறது இருக் கிறதென்றுசொன்னது அந்தந்தக்காலத்துக்கு யோக்கியமான நன்றான லௌகீகவிவகாரங்களைச்செய்ததென்றும் நினைக்கிறதென்றது இவ்வி ரண்டுக்கும்விஷயமான முன் பின்னடக்கவேண்டியகாரியங்களை நினைத்த தென்றுஞ்சொன்னதெனவறிக] கரையிலறியசமுசாரமாகிற சமுத்திரத்தி ல்விழுந்திருக்கிறபுருஷனானவன் உத்தமமான இந்தமோக்ஷோபாய யுக்தி களையடைந்தால் மிகுந்தசத்துவகுணமுள்ளவனாகி சோகம் எளிமை மன ஸ்தாபமுதலானதைவிட்டு என்றைக்கும்பரிபூரணானந்த சொரூபமாயிரு க்கிறான்.

இரண்டாஞ்சருக்கமுற்றிற்று.

மூன்றாவதுசருக்கம்.

இச்சருக்கத்தில் திரிசியத்தைப்போக்குகிற உபாயங்களும் வாசனைகளி ன்பேதமும் அவைகளினிலட்சணமும் ஸ்ரீராமர்தீர்த்தயாத்திரைநடத்தையு ஞ்சொல்லப்படுகின்றன.

இராமர்சீவன்முத்தபதத்தையடைந்தசாதனத்தைச் சொல்லவேண்டுமெ ன்றுபரத்துவாசர்கேட்க (அ - கை) முத்தியினிலட்சணஞ் சொரூபம் சாத னம் பலமிவைகளாற்சீவன்முத்தரிருப்பை விரிவாகச்சொல்லவேண்டுமென்றி ருக்கின்ற ஸ்ரீவான்மீகர்முன்னதாக எளிதாய்த்தெரியும்பொருட்டுச்சுருக்கி முத்தியினிலட்சணத்தையுஞ் சொரூபத்தையுந்தெரிவிக்கின்றார் | வாராய்சா துவானபரத்துவாசனே ஆகாசத்திற்றோற்றுகின்றநீலவருணம்போலபரமா த்மாவினிடத்தில் மிகவுமில்லாமலிருந்தாலும் பொய்யாகவேயுண்டாயிருக்கி ன்ற அத்தியாசருபமானசகதபிராந்தியை அதற்குமூலமான அவித்தையை யும்வாசனையையும்போக்கி மீண்டுமந்நினைவுதோன்றாமலிருக்கும்படியிரு ப்பதே எவற்றிற்குமுயர்வானமுத்திக்கு இலட்சணமாகவுஞ்சொரூபமாகவுமெ ண்ணுகின்றேன் [பதசாரம் எண்ணுகின்றேனென்றது சாஸ்திரத்தினாலு ம் அனுபவத்தினாலும்நிச்சயிக்கிறேனென்பது அநந்தம் மீண்டுமந்நினைவ

வுதோன்றாமல்மறப்பதென்றது பரோட்சஞானிக்கும் சுழுத்தியிலும் நிரு விகற்பசமாதியிலும் + திரிசியவிஸ்மரணமான திருக்கின்றது ஆகிலும்மீண் டும் நினைக்கும்படியான அந்தக்கரணத்தைவிட்டதல்ல ஆகையாலப்படிக் கொத்த அந்தக்கரணமில்லாமலிருக்கின்றமறதியேவேண்டுவது அன்றியும் தோய்தமேதோற்றாமலிருக்கவேண்டும் அல்லதுமறந்துபோனது போல்நி னையாமலிருக்கவேண்டும் மறந்துபோனபதார்த்தம் அனுபவித்தவனிரு க்கும்போதுந் தோற்றாததுபோல அறிவிருக்கும்போதுந்திரிசியந்தோற்றா கிறதில்லையென்று அருத்தம் அப்படியேயாகில்திரிசியமே பரமார்த்தச த்தியமாக ஒப்புக்கொண்டிருக்கின்றசாங்கியாள் முத்தியைப்போல் தோற்றா மலிருக்கைமாத்திரமோவெனில் அதல்லவென்டதற்காக அத்தியாசமேல் று சொல்ஞானசமஸ்காரத்தினாலுண்டாயிருக்குதே அதெப்படி அத்தியாசமாகு மெனில் பரம்பரையாகஅஞ்தியாய்வருகின்றசகங்களின் விவகாரத்தினாலுண் டானசமஸ்காரத்தால் அந்தப்பிராந்தி இருப்பையடைந்திருக்கின்றது அ ப்போதுதோஷத்தினாலுண்டாகாமையினாலும் ஒரதிஷ்டானமின்றியிருப்ப தினாலுமிதுபிராந்தியல்லவேயெனில் அதற்காக ஆகாசத்தில் நீலவர்ணம் போல் உண்டாயிருக்கின்றதென்றுசொன்னது அதெப்படியெனில் தூரத் திலிருப்பதும் நன்றாக விசாரியாமலிருப்பதுமாகிய விரண்டுதோஷங்களா ல் ஆகாசத்தில்நீல்நிறந்தோற்றுகின்றதுபோல அவித்தையாதோஷத்தினா ல் பரமாத்மாவினிடத்திற்சகத்பிராந்திதோற்றுகின்றது ஆகையால் திரிசிய விஸ்மரணமேமுத்திக்கு இலட்சணம் அந்த திரிசிய அத்தியந்தாபாவத்தோ டுகூடிக்கொண்டுசின்மாத்திரமாயிருத்தலே அந்தமுத்திக்குச் சொரூபம்]

(அ-கை) முத்தியினதிலட்சணமுஞ் சொரூபமும் உமக்கனுபவமானாலது ஏங்களாலேன் அனுபவிக்கப்படவில்லையெனில் | திரிசிய விஸ்மரணத் தையறிந்தாலன்றி முத்தியினது இலட்சணமும் சொரூபமும் ஒருநாளு ம் ஒருவராலும் அனுபவிக்கப்படமாட்டாது ஆகையால்திரிசியவிஸ்மரண மெதினாலுண்டாகுமெனில் ஆத்மசாட்சாத்காரத்தினா லவசிய முண்டாகும் அந்த ஆத்மசாட்சாத்கார உபாயமெதினாலுண்டாகுமெனில் இச்சாஸ்திரா ப்பியாசத்தினாலேயே உண்டாகின்றது அதற்காகவே உண்டான இச்சா ஸ்திரத்தைத்தத்துவ நிச்சயம்வருகிறவனாக்கும் நீகேட்டையாகில் அந்த ஆத்மசாட்சாத்காரத்தை நீயடைகுவாய்வேறொருமார்க்கத்தினாலுமடையமா ட்டாய் . (அ-கை) சொன்னதையேவிளங்கச்சொல்லுகிறார் | இச்சகத்பி ராந்தியானது கண்ணுக்குத்தோற்றிக்கொண்டிருந்தாலு மிச்சாஸ்திரத்திற்

+ திரிசியவிஸ்மரணமாவது - திரிசியநினைவில்லாமலிருக்கை

சொல்லியிருக்கிறபடிவிசாரித்தால் துன்பமில்லாமல் ஆகாசத்தினது நீலநிறம்போலமிகவுமில்லவேயில்லையென்று அனுபவிக்கப்படுகின்றது (அ-கை) அனுபவிக்கப்படுகிறதென்றுசொல்லப்பட்ட அனுபவம் ஆத்மசைதன்னியமா அல்லது வேறு வேறென்றுசொல்லக்கூடாது சித்தைந்த பிரவேசமுபட்டதெல்லாஞ் சடமாகையாலும் விஷயமாகையாலும் அனுபவமாகமாட்டாது ஆத்மசைதன்னியமென்றுசொன்னால் அதுமுன்னமேயிருக்கின்றது இப்போதுசாஸ்திரத்தினாலாகவேண்டுவதென்னெனில் | ஆத்மசைதன்னியத்தானனுபவிக்கப்படுகின்றது ஆகிலுந்திரியத்தோடு கூடிக்கொண்டிருக்கிற ஆத்மா முன்சொன்ன அனுபவவாத்மாவல்லபின்னையோவெனில் அகண்டாகாரவிருத்திரூபமான ஆத்மதத்துவசாட்சாத்காரபரியந்தமுள்ளஞானத்தினால் அவித்தைநசித்தபின்பு அந்த அவித்தையினாலுண்டாயிருக்கிற திரிசியங்காலத்திரயத்திலுமில்லையென்று மனதுக்குத்திரிசியவிஸ்மரணமெப்போதுசித்திக்கின்றதோ அப்போது உத்தமமானமோட்சசுகமானது நித்தியமாயிருக்கின்ற ஆத்மசொரூபமாயிருந்தாலும் அந்தத்தத்துவஞானத்தினாலுண்டானதுபோலவேயாகின்றது [நிரதிசயானந்தம்நித்தியமாயிருக்கின்ற ஆத்மசொரூபமாகவிருந்தாலும் சாஸ்திராப்பியாசத்தினாலுண்டாகுமென்பதுகருத்து இதனால்முத்திக்குச் சாதனமும்பலமுங் காட்டப்பட்டது] (அ-கை) கர்மசாஸ்திரங்களிற்சொல்லியிருக்கின்ற உபாயங்களாலே மோக்ஷசுகம் என்வரமாட்டாதெனில் | இப்பொதுசொன்ன உபாயத்தோடுகூடியஞானசாஸ்திராப்பியாசத்தைவிட்டு கர்மசாஸ்திரமென்னும்படுகுழிகளில்வீழ்ந்துமுன்னும் அநாதியான அஞ்ஞானத்தையுடையவர்களாயுகிகபரங்களிலிருக்கின்ற விஷயத்திலிச்சையடைந்து அதையனுபவிக்கும்பொருட்டும் சனனமரணத்தையடைகிறநிகிர்ஷ்டமான புருஷர்களுக்குச்சதோதயமாகியும்ஒருவராலுண்டாக்குவதற்குரியதல்லாததாகியுந்தானே உண்டானதாயும்நித்தியமாகியுமிருக்கிறமோக்ஷசுகமானது அனேககற்பகாலங்களாலுங்கிடைக்கமாட்டாது [அநாதியான அஞ்ஞானத்துக்கு ஞானந்தவிர அனேகஞ் சாதனங்களாலு நிவிர்த்தியில்லையென்பது கருத்து] (அ-கை) உபாசனாதிகளான உபாயங்களாற்சாதிக்கத்தக்கதான சாலோகமுதலிய அன்னியமோக்ஷங்களும் பிரசித்தமாக இருக்கின்றன அவ்வுபாயங்களாலவர்கட்கு யாதினால்முன்சொன்னசுக மில்லையெனில் | பிறவிக்குவித்தானவாசனையை முழுதும் விடுவதேமுக்கியமானமோக்ஷமென்று மதுவேநன்மார்க்கமென்றுமேலானசத்துக்கள்சொல்லுகிறார்கள் [வாசனையேமுக்கியமானபந்தமாகையால்சாலோகமுதலியமோக்ஷத்தில் பந்தநிவிர்த்

தியின்மையாலவைகளைமோக்ஷமென்று சொன்னதிரண்டாம் பட்சமென்பது கருத்து] (அ-கை) வாசனைபோனாலுமதற்கேதுவான மனதிருக்கின்றமையால் திரும்பவும்வாசனைகளுண்டாகும் அதனால்பந்தமுமுண்டாகுமெனில் | பனிக்கூட்டநசிக்கும்போது அதன்திவலை நசித்தல்போல வாசனை நசிக்கும்போதுமனது நசிக்கும் [மனது வாசனைத் திரளினதுருவமாகையாலென்பதுகருத்து] (அ-கை) மனது நசித்தபோதிலும் ஸ்தூலதேகமிருக்கின்றமையால்பந்தமுண்டாகுமெனில் | மெல்லிதான நூலினால் கோக்கப்பட்ட முத்துக்களின் கூட்டமானது தரிக்கப்படுமாப்போல பஞ்ச பூதங்களாற்செய்யப்பட்டகூண்டுரூபமான இந்தஸ்தூலதேகமானது அற் டமானசுத்தவாசனையினாற்றரிக்கப்படுகின்றன (அ-கை) இந்தப்படிசிரேஷ்டமானமோட்சத்தைவருணித்துப்பிரகிருதமானசீவன்முத்தியைச்சொல்லவேண்டுமென்று வாசனையிருவிதமென்று சொல்லுகிறார் | சுத்தமென்றும்மலினமென்றும் வாசனையிருவிதம் மலினமாவதுசென்மத்துக்கேது சுத்தமாவதுசென்மத்தைநாசம்பண்ணும் (அ-கை) அதில்மலினவாசனையினிலட்சணத்தைத் தெரிவிக்கிறார் | அஞ்ஞானமே நிலம் அதில்விஷயஞான அப்பியாசத்தினால்விர்த்திபண்ணப்பட்டிருக்கிற உருவையுடையவாசனையேவித்து இராகத்துவேஷாதிகளால் விர்த்திபண்ணப்பட்டிருக்கின்றமையால்திடமான அகங்காரமேநீர்கட்டுகிறநிலக்காரன் அவனால்வாசனைவிரீவாகவிளங்குகின்றது அதுதிரும்பவுஞ்சென்மத்தையுண்டுபண்ணுகின்றமையால்மலினவாசனையென்றறிந்தோராற்சொல்லப்படுகின்றது (அ-கை) சுத்தவாசனையினதிலட்சணத்தைத்தெரிவிக்கின்றார் | அறியத்தக்கஆத்மசொரூபத்தையறிந்ததினால் அவித்தையாகிறநிலம்வேகும்போது அதற்குள்ளிருக்கிறசென்மமாகிறமுளை நசித்தபோதிலும் பிராரத்துவத்தினால் தடங்கல்பண்ணப்பட்டமையால் தீயால்வறுபட்டவித்துப்போலத்திரும்பவுஞ்சென்மரூபமானமுளையையுண்டுபண்ணாமலிருப்பதுந தேகமிருக்கும்பொருட்டுத்தரிக்கப்படுவதுமாகியவாசனையே அறிந்தோர்களால் சுத்தமென்றுசொல்லப்படுகின்றது (அ-கை)சொன்னத்தையேவிளங்கச்சொல்லுகிறார் | சீவன்முத்தரிடத்தில் திரும்பவுஞ் சென்மத்தைக்கொடாமலிருக்கின்ற சுத்தவாசனையானது சுற்றிவிட்டசக்கரத்திலிருக்கிற சுற்றல்போல தேகமிருக்கிறமட்டுமிருக்கின்றது (அ-கை) பலத்தோடுகூட சீவன்முத்தியிருக்கிறயிடத்திற்கிலட்சணஞ் சொல்லுகிறார் | சுத்தவாசனையையுடையவர்கள்திரும்பவுஞ்சந்மதுக்கத்தையடைகிறதில்லை அவர்கள்பெரிதானபுத்தியுள்ளவர்களென்றும் அறியத்தக்கதையறிந்தவர்களென்றும் சீவன்முத்தர்களென்று

ஞ்சொல்லப்படுவார்கள் [ஆகையால்-தத்துவஞானத்தினால் செனனமுதலியவைகளி
ன் சத்திவருபட்டிருக்கிற வாசனையினாலேயே தரிக்கபபட்டிருக்கிற சரீரத்
தையுடைத்தாயிருத்தலே சீவன்முத்தர்களுக் கிலட்சணமென்று சித்தித்த
து] (அ-கை) சீவன்முத்தரிலக்கணங்கூறி இராமன் சீவன்முத்தனானநெ
றியை வான்மீகர் சொல்லத்துடங்கினார் | வாராய்பரத்துவாசனே உயர்ந்
தபுத்தியையுடையவிராமர் சீவன்முத்தபதத்தையடைந்தசாதனத்தை யுன்
னுடையச்சாமரணமுதலிய துக்கங்கள் போகும்பொருட்டுச் சொல்லுகிறே
ன்கேள் அதனால்சகலத்தையுமறிகுவாய் இராமர்சகலவித்தைகளையுமபபியா
சித்து ஒருபயமுமின்றிவீட்டில்வினோதங்களாலேயே சிலநாட்களைப்போ
க்கியபின்புமனதில் ஒருக்கால்தீர்த்தங்கள்புண்ணியாச்சிரமங்களிவைகளை
ப்பார்க்கவேண்டுமென்றுமிகவுமிச்சையுண்டாகி தாதுக்கள்போன்ற நகங்
களோடுகூடியபிதாவினதுபாதபத்மங்களை மலர்ந்தகமலங்களையடைந்த
அன்னப்பட்சிபோலவடைந்துநமஸ்கரித்து வாரீர்நாதனே ஐயாவே தீர்
த்தங்களையுந்தேவாலயங்களையும் வனங்களையுமிருஷிகளுடைய ஆச்சிரம
ங்களையும்பார்க்க வேண்டுமென்று மிகவுமென்மனதிச்சிக்கின்றது [நாத
னே என்றதுதனக்குமிகவுஞ்சுதந்தரமின்மையைத்தெரிவித்தனவறிக]
உம்மிடத்துயாசித்த அருத்தத்தைபபெற்றுச்சந்தோஷமடையாதபுருஷனு
லகத்திலில்லையாதலால் முந்தினதான் இந்தப்பிரார்த்தனையைப்பலத்தோ
டுகூடினதாகச் செய்யவேண்டுமென்று இராமர்சொல்ல தசரதர்வசிஷ்ட
ரோடாலோசித்து இராமருக்கு உத்தரவுகொடுத்தார் பின்புசுபதினத்திலி
ராமர் தம்பிகள் சிலவிராசபுத்திரர்கள் சதுரங்கசேனைகள் சாஸ்திரமறி
ந்தசில பிராமணர்களிவர்களோடுகூடிக்கொண்டுதீர்த்தயாத்திரைக்காகத்தம
தில்லத்தில்நின்றும்நீங்கி ஸ்நானம் தானம் தபசு தியானமிவைகளைச்செய்
துகொண்டு தன்தேசமுதல்வரிசையாக கோசலதேசங்கள் புண்ணியநதி
கள் வனங்கள் தேவாலயங்கள் ரிஷியாச்சிரமங்கள் பாலைநிலங்கள் சமு
த்திரக்கரைகள் மலைச்சாரல்களிவையெல்லாம் பார்த்துக்கொண்டுசஞ்சரித்
தார்கங்கை யமுனை சரஸ்வதி கிருஷ்ட்டிணை வேணி பிரயாகை கயை காசி
இன்னமனேக தீர்த்தங்களில் ஸ்நானமுதலியகிரியையை அன்புடன்செய்
துகொண்டு விஷ்ணுத்தலம் (சாச) சிவஸ்தலம் (சாச) இவைகளைத்தெ
ரிசனஞ் செய்துகொண்டு விந்தியம் மந்தரம் முதலானபர்வதங்களிலிருக்
கிற இராசரிஷிகள் பிரமரிஷிகள் இன்னமனேகம்பெரியோர்களுடைய ஆ
ச்சிரமங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு சஞ்சரித்து - தேவர்கள் கின்
னரர்கள் மானுடர்களிவர்களாற் பூசிக்கப்பட்டிருக்கிற இராமர் தன்பட்ட

ணத்தைத் திக்குகளிற்பரமசிவன் விளையாடல்செய்து கைலாயத்தையடைந்தாற்போலவடைந்தார். மூன்றாவதுசருக்கமுற்றிற்று.

நான்காவதுசருக்கம்.

இச்சருக்கத்திலிராமர் தீர்த்தயாத்திரைசெய்துவந்து தமதில்லத்தில்மித்திரரோடுசந்தோஷித்திருக்கின்றதும் வேட்டையாடுதல்முதலியவிவகாரமுஞ்சொல்லப்படுகின்றன.

வான்மீகிசொல்லுகிறார் இராமர்பட்டணத்திலிருக்கிற சனங்களுடையபுட்பாஞ்சலிக்கூட்டங்களாற் சூழப்பட்டவராகி இந்திரகுமாரனாகிய சயந்தன் திக்குகளில்விளையாடிச் சொர்க்கத்தையடைந்தாற்போலத் தங்கள் வீட்டையடைந்தார் [வேதாந்தசாஸ்திரத்தில் தீர்த்தயாத்திரையைச் சொல்வதற்கென்னசம்பந்தம் இராமசரித்திரபாஷையால் சொல்லவெனிற்போது இராமர்பிறந்ததுமுதலாகச் சொல்லவேண்டும் அதன்றியும் பூர்வராமாயணம் வீணாகப்போய்விடுமெனில் கர்மகாண்டத்திலுந்தந்தவருணத்திற்குரிய யக்கியமுதலிய கர்மங்களாலுண்டாயிருக்கின்ற சித்தசுத்தியானது பிரமவித்தையையறிதற்குபயோகமாகுமென்று சொல்லியிருக்கின்றது இராமருக்குவயதும் வித்தையும் போதாமையினாலும் யக்கியாதிகர்மங்களைச்செய்வதற்குச் சமர்த்தரல்லாததினாலும் அவர் தீர்த்தயாத்திரைசெய்தாலும் யாகாதிகளுக்கு வருகிறபலன்வந்துசித்தசுத்தியுண்டாகுது அதனாற்பிரமவித்தையையறிய அதிகாரமுஞ்சித்திக்குமென்று தீர்த்தயாத்திரையைச்சொன்னது இப்படியே (தீர்த்தரூபங்களாகிய யக்கியங்களென்றனுண்டுபண்ணப்பட்டிருக்கின்றதுகளென்று) மிருதியிற் சொல்லியிருக்கின்றன ஆகையால்சகலவருணங்களாலும் மூர்த்திதலத் தீர்த்தங்களின்சேவை எளிதாகச்செய்யலாமென்பதும் இதனாற்சித்தசுத்தியுண்டாகிப்பிரமவித்தையையறிவதினால் மோட்சமடையத்தக்கதென்பதுங்கருத்து] அதன்பின்பு இராமர்பிதாவையும் வசிஷ்டரையும் தாய்மார்களையும் பந்துக்களையும் பிராமணர்களையும்நமஸ்கரித்துத்தனக்குள்ளடங்காதசந்தோஷத்தையடைந்தார் அன்றுமுதல்நந்தந்ததேசாசாரங்களைச் சொல்லிக்கொண்டு வீட்டிற்சுகமாகவிருந்தார் (அ-கை) தினச்சரிதையைச்சொல்லுகிறார் | இராமர்நித்தியங்காலமே எழுந்திருந்து சாஸ்திரப்படிக்குச் சந்தியாவந்தனஞ் செய்துசபையிலிருக்கின்றதசரதரை நமஸ்கரித்து வசிஷ்டாதிகளோடு கூடவிருந்

து விசித்திரமாயும் ஞானமார்க்கமாயுமிருக்கிற கதைகளைக்கேட்டுப்பிற்பு தினத்தினது நாலாஞ்சாமத்தில் பிதாவினால் அனுமதிபண்ணப்பட்டவராய் மிகுந்தசேனைகளோடுகூடிக் கொண்டுவனத்திற்சென்று பன்றிகள் ருமைக்கடாக்கள்முதலிய அனேகமிருகங்களாற் சூழப்பட்டவிடத்தில்வேட்டையாடினார் [வேதாந்தசாஸ்திரத்தில்வேட்டையாடுவதைச்சொல்வானேனெனின்ராமருடையதினச்சரிதையாகையாலரசர்கட்குக்குடிகள்செய்கிறபயிர்களைப் பன்றிகள்முதலியமிருகங்கள்சேதமபண்ணாமல் காப்பாற்றுகிறது க்ஷத்திரியதருமமாகையால் வேட்டையாடினதைச்சொன்னது அன்றியும் வேதாந்தசிரவணாந்தலிச்சையிருக்கும்போது வேட்டையாடுதல்முதலியவை ஆத்மஞானத்திற்குப்பிரதிபந்தகமாகையால் அதனுகளைப்பார்த்த தனுபவித்ததது களைக்கேட்டதுகளென்றெண்ணினால்விரோதமின்றிவேதாந்தசிரவணமுதலிய உபாயங்கள் உறுதிபடையுமென்பதைத்தெரிவிப்பதற்காகச்சொல்லியதென்பது கருத்து] அதன்பின்பு இல்லத்தில்வந்துஸ்நானமுதலியகிரமத்தைச் செய்து மித்திரர்கள் பந்துக்களிவர்களோடுபோசனஞ்செய்துசினேகிதர்களோடுகூட இரவைப்போக்கினார் இவ்விதமானதின நடத்தையைச் செய்துகொண்டு வீட்டிலிருந்து அரசர்கட்குயோக்கியமான விவகாரத்தினால் மனோக்கியமாயும் நல்லோர்களுடையமனதில் நிலவுபோலச் சந்தோஷத்தை யுண்டுபண்ணிக்கொண்டிருக்கின்றசரிதையினாற்றினங்களைப்போக்கினார்.

நான்காவதுசருக்கமுற்றிற்று.


ஐந்தாவதுசருக்கம்

இச்சருக்கத்தில் இராமர்தேகத்தில்வைராக்கியத்தினாலுண்டான இளைப்புமுதலானதும் அரசனுக்கதைவிசாரிக்கவேண்டுமென்கிறவிச்சையும் வசிஷ்டர்தசரதர்க்குச்சமாதானஞ்சொல்வதுஞ்சொல்லப்படுகின்றன

(அ-கை) இப்படியிராமர்சித்தசுத்திவரும்படியான உபாயங்களையனுஷ்டானஞ்செய்தாரென்றுசொல்லி அதற்குப்பலமானவைராக்கியமுதலியசாதனசம்பத்தைச்சொல்லவேண்டுமென்று ஸ்ரீவான்மீகர் வர்த்தனஞ்செய்கின்றார் | அதன்பின்பு இராமருக்குப் பதினைந்தேமுக்கால் வருஷமாகும்போது இலக்ஷ்மணசத்துருக்கனருமிராமனையனுசரித்திருக்கும்போதுபரதர்பாட்டன்வீட்டிலிருக்குங்காலத்தில் தசரதர்புத்திரர்களுக்குவிவாகஞ்செ

ய்வதற்காகத்தினந்தோறுமந்திரிகளோடாலோசனை செய்துகொண்டிருக்கும்போது இராமர்நாடோறுஞ் சரற்காலத்திலேடையானதுகுறைவையடைகின்றதுபோல இளைப்பையடைந்தார் விசாலமான கண்களையுடைய அவர்முகமானது வண்டுகளோடுகூடிய மலர்ந்தவெண்டாமரைப்பூபபோலவெளுப்பையடைந்தது பின்பு ஓர்கரத்தாலகன்னத்தைத்தாங்கிக்கொண்டுபத்மாசனமாகவிருந்து ஆலோசனையையே செய்துகொண்டோர்காரியமுஞ்செய்யாமலும்சிந்தையுள்ளவராயும்துக்கத்தோடுகூடியும் மிகவும்வைராக்கியமுள்ளவராயும் சித்திரபபிரதமைக்குச் சரியாயுமிருக்கின்றவிராமர்ஒருவரோடொன்றும் பேசாமலமௌனமாகவிருந்தார் மிகவும்வாடியிருக்கின்றபதமம்போலமுகமுள்ள விராமர்டரிசனங்களாலடிக்கடிவருந்திபபிரார்த்தித்தபின்பு அகத்தியமானதினநடத்தைகளைநடத்தினார் இக்குணங்களோடுகூடியவிராமரைத்தம்பிகள் பார்த்து அவர்களும் அத்திசையையேயடைந்தார்கள் அப்படியக்குமாரர்கள்துன்பத்தையுடையவர்களாயு மிளைத்துமிருக்கும்போது தசரதர்தனது ஸ்ரீயோடுகூடமிகவும்விதனத்தை யடைந்துவாராய்புத்திரா இப்படிப்பட்ட அதிகமானசிந்தையுனக்கென்னத்தினாலென்றுமடியின்மீதெடுத்துவைத்துக் கொண்டுகேட்கஐயாவென்னைக்கொருதுக்கமுமில்லையென்றுமௌனமாகவிருநதார் [தன்துன்பத்தையரசனுக்குயாதினாற் சொல்லவில்லையெனில் இத்துன்பம் அவரால் நீங்கத் தக்கதல்லவென்னுங் கருத்தினாலன்றிப் பொய்ம்மையல்ல வென்பதுகருத்து]
பின்புதசரதர் வசிஷ்டரைப்பார்த்து இராமர்யாதினால் துன்பமடைந்திருக்கிறாரென்றுகேட்க வசிஷ்டர்தியானஞ்செய்துபார்த்து அரசனே இதிலோர்காரணமிருக்கின்றதுநீர்துன்பமடையவேண்டாம்உலகத்திலிருதுவிமுதலான மகாபூதங்கள் அற்பகாரணத்தைப்பற்றி உற்பத்திநாசங்களையடையாததுபோலபெரியோர்களற்பகாரணத்தைபபற்றிஅதிகமானகோபம் துக்கஞ்சந்தோஷமிவைகளையடைகிறதில்லை [ஆகையாலிராமருக்குண்டாயிருக்கிற இத்துன்பத்தினாற்பெரிதானபலமுண்டாகுமென்பதுகருத்து.]

ஐந்தாவதுசருக்கமுற்றிற்று.



ஆறாவது சருக்கம்

இச்சருக்கத்தில் விசுவாமித்திரர்வருகையுமவரைத் தசரதர் பூசைசெய்வதுமவர்கேட்டகாரியத்தைச்சந்தோஷத்தினால் கொடுக்கிறேனென்கிற பிரதிக்கினையுஞ்சொல்லப்படுகின்றன.

வான்மீகிசொல்லுகிறார். முனிநாதராகியவசிஷ்டர் சாமானியமாகச் சொல்லும்போது அரசன்விசேஷார்த்தத்தில் சந்தேசப்பட்டுத் துன்பத்துடன்சிறிதுகாலம்மௌனமாகவிருக்கும்போது விசுவாமித்திரர் வந்துவாசற்காவலரைப்பார்த்து விசுவாமித்திரர் வந்திருக்கிறாரென்று அரசனிடத்திற்சீக்கிரமாகத்தெரிவிக்கவேண்டுமென்று சொல்ல அவர்களுந்தாமதஞ்செய்யாற்சபிப்பாரென்றவச்சத்தினால் சீக்கிரமாயரசனது சபையையடைந்து விசுவாமித்திரரிஷிவந்திருக்கிறாரென் றுசபைக்குவெளியிலிருக்கிறதென்றுதங்கள் யசமானனுடன்சொன்னார்கள் அவ்வெசமானன் அநேகமரசர்களினாற் சூழப்பட்டதசரதனைச்சீக்கிரமாயடைந்து வாரீர்தேவரே மகாப்புருஷராயிருக்கிறவிசுவாமித்திரர்வந்திருக்கிறாரென் றுமிகவும்வணங்கின வசனத்தினாற் சொல்லும்போது அரசனவ்வசனத்தைக்கேட்டுமந்திரிகளோடுகூடசிம்மாசனத்திருந்தெழுந்துவசிஷ்டர்வாமதேவர்முதலானவர்களோடுகூடச் சீக்கிரமாய்க்கால்நடையாய்வந்து எதோ ஒருகாரணத்தினாற்பூமியையடைந்திருக்கிற சூரியனைப்போலிருக்கிற விசுவாமித்திரமுனியைத்தசரதர் தூரத்திலேயேபார்த்துவணங்கி ஒளிசரீரத்தையுடையவராய்க்கிரீடத்திலிருந்து நழுவியிருக்கிற இரத்தினங்களினாற் சூழப்பட்ட பூமியையுடையதாயிருக்கும்பாதநமஸ்காரஞ்செய்தார் அப்போவிசுவாமித்திரமுனியுமவ்வரசனுக்குச்சூரியனிந்திரனுக்காசீர்வதித்தல்போலமதுரமாயுங்கெம்பீரமாயுமிருக்கிறவசனத்தினாலாசீர்வாதஞ்செய்தார்பின்புவசிஷ்டர்முதலியோர்களுமாதரவோடுகூட சுகமாகவந்தீராவென் றுகேட்கிறதுமுதலிய உபசாரங்களால்விசுவாமித்திரரைத்துதிசெய்தார்கள் தசரதர்சொல்லுகிறார் வாரீர்மகாரிஷியே நினையாமலிருக்கும்போது தானேவந்திருக்கிற உமது அழகானதரிசனத்தினால் சூரியனுதயமானதைப்புஷ்பம்போல்விகசித்தலையடைந்தோம் காரணம் குறைவு நாசமிவைகளின்றியிருக்கின்றபிரமானந்தசுகத்தை உமதுதரிசனத்தினால்நானடைந்தேன் உமதுவரவுக்குப்பாத்திரமாயிருக்கின்ற நாங்களிப்போதுமத்தினால் கிருதார்த்தரானபேர்கட்குள் முந்தினவர்களாய்நிச்சயமாகவானோமென்று தசரதர்முதலியவரசர்களும் ரிஷிகளும்படிவசனித்துச் சபைக்குவந்து ஆசனங்களிலிருந்தார்கள்பின்பு சந்தோஷத்தையடைந்தமுகமுடையதசரதர் தபோலட்சுமியினாற்சூழப்பட்டிருக்கின்ற அம்மகாரிஷியைப்பார்த்து பயமடைந்

னுதானேவிதிப்படி அர்க்கியமுதலிய பூசையைச்செய்து பிரதக்ஷணஞ்செய்கின்ற அரசனைப்பார்த்துச் சந்தோஷத்தையடைந்தமுகமுடைய அம்மகாரிஷியுந்துதித்துக்குறைவில்லாமல்சுகமாகவிருக்கின்றீராவென்றுகேட்டார் அவ்வரசனும்பின்னும்அம்முனிவருக்குச்சகல உபசாரங்களையுஞ்செய்து அஞ்சலிபண்ணிக்கொண்டுசொல்லுகிறார் நீர்வந்தசந்தோஷமானது மனுஷனுக்கு அமிர்தமகப்பட்டாற்போலவும் பயிர்செய்வோனுக்குச்சலமில்லாதகாலத்தில் மழைபெய்தாற்போலவுங்கண்தெரியாதவனுக்குக்கண்தெரிந்தாற்போலவும் பிள்ளையில்லாதவனுக்கிஷ்டமானமனைவியினிடத்தில் பிள்ளையுண்டானதுபோலவும் தரித்திரனுக்குச்சொப்பனத்திற்கண்ட பொருள்கிடைத்ததுபோலவும் வெகுநாளாய்வேண்டப்பட்ட மந்திரசித்திகிடைத்ததுபோலவும் தூரதேசத்திலிருந்துவேண்டிய மனுஷன் வந்ததுபோலவும் போனபொருள்கிடைத்ததுபோலவும் ஆகாசசஞ்சாரத்தினாலுண்டாகிறசந்தோஷம்போலவுமிறந்தவன்திரும்பிவந்ததினாலுண்டானசந்தோஷம்போலவுமிருக்கின்றது உண்மையாகச்சொல்லுகிறேன் பிரமலோகத்தில்வசிக்கிறது யாருக்குத்தான்மகிழ்ச்சியைக்கொடாது அதுபோல நீர்வந்தது யாருக்குத்தான்மகிழ்ச்சியைக்கொடாது மிகவுந்தருமமுள்ள நீர் எனக்குப்பாத்திரமாகவந்திருக்கிறதினால் உமக்கெதுமிகவுமிஷ்டம் உமக்கு நானென்னசெய்யவேண்டும் கங்காசலஸ்நானத்தினாற்குளிர்ச்சியுண்டாவதுபோல உமது தரிசனத்தால்மிகவுமுள்ளேகுளிர்ச்சியையுடையவனாகவானேன் இச்சைபயக்கோபமிராகம் உலோகமிவைகளொழிந்துமிருக்கின்றநீரென்னிடத்தில்வந்ததுமிகவுமாச்சரியமாகவிருக்கின்றது [இச்சைமுதலானகுணங்களால் வியாவினையனுசரிக்கச்செய்யும் அதுமக்கில்லையென்பதுகருத்து] அறியவேண்டுவதறிந்தோர்க்கெல்லாமுதன்மையானவரே சுபக்ஷேத்திரத்தையடைந்தவனாகவும் பாவமில்லாதவனாகவுஞ்சந்திரமண்டலத்தில் முழுகினவனாகவும் என்னைநினைக்கிறேன் [தேவர்கள்ரிஷிகளிருக்கின்றவிடமே சுபக்ஷேத்திரமாகும் இவ்விடத்தில் மகாரிஷியினுடையசன்னிதானத்தினால் இந்தக்கிரகமுஞ்சுபக்ஷேத்திரமென்பதுகருத்து] பிரத்தியக்ஷமாகப் பிரமதேவரே வந்ததுபோலிருக்கின்ற உமதுவரவினால்மிகவும்பரிசுத்தனாகவு மனுக்கிரகம்பெற்றவனாகவுமாகிறேன் எனதுசன்மம்பிரயோசனத்தோடுகூடினது எனதுசீவனநன்றானசீவனமாயிற்று சந்திரனைக்கண்ட சமுத்திரங்களுக்குள்ளடங்காததுபோல உம்மைத்தரிசித்துப்பூசித்துநமஸ்கரித்திருக்கிற நான் என்சரீரத்திலடங்கவில்லை எப்போதும் என்னாற்பூசிக்கத்தக்கவராதலால் எதுசெய்யவேண்டுமோ எந்தஅருத்தத்துக்காகவந்தீரோ அதைநான்

செய்துகொடுத்ததாகவே என்னும் உமக்குக்கொடுக்கத்தகாததொருபொருளெ ன்னிடத்திலயாதொன்றுமில்லையாகையாலுமதுகாரியத்தில் ஆலோசனை செய்யவேண்டாம் எனக்கு நீர்முக்கியமானதெய்வமாதலாலுமது சகலகாரி யமுந்தான்தருமமாகவே செய்கிறேனென்றரசன்சொல்ல ரிஷியுஞ்செவிக்கு ச்சுகமாயுமதிகமதுரமாயுமிருக்கிற வசனத்தைக்கேட்டுமிகவுஞ்சந்தோஷம டைந்தார். ஆறாவதுசருக்கமுற்றிற்று.

ஏழாவதுசருக்கம்

இச்சருக்கத்தில்ரிஷியரசனைத்துதித்துத்தான்செய்யும்யாகத்திற்குவிக்கி னஞ்செய்கின்ற அரக்கரைக்கொல்வதின்பொருட்டு ராமனையாசித்தாரென் றுசொல்லப்படுகின்றது

வான்மீகிசொல்லுகிறார் அதிகதேசசையுடையவிசுவாமித்திரர் அந்தஅரச னர்வசனத்தைக்கேட்டுச்சரீரம் புளகாங்கித்துச்சொல்லுகிறார் ராஜசி ரேஷ்டரே பெரிதானவம்சத்திற்பிறந்ததனாலும் வசிஷ்டர்வசத்திலிருப்பதனா லும்பூமியிலுமக்குமாத்திரமேதகுதியாயிருக்கிறவிவ்வசனத்தைச்சொன்னீர் ஆதலாலென்மனதிலிருக்கிற காரியத்தைச்செய்வதற்குநிச்சயஞ்செய்யுமக்கா ரியமென்னவெனில். சித்தியடைவதற்காகத் தேவர்களைக்குறித்து ஏகாகியஞ் செய்கிறேனதைக்கோரமான இராட்சசாள் மாமிசத்தினாலுமிரத்தத்தினாலு மந்தயாக பூமியைக்கெடுக்கிறார்களாகையால் அந்தத்தேசம்விட்டிங்குவந் தேன். சங்கை நீர்சாபத்தினாலேயே அவர்களையேன்நிராகரிக்கவில்லையெ னில் | அந்த யக்கியம் கோபமுஞ்சாபமுமின்றி நிறைவேற்றவேண்டியதா ல் கோபஞ்செய்வது எனக்குச்சம்மதியில்லை ஆகையாலந்த யக்கியத்தின் மகாபலத்தை உமதுசாதகத்தினால் விக்கினமின்றியடையவேண்டும் துன் பமடைந்துவந்திருக்கிற என்னைநீர்ரட்சிக்கவேண்டும் யாசகர்வேண்டி ய அருத்தங்கைகூடாமற் போவதுகொடையாளனுக்கவமானம் சிமானுயு ம்மதத்தபுலியின்பெலமுள்ளவனுமிந்திரனுக்குச் சமானவீரியமுள்ளவனும் அர க்கருக்குக்காலனுஞ்சத்தியமுள்ளவனுஞ்சிலுப்பாகுடுமியுள்ளவனுமாகிய சூ ரனும் மூத்தவனும் உமக்குப்புத்திரனுமிருக்கிற ஸ்ரீராமனை எனக்கு க்கொடுக்கவேண்டும் சங்கை அஸ்திராப்பியாசமில்லாதவனும்பாலகனுமி ருக்கிற ராமனெப்படிவல்லவனெனில் | இவ்விராமனென்னுடைய தனதுதிவ் வியபராக்கிரமத்தினாலும் யக்கியத்திற்குவிக்கினஞ்செய்கிறஅரக்கரைக்கொல

ஷதில்வல்லவன்நாசமில்லாமலும் பலவிதமாயு மிருக்கிற அஸ்திரப்பிரபாவ
கீர்த்தியை யென்னிடத்திலிருந்தவிராமனடையப்போகின்றமையால் மூன்றுலோ
கத்தினாலும் பூசிக்கத்தக்கவனாகப்போகிறான் கோபித்திருக்கிறசிங்கத்தின் முன்
மான்கள் நிற்காததுபோல் இராட்சதரும் யுத்தத்திலிராமன் முன்னிற்கமா
ட்டார்கள் சிங்கத்தைத்தவிர மற்றொன்றுமதத்திருக்கிறயானைகளோடமர்செ
ய்யாததுபோலவிராமனைத்தவிர மற்றொருவன் இராட்சதர்களோடமர்செய்வ
தற்குவல்லவனல்லன் அதேதனாலெனில் கோபித்திருக்கிற யமனைப்போல
வும் காலாக்கினிகளுக்குச்சேவகராயும் அமரிலகப்பட்டவிஷத்துக்குச்சரி
யாயுமிருக்கிற இராட்சதர் வலியினால்மிகவுங்கர்வத்தையடைந்தபோர்சவீர
சங்கை. அப்போதிராமனாற்றுனெப்படி கொல்லலாமெனில் மேகத்தினது ஒ
யாதமழையைப் புழுதிகள்சகிக்காததுபோல அரக்கருமிராமபாணங்களைச்
சகிக்கார்கள் [தூளிகண் மணமறைத்தற்குவல்லதாயிருந்தாலும் மழையை
க்கெடுத்தற்குவல்லதாகாதென்பதுகருத்து] சங்கை. அப்படியாயினும் புத்தி
ரனைப்பிதாவைவிடலாகாதெனில் [இவ்வுலகில் பெரியோர்கட்குக்கொடுக்க
த்தகாதவஸ்துவில்லாமையால் என்குமாரனென்று நீரிச்சையடையவேண்
டாம் [இப்படியுண்டோவெனில்சிபிச்சக்கரவர்த்தித்தன் சரீரத்தையுந்ததீசித
ன் முதுகெலும்பையும் அளர்க்கன் தன் கண்ணையுமிவைமுதலிய வைகளைக்
கொடுத்தாரென்பதுகருத்து] (அ-கை) இக்காரியத்தில்பாயம்வருமென்றாச
ங்கிக்கத்தக்கதல்ல விசயமேயுண்டாகுமென்று சொல்லுகிறார் [அவ்வாக்க
ையடைபட்டவர்களாகஞானத்தினாலறிகிறேன் நீரும் வசிஷ்டனுந்தியானத்தினால் நிச்
சயமாக அறியும் எங்கவாப்போறதெரிந்தவர்கள் சந்தேகமானகாரியத்திற்ப்பி
ரவர்த்திக்கிறதில்லை இராமனைமகாத்மாவென்று நானும்வசிஷ்டரும் மற்ற
தீர்க்கதரிசிகளுமறிவார்கள் தருமத்தையும் மகத்துவத்தையுங் கீர்த்தியையு
மிரட்சிக்கவேண்டுமென்றுமனதிலிருந்ததேயாகிலுமக்கு மிகவும் பிரியமான
புத்திரனையெனக்குக்கொடுக்கவேண்டுமவனாலவ்வரக்கர் கொல்லப்படுவார்
கள் அந்த யக்கியம்பத்து நாளையில்முடியத்தக்கது இவ்வருத்தத்திற்கு உம
துமந்திரிகளும்வசிஷ்டர் முதலியோர்களுஞ்சம்மதிக்கத்தக்கது ஆகையாலி
ராமனையனுப்பவேண்டும்யாகத்திற்குயோக்கியமானவசந்தகாலமதி
க்கிரமியாமல்செய்விக்கிற உமக்குச்சுகமுண்டாகக்கடவது மனதிற்றுன்பம
டையவேண்டாம் காலத்திற்செய்தகாரிய மணுவாயிருக்கினுமது பெரிய உ
பகாரமாகுது அகாலத்திற்செய்தமகத்தான உபகாரமுமவீணாகுது [உபகா
ரமாவது தானிச்சிக்குங்காரியத்தைச்சாதித்தற்குச்சகாயஞ் செய்கிறது] தரு
மார்த்தங்களோடுகூடியவசனத்தைச்சொல்லித்தருமசொரூபரானவிசுவாமி

நிர்மௌனமாகவிருந்தார் மகானுபாவரானதசரதர் விசுவாமித்திரமுனிவரர்சொன்னவசனத்தைக்கேட்டு அதற்குத்தகுந்தயுக்தியோடுகூடினவசனத்தைச்சொல்வதற்காக ஆலோசித்துச்சும்மாவிருந்தார்·சங்கை·ஏதையேனுஞ்சொல்லத்தக்கதைச் சொல்லாமேயுக்தியைச்சிந்திக்கவேண்டுவதென்னெனில் | உயிர்கள்மனதிற்குவேண்டியகாரியத்தையடையாவிடில்சந்தோஷமடைகிறதில்லை புத்திமானேனெனில் வேண்டியகாரியஞ்சித்தித்தபோதிலும்யுக்தியோடுகூடின வசனத்தைச்சொல்லாவிடில்சந் தோஷமடையமாட்டானென்றுலோசித்தார்.

ஏழாவதுசருக்கமுற்றிற்று.

எட்டாவது சருக்கம்



இச்சருக்கத்தில்தசரதர்ராமனிடத்திலிருக்கிறபிரீதியினாலவன்யுத்தத்திற்குயோக்கியனல்லனென்றுசொல்லுதலும்ராவணாதிகள் பெலத்தையறிந்து துன்பப்படுதலுஞ்சொல்லப்படுகின்றன.

வான்மீகிசொல்லுகிறார்விசுவாமித்திரர்வசனத்தைத்தசரதர் கேட்டுமுகூர்த்தகாலமசையாமலிருந்தாலோசித்துத்தயின்னியத்தோடுஞ்சொல்லுகிறார் இராமன்பதினந்தேமுக்கால்வருஷம் வயதுள்ளவனாயிருப்பதாலரக்கரோடுயுத்தஞ்செய்வதற்குயோக்கியனல்லன்·சங்கை· ஆனால்நான்வந்துயுத்தம்வீணேனெனில் பூரணமான அக்ஷௌணிக்குநாதனானநான் அரக்கரோடுயுத்தஞ்செய்கிறேன் பாலகனாயிருக்கிற இராமன்சேனைகளின்பெலாபெலத்தையறியமாட்டான் அதேனெனில் பட்டணத்துப்பந்தியவிளையாட்டின்யுத்தத்தைத்தவிரவேறேயுத்தபூமியைப்பார்த்தவனல்லன்பட்டணத்திற்குச்சமீபத்திலிருக்கிறவனங்களிலும்பூந்தோட்டங்களிலிருக்கிறகொடிவீடுகளிலும் எப்போதும்வாடிக்கையுள்ளவன்மனோவிசாரத்தினால் பிடிக்கப்பட்டிருக்கிறவனை அரக்கரோடுயுத்தஞ்செய்வதற்கு எப்படிகொடுப்பேன் ஜீவித்திருக்கவேண்டுமென்கிறதான் ஓர்முகூர்த்தகாலமாயினுமிராமனைவிட்டுப்பிரிந்திருந்தால்ஜீவிக்கமாட்டேனாகையாலவனையழைத்துப்போகக்கூடாது (அ-கை) அழைத்துப்போவீராகிலரக்கர்கள் கொல்லப்படுகிறதில்லை பின்னையோவெனில்குமாரர்களோடுகூடியிருக்கிற எனக்குத்தானும்மால் மரணம்வருமென்றுசொல்லுகிறார் | ஒன்பதினாயிரம்வருஷம் புத்திரன்வேண்டுமென்று இச்சையுள்ளவெனக்குப்புத்திரகாமேஷ்டிமுதலியயாகங்களைச்செய்துஇராம

ப்பட்டு இந்தநாலு குபுத்திரருற்பத்தியானூர்களவர்களிலிராமவனை நீங்கிமற்ற மூவர்களுஞ்சீவித்திருக்கமாட்டார்கள் அப்படிப்பட்டவனையே நீரழைத்துப் போவீராகில்நான்குகுமாரர்களையும்விட்டுப்பிரிந்திருக்கிற வென்னையும்ம ரித்தவனுகவறியும் [ஆகையால் ஏக்கியதருமத்தைக்காட்டிலும் மகத்தான அதன்மம் உமக்குவருமென்பதுகருத்து] அவனையழைத்துப் போகாமற் போவனுகில் ஏன்காரியமெப்படிசித்திக்குமெனில் சதுரங்கசேனைகளோடு கூடின என்னையழைத்துப்போமப்படி என்னையழைத்துப்போனபோ திலுங்கபடயுத்தஞ்செய்கிற அரக்கர்களைநான்றுன் ஏப்படிக்கொல்லத்தகு ம்மகாபராக்கிரமமுள்ள இராவணனென்னும் ஓரரக்கனிருக்கிருனென்று கேட்டிருக்கிறேன் துஷ்டபுத்தியுள்ள அவனுமது ஏக்கியத்தைக்கெடுப்பனு கிலவனோடுயுத்தஞ்செய்வதற்கு எங்களுக்குவலியில்லை ஏதேனெனில் சில காலத்திலசிலதேசத்தில்சிலபிராணிகளிடத்திலதிகபராக்கிரமமுஞ் சம்பத்துமு ண்டாகின்றன சிலகாலத்தில் நசிக்கின்றன ஆகையாலிக்காலத்தில்நாங்களி ராவணன்முதலியசத்துருக்கள்முன்னிற்பதற்குச்சமர்த்தாளல்லஇப்படியீஸ் வரனுலநியமிக்கப்பட்டிருக்கின்றது ஆகையாலென்புத்திரனிடத்திற் தயவு செய்யவேண்டும் உமதுமனோரதத்தைநிறைவேற்றச் சத்தியில்லாதவனையால நீர்படாக்கியனுயிருக்கிற எனக்குநீர்தான்முக்கியமானதெய்வம்யாதினாலுமக் கிப்படிக் கொத்த அதைரியமெனில் தேவாள் தானவாள் கந்தர்வாள் ய க்ஷாள் பதகாள் பன்னகாளிவர்களெல்லாருமே இராவணனோடு யுத்தஞ் செய்வதற்குவலியின்றியிருப்பார்களானுல் மனுஷியாள்சமர்த்தாளல்ல வெ ன்பதைக்கேட்பானேன். (அ-கை) வலியில்லையென்பதற்கு வேறொருகா ரணத்தையுஞ்சொல்லுகிருர் | ஏதக்காரணத்தினுலிராமனும் கிழவன்போ ற்கிழத்தனத்தையும் ஏழைத்தனத்தையு மடைந்தானே ஆகையால்சத்துருக் கள்வலியைக் கெடுப்பதான இது ஒருகாலம் ஏமனுக்குச்சரியான இலவ ணன் சுவாகுமாரீசாளிவர்களுமதுயாகத்தைக்கெடுப்பார்களாகிலவர்களோ டுயுத்தஞ்செய்வதற்கிராமவனையனுப்பமாட்டேன்நானனுப்பாவிடில்நீர்வலி மையாலவனையழைத்துப்போவீராகிலப் போது நானும் மாவ்மரிக்கப்பட்ட வனுகிறேன்மரிக்காவிடில்சரீரத்தைவைத்திருக்கிற உபாயங்காணேனிப்படித் தசரதர்மிருதுவானவசனத்தைச்சொல்லிவிசுவாமித்திரருக்கிஷ்டமானகாரி யத்தினுலுண்டானசமுசியமாகிற அலைக்கூட்டத்தில்முழுகிஆத்மசுகத்தையு ங்காரியநிச் சயத்தையுமறியாதமையால்மிகுந்த அலையோடுகூடினசமுத்தி ரத்தில்முழுகிமோகத்தையடைந்தவன் போலவானுர் [சமுசியமாவது அரக் கரோடுயுத்தத்திற்கிராமவனைஅனுப்பலாமாஅனுபபக்கூடாதாவென்பது.]

ஒன்பதாவது சருக்கம்.

இச்சருக்கத்தில் விசுவாமித்திரர்கோபமும் வசிஷ்டர்தசரதருக்கு அவர் தபசையுமஸ்திரங்களின் வலிமையுஞ்சொல்லியிருதுவாகச்சமாதானப்படுத்துகிறதுஞ்சொல்லப்படுகின்றன.

வான்மீகிசொல்லுகிறார். புத்திரவாஞ்சையால்வியாகுலமானகண்களையுடைய தசரதர்வசனத்தைக்கேட்டு விசுவாமித்திரர்கோபித்துச் சொல்லுகிறார். யாவராலும் பூசிக்கத்தக்கவராகிய நீர்செய்கிறேனென்று பிரதிக்கினையைச்செய்து அதைவிடுதற்கெத்தனித்தல் சிங்கமாயிருந்தநீமானாகவேண்டுமென்றிச்சிக்கிறதுபோலிருக்கின்றது சந்திரனுக்குஷ்டணகிரணந்தகாததுபோல்இராகவவமிசத்திற்கிப்பொய்தகாது அரசனே நீர்வழியின்றியிருப்பீராகில் நான்வந்தபடியேபோகிறேன் நீர்சொன்னபிரதிக்கினையைவிட்டுபந்துக்களுடனேசுகமாயிருமென்று விசுவாமித்திரர்கோபமடையும்போது மண்ணும் விண்ணும் நடுங்கிற்று அன்னியாளுந்நடுங்கினார்கள் [பூமியானது என்பதியானவர் அபராதப்படுகிறாரென்றோ அல்லது குற்றம் பண்ணினசனத்தைத்தரிக்கிற குற்றமுண்டாகுமென்கிற பயத்தினாலேவா நடுங்கிற்றுவிண்ணிலிருக்கிறதேவர்களுமிராவணனைக்கொல்வதற்குவேறொருவனைச்சிருஷ்டிப்பாரோ அவனால்நமக்கு உபத்திரவமுண்டாகுமோவென்றுபயமடைந்தார்கள்] தைரியமுந்தலவிரதமும்புத்தியுமுடைய வசிஷ்டர் உலகத்துக்கிஷ்டமாயிருக்கிற விசுவாமித்திரமுனி கோபித்திருக்கிறாரென்பதையறிந்து தசரதரைப்பார்த்துச்சொல்லுகிறார் இட்சுவாகுகுலத்திலுண்டாகியும்பிரத்தியட்சமாகத் தருமமுருவடைந்ததுபோலவும் தசரதனென்றுபேர்பெற்றுமூன்றுலகத்திலும்பிரசித்தராயிருக்கிறநீர்சொன்னகாரியத்தைவிடுதற்குயோக்கியரல்ல சொன்னகாரியத்தைச் செய்வதானஉமதுகுலதருமத்தைநீரடைந்து தருமத்தைவிடாமலிரும்மூன்றுலகத்துக்கு ஈசுவராயிருக்கிறவிசுவாமித்திரர் வசனத்தைநிறைவேற்றவேண்டும்செய்கிறேனென்றுசொன்னதைச்செய்யாமலிருக்கின்றது உமது இஷ்டாபூர்த்தமென்றுசொல்லப்பட்டதருமங்களைக்கெடுக்குமாகையாலிராமனைப்போகச்சொல்லும் [இஷ்டமாவது யாகமுதலானதருமம் பூர்த்தமாவதுகுளம் வெட்டுகிறதுமுதலானதருமம்] மனுவமிசத்திற்பிறந்துதசரதனென்றுபேர்பெற்றிருக்கிறநீரேசொன்னவாக்கியப்படிச்செய்யாமற்போவீராகில்மற்றெவன்செய்யப்போகிறான் உம்மாற்செய்யப்பட்டவிவகாரநியமங்களை அஞ்ஞானிகளும் விடுகிறதில்லையே ஆகையால் நீர்சொன்னதைவிடக்கூடாது அக்கினியமிர்தத்

தையிரட்சிப்பதுபோல் இவ்விசுவாமித்திரராலிரட்சிக்கப்பட்டவிராமன்அஸ்திரவித்தைதெரிந்தவனாயினும்தெரியாதவனாயினுமவன்முன்னிராட்சசாள் யுத்தஞ்செய்பமாட்டார்கள். (அ॰ நை) சொன்ன அருத்தங்கூடுமென்பதற்காக விசுவாமித்திரருபிரபாவத்தைப் பிரசித்தப்படுத்துகிறார் | சரீரத்தோடுகூடினதருமமாயும்பராக்கிரமசாலிகட்குளுத்தமராயும் புத்தியிலதிகராயும் தபசுக்கெல்லாமிருப்பிடமாயுமிருக்கிற இவ்விசுவாமித்திரர் மூவுலகிலுமிருக்கிற நானாவித அஸ்திரவித்தைகளையறிந்தவர் இவரைத்தவிரமற்றொருவனுமறிந்தவனுமில்லை அறியப்போகிறவனுமில்லை தேவர்கள்ரிஷிகள் அசுரர்கள்நாகர்கள் ரக்ஷர்கள் கெந்தர்வாளிவர்களெல்லாருங்கூடினாலும் பிரபாவத்தினாலிவருக்குச்சரியானவர்களல்ல அதேதினாலெனில் ஒருவராலுஞ்செயிக்கக்கூடாததான அஸ்திரமானது சர்வகர்த்தாவாகிய பரமசிவனாலிவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது இப்படிப்பட்ட பிரதாபமுள்ளவராகையாலிராமனையனுப் புகிறதிலுண்டான புத்திதாழ்வைவிட்டுவிடுமிவர் சமீபத்திலிருக்கும்போது சாதாரணபுருஷனுக்குக்கூடமரணம்வந்தாலுந்தேவத்துவங்கிடைக்குமாகையால் தெரியாதவன்போல நீர்தயின்னியத்தையடையவேண்டாம்.

ஒன்பதாவதுசருக்கமுற்றிற்று.

பத்தாவதுசருக்கம்.

இச்சருக்கத்திலரசனாலேவப்பட்டஎவலாளனிராமனிடத்திற்குப்போய் அவர்நடத்தைகளையறிந்துவந்தரசனுக்குத் தெரியப்படுத்துகிறானென்று சொல்லப்படுகின்றது.

வான்மீகிசொல்லுகிறார். முன்சொன்னபடிவசிஷ்டர்சொல்லத்தசரதர் சந்தோஷித்து எவலாளனைப்பார்த்து இராமனையுமிலட்சுமணனையுமழைக்கச்சொன்னார் அந்த எவலாளன் ஒருமுகூர்த்தத்தி லிராமனைக்கண்டுவந்தரசனைப்பார்த்துச்சொல்லுகிறான் தாமரைமலரில் வண்டானதுபோலவிராமர்தன்மனையில்துன்பமுற்றவராய்க்ஷணம்வருகிறேனென்கிறார். க்ஷணந்தியானஞ்செய்கிறார் ஒருவர்சமீபத்திலிருப்பதற் கிச்சிக்கவில்லையென்று எவலன்சொல்ல அரசன்தனது எவலாளனோடுவந்திருக்குமிராமபரிசா

ரகளைத்தெளிவித்துவரிசையாகஅவன்நடத்தைகளைச்சொல்லென்றுகேட்கவிராமபரிசாரகன்விநயத்தோடுஞ்சொல்லுகிறான் இராமர்துயரத்தினாலிளைத்திருப்பதாலவரைப்பார்த்திருக்கிற நாங்களுமிளைத்திருக்கிறோமவரிளைப்பையுந்துயரத்தையுமடைதற்குக்கேட்கவேண்டுமோ தீர்த்தயாத்திரை செய்து வந்தநாள் முதல் மனதில்மிகவுந்துயருற்றிருக்கிறார் எங்கள்பிரார்த்தனையினால்போசனமுதலியகாரியங்களை ஒருவேளை கொஞ்சஞ் செய்தும் செய்யாமலுமிருக்கிறார். ஸ்நானம். தானம் தேவார்ச்சனை- முதலியவைகளில்விருப்பமில்லாதவராயிருக்கிறார் விளையாடுகிறகூடத்தில் உஞ்சல்விளையாட்டினாற்சஞ்சரித்திருக்கிற அந்தப்புரத்து ஸ்திரிகளோடுகூட.சாதகபட்சியானதுவருஷதாரைகளோடுகளித்தல்போல விளையாடவில்லை சொர்க்கமானது கீழேவீழ்தற்குத்தருணமாயிருக்கிறவளைச்சந்தோஷப்படுத்தாதுபோலக்கண்ணாடிபோன்ற மாணிக்கங்களாலிழைந்ததோள்வளைகளிராமரைச்சந்தோஷப்படுத்தவில்லை கேளிக்கைசெய்கிற தாசிகளைப்பார்த்து என்துயரத்தைவிளைக்கிறார்களென்று நிந்திக்கிறார் சம்பத்து ஆபத்து வீடுமனோரதமானகாரியங்களெல்லாம் பொய்தானென்றுசொல்லி ஏகாங்கியாகவேசும்மாயிருக்கிறார்பரியாசங்களிற்சந்தோஷியாமலும் போகங்களில்முழுகாமலும்தொழிற்களிலிச்சையின்றியுமிருக்கிறார்மான்பேடுகள்விருட்சத்தைச்சந்தோஷப்படுத்தாததுபோல மலர்நிறைந்தகூந்தலையுடையவராயுஞ்சிங்காரசேஷ்டையோடுகூடியகண்களையுடையவராயுமிருக்கிற ஸ்ரீகளிராமரைச் சந்தோஷப்படுத்தவில்லைவனத்திற்சஞ்சரிக்கிற மூடனிடத்தில் விலைபட்டவன் அவனைநீங்கற்கிச்சித்தல்போல தனியிடம்நதிக்கரைவனமிவைகளிலன்பையடைகிறார் வஸ்திரம் அசனம் நீருண்டல்முதலிய வைகளிலுமிகவும் பராமுகமாயிருப்பதால்சன்னியாசிதருமத்தையனுசரிக்கிறார் அப்போதவரதுசெய்கைதானியாதெனில் பத்மாசனமாகவிருந்து சூனியமானமனதுடையவராய் இடதுகையில்கன்னத்தைவைத்துகேவலந்தியானஞ்செய்கிறார் ஒன்றிலபிமானமுமரசனாயிருத்தற்கிச்சையும் சுகத்தில்விருப்பும்துக்கத்தில்வெறுப்புமடைகிறதில்லை சரற்காலமுடிவிலிருக்கிற மரம்போலதினந்தோறும் இளைப்பும் வெளுப்பும் வைராக்கியமுமடைகிறார் இலட்சுமணசத்துருக்கனருமப்படியே அவருடையபிரதிபிம்பங்கள்போலவேயிருக்கிறார்கள் விஷயங்களுமிந்திரியங்களுஞ்சேருகிறகாலங்களில்மாத்திரமனோக்கியமாயுமுடிவில் துன்பமாயுமிருக்கிற போகங்களில்மனதைச்செலுத்தவேண்டாமென்று சமீபத்திலிருக்கிறவிவேகியான சினேகிதனைப்பார்த்து நியமப்படுத்துகிறார் முத்திக்கேதுவின்றியிருக்கிற வெளிவியாபாரங்களாலாயுள்

வீணாகுதென்று அடிக்கடி அழகாயும்வெளிப்படாமலுமிருக்கிறவசனத்தினா
ற்பாடுகிறார் இத்தன்மையையுடைய விராமர்சம்ராட்டாக வேணுமென்று
ஆதித்துத்தன்வினை யனுசரித்துப்பிழைத்திருக்கிறவனைப் பிதறறுப்பித்த
வனைப்போலெண்ணி நகைக்கிறார் [சம்ராட்டாவது இராசசூயமுதலியயா
கங்களியற்றி அரசர்பலரும்வணங்கப்பூமண்டலமூற்றுமாள்டவனுக்குஞ்சுய
ம்பிரகாசமாக ஏதுவிளங்குகின்றதோ அதற்குப்பெயராதலால் சுயம்பிர
காசமேபரமாத்துமாவென்றாகுது அந்த அருத்தத்திலேயே மனதையுடை
யவராய் அந்தஅருத்தநதனக்குத்தெரியாததினாலதையேஆலோசித்துமவுன
மாயிருக்கிறார்தனக்கிஷ்டமானதையவன் சொல்லாததினாலுமனிஷ்டமான
தைச்சொல்லுவதனாலுமதையனுதாவுபண்ணிநகைத்தாரென்பதுகருத்து]
தனக்குவேண்டியதடைநதிருந்தாலுங்களிக்கிறதில்லை ஒருவர்சொல்லுகி
றத்தைக்கேட்கிறதில்லை எதிரேயிருக்கிறத்தைப்பார்க்கிறதில்லைச்சகலவஸ்
துக்களிலுமாதரவைச்செய்கிறதில்லை இன்பமிகுதியுடையவஸ்துக்களிலாச்
சரியமடையத்தக்கதாயிருக்கயாதினலாதரவு செய்கிறதில்லையெனில் ஆகா
சத்திற்பொய்யாய்த்தோற்றுகிற பெரியகாட்டில் தாமரைமூலைத்திருந்தாற்
போலமனதுக்குவெளியிலிருக்கிறவஸ்துக்களையறிநதே ஆச்சரியமுண்டா
கவேண்டும் ஆத்துமாவில் மனதுமித்தைமை திலாச்சரிய முண்டாவதுமித்
தையென்கிற நிச்சயத்தினாலிவருக்குவெளிவஸ்துக்களிலாச்சரியமுண்டாகவி
ல்லை ஆகையால்மழைத்தாரைகள்பெரியகல்லைப் பிளக்காதது போலவிரா
மர்·ஸ்ரீகள்நடுவிலிருந்தாலும்வர்மனதை மன்மதபாணங்கள் பிளக்கமாட்
டாதுக்கள்பின்னும்ஆபத்துக்கெல்லாமிடமானதனமரவேண்டுமென்று கே
ட்டுச்சகல்தனத்தையும்யாசகருக்குக்கொடுக்கிறார் இது ஆபத்தென்றுமிது
சம்பதுதென்று மெண்ணுகிறகற்பனைபிராந்தியானது மனதிலுண்டாகுதெ
ன்று பாடுகிறார்செனங்கள் ஓரிஷ்டமானபொருள் போகும்போது நான்
கெட்டுப்போனேன் நானுதையானேனென் றழும்போதும்வைராக்கியத்
தையடைகிறதில்லையிதுவே ஆச்சரியமென்று சொல்லுகிறார்[அன்னுவ
யவிதிரேகங்களாலிராகமுதலியன துன்பமென்று பார்க்கும்போதுமென்ப
துகருத்து] இராமரிப்படியிருப்பதனால்நாங்களுநதுக்கமடைநதிருக்கிறோ
மாதலாலிவருக்குண்டான சோகத்தைப் போக்கத்தக்கவுபாயமொன்றுந்தெ
ரியாதநாங்களென்னசெய்குவோமிக்காரியத்தில் நீரேகதி நீதிதெரிநதவர்கள்
நியாயத்தையுபதேசஞ்செய்தவராதுமோசத்தைப்போக்கட்டுமேயெனில் | அ
ரசனீதியைச்சொல்லுகிற அரசனைத்தானுவது அல்லது பிராமணனைத்
தானுவதுதெரியாதவனைப்போற்பரியாசஞ்செய்வதுமன்றி அவமானமுஞ்

செய்கிறார் இது இதென்றுதோற்றிக் கொண்டும்நாசத்தையடைகிறதாயு மசிரியாயிருக்கிறவிச்சகத்தும் நானென்றுதோற்றுகின்றதும்வஸ்துவல் லவென்பதேயோவஸ்துவென்றுசொல்லப்பட்டது வேறென்றுநிச்சயித்திரு க்கிறார் போகம் ஆயுள் இராச்சியம் மித்திரன் தாய் தந்தைமுதலியவைக ளிலேமழையில்லாதகாலத்தில்சாதகபட்சிபோலமிக்வும்பயமடைந்திருக்கிறார் இப்படியிருக்கிறபுத்திரனுடையசிந்தைமுதலிய விணைகளால்விரிந்திருக்கிற ஆபத்தாகிறகொடியைவேரோடுபிடுங்குதற்குத்தயவுள்ளவரான நீரொத்தன தைச்செய்யுமினை உலககாரியங்களிலிருக்கும்படியாகச் செய்யத்தக்கபெ ல்வானிவவுலகிலும்மைத்தவிரயாவரிருக்கிறார்சூரியனிருட்டைப்போக்கிப்பூ மியில்தனது பிரகாசத்தைப் பிரயோசனத்தோடு கூடினதாகச் செய்வது போல் துக்கரூபமானவிருட்டுக்குக்காரணமானசகலமோக த்தையுமிராமரு டையமனதில்நின்றுமப்பால்தள்ளியவரிடத்தில்தனது உபதேசசாமர்த்திய த்தைப்பிரயோசனத்தோடு கூடினதாகச்செய்கின்றவனே மகாபுருஷனெனப்ப டிபட்டவர்நீர்தான்.

பத்தாவதுசருக்கமுற்றிற்று.

பதினோராவதுசருக்கம்.


இச்சருக்கத்தில் விசுவாமித்திரருத்தரவினால் சபையிலழைத்துவந்தி ருக்கிற ராமனைத் தசரதர்சமாதானப்படுத்துகிறதும் மனோவியாதிக்குக் காரணத்தைக் கேட்கிறதுஞ்சொல்லப்படுகின்றன.

விசுவாமித்திரர்சொல்லுகிறார்- இராமர்முன்சொன்னபடியிருந்தாரே யாகில சமர்த்தாளான நீங்கள் தவஸிமையான மாவினயனுசரித்திருக்கிற மான்கள்போல இவ்விடத்திற்சீக்கிரமாக அழைத்துவாருங்கோள் இராம ருக்குண்டான இம்மோகமானது ஆசையினாலும் ஆபத்தினாலுமுண்டான தலலயிதுமோட்சத்துக்கேதுவானநிராசையினாலும் விவேகத்தினாலும்வரு கின்றஞானந்தான் அவர்சீக்கிரமாக இவ்விடத்திற்கு வரட்டுங்காற்றானது பருவதத்திலிருக்கிறமேகத்தைப்போக்குவது போலநாங்களவர்மோகத்தை யிவ்விடத்திலேயேசீக்கிரமாகப்போக்கிவைக்கிறோம் .சங்கை. மோகத்தைப் போக்கினதாலவருக்கென்னசித்திக்குதெனில் இம்மோகமானது யுத்தியினா ற்போகும்போது அவருத்தமமான மோக்ஷபதத்தில் ஏங்கவிளைப்போவிவிரா ப்பாறுதவலியடைந்து அமிர்தபானம் பண்ணினவன் போலசத்தியவஸ்து

ஆநந்தம்ஞானமிவைப்பாறுதல் குளுமைபெருமன்நல்லபழகு இவைகளை
யடையப்போகிறார் சங்கை விவகாரமவித்தையினாலுண்டாகின்றமையா
ல்குடைபோகும்போது நிழலப்பாற் போகிறபடிபோல அவித்தை போகும்
போதுவிவகாரமும்போய்விடுமனுசெனங்களுக்கிஷ்டமல்லவேயெனில் பூஜி
க்கத்தக்கவராயும் பரிபூரணமானமனதுள்ளவராயுமிருக்கிற இராமனன்வ
ருணத்திற்குமாச்சிரமத்திற்கும் யோக்கியமாக உலகவிவகாரங்களைப் பழுதி
ன்றிச்செய்யப்போகிறார் அவர் ஒருகுறைவின்றி யிருக்கிறவராச்சுதேவிவ
காரத்தைச்செய்வானேனெனில்ஜீவித்திருக்கிறவர்க்கும் சகலவிவகாரங்க
ளும்விடக்கூடாததினால்வசியம்விவகாரஞ் செய்யத்தக்கதாகும்போது தன
துவிவகாரத்தைவிட்டுவேறொருவிவகாரத்தைப்பற்றுதற் கேதுவில்லாமை
யாலுமரசன்செய்வதைச்செனங்கள்செய்வதனாலுமவர்கள் செய்வதற்காகவு
ம்தன்விவகாரத்தையேநடுவில்விடாமற்செய்யப்போகிறார் அவ்விவகாரங்க
ளைச்செய்தாலவைகளிலிச்சை யடைந்து முன்போற்சுகதுக்கதிசைகளைய
டைவரோவெனில் வலுவானஞானபெலமுள்ளவராயுப் பராபரத்தையறிந்
தவராயுஞ்சுகதுக்கதிசையில்லாதவராயும்ஓடும்பொன்னுஞ்சரியாய்ப்பார்க்கி
றவராயுமாகப்போகிறானென்றுமுனிநாதனாயிருக்கிற விசுவாமித்திரர்சொ
ல்லும்போது தசரதர்பூரணமான மனதுள்ளவராய் இராமனையழைத்து
வருவதற்காகத்திரும்பவுமனேகந்தூதாளையனுப்பிவித்தார் பின்பிராமர்வி
சுவாமித்திரர் வந்துவசனித்திருக்குஞ் சபையத்திலபிதாவின்சமீபத்திற்குப்
போகவேண்டுமென்றுதன்வீட்டிலிருக்கிற ஆசனத்திலிருந்தும் உதயபரு
வதத்திலிருந்துசூரியன்போல எழுந்திருந்துசிலவேலைக்காரர் தம்பிகளிவ
ர்களோடுகூட இந்திரன்சொற்கம்போலிருக்கிற புண்ணியமானபிதாவின
திடத்தையடைந்துதேவர்கள் கூட்டத்தினாற்சூழப்பட்ட இந்திரன்போல
அரசர்கள்வசிஷ்டர்விசுவாமித்திராமந்திரிகள்முதலியகூட்டத்தினாற்சூழப்ப
ட்டிருக்கிறதசரத மகாராசாவைத்தூரத்திலேயேகண்டார் வசிஷ்டர்முதலா
னவர்களும்சுப்பிரமணியருக்குச்சமானமாயும் சத்துவகுணமுள்ளவராயுமி
ருக்கிற இராமனைத்தூரத்திலேயே கண்டார்கள் பின்பிராமர்சபையில்வந்
துபிதாவையும்வசிஷ்டர்விசுவாமித்திரரையும்பிராமணரையும்பந்துக்களை
யுமாசாரியர்களையுங் கிரமமாகப்பணிந்தார் பின்புகல்ளைப்பணிந்தவர்க
ளைப்பார்வையினாலும்சிரசினாலும்வாக்கினாலுமங்கீகரித்துப் பிதாவினதுச
மீபத்தையடைந்தார். அவரைத்தசரதர் மடியிலிருமென்று சொல்லும்போ
துபூமியில்தனது ஏவலாளாலிடப்பட்டவஸ்திரத்திலிருந்தார்பின்புதசர
தர்சொல்லுகிறார்வாராய்விவேகத்தையடைந்தபுத்திரனே! சிரேய்சுகளுக்கும்

பாத்திரமானநீ அவிவேகிபோலமெலிந்தபுத்தியினால்சீவாத்மாவைத்துன்ப
ப்படுத்தவேண்டாம்பிதாமுதலியோர்களாலும்பிராமணாளாலும் ஆசாரியர்
களாலுஞ்சொல்லப்பட்ட தருமத்தைச்செய்கிறவனால் புண்ணியபதமானத
டையப்படுகின்றது மோகத்தையடைந்தவனாலடையப்படுகிறதில்லை மோ
கத்திற் கிடங்கொடாதவனாயில் தூரத்திலிருக்கிற ஆபத்துங்கிட்டவருகிற
தில்லை கிட்டவந்திருக்கிற ஆபத்து நசித்துப்போமென்று சொன்னபின்பு
வசிஷ்டர்சொல்லுகிறார் வாரீரிராகவரே நீக்கக்கூடாததாயுந் துன்பத்தா
ற்சம்பாதிக்கப்பட்டுமிருக்கிறவிடரூபமான சத்துருக்களையுஞ்செயித்தமை
யால் நீரொருவரிப்படியிருக்கிறநீருந் தெரியாதவர்கட்குயோக்கியமாயும் வி
ட்சேபங்களாலும் அஞ்ஞானத்தினாலுநிறைந் திருக்கிறமோகரூபமானகட
லிலாத்மஞானமில்லாதவன்போலயேன்முழுகிறீரென்றபின்பு விசுவாமித்
திரர்சொல்லுகிறார் உம்முடையமனதை வீட்டைப் பெருச்சாளிகள்போல
அநுக்கிரமனோவியாதிகளெந்தக் காரணத்தினாலுண்டாயிருக்கின்றது வீ
துகிடைத்தாலதிருமதுகளுடையசொரூபமெப்படிக்கொற்றது அதுகளைத்
தவிர்விதங்களைச்சொல்லும். (அ-கை) மனோவியாதிக்கு எதுக்கள்சக
த்திற்பிரசித்தந்தானே அதுகளைக்கேட்பானேனெனில் | அயோக்கியமா
னமனோவியாதிகட்குநீர் யோக்கியரல்ல அதேதெனெனில் ஆபத்தையடைந்த
வனாவது தரித்திரனாவது அதற்கிடமாவன் உம்மாலநீக்கவேண்டிய ஆபத்
துகளொன்றுமில்லை பின்னையோவெனில் உமது பிதாவினதுபிரபா
வத்தினாலேயேசகல ஆபத்துகளும் உமக்குச்சுதாவாகவே தள்ளப்பட்டிரு
க்கின்றதுகளானையாலெந்த இஷ்டங்கிடைத்தாலும்மை மனோவியாதிகள்
பீடிக்கமாட்டாதுகளோ அந்தயிஷ்டத்தைச் சீக்கிரமாகச்சொல்லுஞ்சகல
இஷ்டத்தையுமடைவீரென்றுவிசுவாமித்திரரது உசிதமான அர்த்தத்தை
க்கெற்பத்திலுடையவசனத்தைக் கேட்டு இராமர்வேண்டிய அர்த்தசித்தியை
அநுமானப்பிரமாணத்தினாலறிந்து மேககெர்ச்சனையைக் கேட்டமயிலான
துபோல துன்பத்தைவிட்டார்.

பதினோராவதுசருக்கமுற்றிற்று.



பன்னிரண்டாவது சருக்கம்.

இச்சருக்கத்தில் போகங்கள் துக்கரூபமென்றும் விஷயங்கள் பொய்யென்றுஞ்சம்பத்துகள் அனர்த்தமென்றுஞ்சொல்லப்படுகின்றன.

வான்மீகிசொல்லுகிறார். இராமர்விசுவாமித்திரர் வாக்கியத்தைக்கேட்டு நன்றாகத்தெளிவையடைந்து நிறைந்தபொருள்களையுடையதனால்மிருதுவாயுமழகாயுமிருக்கிற வசனத்தைச்சொல்லுகிறார் வாரீர்பகவானே நான்றெரியாதவனாயினும் நீர்சொல்லென்று சொன்னதினாலிப்போதுசகலத்தையுமுள்ளபடிசொல்லுகிறேன் பெரியோர்வசனத்தை ஈவன்தள்ளுவன் [ஈவன்தள்ளுவனென்றதனால் உமதுஆக்ஞாபரிபாலனத்தினாற் சொல்லுகிறேனேதவிர்மனோதைரியத்தினாலல்லவென்பதுகருத்து] (அ-கை) இந்தப்படிவணக்கவசனத்தினால்முனியைச்சுவாதீனஞ்செய்துதனது விருத்தாந்தத்தைச்சொல்லுகிறதென்கிறகாரணத்தினாலேகர்ம்மானுஷ்டானத்தினால்சித்தசுத்தியுஞ்சித்தசுத்தியினால் விவேகவைராக்கியமுமதனால்விசாரமுமுண்டாயிற்றென்றுசொல்லுகிறார் | இந்தநான்பிதாவினது வீட்டிற்சனித்து வளர்ந்துவித்தியாப்பியாசங்களைச்செய்தபின்பு சாத்துக்களாசாரப்படியே நடந்துசமுத்திரஞ்சூழ்ந்தபூமியில் தீர்த்தயாத்திரைசெய்யுநிமித்தஞ்சஞ்சரித்தபின்பிவ்வளவுகாலத்திற்குள்ளே இச்சமுசாரத்திலிருக்கிற வாசையைநீக்குவதான விசாரணையானதென்மனதிலுண்டாயிற்று அதனால் விவேகத்தையுடையவனாகி போகவிச்சை நீங்கியபுத்தியினால் நானேமேற்சொல்லப்போகிறபடிவிசாரணைசெய்தேன் ❋ விரிவான இச்சமுசாரத்தி லென்ன சுகம் பிராணிகளிறத்தற்கே பிறக்கின்றதுபிறத்தற்கேயிறக்கின்றது ஆகலால்மிகவுந்துக்கமா யிருக்கின்றது சங்கை பிறத்தலிறத்தலிற்றுக்கமிருப்பினுமிதன் மத்தியிற்செல்வம்வந்தபோது சுகமனுபவிக்கப்படுகுதே யெனில் செல்வம்வந்தகாலத்திலிருக்கிற மாலைசந்தனம் அன்னபானமுதலியசகலவிஷயங்களுஞ் சுகத்தைக்கொடுக்கிறதல்ல அதேனெனில் விஷயங்களநிலையில்லாததினால் அகப்படாதகாலத்திலும் பிரிகிறகாலத்திலுந் துக்கத்தைக்கொடுக்கின்றதுகளப்படி யிருந்தபோதிலுமனுபவகாலத்தில் சுகமுண்டாகுமேதெனில் அப்போதுமிவ் விஷயங்களுயர்ந்த ஆபத்துகள்தான் அதேனெனி லிராகாதிதோஷங்களையுமிகுந்த ஆபத்துகளையு முண்டாக்குவதனால் சாஸ்திரநிஷேதமாகாதவிஷயங்களிப்படிக்கொத்ததுகள் சாஸ்திரநிஷேதமானவிஷயங்கள் பாவங்களை யுண்டுபண்ணுகின்றமையால் பாவங்களாயுமிருக்கும் [ஆகையால்விஷயபோகம் விஷங்கலந்த அன்னத்தைப்புசித்தற்குச் சரியாகவிருக்கின்றமையால் சமுசாரத்திற்சுகமில்லை யென்

பதுகருத்து] (அ - கை) அவ்விஷயங்கள்சுகத்தைக்கொடுக்கிற தாகாமற்
போமேயாகிலப்போது சுகத்திற்கேதுவாகவெப்படி சேர்ந்திருக்கின்றதுக
ளெனில் | சகலவிஷயங்களும் உளசிமுதலானலோகசலாகைகள்போல ஒ
ன்றுக்கொன்றுசேராமலிருந்துகொண்டு இதுபோகத்துக்குச்சாதனமெ
ன்றென்மனதின்கற்பனையினாலேயே ஒருகாரியத்திலேதுவாகச்சேருதுக
ள் (அ - கை) விஷயசம்பந்தங்கள் மாத்திரமனதின்வசமல்லவின்னையோ
உற்பத்தி திதி நாசங்களும்மனதின்வசந்தானென்று சொல்லுகிறார் | விரி
வானசுகமானதுமனதின்வசமாகக்காணப்படுகின்றது அப்போது மனதே
சுகசாதனமாகட்டுமெனில்மனதும் விவேகமுண்டாகும்போது சூனியம்
போலத்தோற்றுகின்றது அதனாலுஞ்சுகஞ்சித்திக்கிறதல்ல பின்யாதினால்
நமக்குச் சுகஞ் சித்திக்குமென்றிவ்வளவு காலமோகத்தை யடைந்தோம்
(அ - கை) ஆசையாலிவ்விஷயசுகம்பிராந்திதானென்றுகாண்பிக்கிறார் | கா
னற்சலத்தினால்மூடமான்கள்வெகு தூரமிழுக்கப்பட்டாற்போல மூடபுத்தி
களான நாமில்லாதவிஷயசுகத்தினாலேயே கஷ்டமாயிருக்கும்படியிழுக்கப்
பட்டோம் நாமெல்லாமொருவரால் விற்கப்படாமலிருந்தாலும் விற்கப்ப
ட்டவர்போல பரவசராயும் தெரிந்தவனென்றெண்ணியிருந்தாலும்
மூடராயுமிருக்கிறோமிதுதான்மாயை ஆச்சரியம் இப்பிரபஞ்சங்களில்
விஷயசுகலேசங்கள்தானேது அப்படியிருக்கநாங்கள்வீணாகவே அஞ்ஞா
னத்தினால்பந்தத்தையுடையவர்களென்றுபிராந்தியையடைந்தவர்களாகயி
ருக்கிறோம் [விஷயசுகலேசங்கள் நாசமுடையதென்று கண்டிருப்பதா
லுமளவில்லாததுக்கத்திற்குவித்தாயிருப்பதாலுந்துக்கமேயன்றிச் சுகமன்
றென்பதுகருத்து] படுகுழியில்மூடமிருகங்கள் விழுகிறதுபோல கனமா
னமோகத்தில் நாங்கள் வீணாகவிழுந்து விட்டதுஆ வெகுகாலங்கழிந்து
நினைப்புவந்தறியப்பட்டது நானார் இந்திரியமெப்படிக்கொத்த உருவையு
டையது எதுக்காகவந்திருக்கின்றது எனக்குராச்சியத்தினாலும் போகங்க
ளாலுந்தானென்னஇவைகளெல்லாம்பொய்தானே இதிற்கொஞ்சஞ் சத்திய
முமுண்டா அதில்பார்க்கப்படுகிறஞானஞ்சத்தியமா திரியஞ்சத்தியமா அ
தில் எதுபொய்தானே அதுவேபொய்யாகட்டு மதுவேறாக வேண்டாமது
பொய்யாகிறத்திலாருக்கென்னகுறைவுவருகின்றது [ஒருகுறைவுமில்லை
யென்பதுகருத்து] ஆகையாலிந்தப்படிவிசாரணை பண்ணுகிறவனுக்கு
ச்சகலவிஷயங்களிலும் வழிச்செல்வோனுக்குமருபூமிகளிற்றோற்றுகிறகா
னற்சலத்தில்வைராக்கியம்வருவதுபோல வைராக்கியம் வந்துவிட்டது ❀
[விரிவான இச்சமுசாரத்திலென்னசுகமென்ற வாக்கியமுதல் வைராக்கிய

ம்வந்துவிட்டதென்ற வாக்கியமிருக்கவிஷய சுகந்துவ்கமென்றும் பொய் யென்றுந் தனக்குவிசாரமுண்டான பிரகாரத்தைவருணித்ததெனவறிக] (அ-கை) தனக்குக்கேட்கவேண்டிய அமிசத்தைச்சொல்லுகிறார் | சற்வானு பவப்பிரமாணத்தினுல்சித்தித்திருக்கிற இத்திரிசியமானது நாசத்தையடைகு து அதாவது உண்மையாக இல்லாதபதார்த்தம்போலவேயாகுது அதென்ன இருப்பையுடையபதார்த்தத்துக் கில்லாமைகூடாதையால் திரிசியம் அசத் துத்தானென்றொருவன்சொல்லுவனேயாகில்திரும்பவுமுண்டாகுதே அதா வதுயிருப்பையடைகுதே அதென்ன உற்பத்திநாசங்களைத்தவிரவேறுபட் டிருக்கிறவிர்த்திமுதலானவிகாரங்களையுமடைகுதே அதுவுமென்னமுன்ன வஸ்தையையுடையது நாசத்தையடைகுது பின்னவஸ்தையையுடையதுவு ண்டாகுதெனில்போது அதுதானிதுவென்கிற நிலையும் விர்த்தியடைவ துமுதலியவிவகாரமும்வரக்கூடாது முன்னவஸ்தையுடையது நாசத்தை யடைகிறதில்லையென்றுசொல்லிலப்போது ஒருகாலத்திலேயேயிரண்டவ ஸ்தைகளையடையவேண்டுவதாகுமதேனெனி லவஸ்தாந்தரமுந் தொடர்ந் துகொண்டிருக்கின்றமையாற்றன் அன்றியுமிவ்வவஸ்தைகள் நிலையாயவி ருக்கவேண்டுமவ்வவஸ்தைகள் பாவபதார்த் தங்களை விடவேறெனிலப்போ தவைகள்அபாவமாகஎற்படும்பாவபதார்த்தத்தையு மவ தையையு மொன் றெனில் அவஸ்தையையுடைய நிலையுள்ளபதார்த்தத்தினிடத்தில் அவஸ்தை கள்கிரமமாகவருகுதென்கிறதுகூடாது [உற்பத்திமுதலானதுகளா லொ ருபிரயோசனமுமில்லையென்பதுகருத்து] இம்மூன்றுகேள்விக்கும் உத்தர ஞ்சொல்வதற்காக உற்பத்தி திதி உபசாந்திப்பிரகரணங்களுண்டா யிருக் கின்றன (அ-கை) பிரயோசனமில்லை யென்பதுமாத்திரமல்ல அனாத் தபரம்பரையுமிருக்குதென்றுசொல்லுகிறார் | உற்பத்தி சரை மரணம் ஆ பத்து சம்பத்து முதலானதுகளடிக்கடி தோற்றிமறைந்துவளர்ந்துகொ ண்டிருக்கின்றதுகள் [சம்பத்துமனர்த்தவேதுவாகையாலனர்த்தமென்று து] (அ-கை) சம்பத்துகள்போகவேதுவாகையினுல்தேகத்துக்குபயிரயோசு னமாகுதெனில் | திரும்பத் திரும்பவனுபவிக்கின்றதுச்சமான போகங்களி னுல் மலையிலிருக்கிறமரங்கள் காற்றினுலலைக்கப்படுவதுபோல அலைக்க ப்படுகிறோம் (அ - கை) ஞானமுள்ளவர்கள் துக்கநாசவுபாயஞ்சம்பாதியாமற் போனுலந்த ஞானம்வீண்தானென்றுமவர்களசேதனங்கள்போலவென்று ங்கருத்தில்வைத்துச்சொல்லுகிறார் | வண்டுகளால் துளைக்கப்பட்டதுவார முடைய அசேதனமானமூங்கில்கள்சத்திக்கிறது போலசெனங்கள் பிராண னென்கிற பேருடையதானகாற்றுகளால்சத்தித்துக்கொண்டு புருஷார்த்த

ந்திற்கு பயோகமாகாமல் வீணாயிருக்கின்றதுகள் (அ - கை) எந்தஎனதுவி
னால் மோகத்தையடையிருயென்றதற்குத்தரஞ்சொல்லுகிறார் | மரமானது
பொந்தில் பற்றிக்கொண்டிருக்கிற உக்கிரமானதீயினாற்போல இந்ததுக்க
மெப்படிபோகுமென்கிற சிந்தையினால்கொளுத்தப்படுகிறேன் ❋ கற்போ
விடைவெளியில்லாமல் சமுசாரதுக்கங்களால்நிறைக்கப்பட்டிருக்கிற மனை
யுடையவனாயிருக்கும்போதும் பந்துசனங்கள்நமது நிமித்தமழுமென்கி
றபயத்தினாலேயே நான்கண்ணீர்விட்டழவில்லை அப்படிக் கண்ணீரில்லாத
அழுகையினால்விஷயங்களிற்பிரீதியில்லாததினால்தற்கேதுவானசந்தோஷமி
ல்லாமலும் பந்துக்கள்துக்கப்படாமலிருக்கும்பொருட்டும் என்முகத்திலு
ண்டானபொய்ச்சிரிப்புமுதலானதுகளை எனதுவிவேகமாத்திரமேகாந்தத்
திலறிகின்றது ❋ பாக்கியமுள்ளவனந்தப்பாக்கியம்நீங்கியபின்பு தரித்திரத்
தினால்முன்னிருந்ததைநினைத்துமோகமடைவதுபோல இஷ்டமானவிஷ
யநாசங்களால நிறைநதயிருப்பை நினைத்து அல்லது சகலதுக்கநாசத்
தோடுகூடினபரமானந்தபாவமேபாவமதினபாவமே அஞ்ஞானமந்தவிகா
ரமானயிருப்பைநினைத்துச்சமுசாரசேஷ்டையினால்மிகவுமோகமடைகிறே
ன் (அ - கை) சீமான்கட்கெதுகிடையாதென்னுமுலக வசனத்தினாலுமனு
பிதாவினதுசம்பத்தினாலேயே உமக்கிஷ்டமான அருத்தஞ்சித்திக்கப்போகு
தே என்மோகமடைகிறீரெனில் | வஞ்சனையையே செய்கிற சம்பத்தான
து புத்திக்குமோகத்தையுமனேகந்துன்பத்தையுங் கொடுக்கின்றது நற்கு
ணங்களையும்நீக்குகின்றது ❋ கொடுமையானசத்துரு தரித்திரம்ரோகமுத
லான ஆபத்தையுடையவர்கட்குஅனேகம்புத்திரனையுடையகிரகமானதுசந்
தோஷமாகாததுபோல தனம்படைத்தவர்களைச் சிந்தாரூபமானமுனைக
ளாலெவ்வளவாக அறுக்கிறசக்கரமாயிருக்கிறதனமானது எனக்குச்ச
ந்தோஷமாகவில்லை ❋ தனைபூண்டயானையின்மனம்போல தேகமுதலா
னதனித்தியமென்கிறசிந்தைகளால் என்மனதானது சுகத்தையடையவில்
லை ❋ செனமானது அஞ்ஞானமானயிரவில்மோகமாகிறபனிப்புகைகளா
ல்சாஸ்திரரூபமானபிரகாசத்தைநீங்கியிருக்கும்போது துஷ்டராயும்சதுர
ராயுமிருக்கிறவிஷயங்களான அனேகந்திருடர்கள் எப்பொழுதுமெங்கும்
விவேகமான உயர்ந்த இரத்தினத்தைத்திருடுதற் கெத்தனப்பட்டிருக்கிறார்க
ளவர்களையுத்தஞ்செய்து கொல்வதற்குத்தத்துவஞானிகளைத்தவிர எவா
ர்வல்லவர் [தமசுநசியாமற்போனாலவர்களைக்கொல்லக்கூடாதென்பதுகரு
த்து] அதனாற்றான்தத்துவஞானிகளைத்தவிர எவாள்வல்லையென்றது.

பன்னிரண்டாவதுசருக்கமுற்றிற்று.

பதின்மூன்றாவது சருக்கம்.

தனதூஷணம்.

இச்சருக்கத்தில் மூடருக்கெல்லாமிஷ்டமானவளாயும் எப்போதும் சோகரூபமான அனர்த்தத்தைக்கொடுக்கிறவளாயுமிருக்கிற தனலட்சுமியை நிந்திக்கப்படுகின்றது.

(அ-கை) இந்தப்படி விஷயங்களை அசாரமென்றும் அனர்த்தமென்றுந் தெரிவித்து அதுகளைச்சம்பாதித்தற்கு மூலமான தனலட்சுமியுமப்படிக்கொத்ததுதானென்றிராமர்சொல்வதற்காரம்பிக்கிறார் | வாரிரூனியே சமுசாரத்திலிருக்கிற இலட்சுமியானவள் வெகுசுகங்களையுண்டுபண்ணுகிறதாக மூடர்களாலுயர்ச்சியாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறாள் ஏதார்த்தத்தில் கொலை பந்தம் நரகமுதலான துன்பங்களைக்கொடுக்கின்றமையால் மோசத்தின்பொருட்டேயாகிறாள் நிச்சயம். [சகலேசத்தையும்விவேகத்தையுங் கொடுக்கிறதில்லையென்பது கருத்து] ❋ மழைகாலத்து நதியானது உயரக் கூத்தாடுகிற அனந்தமலைகளைத்தன்னிடத்திலுண்டுபண்ணுவது போல இலட்சுமியானவள் உச்சாகங்களாலதிகமாயுமளவில்லாத மனோரதங்களுடையவரிசைகளையுடையவளாயும் மிகவும்வியாகுலாளாயுமிருக்கிற வெகு மூடர்களைத்தன் வசமாகச் செய்திருக்கிறாள் ❋ ஆற்றிலலைகளுண்டாவது போல இலட்சுமியினிடத்திலிருந்துந் துஷ்டநடத்தைகளால் விருத்தியடைந்ததாப்பட்டுஞ் சஞ்சலமாயுமிருக்கிறசிந்தைரூபமானவெகுபெண்களுண்டாகிறார்கள் ❋ நெருப்பைமிதித்து ஓரிடத்திலுங்காலைவைக்கமாட்டாமலிங்குமங்கு மோடுகிற நிர்குஷ்டையான ஸ்திரீயைப்போல இலட்சுமியானவள் ஓரிடத்திலு நிலையில்லாமல் சாஸ்திரத்திற்சொல்லப்பட்டநடத்தையை விட்டிருக்கிறபுருஷனையடைந்து இங்குமங்குமோடுகிறாள் ❋ தீபச்சுடரானது கொஞ்சந்தொடப்பட்டாலுந்தொடப்பட்டவனுக்கும்வெக்காட்டைக்கொடுத்துத்தானுநாசத்தையடைவதுபோல இலட்சுமியானவள்மற்றொருவராலற்பமயரிக்கப்பட்டாலுஞ் சிலவிடப்பட்டாலுந் தன்னையடைந்தவனுக்குப்பெரிதான வெக்காட்டையுண்டுபண்ணிக்கொண்டுதானுநாசத்தையடைகிறாள் ❋ இலட்சுமியானவள் துன்பத்தினாற்சம்பாதிக்கப்பட்டிருந்தாலுங்குணவான்களது அநுபவத்திற்குமாத்திரமாகிறதில்லை பின்னையோவெனில் அரசனது சுபாவம்போல்மூடத்தன்மையுடையவளாகிக்குணதுணங்களை விசாரியாமற்றனேசமீபத்திலிருக்கிற வனையடைகிறாள் ❋ [மூடரானவ அரசர்க்கிரு மவான்களாயுங் குணவான்களாயுமிருக்கிறவர்களோடு சிநேகஞ்செய்கிற

தில்லை சமீபத்திலிருக்கிற எவனாகிலுமொருவனோடு சிநேகிக்கிறார்களெ
ன்பதுபிரசித்தம்] (அ-கை) இலட்சுமியானவள்யாகாதிகளால் விரிவைய
டைந்து சுகத்தைக்கொடுப்பளெனில் | இமிசை பொய் லோப முதலிய
தோஷமாகிறசாப்பத்தின்விஷவேகத்தைவிரிவாகப்பண்ணுகிற இராச்சியந்
தனம் இலாபமுதலானபலன்களுக்கேதுவான யுத்தம் சொக்கட்டான் வா
ணிபமுதலான அநந்தக்கருமங்களால் விரிவையடைகிறாள் [யாகாதிகள்
செல்வுக்கேதுவென்றும் அதனாலுண்டானசுகமனித்தியமென்றுங்கருத்து]
பெருங்காற்றினாற்பனியானது சிதறப்படுகிறதுபோலச்சனமானது இலட்
சுமியினாற்சிதறப்படாதவரையில் அன்னியனிடத்திலுந் தன்னவனிடத்திலு
ந் தயவுதாட்சண்ணியஞ்சிநேகங்களோடு கூடிக்கொண்டிருக்கின்றது ✻
(அ-கை) அதைத்தானேபிரகாசப்படுத்துகிறார் | இரத்தினமானது புழு
திகளாலழுக்கையடைவதுபோல் தெரிந்தவர்கள் சூரர்கள் நன்றியுள்ளவ
ர்கள் மநோக்கியர்களிவர்களெல்லாமிலட்சுமியினாலழுக்கை யடைகிறார்கள்
✻ விஷக்கொடியானதுமரணத்தைக் கொடுக்கிறதுபோல இலட்சுமியான
வள் துன்பத்தின்பொருட்டேவிருத்தியடைந்து நாசத்தைக்கொடுக்கிறாள்
✻ (அ-கை) இலட்சுமியையுடையவர்களுஞ் சிலர்தருமமுள்ளவர்களாயு
ங்கீர்த்தியுள்ளவர்களாயுங்காணப்படுகிறார்களேயெனில் | செனங்களால்நிந்
தியாமலிருக்கிறபாக்கியவானும் வீரவாதஞ்சொல்லாமலிருக்கிற சூரனுஞ்ச
ரியானபார்வையுடைய பிரபுவுங் கிடைப்பதரிது ✻ விஷமமான இலட்சுமி
யானவள் துக்கருமமான சர்ப்பங்களுக்குத்திடமுள்ள குகையாயுந்திடமான
மோகமாகிறபெரிதானயானைகளுக்குவிந்தியமலையினதுபெரிதானதாழ்வ
ரையாயும் புண்ணியகருமங்களாகிறதாமரைக்குஇரவாகியுந் துன்பமாகிற
ஆம்பலுக்குநிலவாயுந் தயவானபார்வையாகிறதீபத்துக்குப்பெருங்காற்று
யும்விகற்பமாகிறபயிர்களுக்குக்கழனியாயும் வைராக்கியமாகிற கொடிகளு
க்குப்பனியாயுங் காமாதிவிகாரங்களாகிற கோட்டான்களுக்கிரவாயும் வி
வேகமாகிறசந்திரனுக்கு இராகுவினுடைய ஈற்றுப்பல்லாயுமிருக்கிறாள் ✻
இந்திரதனுசைப்போலச்சற்றுநேரம்பலவிதமான ஆசைகளாகிற வருணங்
களையுடையதாயும் மின்னற்போற்சஞ்சலத்தையும் உண்டானமாத்திரத்தில் நசி
க்கிறதாயுமிருக்கிறாள் ✻ மூர்க்கனிடத்திலிருக்கிறவளாயும் வஞ்சனைசெய்
கிறக்கிற்கானவைச்செயிக்கிறவளாயும் ஆற்றின்பெருக்குப்போல க்ஷணகா
லமும் ஸ்திரமானயிருப்பைச்செய்யாமலுங்கொடூரயிருதயாளிடத்திலிரு
க்கிறவளாயுமிருக்கிறாள் ✻ பிறருடைமையை அபகரித்ததனாலுண்டான பொ
ருளையுடையதாயும் எமனால்கிரகித்துக்கொண்டுபோனபொருளையும் வாங்

கவேண்டுமென்றிச்சிக்கிறசுபாவத்தையுடையதாயுந் துஷ்டமானமனோவிஷயாதிகளோரிக்தற்கிடமாயும் மங்களமில்லாததாயுமிருக்கிற இந்த இலட்சுமியினால் துன்பத்தைத்தவிரசிறிது சுகத்தையுநான் பார்க்கவில்லை ※ பார்வைக்குமனோக்கியமாயும் சாகசத்தினாலடையத் தக்கதாயும் க்ஷணத்தில்நாசத்தையடைவதாயுஞ்சத்துருக்களாற் சூழப்படுவதாயுமிருக்கிற இலட்சுமியானவள் சர்ப்பக்கூட்டங்களாற்சுற்றப்பட்டதாயும் பாழுங் கிணர்முதலானபள்ளத்திலுண்டானதாயுமிருக்கிறகொடியின் புஷ்பத்தைப்போலச்சித்தவிருத்தியையிழுக்கிறாள்.

பதின்மூன்றுவதுசருக்கமுற்றிற்று.

பதினான்காவதுசருக்கம்.

ஆயுள் தூஷணம்.

இச்சருக்கத்தில் வியாதி ரோகம் சரை முதலியவைகளாற் சூழப்பட்டும் காமமுதலானதுகளாற்கலங்கப்பட்டுமிருக்கிறமூர்க்கனுடையபிழைப்பும் வ்வனமுமாயுளுநிந்திக்கப்படுகின்றன.

(அ-கை) தனலட்சுமியைபபோல ஆயுளுஞ்சுகவேதுவல்லவென்றிராமர்சொல்லுகிறார் | தளிரினது நுனியிற்றொங்குகிற பனித்துளிபோல ஆயுளானது நிலையில்லாததாகையால் பயித்தியம்பிடித்ததுபோலஅகாலத்தில்நிகிருஷ்டமானசரீரத்தைவிட்டுப்போகின்றது ※ விஷயங்களாகிற சர்ப்பத்தீண்டினதினால் மேலிந்தசித்தத்தையுடையவர்களாயும் ஆத்மஞானமில்லாதவர்களாயுமிருக்கிற புருஷர்களுக்கு ஆயுளானது துன்பத்திற்குக்காரணமாயிருக்கின்றது ※ (அ-கை) பிரமத்தையறிந்தவர்களுக்குமப்படிதானோவெனில் | அறியவேண்டுவனயாவையுமறிந்தும் பூரணமானவஸ்துவிலிலயிப்பாறிக்கொண்டுமிலாபாலாபங்களிற் சமமான சித்தத்தையுடையவர்களாயுமிருக்கின்றவர்களாயுளானது சுகத்தைக்கொடுக்கின்றது ※ இவ்வளவென்றளவிடப்பட்டதேகமே ஆத்மசொரூபமென்னுநிச்சயத்தையுடைய நாங்கள் சமுசாரமாகிறமேகத்தில் மின்னற்போலிருக்கிறவாயுளாற்சுகத்தையடையவில்லை [தேகமே ஆத்மாவென்னுங்கருத்திருக்கின்றமையால் ஆயுள் நீங்கினாற்றேகநீங்குமென்பதுகருத்து] வாயுவைக்கட்டுகிறதுமாகாயத்தைப்பி

எக்கிறதுமலைகளைத்தொடுக்கிறதுங்கூடலாமிவ்வாயுவை நிலையெனவிரு
ப்புதல்கூடாது ✽ ஆயுளானது அற்பமானசரற்காலமேகம்போலவும் எ
ண்ணெயில்லாததீபம்போலவுஞ் சஞ்சலமான அலைபோலவும் போய்விட்
டதாகவேகாணப்படுகின்றது ✽ அலையையும் பிரதிபிம்பசந்திரனையுமின்
னற்கூட்டத்தையும் ஆகாயத்தாமரைப்பூவையும்பிடித்தற்கிச்சிக்கிறேன் நி
லையின்றியவாயுவையிச்சிக்கவில்லை ✽ எவ்வளவேனுமிளைப் பாறுதலில்லா
தமனதையுடையவுடன்புருஷார்த்தத்திற்குபயோகமில்லாத வீணான வெகு
ஆயுவை அசுவதரியானதுகெற்பத்தையிச்சிக்கிறதுபோற் றுக்கத்தின்பொரு
ட்டேயிச்சிக்கிறான் [ஆண்குதிரைக்கும்பெண்கழுதைக்குஞ்சனிப்பதசுவதரி
யென்றுபெயர் அதற்குண்டானகெர்ப்பமதின்வயிற்றைப்பிளந்துவருவதெ
னவறிக] அவசியமடையத்தக்கதானபரமபுருஷார்த்தத்திற்கேதுவாயுந் தி
ரும்பவுந்துன்பத்தையுண்டுபண்ணுமதும்முக்கியமானசீவன்முத்திச்சுகத்து
க்கிருப்பிடமாயுமிருக்கின்றசீவனமேநல்லசீவனமென்றுசொல்லப்படுகின்ற
து ✽ மரங்களுமிருகபட்சிகளுஞ்சீவிக்கின்றதுகளைப்படிக்கொத்தவாளுடை
யசீவனம் சீவனமல்ல எவர்கள் மனது தத்துவஞானத்திலாவது வாசனா
க்ஷயத்திலாவது நாசத்தையடைகுதோ அவர்களேதிரும்பவுஞ் சனிக்கா
தவர்களாகவுமுலகத்தில் நல்லபிழைப்புள்ளவர்களாகவுமாகிறார்கள் மற்ற
வர்களெல்லாங் கிழக்கழுதைகளென்றறியத்தக்கது [அதேனெனிலசையா
னதேகாத்மபுத்தியினாலெனவறிக] விவேகமில்லாதவனுக்குச்சாஸ்திரம்பா
ரமதேனெனிற்பாரம்போல வீணானசிரமத்திற்குக் காரணமானசையையுடை
யவனுக்குச்சகலதுக்கங்களையுநீக்குகிறதென்றுபிரசித்தமான ஞானமும்பா
ரமற்றதைக்கேட்பானேன் சாந்தியில்லாதவனுக்குமனதுபாரம் ஆத்மஞா
னமில்லாதவனுக்குச்சரீரம்பாரம் புத்தியில்லாதவனுக்குரூபம் ஆயுள்மன
து புத்தி அகங்காரந் தொழிலிதுகளெல்லாஞ் சுமையாளிக்குச் சுமை
போல துக்கத்தின்பொருட்டேயாகின்றது ✽ ஆயுளானது சகலதுன்பங்க
ளோடுகூடியுஞ் சகலகாமங்களாற்குறைவுள்ளதாயும் ஆபத்துகளுக்கு முக்
கியமான இடமாயும் ரோகங்களாகிறபட்சிகளுக்குக்கூண்டாயுமிருக்கின்
றதாற்றுன்பத்திற்குத் திடமானகாரணமாயிருக்கின்றது ✽ பெருச்சாளியி
னாற்பழைமையானவனையானதுவருத்தமில்லாமற்கெல்லப்படுகிறதுபோல
ஆயுளானதுகாலனாற் றுன்பமில்லாமற்றினந்தோறும் ஓயாமற்கொஞ்சங்
கொஞ்சமாகக்கெல்லப்படுகின்றது ✽ கொடூரமானசர்ப்பங்களாற்காட்டிலி
ருக்கிறகாற்றானதுபுசிக்கப்படுகிறதுபோலச்சரீரமாகிறபுற்றிலிளைப்பாறிக்
கொண்டும் விஷத்தைப்போற்கொளுத்திக்கொண்டுமிருக்கிற ரோகங்களா

லாயுளானது புசிக்கப்படுகின்றது ॥ கொடூரமான உளுப்பூச்சிகளாற்கிழமரமான தரிக்கப்படுகிறதுபோல இரத்தம் மலம் முதலானத்தை ஓயாமற்பெருக்கிக்கொண்டுங் கெட்டதாயும் உள்ளேயிருப்பையடைந்து மிருக்கிறரோகமாகிற துன்பங்களாலாயுளானதரிக்கப்படுகின்றது ॥ எலிபூனையினால்விழுங்கப்படுகிறதுபோல ஆயுள்மரணத்தினால்விழுங்கவேண்டுமென்று ஆசையோடுகூட எப்போதுநிச்சயமாகப்பார்க்கப்படுகின்றது ॥ சற்புருஷன் துஷ்டனைவிடுகிறதுபோலெவ்வனமானது புருஷனை இவன் நம்மைப்புருஷார்த்தத்திற் பிரயோசனப்படுத்த வில்லையென்றறிந்து சிலதினங்களிலேயேவிடுகின்றது [துற்சனனென்றெந்தமட்டுமறியவில்லையோ அந்தமட்டுந்தான்சற்சனனாலாதரிக்கப்படுகிறனென்றுபிரசித்தம்] ॥ சிரேஷ்டனைவிடன் அழகையிச்சிக்கிறதுபோல நாசத்துக்குச் சிநேகிதனும் சராமரணங்களுக்குப்பந்துவாயுமிருக்கிறகாலனானவனாயுவை எப்போதுமிச்சிக்கிறான் ॥ சுகமில்லாததாயு நிலையில்லாததாயுமிகவுந்துச்சமாயுங் குணங்களில்லாததாயு மரணத்திற் கிருப்பிடமாயுமிருக்கிற இவ்வாயுவைப்போலத்துன்பமுலகத்தில்வேறொன்றுமில்லை ॥.

பதினான்காவதுசருக்கமுற்றிற்று.

பதினைந்தாவதுசருக்கம்.

அகங்காரதூஷணம்

இச்சருக்கத்திற்சகல அனர்த்தங்களுடைய எத்தனங்களுக்கெல்லாமூலஸ்தம்பமாயும் மமதையாகிற கொடிக்குவேராயுமிருக்கிற அகங்காரமானது நிந்திக்கப்படுகின்றது.

(அ-கை) ஆயுவைப்போலகங்காரமுஞ்சுகவேதுவல்லவென்னையோசகலதோஷங்களுமபிமானத்தையே மூலமாகவுடைய தாகையாலனர்த்தமென்றிராமர் சொல்லுகிறார் | அஞ்ஞானத்தினால்வீணாகவே அகங்காரமானதுண்டாகி நாலுபக்கமும்வளருகுது பொய்யாகவே உண்டாயிருக்கின்ற அந்தத்துராங்காரரூபமானசத்துருவினாற்பயமடைந்திருக்கிறேன் [இதற்குமூலமோகமெனவறிக] அனாதிகாலமாய்ச்சனனமரண நரகமுதலான அனந்ததுக்கபரம்பரையைஅனுபவித்துந் திருப்பித்திரும்பியதற்கேதுவானசுக

லேசங்களை அநேகம் வருத்தத்தாலாவதடைய வேண்டுமென்றிச்சித்துக்
கொண்டுமிருக்கின்றமையால் மிகவுந்தீனனாய்விஷயத்திலாசையையுடைய
புருஷனுக்குச்சாதனமென்றும் பலமென்றும் பலவிதவுருவையுடையசமு
சாரமானது அகங்காரவசத்தினாலேயே இராகம் துவேஷம் துற்விசனமு
தலான தோஷரூபங்களாகிற பொக்கிஷவீடுகளில் நற்கருமத்திற் குபயோக
மாகாததினால் ஈனமானதனமாக வுண்டாகுது ※ (அ-கை) அகங்காரத்தி
ன்வலியைச்சொல்லுகிறார் | சரீரதுன்பங்களும் மனோதுன்பங்களுங்கெட்
டநடத்தைகளுமகங்காரத்தினாலேயே உண்டாகுதுகளாகையால் எனக்கு
அகங்காரமானது ரோகமாயிருக்கின்றது ※ வெகுகாலமாயிருக்கிறமிகுந்த
சத்துருவான இவ்வகங்காரத்தையடைந்து நான்புசிப்பதுமில்லை சலபா
னம்பண்ணுவதுமில்லை யாதலாற்போகங்களையனுபவிப்பதேது ※ வேட
னாற்பட்சிகள்பேரிலவலையானது விசிறப்படுவதுபோல அகங்காரரூபதோ
ஷத்தினாற் சமுசாரமாகிற இரவில்நீடித்ததாயு மனதில்மோகத்தையுண்டு
பண்ணிக்கொண்டுமிருக்கிறமாயையானது என்னிடத்தில்விசிறப்பட்டிருக்
கின்றது ※ மலையிற்கருங்காலிமரம்போல அகங்காரத்திலிருந்தும் நீடி
த்ததாயும் போக்கக்கூடாததாயும் பெரிதாயுமிருக்கிற துக்கமான துண்டா
கின்றதுகள் ※ சாந்தியாகிற சந்திரனுக்கிராகுவினது முகமாயும் நற்குண
மாகிற தாமரைமலருக்கிடிபோலிருக்கிறபனியாயுஞ் சமமானபார்வை யாகிற
மேகத்திற்குச்சரற்காலமாயுமிருக்கிற அகங்காரத்தைவிடுகிறேன் [சர்வசீவர்
களிடத்திலுந் தயையென்னு மழையைப்பெய்தலாற் சமமானபார்வையை
மேகமென்றது] ※ (அ-கை) அகங்காரத்தைவிட்டாற்றேகாபிமானம் மம
தைமுதலானதுகளில்லாமற் போய்விடுகுதுகளென்று தெரிவிக்கிறார் | நா
னிராமனல்ல எனக்குவிஷயவிச்சையுமனதுமில்லை என்னைப்போற்சகல
பிராணிகளையும்பார்த்து ஒருவரிடத்திலும்வயிரமில்லாமல் சைனன்போ
ல ஓரிம்சையுமின்றியிருக்கவேண்டுமென்றிச்சிக்கிறேன் [நிந்திக்கத்தக்கவ
ர்களிடங்களிலு நற்குணத்தைக்கிரகிக்கவேண்டுமென்கிற நியாயத்தினாற்சை
னவனைத்திஷ்டாந்தஞ்சொன்னது] தேகவாசனையாற்புசிக்கு மறுசுவையு
ண்டிகளுஞ் சாஸ்திரவாசனையாற்செய்யுமியாகாதிகளும் உலகவாசனையா
ற்செய்யுநித்தியகன்மங்களுமரச நீதிமுதலானவைகளுமகங்காரத்தினாலுண்
டானதாலவைகளெல்லாம் பொய்தான்பின்னையோ அகங்காரமில்லாமை
யேமெய் ※ நானென்கிற நினைவிருந்தாலாபத்திற்றுக்கமடைகிறேன் நா
னென்கிறதில்லாவிட்டாற்சுகமடைகிறேனாகையாலகங்காரத்தை விடுவதே
மேன்மை ※ எவ்வளவுமட்டுமகங்காரரூபமானமேகநாலுபக்கமு மெழும்பு

தோ அவ்வளவுமட்டுமாசையாகிற குடைமல்லிகைப் பூங்கொத்தானதுமலி ருது [பரமாதித்தனைமறைக்கின்றமையாலகங்காரத்தைமேகமென்றது] அகங்காரமாகிறமேகமானது ஒழியும்போதாசையாகிறமின்னற்கொடியானதவிணந்திருக்கிறதீபச்சுவாலைபோலமிகுந்தவேகத்துடனே ஒரிடத்திற் போய்விடுகின்றது * மேகமானதுகெற்சிக்கின்றதுபோல அகங்காரமாகிறபெரிதானவிந்தியமலையில்மனதாகிற மதம்பிடித்த யானையானதநேகமானயுத்தவுச்சாகங்களாலே விளங்குகின்றது [வணக்கமுமசைவுமின்மையாலகங்காரத்தைவிந்தியமலைக்குச்சரியென்றது]தேகமாகிற பெரியகாட்டில் திடமான அகங்காரமாகிறசிங்கம் கர்வசேஷ்டைகளால் விருத்தியடைந்து விளங்குகின்றதனாலிச்சகமானது புண்ணியபாபரூபமான வித்துகளால்விரிவாகச்செய்யப்பட்டிருக்கின்றது * அகங்காரமாகிறசத்துருவினாற்றந்திரமந்திரமிரண்டுமில்லாமற்புத்திரமித்திரகளத்திராதிரூபமான வசீகரணவுபாயமானதுசெய்துவைக்கப்பட்டிருக்கின்றது நானென்கிறசொல்லானதுவேரோடுபோக்கப்படுமாகில்மனதிலிருக்கிறசகலதுஷ்டவியாதிகளும்விரைவாகவேபோய்விடுகின்றதுகள் * சாந்தியைப்போக்குகிறநானென்கிறமேகமானது நாள்வரையிலொழியும்போதுமனாகாசத்திலிருக்கிற மோகமாகிறபனிக்கூட்டமானது ஒருவிடத்திற் போய்விடுகின்றது [இவ்வகங்காரநாள்வரையிலொழியுமென்றதுமந்தாதிகாரிகளுக்கெனவறிக] அகங்காரத்திலது வியாபாரங்களைவிட்டும் மூடத்தனத்தினாற்றுக்கத்தையடைந்துமிருக்கிற எனக்குயோக்கியமானது எதுயிருக்குதோ அதையிவ்விடத்திற் சொல்லவேண்டும் * ஆபத்துக்கெல்லாமிடமாயும் நிலையில்லாததாயும் மனதிலிருக்கிறதாயும் சாந்திமுதலான உத்தமகுணத்தினால்விடப்படுகிறதாயும் நாலுபக்கமுந்துக்கத்தையுண்டுபண்ணுகிறதாயுமிருக்கிற அகங்காரரூபமான. அடையாளத்தைத்திடமானவிவேகத்தினால்விடுகிறேன் எனக்கு வேண்டிய காரியத்திற்குறைவில்லாமலும் ஆத்மதத்துவத்தையும் உபதேசம் பண்ணும்

பதினைந்தாவதுசருக்கமுற்றிற்று.



பதினேழாவது சருக்கம்.

மனோ தூஷணம்.

இச்சருக்கத்திற்சித்தம் மனமிவைகளின்தோஷங்களை வெகுநிஷ்டாந்தங்களாலும் யுத்திகளாலுஞ்சொல்லப்படுகின்றன.

(அ-கை) அகங்காரத்தைப்போற்சித்தமுமனதுஞ்சுகவேதுவல்ல பிறவிப்போதுக்கத்திற்கேதுவென்றிராமர்சொல்லுகிறார் | (பெரியோர்களுடையசேவையைமோட்சத்திற்குவழியாகச்சொல்லுகிறார்களென்கிறவசனத்தினால்)மனதானது காற்றுக்குள்ளகப்பட்டமயிற்றோகைபோல மூலோட்சுகளாலவசியஞ்செய்யத்தக்க பெரியோர்கள் சேவையைவிட்டுநீங்கி காமாதிதோஷங்களால் துற்பெலத்தையடைந்து சஞ்சலசுபாவமுள்ளதாகியலைகிறது* மனதானது ஊர்நாய்போல யுத்தாயுத்த விசாரமின்மையால் வியாகுலத்தையும் ஓரிடத்திலுந்தனது நிறைவிற்கேதுகிடைக்காததினால் தீனத்தையுமடைந்து இங்குமங்கும்வெகுதூரம் வீணாகவே விஷயங்களிலேயோடுகின்றது* மனதானதப்படியோடினபோதிலும் ஓரிடத்திலுமற்பமுமோரிபலமுமடைகிறதில்லை மிகுந்ததனங்கிடைத்தபோதிலு மூங்கிற்பெட்டியானதுசலங்களால் நிறைவையடையாததுபோல நிறைவையடைகிறதில்லை * எப்போதுந்துராசையாகிறவலையினாற்சூழப்பட்டிருக்கிற மனதானது தன்னினத்தைப்பிரிந்தமான்போலச்சுகத்தையடையவில்லை *மந்தரமலையினதுகடைதலாலுயா எழும்பியிருக்கிற பாற்கடலின்பாலானதுபோல மனதானதுவிஷயநிவிப்பினாற்கலக்கமடைந்துபத்துதிக்கிலுமோடுகின்றது * போகஸ்ப உச்சாகமாகிற அலைகளாலுண்டாகிற கோணலானசுழிகளையுடையதாயும் பிறரைவஞ்சிக்கிற உபாயமாகிற மகரமச்சங்களாற்சூழப்பட்டுமிருக்கிறமனதாகிற பெரியகடலைத் தடங்கற்செய்வதற்குநான்வல்லவனாகவில்லை* மனதாகிறமான் நரகமாகிறபள்ளத்தில்விழுவதை எண்ணாமல் போகமாகிறபுல்நுனியையிச்சித்துவெகுதூரமோடுகின்றது * சமுத்திரமானதுசஞ்சலத்தை விடாததுபோல என்மனதானதுசஞ்சலத்தை ஒருக்காலும்விடுகிறதில்லை அதேனெனில் கூண்டிலிருக்கிறசிங்கமானதுபோலச் சஞ்சலசுபாவமுள்ளமனதானதுபலசிந்தைகளால்மிகவுஞ்சஞ்சலமடைந்து ஓரிடத்திலுந்திரமடையவில்லை.* அன்னமானது சலத்திலிருக்கிறபாலைக்கிரிகிப்பதுபோல மனதானதுசரீரத்திலிருக்கிறசர்வசமனானசிவன்முத்திச்சுகத்தைமோகமானதேரிலேறிக்கொண்டு கிரிகிக்கின்றது [உயர்வுதாழ்வென்பது உபாதியினாற்கற்பிக்கப்பட்டிருப்பதால் எதார்

த்தத்திற்சர்வபிராணிகளிலுமாத்மாஒருருவையுடையவராயிருக்கின்றமையா
லந்தஏகமாயிருக்கையைச் சீவன்முத்தர்களாலநுபவிக்கப்படுகிறசமதையெ
ன்றும் அது வேசகமென்றுஞ்சொல்லப்படுகின்றது அச்சமதையானதுமன
துமோகமானதேரிலேறுமலிருக்கும்போது நித்தியமாகக்கிடைத்திருக்கின்ற
மையாலிச்சரீரத்திலேயே உண்டாயினும் மோகமாகிறதேரிலேறியிருக்கிற
மனதினால் விழுங்கப்பட்டிருக்கின்றமையால் அசாரமான தேசமாத்திரத்தி
லேயே ஆத்மாவென்கிற எண்ணிக்கையானதுசேஷிக்குமென்பதுகருத்து]
சித்தவிருத்திஞானமானது தொய்தரூபமான விஷயத்திலாசையினதுகற்ப
னாரூபமாகிறபடுக்கையிற்றூங்கிக்கொண்டிருக்கின்றதுபோலவிருப்பதாலா
த்மஞானத்தையுண்டுபண்ணுகிறசாஸ்திரமும் ஆசாரியரது உபதேசமுமில்
லாமற்கேவலந்தன்புத்தியினாலேயேசெய்யப்பட்டிருக்கிற அனேகம்விசாரத்
தினாலும்விழித்துக்கொள்ளுகிறதில்லை ஆகையாலதுவிழிக்காததினால் நான்
தபிக்கப்படுகிறேன்*வேடனானவன்வலையினாற்பட்சியைக்கட்டுகிறதுபோல
யானெனதென்கிற பிராந்தியினாற்றிடமானமுடிச்சுகளையுடையபோகவா
சையானவலையிலகப்பட்டிருக்கிறஎன்னைமனதினாற்கட்டிக்கொண்டிருக்கி
றேன் * அக்கினியினாலுலர்ந்தசெத்தையைக் கொளுத்துவதுபோல கோப
மாகிறபுகையையுடையதாயுஞ்சிந்தையாகிறசுவாலையினாற் சூழப்பட்டுமி
ருக்கிற அக்கினிக்குச்சரியானமனதினால்நான் கொளுத்தப்படுகிறேன் * ஆ
சைபோல வயிறுநிறையாதபெண்ணையநுசரித்திருக்கிற கொடூரமானநா
யினாற்சவமானது புசிக்கப்படுவதுபோல அஞ்ஞானத்தையடைந்திருக்கிற
நான்ஆசையென்கிறமனைவியையநுசரித்திருக்கிற கொடூரமானமனதினாற்
புசிக்கப்படுகிறேன்* நதிக்கரையிலிருக்கிறமரமானதுவெள்ளத்தினாலிழுப்பு
ண்டதுபோலஅலைகள்போற்சஞ்சலமாயுங்கிடையாதவிஷயத்திற்றட்டுப்படு
கிறசெய்கைகளையுடையதாயுஞ்சடமாயுமிருக்கிறமனதினாற்றள்ளியிழுத்துக்
கொண்டுபோகப்படுகிறேன் *செத்தையானது பெருங்காற்றினாற்சுற்றப்படு
கிறதுபோலசொற்கமுதலியவைகளிலிருந்து அகாலத்தில்விழுதற்காகவாவது
இவடத்திலேயேசிறிது சுகமுமில்லாதபுழுபட்சிமுதலானபிறவிகளையெடுத்
தற்காகவாவதுமனதினால்வெகுதூரஞ்சுற்றப்படுகிறேன் *அற்பநதியினுடை
யபிரவாகமானது அணையினாற்றகையப்படுவதுபோல இச்சமுசாரமானகட
லினின்றும்வெளிப்படுதற்கெத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறநான் ஈனமனதி
னாற்றகையப்படுகிறேன் *பாலகன்பிசாசத்தினாற்பீடிக்கப்படுவதுபோலபொ
ய்யானஉருவையுடையதாயும் விசாரணைபண்ணும்போதில்லாததாயுமிருக்
கிறகெட்டமனதினாற்பீடிக்கப்பட்டவனாகிறேன் [பாலகனைப்பயப்படுத்துநி

[illegible]த்தமுண்டாக்கப்பட்டிருக்கிற பிசாசமானது அவனறியாமையினுலிருப்
பதையடைந்து அவனுக்குத்தானே அப்பாலிய நீங்கிவிசாரணையினுலில்லா
மையையடைவதுபோல் அஞ்ஞானியினுடையபுத்தியினுற் செயிக்கக்கூடாத
[illegible]ன்றேவிவேகமுண்டாகும்போது சொருபமேயில்லாமற்போகுதென்பதுக
[illegible]த்து[illegible]ப்பிறற்றுநகினைற்றங்கரையிலிருக்கிறசகடக்கட்டையானது சுற்றப்ப
[illegible]வதுபோல்மனத்துறைபாதாளத்திலிருந்தும்பூமியினும் பூமியிலிருந்துபாதா
ளத்திலுஞ்சுற்றப்படுகிறேன் * துக்கப்பட்டும்பிடிக்கக்கூடாததான மனதாகி
ய பிசாசமானதுமேருவிலும்மிகுந்தகுட்டையுடையதாயும் மலையினும்மிக
[illegible]ர்வாரு[illegible]ப்பட்டுத்தாண்டத்தக்கதாயும்வச்சிரமணியினும் வலுவாயுமிருக்கி
ன்றது [illegible]ட்சியானது கனத்துப்புசிக்கத்தக்கமாமிசங்களிலிச் சையையடைவ
துபோலமனதானது விஷயங்களில் விரைவாகவே ஆசையையடைந்தமையா
லிந்திரஜால பிரயோகிக்கப்பட்டநல்லநடத்தைகளினின்றும்பாலகன் ஒருகால
த்திலடையப்பட்ட விளையாட்டு நிமித்தநெடுநாளப்பியாசிக்கப்பட்டவித்தி
யாப்பியாசத்தினின்றுநீங்கிவிடுவதுபோலக்ஷணத்தில் ஒழிவையடைகின்ற
து * சடசாவத்தையுடையதாயும் அதிசஞ்சலமாயும் விரிவானகற்பவினைக
ளைச்சுற்றியாகவுடையதாயுங்காமாதிசந்துருவாகிறசற்பங்களையுடையதாயு
மிருக்கிறமனதாகிறகடலானது [illegible]வெகுதூரங்கொண்டுபோகின்றது
* கடலைக்குடிப்பதிலும்மேருவைப்பிடுங்குவதிலும் நெருப்பைவிழுங்குவதி
லும் மனதையடக்குவதுமிகவுங்கஷ்டமாயிருக்கின்றது * சகலபதார்த்தங்க
ளுக்குங்காரணமானசித்தமிருக்குமேயாகில் மூன்றுலகமுமிருக்கும் அந்த
சித்தம் நாசத்தையடையுமேயாகிற்சகத்து நாசத்தையடைகின்றமையால்
அந்தச்சித்தத்தைவியாதியை ஏத்தனத்தினுற் போக்குவதுபோல ஏத்தனத்தி
னுற்போக்கவேண்டும் * (அ-கை) சொன்னதை யேதிஷ்டாந்தத்தினுற்சொ
ல்லுகிறார் | பெரியமலையிற்காடுகளுண்டாவதுபோலசித்தத்திலிருந்தும் அ
னேகசுகதுக்கங்களுண்டாகுது அந்தச்சித்தமானது விவேகத்தினுல்வாசனை
யற்றுப்பறந்துபோவதுபோல்சூட்சுமமாகுமேயாகில்சுகதுக்கங்களெல்லா
நன்றாகவே நீங்கிவிடுமென்றெண்ணுகிறேன் * முமூட்சுக்களெந்தச் சித்த
செயத்தினுற்சாந்தியாதிகுணங்கள்சுவாதீனமாகுமென்றிச்சித்துக்கொண்டி
ருக்கிறார்களோ அந்தச்சித்தரூபமானசத்துருவை இச்சரீரத்திலேயேசெயி
த்தற்கெத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறநான் மூர்க்காவஸ்தையுஞ் சுத்தமில்லாத
வர்க்கமிகாயுஞ்சந்தோஷிப்படுத்துகிறசெல்வத்தில்வைராக்கியசம் பத்தினுற்சந்
தோஷிப்படவில்லை (இச்சரீரத்திலாத்துமாவையறிந்தானேயாகிற்சத்தியமா
னதிருக்கின்றது அறியாமற்போனுனேயாகில்மகத்தான நாசம் வருகுதென்
றசுருதிசொல்லுகிறபடியினுலெனவறிக) பதினாறுவதுசருக்கமுற்றிற்று.

பதினேழாவது சருக்கம்

ஆசா தூஷணம்

இச்சருக்கத்திற் சகலபாபங்களுக்கேதுவாயும் எளிமை லோபம் மான மிவைகளைக்கொடுப்பதாயுஞ்சகலஜீவர்களுக்கும் பிராந்தியைச்செய்வதாயுமிருக்கிற ஆசையை நிந்திக்கப்படுகின்றது.

(அ-கை) மனது எப்போதும் விஷயபோகத்தையிச்சிப்பதனுலேற்பன்மதோஷத்தைச்சொல்லி அதன்பின்பு ஆசையைத் தூஷித்திராமர் சொல்லுகிறார் | மிகவும்பிரீதிக்கிடமான ஆத்மதத்துவத்தையுமிருதயத்திலுண்டான விவேகமுதலானதையும்மறைக்கிறஆசையாகிறவிருண்ட இராத்திரியிலிராகமுதலானகோட்டான்கூட்டமானது சிதாகாசத்திலேவிளையாடுகின்றதுகள் ❊ மோகமாகிறவிருட்டினுற்சூழப்பட்டும்விசாரவீணையில்லாமலுமிருக்கிற என்சித்தமாகிறபெரிதானகாட்டிலாசையாகிறபிசாசானதுமிகவுங்கூத்தாடுகின்றது ❊ பிறனைவைதல்பொய்சொல்லல் முதலியசத்துருத்தையுடையபிரவிர்த்தியாகிற அலைகளோடுகூடிய உருவத்தையுடையதாயுமவிஷயம்விட்டுவிஷயத்தைத்தாண்டிக் கொண்டுமிருக்கிற ஆசையாகிறநதியானது என்தேகமாகிறமலையிலிருந்தும் பெருகுகின்றது ❊ துனஞ்சஞ்சலத்தைத் தடங்கற்செய்து கருமமேகமென்னும்பெயருடையசமாதிரசத்தைப் பானஞ்செய்வதற்கெத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறசித்தமாகிற சாதகப்பட்சியானது ஆனிகளாற்சூழ்ந்திருக்கிறபெருங்காற்றினுல்மக்கின செத்தையானது தள்ளப்படுகிறதுபோல இராசதகுணத்தினுலலக்கத்தோடுகூடின ஆசையினுல் யோக்கியமான ஒருவிஷயத்திற்றள்ளப்படுகின்றது ❊ வைராக்கியமுதலானகுணங்களில் நானெதைவிரும்புகிறேனே அதை யென்னாசையானது வீணையின் நரம்புத்தந்தியை எலியானதுபோலறுக்கின்றது ❊ ஜலத்திலமக்கினசருகுபோலவுங் காற்றில்மக்கின செத்தைபோலவும் ஆகாசத்திற்சரற்காலமேகம்போலவுஞ் சிந்தாரூபமானசக்கரத்திலே நான்சுற்றுகிறேன் ❊ பட்சிகள் வலையிலகப்பட்டதுபோல ஆத்மஞானமடைவதற்குவலியில்லாதபுத்தியுடையநாங்கள்சிந்தாரூபமான வலையிலகப்பட்டுமோகமடைந்திருக்கிறோம் ❊ ஆசையென்னுந்தீயினுற் கொளுத்தப்பட்ட நான் அமிர்தத்தில்முழுகினுலுஞ்சாந்திவரமாட்டாதென்றெண்ணுகிறேன் ❊ அறிவில்லாதவர்களிடத்திலிருக்கின்றதாயுஞ்சொற்கநரகங்களிற்போக்குவரத்தை உண்டுபண்ணிக்கொண்டும் அலைந்துகொண்டும் அகங்காரமாகிறமுடிச்சையுடையதாயுமிருக்கிற ஆசையானது அறுத்தற்கரியநூலினிற்கட்டுகின

பிறுபோல் அலைந்துகொண்டிருக்கின்றது * மூக்கிற்கயிறுகோக்கப்பட்
டவெருதைப்போல ஜீவர்கள்தேகத்திற்குள்ளிருக்கிற மனதிற்கோக்கப்பட்
டும் ஒருவராலறுக்கக் கூடாததாயுமிருக்கிற ஆசையினால் இகபரபலன்க
ளைக்கொடுக்குமனேக சாதனங்களாகிறசுமைகளைச்சுமக்கப்படுகின்றதுக
ள் * வேடப்பெண்களால் பட்சிகளிடங்களில் வலையானது விசிறப்படுவ
துபோல நித்தியம்விஷயங்களிலிழுக்கிற சுபாவத்தையுடைய ஆசையினாற்
ஜீவர்களிடங்களிற் புத்திரமித்திரகளத்திராதிரூபமானவலையானது விசிறப்
படுகின்றது * ஆசையானதபரபட்சத்திரவைப்போல தீரனாயிருந்தாலும்
பயப்படுத்துகின்றது விவேகநேத்திரமுடையவனாயிருந்தாலுங்குருடனாகச்
செய்விக்கின்றது சுகமுடையவனாயிருந்தாலுந் துன்பத்தைச்செயவிக்கின்
றது * வெகுகோணலாயும் விடையங்கிடைத்தபோதற்பசுகத்தைக்கொடு
க்கிறதாயும்முடிவில்விஷத்தைப்போல்வயிரம் பந்தம் கொலை முதலியகொ
டுமைகளைக்கொடுக்கிறதாயுமிருக்கிற ஆசையானது கிருஷ்ண சர்ப்பம்போ
லக்கொஞ்சந்தொடப்பட்டாலும்மோகத்தைச்செய்விக்கின்றது கோணலா
னது சூது வஞ்சனையையுடையது * மாபை ரோகம் தரித்திரம் எளிமை
இவைகளைக்கொடுக்கிற தாயிருக்கின்ற ஆசையானதுகறுத்த இராட்சசி
யைப்போலபுருஷனுடையஇருதயத்தைப்பிளக்கின்றது * ஆசையானது
எப்போதுமிகுந்தபாபத்திற்கேதுவாயும் முடிவில்துக்கத்தைக்கொடுக்கிறதி
த்தபிராந்தியையுண்டுபண்ணிக்கொண்டும்பெரிதான எத்தனத்தையுடைய
தாயும்அதிகமானநட்பையுடையதாயுமிருக்கின்றது*ஆசையானதுகிழத்தா
சியைப்போலஒருவன்சித்தத்தைவசப்படுத்தாமலிருக்கையிலும்எல்லாரையும
னுசரித்தும் ஒருபலத்தையுமடைகிறதில்லை * விரிவானபிரபஞ்சமாகிறநாட்
டியசாலைகளிற்சோகம்மோகமுதலானபலவிதரசங்களால் நிறைந்திருக்கிற
ச பூசாரங்களுடைய பெரிதானகூட்டத்திற்குள்ளேஆசையானதுகிழக்கூத்
தாடிச்சியாகவிருக்கின்றது*ஆசையானது துற்பலமானகூத்தாடிச்சியைப்
போலஎதைச்சாதித்தற்குவலிமையில்லையோஅந்தவிஷயத்திலலைந்துகொ
ண்டுஆனந்தமில்லாமற்கூத்தாடுகின்றது*சஞ்சலத்தையுடையஆசையாகிற
பெண்மயிலானது மழைகாலத்துப்பனியானதுபோல மோகமாகிறமேகம
றைக்கும்போதுமிகவுங்கூத்தாடுகின்றது விவேகமாகிற சரற்காலவெளிச்ச
முண்டாகும்போது ஒழிவையடைகின்றது அசாத்தியமானகாரியங்களில்நி
வளைப்பையடைகின்றது * ஆசையாகிறகுரங்கானது அடையக்கூடாத விஷயத்
திலுநிவளைப்பையடைகுது திருப்தியடைந்தபோதிலுமிலாபத்தையேயிச்சிக்
கின்றது ஒருவிடத்தில்வெகுகாலமிருக்கிறதில்லை * ஆசையானது சுபத்தை

யாரம்பித்ததைமுடியாமல்சுபமாயும் யத்தனஞ்செய்ததற்குவிரோதமாயுமி
ருக்கிறசகலகருமத்தையுஞ் சீக்கிரமாகவேயனுசரித்தெப்போது மெத்தனஞ்
செய்துகொண்டிருக்கின்றது ※ இருதயகமலத்திற்குவண்டாயிருக்கிற ஆசை
யானதுபாதாளத்திலுமாகாசத்திலுந்திக்குகளிலும்ஒருக்ஷணத்திற்சுற்றிக்கொ
ண்டுவருகின்றது ※ ஆசையானதந்தப்புரத்தில்வசிக்கின்றவனையுமிழுத்து
மிகுந்தசங்கடத்தோடுகூட்டிவைக்கின்றமையாற் சமுசாரதோஷங்களுக்கு
ள்ளாசையொன்றேமிகவுமரணமுதலானதுக்கத்தைக்கொடுக்கின்றது [மச்
சத்தைப்பிடிக்கிறதூண்டிற்கயிறுபோலக்கொல்லுகிறவன்சமீபத்திலிழுத்து
மரணமுதலானதுக்கத்தைக்கொடுக்குமென்றுகருத்து] ஆசையாகிறமேக
வரிசையானது மிகவுமஞ்ஞானமாகிறசயித்தியத்தையும் பிரகாசமான ஆத்
மாவாகிற சூரியனைமறைத்தும் முன்பின்றெரியாமலிருக்கிற அவிவேகரூ
பமானபனியினாற் பூரணமாயுமிருக்குது ※ ஆசையாகிற இந்திரதனுசான
து விசித்திரமான ஆச்சரியங்களுக்கேதுவான விஷயங்களாகிற பலவிதவ
ருணமான உருவையுடையதாயும் நற்குணமாகிறநாணில்லாததாயும் நீண்
டும் அசுத்தஞானகறுத்தமேகத்திலிருப்பதாயும் ஒருபொருளுமாகாமலிரு
க்கிறமனதாகிற ஆகாயத்திலிருப்பதாற் சூன்னியமாயுமிருக்கின்றது ※ ஆ
சையானது நற்குணமாகிறபயிர்களுக்கிடியாயும் ஞானமாகிற தாமரைப்பூ
வுக்குப்பனியாயுமாபத்தாகிறபயிர்களுக்குசாற்காலமாயுந் தமோகுணத்தி
னாலுண்டானகாரியங்களாகிறஇருட்டுக்கு எமந்தகால இரவாயுஞ் சமுசா
ரமாகிறநாடகத்துக்குக்கூத்தாடிச்சியாயும்பிறவிர்த்தியாகிற கூண்டுக்குப்
பட்சியாயும் மனோரதங்களாகிறகாட்டுக்குமானாயுங்காமவிகாரமாகிற பாட்
டுக்குவீணையாயும் விவகாரமாகிறகடலுக்குப் பெருக்காயும் மோகமாகிற
யானைக்குச்சங்கிலியாயுஞ் சகமாகிற ஆலமரத்துககுவிழுதாயுந் துக்கமா
கிற ஆம்பலுக்குநிலவாயுஞ் சரைமரணங்களுக்குமுக்கியமான இரத்தினச்
சிமிளாயும் ரோகம் மனோவியாதிகளாகிற விளையாட்டுக்கு மதத்திருக்கிற
ஸ்திரீயாயுமிருக்கின்றது ※ ஆசையாகிற ஆகாசவீதியானது க்ஷணகாலஞ்
சிறிதுவிவேகரூபமானபிரகாசத்தினால் நிர்மலமாயும் க்ஷணகாலமஞ்ஞான
மாகிறயிருட்டினுடைய துளியோடுகூடியும் க்ஷணகாலமோகமாகிற பனியி
னாற்சூழப்பட்டுமிருக்கின்றது ※ (அ-கை) இந்தப்படி ஆசையைவருணி
த்ததினுபசாந்திக்குப்பலத்தைச்சொல்லுகிறார் | இராட்சசசஞ் சார நீங்கும்
பொருட்டு மேகங்களானிறைந்த அபாரபட்சத்திரவானது சூரியனால் நாசம
டைவதுபோலத்தேகதுன்பங்களால் நிறைந்தசமுசாரமானதுநீங்கும்பொ
ருட்டுவிவேகத்தினா லாசையானது நாசமடைகின்றது ※ எவ்வளவுமட்டு

மாசையாகிற விஷபேதியானதனுசரித்துக்கொண்டிருக்குதோ அவ்வளவும் ட்குமாத்மவிசாரவணையில்லாமலிருக்கிற இச்சீவர்கள் வியாகுலமான சித்தத்தை யுடையதாகிமோகத்தை யடைகின்றனுகள் * (அ-கை) அப்போதை விடுத்தற்குபாய மேலருளிச்செய்கிருர் | இவ்வுலகமானது விடயநிவனைப்பவிடுவதனுலேயேசகலதுன்பங்களையும் விடுகின்றது ஆகையாலாசையாகிறபேதிக்கு விடயங்களை நினையாமலிருப்ப தேமந்திரமென்றுசொல்லப்படுகின்றது * மீனானதுமடுவிலிருக்கிறசெத்தை கல்லு கட்டைமுதலானதையும் புசிக்கத்தக்கமாமிசமென் றெண்ணிக்கிரகித்து முடிவிற்றூண்டிமுள்ளையுங்கிரகித்தகப்படுவதுபோல் ஆசையானதுநானுவிதவிஷயங்களையுங் கிரகித்துமுடிவிலமோட்சத்தைய பேக்ஷித்தகப்பட்டுப்போகின்றது * சூரியகிரணங்கள் தாமரைப்பூவைமலர்விப்பதுபோல ரோகபீடையும் ஸ்ரீயும் ஆசையும் தயிரியபுருஷனையும் அதயிரியனுகச்செய்விக்கின்றது * ஆசையாகிறகொடிமூங்கிலானதுதிடமான அபிமானமாகிற கணுக்களையுடையதாயும் நீண்டிருக்கிறசிந்தைகளாகிற நுனிமுட்களையுடையதாயுஞ் சூன்னியமாகிற உள்ளோட்டையையுடையதாயும் எப்போதுமுத்துமணிகளில் பிரீதியை யுடையதாயுமிருக்கின்றது * (அ-கை) அப்படிக்கொத்த ஆசையையறுப்பதற்குவிவேகமேகாரணமென்றுதெரிவிக்கிருர் | பெரிதான புத்தியையுடையவர்களொன்றுலு நீக்கக்கூடாத இவ்வாசையையும்விவேகமாகிற நிர்மலமானகத்தியிஞலறுத்துப்போடுகிருர்கள் மிகவுமாச்சரியம் * கத்திமுனை வச்சிராயுதங்காய்த்த இரும்புப் பொறிகளிதுகளெல்லா மிருதயத்தலிருக்கிற இவ்வாசையைப்போலக்கூர்மையுள்ளதல்ல [கத்திமுனைமுதலானது வெளியிலிருக்கின்றமையால் ஒருகாலனர்த்தத்தைக்கொடுக்கும் மாசையோவெனிலுள்ளேயிருக்கின்றமையால் எப்போதுமனர்த்தத்தைக்கொடுக்குமென்றனுபவைக் காட்டிலுமீததிகமெனவறிக] ஆசையாகிற தீபச்சுவாலையானது நடுவில்போகங்களையனுபவிக்கிறதாகிறபிரகாசமாயும் முடிவில்பாவத்தையும் மரணத்தையுங்கொடுகிறதாகிற மறப்பையும் தாய் மனைவி புத்திராளிவர்களிடங்களில் சினேகமாகிற எண்ணெ நீளமானதிரியினுல் நீண்டதாயும் பாலலியம் எவ்வனம் கிழத்தனமிவைகளால் பிரத்தியட்சமாயும் தனக்கிஷ்டமானபொருள் போனத்தினுலுண்டாகிறசகிக்கக்கூடாத சூட்டையுடையதாயு மிருக்கின்றது * இப்படிக்கொத்த ஆசையானை அதிரத்தினல்மேருவுக்குச் சரியாயிருந்தாலுந் தெரிந்தவனுயிருந்தாலுஞ் சூரனுயிருந்தாலும் வாங்கிறதில்லையென்கிற விரதத்தினுல்சையாதவனுயிருந்தாலும் நிமிஷத்திற்றுரும் பாகச்செய்கின்றது [செத்தையினுமை

பஞ்சவெல்கு பஞ்சிதும்யாசகன்லெகு அப்படியிருக்கக்காந்தேனிவனையடி
த்துக்கொண்டுபோகவில்லையெனிலென்னையிவன்பாசிப்பனென்னுங்கரு
த்தினலென்வறிக] ஆசையாகிறவிருத்தியமல்லயின்தாழ்வாயானது விரி
வானசாகசகாரியங்களாகிற காடுகளையுடையதாயும் ஒருவராலுங் காணக்
கூடாததினல் பயங்கரமாயும் வல்லபோற்கட்டுதற் கேதுவான ஆசாபாச
மாயிருக்கிற இரசோகுணங்களாகிற கொடிகளாலுந் தூட்சளாலு நிறை
ந்தும் அஞ்ஞானமாகிற இருட்டோடுகூடியும் மோகமாகிறபனியையுடை
யதாயுமிருக்கின்றது * (அ-கை) எப்படிவிரிவாயிருக்கின்றது எப்படி ஒ
ருவராலறியக் கூடாததாயிருக்கின்றது தனனுடையஇடம் விஷயம் நாம
மிதுகளின்பேதமிருக்குதே இதெப்படியொன்றுகுமெனி லதற்கு மேல் சொ
ன்ன அருத்தத்தைத் திஷ்டாந்தத்தோடுகாட்டுகிறார் | இரசனேந்திரியரூப
மாய்நாவிலிருக்கின்ற ஒருமாதுரியசத்தியேசகல உலகங்களுக்குள்ளிருக்கி
ற சகலசெலத்திலுமிருப்பையடைந்து நதிசமுத்திரமுதலானத்தில் பெருகு
கின்றமையால்க்ஷிரமென்றும் நெகிழுகின்றமையாலுதகமென்றும் சத்திக்
கின்றமையாலம் பென்று மிப்படிக்கொத்த கிரியாபேதத்தினு லனேகவித
நாமமடைந்திருக்கிற சத்தி யிருந்துகொண்டு ஒன்றாக அறியபடாதது
போல சரீரத்தினிடத்திலிருக்கிற ஆசை ஒன்றேசகல வுலகங்களுக்குள்ளி
ருக்கிற அனுபவிக்கத்தக்கவஸ்துக்களைவிஷயமாகப்பண்ணிக் கொண்டுவிவ
காரபூமியில் ஸ்ரீவிஷயத்தைப்பற்றி இராகமென்றும் தனதான்னியத்தை
ப்பற்றிக்காமமென்றுங் கொடாதிருத்தலைப்பற்றிலோபமென்றுமிவைமுத
லிய அனேகவிதநாமங்களையடைந்து ஒன்றாகவறியப்படவில்லை *.

பதினேழாவதுசருக்கமுற்றிற்று.

பதினெட்டாவதுசருக்கம்.

தேகதூஷணம்.

இச்சருக்கத்தில்மனோவியாதிதேகவியாதி இவைகளால் மிகுந்ததுன்ப
த்தையுடையதாயும் சரைமரணங்களாலனித்தியமாயுமபிமான மானசமுத
லானதுகளுக்காதிகாரணமாயுமிருக்கிறதேகத்தையேநிந்திக்கப்படுகின்றது.
(அ-கை) ஆசைதுக்கயேதுவானலாகட்டும் தேகத்தோடிருந்துசுக

த்தையனுபவிக்கலாமேயெனிலிந்தத்தேகமுந்துக்கத்திற்குக்காரணமென்றி
ராமர்சொல்லுகிறார் | மலமூத்திரங்களால் நிறைந்த ஈரமானகுடலினாலு
ம்நரம்பினாலும் நெருக்கமாயும் பாலியமுதலானவிகாரங்களையுடையதா
யும் மரணத்தையடைகிறதாயுமிருக்கிற தேகமானது சமுசாரத்தில்மிகவுந்
துன்பத்திற்காகவேவிளங்குகின்றது ॥ இந்தத்தேகமானது சடமாயிருந்
தாலுமியல்பாகப்பிராணன்முதலான நான்கு கோசங்களுக்குமாதாரமாகை
யினாற்சத்துமுதலானவைந்துகுணங்களையுடையவனானஆத்மாவாகத்தோ
ற்றுகின்றமையால்யுத்தியினால்மோட்சாதிகாரம்வரும்போது நன்றாகுது அ
தில்லாமலிருக்கும்போதுகெட்டதாகுதுசடமாகாமலுஞ் சேதனமாகாமலு
மிருக்கின்றது ॥ ஆகையாலிந்தத்தேகஞ்சித்தாசடமாவென்கிறஇரண்டுபா
ர்வைகளுடையமத்தியில் நிச்சயமுண்டாகாததினால் துஷ்டமனதையுடைய
தாயுமிதைச்சோதித்துப்பார்க்கும்படியான விவேகமில்லாததினாலும் மூட
மான ஆத்மாவையுடையதாயுமிருக்கின்றதால் மோகத்தையேகொடுக்கின்
றது ॥ இந்தத்தேகமற்பமான அன்னபான முதலானத்தினாற் சந்தோஷ
த்தையுமற்பமானகுளிர்வெய்யில் முதலானத்தினால்துக்கத்தையு மடைகின்
றது அசுசியாயுந் துர்க்குணமாயு மிருக்கிறதேகத்துக்குச் சரியானதுக்கிக்க
த்தக்கவஸ்துவொன்றுமில்லை ॥ (அ-கை) தேகத்தை அபிமானியாதிரு
ப்பதற்காகமரமாகச்சொல்லுகிறார் | எப்போதுமுண்டாய் நசிக்கிறதாயுமற்
பமகிட்சியுண்டாகும்போதெல்லாம் பற்களாகிறதாதுகளோடு கூடினபுன்
சிரிப்பாகிறமலர்ந்த புட்பத்தினாலலங்கரிக்கப்பட்டுங் கைகளாகிறகிளையை
யுடைய தாயுங்கண்களாகிற வண்டிருப்பதற்கிடமான துவாரங்களையுடைய
தாயுந்தலையாகிறபெரிதானபழத்தையுடையதாயும் மரங்குத்திப்பட்சிகளா
ற்குத்தப்பட்டதுபோலிருக்கிறகாதுகளாகிறதுவாரத்தையுடையதாயுஞ் ஜீ
வேசுவராளாகிற இரண்டுபட்சிகளுக்குக்கூண்டான இருதயத்தையுடைய
தாயும் எவ்வன அழகாகிறநிழலோடுகூடிக்கொண்டுமிருக்கிற இந்தத்தே
கரூபமான மரமானதாருக்கனுகூலமாருக்குச்சத்துரு இந்தத்தேகத்தில் வி
சுவாசத்தையாவது துவேஷத்தையாவதுசெய்வது யுத்தமல்ல [உபேட்சை
செய்யத்தக்கதென்பதுகருத்து](அ-கை) ஆத்மாவென்றுசகலசெனங்களு
க்கும் பிரசித்தமாயிருக்கிற இந்தத்தேகத்தை எப்படி உபேட்சைசெய்யத்
தக்கதெனில் | சமுசாரசமுத்திரத்தைத்தாண்டுதற்காக அடிக்கடிகிரிகிக்கப்ப
ட்டும் ஓடமாயுமிருக்கிற இந்தத்தேகத்திலியாருக்குஆத்மபுத்தியுண்டாகும் ॥
(அ-கை) தேகத்தைவனமாகத்தூஷித்தல் | வெகுகுழிகளால் நிறைந்தும்
மயிர்களாகிறகணக்கில்லாதமரங்களையுடையதாயு மிந்திரியமாகிறகரடிகளு

ணடபவலிமையான சேஷ்டைகளினாற்பயங்கரமாயுஞ் செனங்களில்லாததினாற் சூன்னியமாயுமஞ்ஞானமாகிறவிருட்டினாலொருவராலறியக்கூடாததிக்குகளையுடையதாயுமிருக்கிறதேகமாகிறவனமானதெனக்கிஷ்டமாகவிருக்கவில்லை ❊ (அ - கை) தேகத்தையிரணபேரிகையாகத்தூஷித்தல் | மாமிசம்நரம்பு என்பு இவைகளாற்சூழப்பட்டும் அசாரமாயும்பொத்தலாயும் வெளியிற்புறப்படுதற் கேதுவான உபாயத்தைச்சொல்லுகிற உபதேசசத்த மில்லாமலுமிருக்கிற இச்சரீரமாகிற இரணபேரிகையில் பூனையைப்போல நானிருக்கிறேன் ❊ (அ - கை) தேகத்தையிச்சிலிமரமாகத்தூஷித்தல் | சமுசாரமாகிறகாட்டில்முளைத்தும்மனதாகிற குரங்கையுடையதாயுந் துன்பமாகிறபுழுக்களாற்றுவாரம்பண்ணப்பட்டும் ஆசையாகிறசர்ப்பத்துக்கு வீடாயுங்கோபமாகிறகாகத்தினாற் கூண்டுகட்டப்பட்டும் உள்ளங்கைகளாகிற பூங்கொத்துக்களாலழகாயும்பிராணவாயுவாகிற காற்றினாலசைகின்றதாயு மிந்திரியங்களாகிற பட்சிகட்கிடமாயுங்காமனாகிறவழிநடக்கிறவனாலடையப்பட்டுமகங்காரமாகிற சமூகினாற்கூண்டுகட்டப்பட்டும் வயிறுகிறபொந்தை யுடையதாயுஞ் சன்மவாசனையாகிற விழுது களாற் சூழப்பட்டுமிருக்கிற இச்சரீரமாகிற இச்சிலிமரமானதெனக்குச் சுகத்தைச் செய்விக்க வில்லை ❊ (அ - கை) தேகத்தைவீடாகத்தூஷித்தல் | அகங்காரமாகிற புருஷனுக்குப்பெரியவீடாயிருக்கின்றஇச்சரீரப்பூமியில் வீழ்ந்து புரண்டாலுமல்லது நின்றாலுமிதனாலெனக்காகவேண்டுவதென்ன ❊ இந்திரியங்களாகிற பசுக்களையுடையதாயு மாசையாகிற மனைவியையுடையதாயுஞ் சித்தமாகிற வேலைக்காரனை யுடையதாயுந் துன்பமாகிறகுழந்தைகளினழுகையை யுடையதாயுந்துற்சேஷ்டையாகிற வேலைக்காரியை யுடையதாயுஞ் சிந்தையாகிறபெண்களையுடையதாயும் நிறையாதவயிறுகிறபள்ளத்தையுடையதாயுஞ் சரையாகிற சுண்ணாம்பினால் வெளுப்பாயும் பயங்கரமானதொனி பொருந்தியபிராணவாயுவாகிற காற்றின்வேகத்தையுடையதாயும் வாயாகிறவாயில்நாவாகிறபயங்கரமானகுரங்கையுடையதாயும் பற்களாகிற என்புத்துணுக்கைகளாற்கோலைசெய்ததோரணத்தையுடையதாயும் மனதாகிறபெருச்சாளியினாலறுக்கப்பட்டுமெலிந்ததாயும் க்ஷணகாலப்புன்சிரிப்பாகிற தீபப்பிரகாசத்தையுடையதாயும் க்ஷணகாலம் அஞ்ஞானமாகிற இருட்களாற்சூழப்பட்டும் யாதிவியாதிகளாகிற வஸ்துக்களால நெருக்கமாயு மிருக்கிற தேகமென்னும்வீடானதெனக்கிஷ்டமாகவிருக்கவில்லை ❊ அற்பபலத்தையுடையவன் மிகுந்தசேற்றிற் புதைந்திருக்கிறயானையை யெடுத்தற்குக்கூடாததுபோலதேகமாகிறவீட்டைத்தரித்தற்கு நான் வல்லவனல்லன் ❊ காலி

மானதுக்கிற்றுதினங்களிலெல்லாத்தையு நாசஞ்செய்கின்றமையாற்சம்பத்து
இராச்சியம் தேகம் இஷ்டமானதொழில்களிவைகளாலாக வேண்டுவதென்
ன * இரத்தமாமிசரூபமாயும் நாசத்தையேசுபாவமாகவுடையதாயு மிருக்
கிற இத்தேகத்தை உள்ளிலும்புறம்பிலும் விசாரித்தால் என்ன அழகிருக்
கின்றது சொல்லும் * எந்தச்சரீரங்கள் மரணகாலத்திற்சிவனை யனுசரிக்
கவில்லையோ இரட்சித்ததையும் போஷித்ததையுமறந்த அந்தநன்றியில்
லாதசரீரங்களில் புத்திமான்களுக்கு என்ன விசுவாசஞ்சொல்லும் * மதயா
னையினதுகாதுநுனியைப்போற் சஞ்சலமாயுமதிற்றொங்குகிற சலத்துளி
போலநசுவரமாயு மிருக்கிறதேகமானது என்னை எவ்வளவுக்குள்விடவி
ல்லையோ அவ்வளவுக்குள்ளே நானிதைவிடுகிறேன் * சடமான இந்தத்
தேகமானது அடிக்கடி முன்னனுபவிக்கப்பட்ட பாவாபாவரூபமானசுகது
க்கங்களையே திரும்பவுமனுபவித்துக்கொண்டு வெட்கத்தையடைகிறதில்லை
[அதேனெனிற்சடமானபடியினாலென்பதுகருத்து] வெகுகாலம்பிரபுவாக
விருந்தும் பாக்கியலட்சுமியையடைந்தும்வளர்ச்சியையடைகிறதுமில்லை.
நிலையையடைகிறதுமில்லையிந்தச்சரீரத்தையேனிரட்சிக்கவேண்டும் * சரீர
மானது சம்பன்னனுக்குந்தரித்திரனுக்குமொருவிசேஷத்தையறியாமற்சரி
யாகவேயிருந்துகிழமாகிறகாலத்திற்கிழத்தனத்தையுமரணகாலத்தின்மரண
த்தையுமடைகின்றது * விஷயமென்னுஞ்சேற்றின்ரசத்தைப்புசிக்கின்ற இ
ச்சரீரமென்னுமாமையானது ஆசையாகிறபள்ளத்தை யுடையதான சமு
சாரமாகிறகடலின்மத்தியிற்றூங்குவதுபோல மூடமாயிருக்கின்றதனாற்கு
ருவைத்தேடுதல்கேட்குதல்முதலிய ஆத்மானுகூலவியாபாரமில்லாமலூமை
யாயிருக்கின்றது * கொளுத்துகிறதொன்றுக்கேமுக்கியபிரயோசனமாகவு
டையதானசரீரமாகிறகட்டையானதுகளிச்சமுசாரமாகிறகடலில்வேறுவா
மிதக்கின்றது அதற்குள்ளாத்மாவையறிகிறதொருவனையேபுருஷனாகவறிகி
றார்கள் * தேகமென்னுந்தவளையானதுபாபமென்னுஞ் சேறுகளோடுகூடி
னவிஷயமென்னுங்குட்டைகளின்முழுகிக்கொண்டு சீக்கிரத்திலேயேகிழத்த
னத்தையடைந்து எங்கே எப்படிசீக்கிரமாய்ப் போய்விடுமோ அதறிய
ப்படவில்லை * சாரமில்லாத எத்தனங்களையுடையதாயு மிராசதகுணப்
பிரவிர்த்திமார்க்கத்தினாற்போகிறதாயுமிருக்கிறசரீரரூபமான பெருங்காற்று
னது ஒருவராலும் பார்க்கப்படவில்லை * காற்று தீபம் மனது இதுக
ளின்போக்குவரத்துமறியப்படுகுதுசரீரத்தினுற்பத்தி நாசங்களொருக்காலு
மொருவராலுமறியக்கூடாது * அஞ்ஞானமாகிறமதுவினாற் புத்திமயக்கத்
தையடைந்தவர்களாயுஞ் சரீரத்தினெடுநாளிருக்கலா மென்னுமபிமானமு

ரானவர்களாயுமிருக்கிற புருஷர்களை நன்றாகச்சுடவேணும்* நான்தேகத்
தையுடையவனுமல்ல தேகமும் என்னுடையதல்ல சடம்போலெதிரே
தோற்றிக் கொண்டிருக்கிற சடமான இத்தேகமும்நானல்ல வென்றுவி
சாரணைசெய்து ஆத்மாவினிடத்திற் சுகத்தையடைந்தமன முடையவர்க
ளேபுருஷோத்தமர்கள் * மானாவமானங்களாலதிகமாயும்வெகுலாபங்களினு
லழகாயுமிருக்கிற கெட்டப்பார்வைகளானதுகள்சரீரத்திலேயே அபிமானம்
வைத்திருக்கிறபுருஷனைமரணத்தையடையப்பண்ணுகின்றனுகள் * சரீர
மாகிறபள்ளத்திற்படுத்துக்கொண்டும் மனோக்கியமான உருவையுடையதா
யுமிருக்கிற அகங்காரத்தினாலுண்டானபோகவாசையாகிறமோகினிபிசா
சினால்நாங்கள் வஞ்சிக்கபட்டோம் [வஞ்சிக்கப்படுதலாவது அசாரமான
தேகத்திற்சாரபுத்தியைச்செய்வித்துத் தத்துவமானசாரத்தையபகரிக்கிறதி
னென்பதுகருத்து]பல்நன்மையுமுடைய புத்தியாகிறதனித்தவழகுப்பெ
ண்ணானவள் தேகாபிமானத்தையடைந்திருக்கிற இடபிராந்தினாமாகிற
கெட்டவிராட்சசியினால்வஞ்சிக்கப்படுகிறாள் கஷ்டம் [தனித்தபுத்தி என்
றதனால்விவேகமுதலானசகாயமில்லை யென்பதுகருத்து]இப்பிரபஞ்சத்தி
லோர்பொருளுஞ் சத்தியமாகாததினாலதற்குள்ளகப்பட்டிருக்கிற இத்தேக
முந்தானே வெந்ததுபோலவுமில்லாததுபோலவுமிருக்கின்றது இதனாற்றே
கங்களைவஞ்சிக்கப்படுகின்றது ஆச்சரியம்*(அ॰கை)சரீரமானது சனங்
களை வஞ்சிப்பதனாலொருபிரயோசனமுண்டாகுமேயாகிலப்போது உத்த
மமானதுமாகலாமதுவுமில்லையென்றுசொல்லுகிறார் | இச்சரீரமென்னு
ம்பழுத்தயிலையானதுமலையருவியினதுசலத்துளிபோலச் சிறிதுநிமிஷங்க
ளிலேயே ஒரு எத்தனமுமில்லாமல்நாசத்தையடைகின்றது * சீக்கிரத்தில
நாசத்தையடைகின்றஇச்சரீரமானது கடலிற்குமிழிபோலச் சமுசாரமென்
னும் பெரிதானசுழியிற்றனக்கும் பிறருக்கும் பிரயோசனமில்லாமல்வீணா
கச்சுற்றுகின்றது * (அ॰கை) தேகமுதலான கிரியாவர்க்கத்துக்கு அசத்
தியத்துவமெப்படியெனில் | பொய்யான அஞ்ஞானத்தின் விகாரமாயுஞ்
சொப்பனத்திற்காணப்படுகிற பட்டணத்திற்குச்சரியாயும் மிகவும் பிரகாச
மாய்நாசத்தையுடையதாயுமிருக்கிறஇச்சரீரத்தில்க்ஷணகாலமுமெனக்குவிசு
வாசமில்லை * மின்னற்களையுஞ்சாற்காலமேகங்களையுங்கந்தருவநகரங்களை
யுமெவன்நிலையென்றுநிச்சயம்பண்ணுகிறானோஅவனித்தேகத்தில்விசுவாச
த்தைச்செய்யட்டும் * சீக்கிரமாய் நாசத்தையடைகிறபதார்த்தங்களுக்குள்
ளெப்போதும் நசுவரமானகாரியங்களுடையகூட்டத்தைச்செய்கிற மின்
னல் சாற்காலமேகமுதலானதுகளையுஞ் செயித்துக்கொண்டும் வலுவான

ஆசத்தையுடையதாயுமிருக்கிற இந்தத் தேகத்தை நான் திரணம் போலத் தூக்ஷமென்கிற புத்தியினாற்றான் சுகமாயிருக்கிறேன் ❊

பதினெட்டாவது சருக்கமுற்றிற்று.

பத்தொன்பதாவது சருக்கம்.

பால்ய தூஷிணம்.

இச்சருக்கத்திலஞ்ஞானம் பசி தாகம் ரோகம் அசுத்தம் சாபல்லியமிவைகளாற் கெடுக்கப்பட்டும் பசுபட்சிகளுக்குச் சரியான நடக்கையையுடையதாயுமிருக்கின்ற பால்யத்தை நிந்திக்கப்படுகின்றது.

(அ - தை) (மகாராசனும் மகாப்பிராமணனும் மகாகுமாரனுமிகவு மானந்தத்தையடைகிறார்கள் என்று சுருதியிருக்கின்றமையால்) முன் சருக்கத்திற் சொன்ன தேகத்தினுடைய சகலாவஸ்தைகளுந் துக்கரூபங்களாகவே அந்தத் தேகத்தினுடைய பால்யமானது சகல சென்மங்களாலுமிச்சிக்கத்தக்கதாகையினால் மிகவுமனோக்கியமாயிருக்குமென்று சங்கித்தால் அப்பால்யம் வெகு அனர்த்தங்களையுடையதென்றிராமர் சொல்லுகிறார் | பலவித காரியங்களைச் செய்ய வேண்டுமென்னுமபிமானமாகிற அலைகளையுடையதாயும் நிலையில்லாத தேவர் முதலான நான்குவித சரீரங்களாகிற குமிழிகளையுடையதாயுமிருக்கின்ற பவசமுத்திரத்தில் மனுஷசென்மத்தையடைந்துஞ்சீவர்கள் துன்பத்தின் பொருட்டே பால்யத்தையடைகின்றது [மனுஷ சென்மமுண்டாகிறது துலபமென்று சுருதி சொல்லுகின்றதென்பதுகருத்து] (அ - தை) சொன்ன அநர்த்தங்களை விரிவாகத் தெரிவிக்கிறார் | வலியின்மை ஆபத்து பட்சணத்திலாசை வசனிக்காமலிருக்கைமூடப் புத்திவிளையாடுகிறத்திலாசை சஞ்சலமாயிருக்கை பட்சணமும் விளையாடலுமில்லாமற் போனால் தீனமாயிருக்கை இவையெல்லாம் பால்யத்திலுண்டாகின்றது ❊ கோபமழுகை யிவைகளாற்குரூரமாயுந் தீனத்தனத்தினால் மெலிந்துமிருக்கிறதிசைக்குப் பால்யமானது யாவனைகளுக்குக் கட்டுத்தறி போலிருப்பிடமாக விருக்கின்றது ❊ பால்யத்தில் மனதை யறுக்கின்றசிந்தைகளைப்போல மரணம் சரை ரோகம் ஆபத்து யௌவனமிவைகளிற் கிடையாது ❊ பசுமுதலானதுகளுக்குச் சரியான நடத்தையையுடையதாயும்

ர்லோராலும்பயப்படுத்தப்பட்டுஞ் சஞ்சலமாயுமிருக்கிறபாலகனது நடக்கையானதுமரணத்திலுமதிகதுன்பத்தைக்கொடுக்கின்றது * சீரோயிருக்கிறபிரதிபிம்பம்போலவிளங்குகின்றதிடமான அஞ்ஞானத்தை யுடையதாயும்பலவித சங்கற்பங்களால அற்பமாயும் நிவிர்த்தவிடயங்கிடையாததனலறுபட்டதுபோலவுஞ்சிதறினது போலவுமிருக்கின்ற மனதையுடைய பாலயமானது ஜீவனுக்குச்சுகத்தைக்கொடுக்கின்றது * பால்யத்திலறியாமையினாலடிக்கடிசலம் தீ காற்று இவைகளினின்றுமெய்போது முண்டானபயத்தினாற்றுன்ப முண்டாவது போல ஜீவனுக்கு ஆபத்திலேதானுண்டாகும் * பாலகன்கெட்டவிளையாட்டு கெட்டநடத்தை கெட்டவிச்சையிலவகளிற்பலவந்தமாகவிழுந்துசாரமென்கிறபுத்தியினால் மோகத்தையடைகிறான் * பிரயோசனமில்லாதகெட்டவிளையாட்டையுடையபால்யமானது புருஷனுக்கு உபாத்தியாயர்முதலானவர்களாலடிபடுகிறதின்பொருட்டாகுதேதவிரசாந்தியின்பொருட்டாகிறதில்லை * தோஷங்கள் துராசாரங்கள் துர்வார்த்தைகள் துஷ்டமனோவியாதிகளிதுகளெல்லாங் கெட்டதானபொத்திலேகோட்டான்கள்போலப் பால்யத்திலிருக்கின்றதுகள் * (அ - கை) சுருக்கமுதலிற்பால்யமதிகவுமனோக்கியமென்றுட்சேபித்ததற்குச் சமாதானஞ் சொல்லுகிறார் | பால்யத்தை நல்லதென்றெண்ணுகிற கெட்டபுத்தியுள்ள மூடபுருஷாவனிச்சுடவேண்டும் [பால்யமனோக்கியமென்றுசொன்ன கருதியின்றுற்பரியபிராகாதி விகாரமுண்டாகாமலிருக்கும்போது சுபாவமான ஆத்மசுகமுண்டாவதற்குயோக்கிதை யுண்டென்னுங்கருத்தையுடையதேகவிரபால்யமனோக்கியமென் றென்பதுகருத்து](அ - கை) அப்பால்யமனோக்கியமல்லவென்பதையேசொல்லுகிறார் | யாதொருபால்யத்தில் மனதானது தொழிற்களில் உஞ்சற்போலவலைந்துகொண்டிருக்குதோ மூடே றுலகத்தி லு நன்றாகாமலிருக்கிற அப்படிப் பட்டபால்யமு மெய்படிச்சந்தோஷத்தின் பொருட்டாகும் * (அ - ஐ) கேவலமனுஷியாளுக்குமாத்திர மிந்தபால்யத்துன்பத்தைக்கொடுக்கிறதல்லமின்னயோவெனில் சகலஜீவர்களுக்குந்துன்பத்தைக்கொடுக்கிற தென்றுசொல்லுகிறார் | சகலஜீவர்களுக்கும்மனாதானதுசகலாவஸ்தைகளிலுமேசஞ்சலமடைகுது அதிலும்பால்யத்திற்பாத்துயங்கதிகமாகச் சஞ்சலமடைகின்றது [மனதிற்கதிகசஞ்சலமே அதிகதுக்கத்திற்கேதுவென்பது பிரசித்தமெனவறிக] மனதுசுபாவத்திலேயேசஞ்சலம் பாலியமுமதிகவுஞ்சஞ்சலமவ்விரண்டுஞ்சேரும்போதவைகளின்கெட்டசஞ்சலத்தினாலுண்டான ஆபத்தினின்று வனையவனிரட்சிக்கிறவனிருக்கிறான் * பால்யத்தோடுகூடினமனதினிடத்திலிருந்தும் ஸ்ரீகளுடையகண்கள் மின்

னல்களக்கினிச்சுவாலைகள் அலைகளினுகளெல்லாஞ்சஞ்சலத்தையப்பியாசிக்கப்பட்டது நிச்சயம் * எப்போதுஞ்சஞ்சலசுபாவமாயிருக்கிறபால்யமானதுஞ் சகலதொழிற்களிலுமண்ணன்தம்பிகள்போற்காணப்படுகின்றதுகள் * மனுஷர்கள்சிமாவினையனுசரித்துப்பிழைப்பதுபோல பலவிதனங்களும்பலதோஷங்களும் பலமனோவியாதிகளும் பாலகனையேபற்றிக் கொண்டுபிழைக்கின்றதுகள் * பாலகன்நாடோறும்புதிதுபுதிதாயிருக்கிற இஷ்டவஸ்துவையடையாமற்போனலப்போது விஷத்தைப்போற்சகிக்கக்கூடாத சித்தவிகாரத்தினால் மூர்ச்சையையடைகிறான் * பாலகன்நாய்போல அற்பத்தின்மேகிட்சியுமற்பத்தில்விதனத்தையும் அமேத்தியத்தில் விளையாடுதலையுமடைகிறான் * பெலமில்லாதபாலகன் தனதுசங்கற்பத்தினால் விச்சித்தபதார்த்தங்களையடையாமற்றபித்துக்கொண்டிருக்கிறபுத்தியையுடையவனாகித்துன்பத்தையடைகிறான் * துற்சேஷ்டைகட்கிருப்பிடமாயும் வெகுவஞ்சனைபாயங்களாற்குரூரமாயுமிருக்கிறதுன்பமானதுபாலகனுக்குண்டாவதுபோல ஒருவனுக்குமுண்டாகிறதில்லை * கட்டுத்தறியிற் கட்டினயானையானதுவிஷிவேகத்தினாற் சகிக்கக்கூடாததுன்பமுறுவதுபோல பள்ளிக்கூடத்தையடைந்திருக்கிற பாலக னடிபடுதல்முதலியமகத்தானபயங்கரமானதுன்பத்தையடைகிறான் * பலவிதயிச்சாரூபமாயும்பொய்வஸ்துக்களிற்சத்தியபுத்தியாயும் அற்பவறிவாயுமிருக்கிறபால்யமிகவுந்துக்கத்தின்பொருட்டேயாகின்றது * பால்யத்திலுண்டாயிருக்கிற அறியாமையினாற்பாலகன் தாதிமுதலானவர்களுடையவஞ்சகவார்த்தையினாற்சந்தோஷமடைந்து பூமியைப்புசித்தற்கும் ஆகாசத்திலிருக்கிறசந்திரனைப்பிடித்தற்குமிச்சிக்கிறனந்தப்பால்யமெப்படிச்சுகத்தின் பொருட்டாகும் * மனதிற்குளிர்வெய்யில் முதலானதுன்பத்தையறிந்துமதை நீக்கிக்கொள்ளவலியின்றியிருக்கின்றபாலகனுக்குமரத்திற்குமென்னபேதமிருக்கின்றது * உபாத்தியாயர் தாய் தந்தை மூத்தோர் மற்றசெனங்களிவர்களிடங்களிலெல்லாம் பயமுண்டாகையினாற்பால்யம் பயத்திற்குவீடாயிருக்கின்றது * சகலதோஷங்களாற் கெடுக்கப்பட்டபுத்தியையுடையதாயும் அஞ்ஞானமாகிறவிடனுக்குவீடாயுமிருக்கின்றபால்யமான திவ்வுலகிலொருவருக்குஞ்சுகத்தின்பொருட்டாகிறதேயில்லை.

பத்தொன்பதாவதுசருக்கமுற்றிற்று.



இருபதாவது சருக்கம்.

யௌவனதூஷணம்.

இச்சருக்கத்தில் உலோபம் துவேஷம் மதம் அசூயை அகங்காரம் மாச்சரியமிவைகளாற்கெடுக்காநின்றதாயும் காமாதி அனர்த்தங்கட்கு வீடாயுமிருக்கின்ற யௌவனத்தைநிந்திக்கப்படுகின்றது.

(அ-கை) பால்யமிகவுமறியாமைஅசத்தியொருவனடைக்கலமாயிருக்கைஇவைகளாலதிகமான துக்கத்தையுடையது. யௌவனமோவெனில்வைசனில்லாததினாலும் நாநாவிதபோகரசங்களை யனுபவித்தற் கிடமாகையினாலுஞ் சுகவேதுவென்றிச்சிக்கத்தக்கதெனினுமிகவுமனர்த்தமென்றிராமர் சொல்லுகிறார் । அதன்பின்பு புருஷனானவனிப் பால்யவனர்த்தத்தைவிட்டுப் போகவாசையினாற் கெடுதலானமனதுடையவனாகி யௌவனத்தைநரக ஏதுவுக்காகவிரைவிலடைகிறான் [பால்யம்பதினான்கு வருடமளவென்றுமதிற்செய்ததோஷம்நரகவேதுவன்றென்றுமதற்குமேல் யௌவனமுண்டாகையினாலதுவேநரகவேதுவென்றும்மாண்டவ்வியர்சொல்லியிருக்கிறாரென்பதுகருத்து] அந்த யௌவனத்தில்மூர்க்கனானபுருஷன் அனேக செய்கைகளையுடையதாயுஞ் சஞ்சலமாயுமிருக்கிறதன்மனதினிராகாதி வியாபாரங்களையனுபவிக்கின்றதனாலொரு துக்கம்விட்டொருதுக்கமடைகிறான் * தனதுசித்தமாகிறகுகையிலிருந்துபலவிதசேஷ்டைகளைச்செய்துகொண்டிருக்கின்றகாமமாகிறபேயினாற் புருஷனானவன்பலவந்தமாய் விவேகநீங்கியதன்வசப்படுகிறான் * ஆகையாற்றனக்கு வசமில்லாதமனதானது யௌவன ஸ்திரீகளைப்போலச் சஞ்சலமான விருப்பையுடையதுகளான சிந்தைகளுக்குத்தடைகளில்லாத சஞ்சாரங்களைக் கொடுக்கின்றது * காமாதிகளின்வசமடைந்திருக்கிற புருஷனை நரகஞ் சிலவுகிலேசமிவைகளுக் கேதுவான ஸ்திரீகள்சொக்கட்டான் கலகமுதலான விசனாரம்பங்களும் இராகத்துவேஷமுதலானதோஷங்களும் நாசஞ்செய்விக்கின்றதுகள் * ஆகையாற்பெரிதான நரகங்களுக்கு வித்தாயும் எப்போதுஞ் சித்தத்துக்குப் பிராந்தியைக்கொடுக்கிறதாயுமிருக்கிற யௌவனத்தில் நாசமடையாதசெனங்கள் வேறொன்றினாலு நாசமடைகிறதில்லை * யௌவனமாகிற பயங்கரமான காட்டுபூமியானது சிங்காரமுதலானபல விதரசங்களாலு மிராகாதிகளாகிற புலிகளாலும் விசித்திரகதைகளாகிற ஆச்சரியங்களாலு நிறைந்திருக்கின்றது இதை எவனாற்றாண்டப்படுகுதோ அவனேதயிரியசாலியென்று சொல்லப்படுகிறான் * க்ஷணகாலம்பிரகாசிக்கின்றதாயுஞ் சஞ்சலத்தினால்மிகுந்த அப

ங்காரத் தோடுகூடின சொற்களையுடையதாயு மின்னற் போற்றோன்றிம றைகிறதாயுமிருக்கிற வெவ்வனமானதெனக்குருசிக்கவில்லை * போககாலத் தில்ருசியாயுமனோக்கியமாயு முடிவிற்கசப்பாயும் நிந்திக்கத்தக்கதாயுந்தோ ஷங்களுக்கலங்காரமாயும்மதுவின்மயக்கத்துக்குச்சரியாயுமிருக்கிற வெவ்வன மான தெனக்கு ருசிக்கவில்லை * பொய்யாயு மெய்போற் பிரகாசித்தும் வி னைவில்வஞ்சனையைச்செய்கிறதாயுமிருக்கின்றதாற்சொப்பனத்தி லனுபவிக் கப்படுகிற ஸ்த்ரீசம்போகத்துக்குச் சரியாயிருக்கின்ற வெவ்வனமானதெனக்கு ருசிக்கவில்லை * க்ஷணகாலமழகாயிருக்கிற வஸ்துக்களுக் கெல்லாமுயர்ந் ததாயுஞ் சகலபுருஷர்களுக்குங் க்ஷணமாத்திரமழகாயுங்கந்தருவநகரம்போ லே விளங்குகின்ற தாயுமிருக்கின்ற வெவ்வனமானதெனக்குருசிக்க வில்லை* விடுகின்ற அம்பானது வெவ்வளவுகாலத்திலட்சியத்தையடைகுதோ அவ்வள வு காலஞ் சுகத்தைக்கொடுக்கின்றதாயுந துன்பத்தினால்விளங்கியு மெப்போ தும்வெப்பத்தையுந்தோஷத்தையுங் கொடுக்கிறதாயுமிருக்கின்ற வெவ்வனமா னை தெனக்குருசிக்க வில்லை * மேற்பார்வைக்குமாத்திரமழகாயுநன்னிலை யில்லாததாயு மிருக்கின்றதால் தாசியின்போகத்திற்குச்சரியாயிருக்கின்ற வெ வ்வனமானதெனக்கு ருசிக்கவில்லை*பிரளயகாலத்திற்பெரிதான உற்பாதங் களுண்டாவதுபோலச்சகல சீவர்களுக்குந் துன்பத்தைச்செய்விக்கின்றசகல வி த்தனங்களுமெவ்வனத்திலொன்றாகச் சேருகின்றதுகள் * பயங்கரமான சொரூபத்தையுடையவர்வரரு மனதிலிருளையுண்டாக்குகின்ற வெவ்வனத் தோடுகூடின அஞ்ஞானமாகிற விராத்திரியினாற்பயப்படுகின்றார் [அப்படி யில்லாமற்போனால் எப்போதுமேன்விவேகமாகிறசந்திரனை த்தரிக்கிறானெ ன்பதுகருத்து]காட்டுத்தீயினான்மரமானதுகொளுத்தப்படுகின்ற துபோல ச்சீவர்கள் வெவ்வனத்தில் ஸ்த்ரீகளுடையபிரிவினாலுண்டாகிறசோகமாகிறதீயி னாற் கொளுத்தப்படுகிறார்கள்*மழைகாலத்தில் நதியானதுகலக்கமடைவது போலப்புத்திமானதுகுருபணியாற்றோஷங்களை நீக்கிமிகவு நிருமலமாயிருந் தாலும் வித்தியாப்பியாசவீரியத்தினால்விரிவையடைந்திருந்தாலுஞ்சாந்தியா தி நற்குணங்களாற்பரிசுத்தமாயிருந்தாலும் வெவ்வனத்திற் கலக்கமடைகின்ற து*பெரிதான அலைகளையுடையபயங்கரமான நதியானதுதாண்டுதற்கெளி தாகுது வெவ்வனத்தினாற்சஞ்சலமானஆசையினாலலைக்கா நின்றசித்த விருத்தி யானது தாண்டத்தக்கதல்ல * வெவ்வனத்திற்சீவர்கள் அவளழகாயிருக்கிறா ளென்றும் அந்தக்கொங்கைகள் பருத்திருக்கின்றதுகளென்று மவளுடைய விலைகளே விலைகளென்றும் அவளுடையமுகமே முகமென்று மிப்படிக் கொத்தவெண்ணிக்கைகளா லழிவையடைகின்றது * இவ்வுலகத்திற்சஞ்சல

இச்சருக்கத்திற்சொல்லப்பட்டுஞ்சொல்லப்படாமலுமிருக்கிற மோட்ச விரோதமானவிஷயங்களில் திரும்பவுந்தோஷங்களை வயிராக்கியமுண்டாகிறத்தின்பொருட்டு விரிவாகச்சொல்லப்படுகின்றது.

(அ ॰ கை) மூன் தனித்தனிசொல்லிவந்த விஷயங்களிலுமிதுவரையிற் சொல்லாமலிருக்கிற விஷயங்களிலுமுன்தெரிவிக்காத தோஷங்களைச்சேர்த்துவிரித்துக்காட்டி இவைகளிலசித்தத்துக் கிளைப்பாறுதற்கேதுவானகுணமொன்றுமில்லையென் றிராமர் தெரிவிக்கிறார் | மற்றொன்றையுங் கேளும் மேலெழுந்தபார்வைக்குச்சுகமாயும் யதார்த்தபடார்வைக்குத் துக்கமாயுமிருக்கிற இப்பிரபஞ்சத்தில் எந்தபொருள்கிடைத்தால்மனது பூரணகாமமாகுமோ அப்படிக்கொத்த பொருளொன்றுங்கிடைக்கவேயில்லை ✻ விளையாட்டிலாசையையடைந்திருக்கிற பால்யம் நீங்குங்காலத்தில் மனதாகிற மானஸ்திரிகளென்னுங்குகைகளில்மடிந்துசரீரந்தளர்ந்துபோகும்போது சீவர்கள்மோட்சங்கிடைக்கும்படியான வுபாயமொன்றுஞ்செய்யாமலேயே ஆயுள்வீணாகப்போய்விட்டதென்றுமிகவும் விதனத்தை யடைகுது ✻ மூப்பாகிறபனியினாற்கெடுக்கப்பட்டிருக்கிறசரீரமாகிற தாமரைமலரை உயிராகிறவண்டானது க்ஷணத்தில்விட்டுப்போட்டு தூரத்திற்போகும்போது சீவர்கள் செய்யாநின்ற இவடத்திய யத்தனமாகிற குளமானது காய்ந்துபோய்விட்டது ✻ மனுஷியாளுடையசரீரமாகிற கொடியானது மூப்பாகிறபுட்பங்களையுடையதாகிமிகவுந் தளர்ச்சியடைந்துகொண்டு எப்போதெப்போது பரிபக்குவமாகுதோ அப்போதெல்லாம் யமனுக்குச் சந்தோஷத்தை நிச்சயமாகவுண்டுபண்ணுகுது ✻ இவ்வுலகத்திலாசை யென்னுமாறானது விஷய உச்சாகங்களாகியபிறவாகத்தினால் நற்குணமாகிற சகலபதார்த்தங்களையும்விழுங்கப்பட்டதாகியதன்கரையிலிருக்கிற சந்தோஷமாகிறநல்மரத்தின் வேரையறுக்கிறத்தில்மிகவும்வலியுடையதாகிப்பெருகுகின்றது ✻ சமுசாரரூபமான கடலில் மேலேதோலினால்மறைத்துக்கட்டப்பட்டும் துன்பமாகிற அலைகளாலலைக்கப்பட்டுஞ் சுழன்றுகொண்டும் முழுகிறத்திலேயே யத்தனப்பட்டுக்கொண்டும் விவேகியான சீவர்களையுடையதாகாமலுமிருக்கிறசரீரமாகிற பரிசலானது ஐந்திந்திரியங்களாகிற முதலைகளாலலைக்கப்படுகின்றது ✻ ஆசையாகிறகொடிக்காட்டிற் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறமனதாகிற குரங்கானதுகாமமாகிற மரங்களிற்சுற்றிக் கொண்டாயுளைப்போக்கடித்துஞ்சுபலத்தையுமடைகிறதில்லை ✻ இப்போதிவ்வுலகத்தில் ஆபத்

ஆகவில்லிதனம் மோகமிதுகவிளத்தூாரத்திற்றள்ளியும் சம்பத்துகளிற்கெற்
வத்தைதயடையாமலிருக்கின்றமனதினால் மனோக்கியமாயும் ஸ்திரிகளாற்கெடு
க்கப்படாமலிருக்கிற மனதையுடையவர்களாயுமிருக்கிற பெரியோர்கள்மிக
வுமரிதாகவிருக்கிறார்கள் ✻ இவ்வுலகத்தில்யாவனைக் கூட்டமாகிற அவஸ்த
யையுடையபுத்தமாகிற கடலைத்தாண்டுகிறவர்களென்புத்திக்குச்சூராளல்
ல ஸ்வர்கர்மசதுரூபமான அவஸ்தையையுடையதேகேந்திரியங்களாகிற இந்
தக்கடலை விவேகவைராக்கிய முதலியவைகளாலும் மேல்வருகிறதேகமாகி
ற கடலை அதற்குமூலமான அஞ்ஞாநத்தைப் போக்கடிக்கிறத்தினாலுந்தா
ண்டுகின்றவர்களேசூராள் [விவேகவைராக்கிய முதலானவுபாயங்கிடைப்
பது அரிதாகையாலந்தக்கடலைத் தாண்டுகிறதுமிகவுந்துல்லபமென்பது
கருத்து] (அ-கை) கருமமதற்குச் சாதகமாகட்டுமேயெனில் அதற்குச்
சொல்லுகிறார் | தூராசையினாற் கெடுக்கப்பட்டிருக்கிற சித்தவிருத்தியையு
டையசிவர்களானது எந்தக்கருமத்தைச் செய்துவிசிராந்தியையடையுமோ
முடிவில்துன்பத்தையும்நாசத்தையுங்கொடாமலிருக்கிற மோட்சபலத்தை
த்தருவதினாலழகாயிருக்கிற அப்படிக்கொத்த ஒருகருமமும் ஒருவனுக்கு
மொருக்காலுங்காணப்படவில்லை (எப்படி இவ்வுலகவியாபாரத்தினாலுண்
டானபலம் நசித்துப்போகுதோ அப்படிபரலோகத்திலும் புண்ணியத்தினா
லுண்டாகிறபலம் நசிக்குமென்றிதுமுதலான அனேகசுருதி வாக்கியமிருக்
குது) ஒருகிரியையினாற் சம்பாதிக்காநின்ற பலமவசியநசிக்குமாகையினாலி
ஷ்டவஸ்துவினுடைய நாசந்துக்கத்தை முடிவாகவுடையதென்பது கருத்
து (அ-கை) யாதொருத்தனிடத்திற் செல்வமில்லாதபோதுதைரியமு
தலானதுகளுடையநாசத்துக்கேதுவானவிராகம்லோப முதலானதுகளதி
கமாகிறத்தினால் கீர்த்தி பிரதாபஞ் சம்பத்துமுதலான அற்பபலமுந் துல்
லபமாகும்போது அவனிடத்தில்மகாபலமான மோட்சந்துல்லபமென்கிற
தற்குக்கேட்பானேனென்கிறகருத்தினாற் சொல்லுகிறார் | தைரியக்குறை
வில்லாதவர்களாயும் உலகத்தைக்கீர்த்தியினாலுந் திக்குகளைப்பராக்கிரமங்
களாலுஞ்சம்பத்தினால்யாசகனுடையவீட்டையும் பொறுமை வணக்கம் உ
தாரமுதலானகுணங்களுடையபலத்தினால் லட்சுமியையும் நிறைக்கின்றவர்
களாகியபெரியோர்கள் உலகத்திற்கிடைப்பதரிது [தைரியத்தினாலல்லவோ
சம்பத்து பூரணமாகவிளங்குதென்பது கருத்து] (அ-கை) செல்வமு
ண்டாகும்போதுயாவருக்கும் எவ்விடத்திலுஞ் சகலவிஷ்டமுங்கிடைப்பது
சுலபந்தானென்னுங்கருத்தினால் புருஷீ எத்தனம்வீணென்று சொல்லுகி
றார் | கருங்கல்லினாலாயினும் வச்சிரமணிகளாலாயினுஞ் செய்யப்பட்டவீ

ட்டுக்குளிருந்தாலுஞ் செல்வத்தோடுகூடிக் கொண்டிருக்கிற சகலசீவர்களையுமணிமாதிசித்திகளுடைய வேகத்தோடுகூட அஷ்ட ஐசுவரியங்களுமுயற்சியின்றியில் வருகின்ற ஆபத்துகள்போல எப்போதும் ஓடிவந்து அடைகுதுகள் [முன்சற்கருமஞ்செய்தவர்களுக்கே புருஷார்த்தமுதலான சகலநன்மையுமுண்டாகுமென்பதுகருத்து] (அ-கை) முடிவில்லதுக்கமுடையதென்று முன்சொன்னதை இப்போதுவிரிவாகத்தெரிவிக்கிறார் | பிள்ளைகள் பெண்டீர்கள் தனமிதுகளெல்லாம பிராந்தியுள்ள புத்தியினாலேமிர்தம்போலக்கற்பிக்கப்படுகுதோ அவைகளெல்லாம்மரணகாலத்திலுபகாரமாகிறதில்லை பின்னையோவிஷமூர்ச்சைபோலத் துன்பத்தைப்பொருட்டேயாகுதுகள் * இவ்வுலகத்தில்மூப்பையுடையசீவர்கள் சரீரமுடிவிறைக்கடதிசையையடைந்து துன்பப்பட்டுக்கொண்டு முன் தன்னாற்செய்யப்பட்டபுண்ணியமின்றியிருக்கிற நடக்கைகளை நினைத்து உள்ளெவெந்துபோகுது * தருமஞ்செய்தற்குச்சாவகாசமில்லாமல் எப்போதுங் காமத்தையுமருத்தத்தையுஞ் சம்பாதிக்கிறத்திலேயேநாள்களைத் தள்ளிசரீரமுடிவிலசைந்துகொண்டிருக்கிற மயிற்றேகையைப்போல புருஷனுடையசஞ்சலமானமனதானது எந்தவேளையிலுவிளைப்பாறுதலில்லையடையும் * (அ-கை) தருமஞ்செய்யாதவர்களது மனதில்விசிராந்தியுண்டாகவேண்டாத்தருமஞ்சம்பாதித்திருக்கின்ற உம்மைப்போறகொத்தவர்களுக்கு அத்தருமபலமுண்டாயிருக்கின்றமையால் எனந்தவிசிராந்தியில்லையென்றுசங்கித்தால்தருமத்துக்குப்பலமானசொர்க்கம் புத்திரன்முதலானதுஞ் சிரேஷ்டமல்லவென்றுசொல்லுகிறார் | நதியிற்றேன்றுகிற அலைகள்போல நசுவரமானையால் ஸ்திரமாயிருக்கையிலுமில்லாததுபோலவிருக்கின்றதாயுந்தெய்வவசத்தினால்வந்துமிருக்கின்ற புண்ணியலோகமான புத்திரன் சரீரமுதலானதுகளில் இன்பத்தையுடையசீவர்களானது வஞ்சிக்கப்படுகுது [மீண்டும்நீங்காமலும்மேலுமனர்த்தமாகமுடியாமலுமிருக்கின்றவைப்பமேலாடமென்றுசொல்லப்படுகுது மற்றவைப்பமெல்லாம்வஞ்சனை அதெப்படியெனில் அந்தாயுளாயிருக்கின்றபுத்திரலாபம்போலவும் மகத்துக்குத்தாண்டில்மாமிசலாபம்போலவுமிருக்கின்றது (இதற்குச்சுருதி ஆத்மானவந்தவிரமதுரேல்லை றாயிஷ்டமாகச்சொல்லுகின்றவனைக்குறித்து இஷ்டத்தைத்தகைகிறுமென்றுசொல்லுகின்றது) [ஆகையால்காமியதருமபலத்தால்விசிராந்தியுண்டாகிறதில்லையென்பதுகருத்து] (அ-கை) முன்சொன்னதையே விரியாகத்தெரிவிக்கிறார் | இது இப்போதுசெய்யவேண்டுமதுபின்னே செய்யவேண்டுமென்று எப்போதுஞ்சிந்திக்கப்பட்டும் முடிவில்லனர்த்தரூபமாயுமிருக்கிறகா

ரியமானதுகள் தேகத்தில்மூப்புண்டாகிறவனுக்கும் மனைவிமுதலியோர்க
ட்கு மிஷ்டத்தைச்செய்விப்பதினால் சீவர்களதுமனதைச் சீக்கிரமாய்விவேக
மில்லாமற் செய்கின்றனுகள் * மரங்களுடைய விலைகளானது களுற்பத்தி
யையடைந்து சீக்கிரத்தில்சருகாய் லயமடைகிறாப்போல சீவர்களும் உற்ப
த்தியையடைந்துவிவேகமில்லாதவர்களாகிச் சிறிதுதினங்களிலேயே நாசம
டைகிறார்கள் * விவேகிகளுடையசங்கத்தையு மவர்கள்சரித்திரத்தையும்நி
னைந்துப்பகலெல்லாம் வெகுதூரந்திரிந்துதேடி அவர்கள்கிடைக்காமல்
சாயங்காலம் வீட்டிற்குவந்து இரவில்மூடனைத்தவிர எவன்நித்திரை
யையடைகுவன் * சகலசத்துருக்களையுந்துரத்தினாலுபக்கலுமிராச்சியசம்
பத்தையுமடைந்துசகலசுகங்களையு மனுபவிக்கிறகாலத்தில்காலன் எங்கே
யோ ஓரிடத்திலிருந்து ஓடிவருகிறான் * இன்னபடியென்றுநிச்சயிக்கக்கூ
டாதவேதோர்நியேதுவினால்விருத்திபண்ணப்பட்டும்பொய்யான சொரூபங்
களையுடையதாயும் க்ஷணத்திற்றோன்றிநாசத்தையடைகிறதாயுமிருக்கிற இ
வ்விஷயங்களாற்சுற்றுதலையடைந்திருக்கிற சீவர்களானது நாட்களைவருவ
தையும் போவதையுமறியவில்லை * எப்போதும் க்ஷணத்திலுண்டாகிநா
சத்தையடைகிற அலைகளுடையவரிசையைப்போல உலகத்திற்சஞ்சலமா
னசெனங்களானது எப்போதும் எங்கேயோ ஓரிடத்திலிருந்துவேகமாக
வருகுது இப்படியே எப்போதும்வேகத்துடனே எங்கேயோ ஓரிடத்திற்
போகுது [அலைகளுடையவரிசைதோன்றுதற்குச்சமுத்திரங்காரணமான
துபோலசீவர்கள்வருதற்கும்போதற்குங்காரணம் பிரமமென்பதுகருத்து]
சீவர்களதுபிராணனையபகரிக்கிறதிலேயே எத்தனப்பட்டுக்கொண்டுஞ்சி
வந்தவுதடுகளையும் வண்டுகள்போன்றகண்களையுமுடையவர்களாகியஸ்தி
ரீகள்விஷமரங்களிலுண்டானவிஷக்கொடிபோலமனதையிழுக்கிறார்கள் *
மனைவியென்றும் புத்திரனென்றுமித்திரனென்றுமிந்த விவகாரரூபமான
மனுஷியாளுடையசமுசாரமாயையானது உச்சவமுதலானத்தி லொன்று
சேருகிறாப்போல ஒருத்தருக்கொருத்தரிச்சையினாலுண்டாக்கப்பட்டசங்
கேதத்தோடுகூடினதாகிவீணாகவே ஒன்றுசேர்ந்திருக்கின்றது * பால்ய
முதலானவெகுதிசைகளையனுபவித்தும் மிகுந்த ஆசையையுடையதுகளா
யும் தீபச்சுவாலைகளுடைய நாசவரிசையைப்போற் சஞ்சலமாயும் பொய்
யாயுமிருக்கிற செனனமரணங்களுடையவரிசைகளில் பரமார்த்தவஸ்துவா
னதறியப்படுகிறதில்லை * குயவன்றிரிகையானது சுழன்றுகொண்டிருக்க
ச்செய்யுஞ்சூட்சுமபுத்தியில்லாதவனுக்கிது அசையாமலிருக்குதேதவிரசுற்ற
வில்லையென்னும் புத்தியையுண்டுபண்ணுவதுபோல சமுசாரத்திற்பிறவ

இருபத்தேழாவது சருக்கம்.

த்திருபமானகெட்டசக்கரமானது நீர்க்குமிழிபோலவனித்தியமாயிருந்தாலு
ஞ்சூட்சுமமாகப்பாராமலிருக்கிற ஜீவர்களதுபுத்தியில் நிலையென்கிறபுத்தி
யைச்செய்குது * ஜீவர்களுக்கு ஏவ்வனத்திலே வாங்கிக்கொண்டிருந்த அழ
குமுதலானகுணங்கள் கிழத்தனத்தினால்தேகந்தளரும்போது பனிகாலத்
தில்தாமரைப்பூவினுடையகுணங்கள்போலத்தெய்வவசத்தினால் நாசத்தைய
டைந்தவைகளாகிச்சித்தத்திற்குத்துக்கத்தைக்கொடுக்குதுகள் * பூமி சலம்
காற்று முதலானதெய்வவசத்தினால் புருஷனுடையமுயற்சியையபேட்சியா
மற்றுனேவளர்ந்துபழம் புட்பமுதலானதுகளால் நிறைவையடைந்துதன்
றேகத்தைத்தரிக்கின்றதினாலடிக்கடி ஜீவர்களின்பொருட்டு நிழல்பழமிவை
பூமுதலான உபகாரத்தைச்செய்துகொண்டு ஓரபகாரத்தைச்செய்யாமலி
ருக்கச்சேயு மிவ்வுலகிலந்தமரமானது கோடாலிமுதலான ஆயுதங்களால்
வெட்டப்படுது அப்படிப்பட்டவுலகிலடிக்கடி அபகாரத்தைச் செய்துகொ
ண்டும் ஒருவுபகாரமில்லாமலுமிருக்கிறபுருஷனிடத்தில் சந்தோஷமுண
டாகிறதற்கேதுவென்ன * (அ-கை) அன்னியபுருஷனிடத்திற்றோஷமி
ருக்கட்டும் ஆகிலுந்தனக்கிதத்தைச்செய்துகொண்டிருக்கிற தன்செனங்க
ளிடத்திலென்ன தோஷமிருக்குதெனில்தற்குச்சொல்லுகிருர் | புருஷனுடை
வனழகாயிருந்தாலுந் ஸ்நேகம்போகமுதலானமிகுந்த தோஷங்களோடு
கூடிக்கொண்டும் உள்ளேயிருக்கிற உபசாந்தியைப் போக்கடிக்கிறத்தின்
பொருட்டே உண்டாயுமிருக்கிறதன் செனங்களுடையசங்கத்தினால் விஷத
ரத்தினுடையசம்மந்தத்தினால் மூர்ச்சையையடைகிறதுபோலஅஞ்ஞானரூப
மரனமூர்ச்சையை யிப்போதடைகிறான் [தன்னுடையசெனங்களால்மனு
மைப்பயனிழத்தலே தோஷமென்பதுகருத்து] ஆகையாலிவ்வுலகில்தோ
ஷமில்லாமலிருக்கிற பார்வைகள் ஏவைகள் துக்கவேக்காடில்லாததிக்குகளே
ஏவைகள் க்ஷணத்தில்நாசமடையாதபிராணிகள் ஏவைகள்வஞ்சகமில்லாத
செய்கைகள் ஏவைகள் * (அ-கை) அன்னியமானஜீவர்கள்க்ஷணத்தில்நா
சமடைகிறதாகவிருந்தாலும் பிரமாவினதுசாலோக்கியத்தையடைந்திருக்
கிறகற்பாயுசுக்களான ஜீவர்களுக்கு க்ஷணத்தில்நாசமுண்டாகிறதில்லையெ
னிலதற்குச்சொல்லுகிருர் | சென்றுபோனதாயு மேல்வரப்போகிறதாயுமி
ருக்கிற அனந்தகற்பங்களுடைய எண்ணிக்கையை யறியப்படாமலிருக்கும்
போதுக்ஷணங்களுங்கற்பங்களுமனந்தமென்கிறதில்விசேஷமில்லாததினாலி
க்கற்பங்களும்விஷ்ணுருத்திராதிகளுடையபார்வைக்குக்ஷணங்கள்தானாகை
யால் பிரமலோகத்திலிருக்கிற பேர்களுங்கற்பமென்றுபேருடையதானக்ஷ
ணத்தில்பிறப்பிறப்புக்களையுடையவர்கள்தான் ஆகையால்சகல கணமில


வங்காட்டைமுதலான அவயவத்தையுடைய காலத்தினுடையகூட்டத்தில்இ
லகுநீர்க்கமென்கிற புத்திகளும் சிரசீவிகள் க்ஷணஜீவிகளென்கிற புத்திக
ளு பார்க்கின்றவனுடையகற்பனையாலுண்டாகின்றமையால்பொய்க ளித
ற்றுச்சரியானஞாயத்தினால் பிரமாண்டங்களுமனந்தங் கோடிபிரமாண்டங்
களுடையபார்வைக்குஅணுக்கள்தானென்றுசிறியதுபெரியதுமுதலானபுத்
திகளும் பொய்களென்றறியத்தக்கதுகள் [நாருடைய ஒருதினத்திலனே
கக்ஷணங்கள் தோற்றுகின்றதுபோல விஷ்ணுருத்திராதிகளுடைய ஒரு
தினத்திலனேகபிரமகற்பங்களாகியக்ஷணங்கள்தோற்றுகின்றமையால் க்ஷண
ங்களுக்கும் கற்பங்களுக்கும்பேதமில்லை ஆகையால்பிரம சாலோக்கியமுத
லானபதமுத்திகளுமனித்தியமென்பதுகருத்து] (அ-கை) முன்சொன்
னபடிபிரகிருதிசொரூபத்தைப்பார்க்கும் பொதுவிகாரங்களுடைய கூட்ட
மெல்லாம்அநித்தியமாகவேதோற்றப்படுகுதென்றுசொல்லுகிறார் | ஈவ்விட
த்திலுங்கல்லை மலைகளென்றும் மண்வனைப்பூமியென்றுங் கட்டையைம
ரங்களென்றும்மாமிசத்தைச்சனங்களென்றுமிவைகள் விவகாரத்திற்காகப்
புருஷர்களால்வேறுவேறாகப்பெயரிடப்பட்டிருக்கின்றதேதவிர பரமார்த்த
த்தில்விசாரிக்கும்போதுமுன்னிருக்கின்ற கல் மண்முதலானகாரணத்தைத்
தவிரபுதிதாயொன்றுமில்லை ஆகையாலிவ்விடத்திலொரு விகாரமன்றியிலு
ஞ்சகலசெகத்திற்குங் காரணமாயுமிருக்கிற ஒன்றானபரமார்த்தவஸ்துவே
யிருக்குதென்றுதோற்றுகுது * (அ-கை) கல்மண் முதலானதுகள்மகா
பூதசொரூபமென்று சொன்னதைப்பிரகாசமாகத்தெரிவிக்கிறார் | பிருதிவி
முதலானபஞ்சபூதங்களொன்றுக்கொன்று சேர்ந்துகடமுதலானபலவிதப
தார்த்தமாகவிருந்துகொண்டு அவிவேகிகளுடையபுத்தியினாலிந்தநாமரூப
ச்செகமாகக்காணப்படுகுது இதைநீங்குதல்கஷ்டம் விவேகமானபார்வை
யினால்பிரித்துப்பார்க்கும்போதுபஞ்சபூதங்களைத்தவிரவேறொன்றுமில்லை
[பஞ்சபூதங்களொன்றுக்கொன்றுசேர்ந்து அனேகவித நாமங்களாகத்
தோற்றுகின்றதைப்பஞ்சீகரணத்தினாற்கண்டுகொள்க] (அ-கை) கிளி
ஞ்சில்வெள்ளியால்கடக மகுடாதிகள்செய்வதற்குக் கூடாததுபோலமுன்
சொன்னபடிபதார்த்தங்கள்பொய்யானால்சீவர்களுக்கு விவகாரங்கள்போக
ங்களிதுகளுடையசமத்காரமெப்படியுண்டாகுமெனிலதற்குச்சொல்லுகிறா
ர் | தெரிந்தவர்களுடையமனதிலுமிந்தப்பொய்யானபதார்த்தங்களில்போக
சமத்காரத்தைப்பண்ணுகிறவிவகாரசமத்காரமானது ஆச்சரியமல்ல அதே
னெனிலப்படிக் கொத்தசமத்காரமானது சிலமனுஷியாளுக்கு ஒருக்கால்
சொற்பனத்தில்காணப்படுகிற பொய்யானவிஷயத்திலுமுண்டாகுது [ஈல்

லாருக்குஞ்சொப்பனப்பிரபஞ்சம் பொய்யாயிருந்தாலுமதிலுண்டானபோகங்கள்பிரசித்தந்தான் ஆனாலும் மிகுந்தசுகதுக்கங்களையுடைய போகத்தினுடையவாரம்பத்தில்சீக்கிரமாய்விழிக்கின்றமையால் பிரபலகருமமிருந்தால்மாத்திரம்வெகுகாலம்போகத்தையனுபவிக்குபடியானசமத்காரமுண்டாகுது * (அ-கை) போகத்தில்சமத்காரமிருந்துதேயாகிலிப்போதுதானே என்வைராக்கியத்தையடைகிறீர் போகங்களையனுபவித்துக் கிழத்தனத்தில் வைராக்கியத்தையடைந்து ஆத்மவிசாரஞ்செய்கிறதுயுக்தமெனில்போகத்திலிச்சையுண்டானால் வைராக்கியமும் விசாரமும் ஒருநாளுங்கிடைக்கமாட்டாதென்றுசொல்லுகிறார் | இவ்வயதிலுமினிவரப்போகிற வயதிலும் போகவாசையினது கற்பனையானது ஆகாசக்கொடியினுடையபழம்போலவிசாரணையில்லாததினால்பெரிதாயிருக்குதபோதுபோகவாசையினது லேசத்தினாற்கெடுக்கப்பட்டிருக்கிற புருஷனுக்குமெல்லாத்துக்கும் உயர்ந்ததாகவிருக்கின்றபரமாத்மவஸ்துவினுடைய விசாரணையைப்பண்ணுகிறவார்த்தையேயுண்டாகிறதில்லை [சர்வகாலமுமந்தவிசாரணை தூரத்திற்றள்ளப்பட்டிருக்குமென்பதுகருத்து] (அ-கை) போகங்களிலவிருப்பமிருக்கும்போது புருஷார்த்தமானமோட்சமாத்திரஞ் சித்திக்கமாட்டாதென்கிறதில்லை பின்னையோபெரிதானஅனர்த்தமும்வருமென்றுசொல்லுகிறார் | சீவர்களுயர்ந்த போகத்தையனுபவிக்கின்ற இராஜாக்கள்முதலானவர்களுடைய ஸ்தானத்தையிச்சித்துசுதந்தரமானசீத்தனங்களைப்பண்ணிக்கொண்டு இராகமுலானதுகளால்மூடமாயிருக்கிறதன்மனதினாலேயே அடிபட்டதாய்க்கொண்டு சீவ்வனத்திலேயேசநதேகமில்லாமற்கெட்டுப்போகுது (அ-கை) இப்போதுசொன்ன அருத்தத்தைவேறொரு திஷ்டாந்தத்தினாற்றிடப்படுத்துகிறார் | மிகவும்பச்சையானமூங்கில்முதலானகொடிரூபமானபலத்தினுடையஆசையினாலேயேமலை நுனியிலிருந்துவிழுகிறஆடுமுதலானதுபோலவிழுந்துகெட்டுப்போகுது*அ-கைபிரபஞ்சத்தில்போகவிருப்பமுள்ளவர்களதிகமேதவிர அறமுதலியவைகளைச்செய்கிறவர்களரிதென்று சொல்லுகிறார் | ஒருத்தருக்போகக்கூடாத பள்ளத்திலிருக்கிறமரமானது நிழலில்லை பூ கொடி பழமுதலியவைகளால் சீவர்களுக்கற்பமும் உபகாரமில்லாமல்வீணாகவிருக்கின்றதுபோல வித்தை வணக்கந் தனமுதலானசெல்வங்களையுடையமனிதர்களுந் தங்கள்சரீரத்தையேபோஷித்து வீணாகநாசத்தையடைகிறார்கள் * (அ-கை) சிலவிடங்களில்தற்மவான்களுமிருக்கிறார்களாயினும்விவேகிகள்கிடைப்பதரிதென்று சொல்வதற்காகச்சீவர்களிரண்டுவித மென்றுசொல்லுகிறார் | நெருக்கமான காடுகளிற்சஞ்சரிக்கிற

மான்கவிைப்போல சிலதேசங்களில் சில்சனங்கள் தயவு தாட்சண்ணியம் பொறுமைமுதலானதால்மிருதுவையும் வித்தைவணக்கமுதலான அழகை யுடையதாயும் சிலதேசத்திலசில்செனங்கள் கோபம் லோபம்குறூரம் முத லானகெட்டகுணங்களால்திடமானசித்தத்தோடுஞ்சஞ்சரிக்கிருர்ள் (அ-கை) தனக்குண்டானநடுக்கத்தைத்தெரிவிக்கிருர் | காமத்தில்விருப்பத்தையுடை யசிவர்களானது பலவிதகோணலானிய நடக்கைகளிலேயே எப்போதுமா சையையுடையதாயிருப்பதனுலுமிவவுலகிலப்போது விவேகிகள் சொப்பன த்திலுங் கிடைப்பதரிதாயிருக்கின்றதனுலுஞ் சகலகருமங்களுமவசியநாசமுண் பத்தையுண்டுபண்ணுகிறதாகவேநிச்சயமாகவிருக்கின்றதனுலுஞ்சீவித்திரு க்கின்ற இந்தத்திசையானதெப்படிபோக்கத்தக்கதுநானறியேன்.

இருபத்தேழாவதுசருக்கமுற்றிற்று.

இருபத்தெட்டாவதுசருக்கம்.



இச்சருக்கத்தில் சகலபோக்கியவஸ்துக்களுங் கெட்டதென்றுதோற்று வதின்பொருட்டுசகலபதார்த்தங்களும் க்ஷணத்துக்குச் க்ஷணம்விந்தியாசமா ன சுபாவத்தையுடையதென்று சொல்லப்படுகுது.

(அ-கை) சகலபதார்த்தங்களுஞ்சற்வகாலமும்வித்தியாசத்தையடை கிறசுபாவத்தையுடையதாகையினலே விசுவாசமில்லையென்றிராமர்சொ ல்லுகிருர் | சராசரரூபமாகக் காணப்படுகிறவிச்சகமெல்லாஞ் சொப்பனத் திற்காணப்படுகிறசபைகூடுகிறதுபோல நிலையின்றியிருக்குது * நீரில்லாத கட்டுபோலிருக்கிற பள்ளமானது சிறிதுநாளில மேகங்களாற் சூழபபட்டம லையாகவாகுது * விஸ்தாரமான காடுகளோடு கூடியுமாகாசமுதை யளா வியுமிருக்கிறமலையானது சிலதினங்களுக்குள்ளே பூமிக்குச்சரியாகவாவது அல்லதுகிணறாகவாவது ஆகுது * இப்போதுபட்டுமாலைசந்தனமுதலா னவைகளால லங்கரிக்கப்பட்டிருக்கிறசரீரமேநாளைக்கு வஸ்திரமில்லாமற்று ரத்திலொருகுழியிற் சிதறிப்போகின்றது * இப்போது அடிக்கடிவிசித்திர ங்களானநடக்கைகள் நடந்துகொண்டிருக்கிற பட்டணமானது காணப்ப ட்டவிடத்திலேயேசிறிது தினங்கட்குள்ளே மனுஷியசஞ்சாரமில்லாத கா டானது உண்டாகுது * இப்போதழகாயிருந்து கொண்டாசாட்சிசெய்கி


ற புருஷனேசிலதினங்கட்குள்ளே சாம்பற்கூட்டமாயிருக்கையை அடைகிறான் ※ ஆகாசமண்டலம்போல மிகவும்பயங்கரமாயும் விஸ்தாரமாயு மிருண்டுமிருக்கிற பெரிதானகாடானது கொடிகளாலாகாசத்தை மறைத்துக்கொண்டிருக்கிற பட்டணமாகவாகுது ※ பயங்கரமான கொடிமுதலானவைகளாற்சூழப்பட்டுவிளங்குகின்றகாட்டினுடைய வரிசையானது திரும்பவுஞ்சிலதினங்கட்குள்ளே செடியில்லாதபாலைநிலமாகுது ※ சலமிருக்கிறவிடஞ்சலமில்லாத விடமாகவாகுது சலமில்லாதவிடம் சலமுள்ளவிடமாகவாகுது கட்டை சலம் புல்லு இதுகளோடுகூடினசகலசகமும்வித்தியாசத்தையடைகுது ※ அனித்தியமான யௌவனம் பால்யம் சரீரம் தனமிதுகளெல்லாம் அலைகள்போலெப்போதும் வெவ்வேறான சுபாவத்தை யடைகுதுகள் ※ உலகத்திலுயிரானதுகாற்றுக்குள் ளகப்பட்டசிறிய தீபச்சுவாலைபோலச்சஞ்சலமாயிருக்கின்றது மூவுலகிலிருக்கிற சகலபதார்த்தங்களுமமின்னலினுடைய தோற்றம்போலிருக்கின்றதுகள் ※ வெகுவாயிருக்கின்ற இந்தப்பிராணிகளுடைய வரிசையானது குதிர்முதலானத்தி லடிக்கடி நிறைக்கப்படுகிற விரைகளுடைய கூட்டமானதுபோலெப்போதும் கீழதுமேலதுவாக வித்தியாசத்தையடைகுது ※ அதிகமான உச்சவத்தோடு கூடின அந்ததினங்களுமந்தப்பெரியோர்களுமந்தச் சம்பத்துகளுமந்தநடக்கைகளு மிவைகளெல்லாம் நாசத்தையடைந்து நினைப்பைமாத்திரமடைந்திருக்கின்றதுகளே தவிரவேறல்லநாமுமதைப்போல க்ஷணகாலத்தில் போகப்போறோம் ※ தினந்தோறும் நாசத்தையடைகிறதாயுந் திரும்பவுந்தினந்தோறு முண்டாகிறதாயுமிருக்கிற கெட்டவுருவையுடையதான இந்தநிகிருஷ்டமான சமுசாரத்துக்கு இப்போதும் முடிவுகாணப்படவில்லை ※ மனுஷியர் பசுசென்மத்தையடைகிறார்கள் பசுக்கள்மனுஷியசென்மத்தையடைகுதுகள் தேவர்களும்வேறே சென்மங்களையடைகிறார்க ளிவ்விடத்திலெதுதான் நிலையாகவிருக்கின்றது ※ சலங்கள் வடவாமுகாக்கினியில்வீழ்ந்து நாசமடைவதுபோல பிரமவிஷ்டணுருத்திராதிகளும் காலமாகிற அக்கினியில்வீழ்ந்து நாசத்தையேயடைகிறார்கள் ※ சொற்கம் பூமி வாய்வு ஆகாயம் மலைகள் நதிகள் திக்குகளிதுகளெல்லாம் நாசரூபமான அக்கினிக்குநன்றாய்வுலர்ந்த விறகாயிருக்கின்றது ※ தனங்கள் பந்துக்கள் வேலைக்காரர்கள் சம்பத்துக்கள் யிதுகளெல்லாம் நாசத்தையடையுமென்று பயந்துகொண்டிருக்கின்றவனுக்கு ருசிக்கிறதில்லை ※ உலகத்தில்நாசமாகிறகெட்டவிராக்ஷதன் எவ்வளவுமட்டும்நிலையில்லாமலில்லையோஅவ்வளவுமட்டும்முன்சொன்னயிந்ததனம் முதலானபதார்த்தங்களெல்லாம்ருசிக்

குதுகள் சீவர்களானது க்ஷணகாலஞ்செல்வத்தையும் க்ஷணகாலந்தரித்திர
த்தையும் க்ஷணகாலம்ரோகமில்லாமலிருக்குகையும்க்ஷணகாலம்ரோகத்தை
யும் அடைகுது க்ஷணத்தோறும்வேறுபட்டும் கெட்டசொரூபத்தையுடை
யதாயுமிருக்கின்றசெகப்பிராந்தியினால் எந்தப்புத்திமான்கள் தான்மோகத்
தையடையவில்லை * ஆகாசமண்டலமானது க்ஷணகாலம் இருட்டுரூபமா
னசேற்றினாலேநன்றாகப்பூசப்பட்டும் க்ஷணகாலம் உருக்கினதங்கம்போல
அழகாயிருக்கின்ற சந்திரகிரணம்முதலானதுகளால் சுந்தரமாயும் க்ஷண
காலம் மேகங்களாகிறகருநெய்தற்பூக்களுடையமாலையினாலேசுற்றப்பட்
டிருக்கின்றநடுவையுடையதாயும்க்ஷணகாலந்திடமாயிருக்கின்றசப்தத்தை
யுடையதாயும் க்ஷணகாலம் ஊமைபோலேயும் க்ஷணகாலநட்சத்திரங்க
ளோடேகூடிக்கொண்டும் க்ஷணகாலஞ்சூரியனாலே அலங்கரிக்கப்பட்டும்
க்ஷணகாலம்சந்திரனாலுண்டாகின்ற சந்தோஷத்தையுடையதாயும் க்ஷண
காலம்முன்சொன்னசகலபதார்த்தங்களாலேயும் விடுபட்டுமிருக்குது [இ
ந்தத்ருஷ்டாந்தத்தைப்போல செகமிருக்குதென்பதுகருத்து] எப்போது
ம்வருகின்றதாயும்போகின்றதாயும் க்ஷணம்இருப்பையும் க்ஷணம்நாசத்தை
யும் உடையதாயிருக்கின்ற இந்தசெகத்தினுடையஇருப்பினால் இச்சமுசா
ரத்தில் எந்ததைரியமுள்ளபுருடன்தான்பயப்படவில்லை * க்ஷணத்தில் ஆ
பத்து க்ஷணத்திற்சம்பத்து க்ஷணத்தில்சனனம் க்ஷணத்தில்மரணம்வருகு
துகளாகையால் எதுதான் நிலையாயிருக்குது இவ்வுலகில்முன்னாலிருந்த
ஒருமனுஷியனேசிலதினங்களில்வேறாகிறான் ஒருபதார்த்தமும் எப்போ
தும் ஒருவடிவையுடையதாயும் நிலையாயுமிருக்கிறதில்லை [வேறென்
றுசொன்னது சட்பாவவிகாரத்தாற்கண்டுகொள்க] கடம்படமாகிறதும்
படம்கடமாகிறதும் காணப்படுகுது இச்சமுசாரத்தில் விந்தியாசத்தைய
டையாமலிருக்கின்ற வஸ்துகாணப்படவில்லை [பருத்திவிளைக்கிறநிலத்தி
ல்சிதறியிருக்கின்றகடமானது பரித்தியாகப்பரிணமித்துப் படமாகுது அ
ப்படியேபடமுங்கடமாகுதென்பதுகருத்து] செனனம் விருத்தி முதிர்
தல் குறைவு நாசம் இந்த அஞ்சுவிகாரங்களும்புருடனைக்குறித்து இராத்
திரிமத்தியானங்கள்போல வெகுகாலமிராமல் எப்போதுஞ்சுற்றுகின்றது
கள் * பராக்கிரமமில்லாதவனாலேசூரனடிபடுகிறான் ஒருவனால்நூறுபேரடி
படுகிறார்கள் அற்பாள்பிரபுத்துவத்தையடைகிறார்கள்சகலசகமும்விந்தியா
சத்தையடைகுது * இச்சீவாத்மாக்களானதுசடமானபிராணன் முதலான
அசைவினுடையசம்பந்தத்தினாலவைகளுடையவரிசையானதுபோலவெப்போ
தும்விந்தியாசத்தையடைகின்றது * பால்யமானதுசிறிதுதினங்களிலேயே

போய்விடுகுது அப்படியே யெவ்வனமுஞ்சரையும்போகுது ஆகையால் தேகமும் ஒருதன்மையாகவிருக்கவில்லை அப்படியிருக்க வெளிவஸ்துக்களிலே என்னவிசுவாசஞ் செய்யத்தக்கது ❊ சூத்ராடியானவன் விதனஞ்சந்தோஷமுதலான அபிநயத்தைக்காட்டுவதுபோல மனதானது சகலபதார்த்தத்திலும் க்ஷணகாலஞ்சந்தோஷத்தையும் க்ஷணகாலம் விதனத்தையும் க்ஷணகாலந்தெளிவையுமடைகின்றது ❊ சமுசாரத்திலுண்டாகிற பதார்த்தங்க ளடிக்கடிதோற்றி மறைந்துகொண்டிருக்கின்றமையால் சீவர்களுக்கு ஆபத்துகளுஞ் சம்பத்துகளும் நிலையாகவிருக்கவில்லை ❊ சகலசமர்த்தாளியும் எளிதாகவே வெவ்வேறான விகாரத்தையுடையதாகப் பண்ணுகின்ற நடக்கையினால் வல்லமையாகவிருக்கின்ற இந்தக்காலமானது சகலத்தையும் மிகவுமாபத்திலே தள்ளிக்கொண்டு விளையாடுகுது ❊

இருபத்தெட்டாவதுசருக்கமுற்றிற்று.

இருபத்தொன்பதாவதுசருக்கம்.



இச்சருக்கத்திலிராமர்சகலபதார்த்தங்களிலுந்தோஷங்களைக்கண்டமையால் தனதுவைராக்கியத்தைச்சொல்லி அத்தோஷநீங்குதற்காகவுபதேசத்தைப்பிரார்த்திக்கிறதொன்றுசொல்லப்படுகுது.

இந்தப்படிதோஷங்களுடையபார்வையாகிறகாட்டுத்தீயினால்ஆசையினுடையவிதையானதுகொளுத்தப்பட்டிருக்கிறதாயு மதிகமானவிவேகத்தையுடையதாயுமிருக்கிற என்சித்தத்தில் போகவாசைகளானதுகள் தடாகத்திற்கானல் நீருண்டாகாததுபோலவுண்டாகிறதில்லை ❊ இச்சமுசாரத்தினிருபமானது நாளாக நாளாகக்கொடி வேப்புபோல அதிகக்கசப்பைத் தினந்தோறுமுண்டுபண்ணுகுது ❊ கருவேலமுட்போற்குரூரமானமனதிற்றினந்தோறுந்தர்மத்தினதுபாகம்நசிக்கின்றமையாலும்அதர்மத்தினதுபாகம்விருத்தியடைகின்றமையாலும் கெட்டநடக்கைவிருத்தியடைகின்றது நன்னடக்கைகுறைந்து போகின்றது ❊ உலர்ந்திருக்கிற உளுத்தநெற்றுனது டங்காரசப்தத்தோடுவெடிக்கின்றது உலகத்தினது வருணாச்சிரமதருமமோவெனில்சத்தமில்லாமற்றினந்தோறுஞ்சீக்கிரமாகப்போகின்றது ❊ இராச்சியங்களிலும் போகங்களிலும் வெகுசிந்தைகளுண்டாகின்றமையாலவ்விராச்சியமுதலானவை

களினுமொருசிந்தையன்றியில்லைசாக்கிரமாகவிருக்கையே சிரேஷ்டமென்ற ங்கீகரிக்கப்பட்டது * எனக்குப்பூங்காவனமும் ஸ்திரிகளுந் தனமுஞ்சந்தோஷத்தைக்கொடுக்கவில்லையாகையால்மனதோடுகூடசாந்தியையடைகிறேன் *(அ-கை)சாந்தியைத்தவிரசுகவேது வேறொன்றுமில்லையென்று சொல்லுகிறார் | உலகமனித்தியமாயுஞ் சுகத்தைக்கொடாமலுமிருக்கின்றமையாலும் ஆசையபாரமாயிருக்கின்றமையாலும் மனதுசஞ்சலத்தினாற் கெட்டுப்போயிருக்கின்றமையாலும் யானெப்படிசுகமடைவேன் * நான்மரணமடைதலையுஞ் சீவித்திருத்தலையுஞ் சந்தோஷிக்கவில்லை எப்படியிருக்கிறேனோ அப்படியே ஒருதாபமின்றியிருக்கிறேன் * எனக்கு அகங்காரம்போய்விட்டமையாலவ்வகங்காரத்தினாலுண்டான இராச்சியம் போகந்தனம் ஆசையிதுகளாலாகவேண்டுவதென்னவிருக்கின்றது *மிருதுவாகவிருக்கிறதாமரைப்பூவானது யானையினதுகால்களால்துவைக்கப்படுகிறதுபோல மனதானது ஸ்திரிகளாலுபத்திரிக்கப்பட்டிருக்கின்றது * அந்தச்சித்தமானது நிருமலமானபுத்தியினாலிப்பால்யவயதிற் சிட்சைசெய்யாமற் போனாலப்போதுதிரும்பவுஞ்சித்தத்தைச் சிட்சைசெய்வதற்குச்சமய மேது [மரமானது முளையிற்பிடுங்குதற்கெளிது நல்லகிளைகளையுடைத்தாயிருக்கும்போதுபிடுங்குதற்குவருத்தமென்னுநியாயத்தினாலென்பதுகருத்து]மறுசென்மங்களிலுந் துன்பத்தையுண்டுபண்ணுகிற விஷயத்தினுடையகெட்டசெய்கையே விஷம் ஒருதேகத்தைமாத்திரங்கொல்லுகிறவிஷம் விஷமாகச் சொல்லப்படவில்லை * . சங்கை ' தத்துவஞானிகளும்விஷயங்களையனுபவித்துக்கொண்டுசுகத்தையடைந்தவர்களாகக்காணப்படுகிறார்களவர்களிடத்திலென்னவிசேஷமிருக்குதெனிலதற்குச்சொல்லுகிறார் | ஆத்மஞானியினுடையமனதுக்குசுகம் துக்கம் சினேகிதன் பந்துக்கள் சீவனம் மரணமிதுகளெல்லாம்பந்தத்தைக்கொடுக்கிறதில்லை * (அ-கை) உற்பத்திமுதலானதுக்கத்தைவேரோடறுக்கின்றமையால்தத்துவஞானமே பெரிதானபுருஷார்த்தமென்று அதற்காகவுபதேசத்தைப்பிரார்த்திக்கிறார் | ஆகையால் முன்பின்னறிந்தவர்களுக்கெல்லாம் பெரியவரே நான்ஞானியாக விருந்து விதனம் பயம் ஆயாசமிதுகளைவிட்டிருக்கும்படி எனக்குச்சீக்கிரமாயுபதேசப்பண்ணும் * (அ-கை) சீக்கிரமாயுபதேசம்பண்ணும் பொருட்டு அதிகதுக்கத்தையும் வைராக்கியத்தையுந்தெரிவிக்கிறார் | வாசனைகளாகிற கொடிக்கூட்டங்களாற்சூழப்பட்டுந் துன்பமாகிறமுட்களால் நிறைந்தும்ஆபத்துசம்பத்துஇந்தரூபங்களான்மிகுந்தபள்ளமேடுகளையுடையதாயுமிருக்கிற அஞ்ஞானமாகிறகாடானதுபயங்கரமானவுருவையுடையதாகவிருக்கி

ன்றது * கைவாளின்முனைகளாலறுப்பதையுஞ்சகிப்பேன்சமுசாரவிவகாரத்தினாலுண்டாயிருக்கிற ஆசை விஷயமிவைகளால் செய்யப்படுகிற அறுப்பைச்சகிக்கமாட்டேன் * இவ்வனிஷ்டமானதிருக்குது இவ்விஷ்டமில்லையென்று அனிஷ்டத்தைப்போக்குவதிலுமிஷ்டத்தைச்சம்பாதிப்பதிலும் பிரவிர்த்திநிவிர்த்திரூபமாகிய விவகாரரூபமான அவித்தையாகிற அஞ்சனத்தினாலுண்டாகிறபிராந்தியானது சுபாவத்திலேயேயிருக்கிற யிந்தமனதை புழுதியைக்காற்றானது பறக்கடிக்கிறதுபோலப்பறக்கடிக்குது [சந்தோஷம் விதனஞ்சிந்தைமுதலானதுகளாலறுத்துப்போடுகுதென்பதுகருத்து] இருதயமாகிற காட்டுக்குப்பனியாயிருக்கிற என்மனதினுடைய அஞ்ஞானமாகிறயிருட்டை சுகத்தைக்கொடுக்கிற உம்முடைய உபதேசமாகிறசூரியனாற்போக்கவேண்டும் [விவேகமாகிறகண்ணைமறைக்கின்றமையாலஞ்ஞானத்தையிருட்டெனவறிக] சூரியனால்நாசமடையாத யிருளில்லாததுபோல பெரியோர்களுடதேசத்தினால்நாசமடையாதமனோவியாதிகளில்லவேயில்லை * (அ - கை) சாந்திமுதலானதிடமில்லாமலும் பாலனாயுமிருக்கிற உன்னிடத்திலுபதேசஞ்செய்தபோதிலும் அதெப்படி பலிக்குமெனில் தனக்குசாந்திமுதலானவைகள் திடமாகவிருக்குதென்றுசொல்லுகிறார் | ஆயுள்காற்றினாலலைக்கப்பட்டிருக்கிறமேகவரிசையிற்றொங்குகிற சலத்துளிபோலநசுவரம் போகங்கள் மேகங்களினடுவிலவிளங்குகிறமின்னற்போற்சஞ்சலங்கள் எவ்வனத்தினாலுண்டானவிளையாட்டுகள் சலத்தினுடையவேகம்போலச்சஞ்சலங்களிந்தப்படிசீக்கிரமாய்விசாரணைசெய்துசாந்தியின்பொருட்டேசித்தத்தினிடத்தில்வெகுகாலமானுகிற அதிகாரமுத்திரையானதிப்போதென்னாற்கொடுக்கப்பட்டது [அரசனானவன் வெகுபேரதிகாரங்கட்குக்காற்றுக்கொண்டிருந்தபோதிலும் எவர்களிடத்தில் லோபம் பயமுதலானதோஷங்களால் தேசபீடை யிதாதேசத்தைப்பிடியாமலிருக்கை முதலானதிருக்கின்றதோ அவர்களைவிட்டு குணவானையுஞ்சமர்த்தனையு மிருக்கிறபுருஷன் எவனாகவிருந்தாலுமுக்கியமான அதிகாரமுத்திரையானது கொடுக்கப்படுகின்றதோ அப்படி நானிந்தவயதிலும் ஆயுள் போகம் எவ்வனமுதலானவைகளிலாசைசாபல்லியமுதலான தோஷங்களால்சித்தத்தில் துக்கம் நாசமுதலான அனர்த்தத்தை எண்ணி அதுகளைவிட்டுச சகதோஷங்களுமில்லாததாயும் வலியுள்ளதாயுமிருக்கிறசாந்தியின்பொருட்டு சஞ்சலமின்றியிருக்கிறஅதிகாரமுத்திரையானதுசித்தத்தையடக்கிறகாரியத்தில் கொடுக்கப்பட்டதென்பதுகருத்து]

இருபத்தொன்பதாவதுசருக்கமுற்றிற்று.

முப்பதாவதுசருக்கம்.



இச்சருக்கத்திலிராமர்தனதுசித்தத்தின் நடுக்கத்தையேனுக்களாஸ்பிரகாசப்படுத்தி அதைப்போக்குகிறதற்காகவுஞ்சித்தசமாதானமுண்டாவதற்காகவும்தத்துவவுபதேசத்தைப்பிரார்த்திக்கிறாரென்றுசொல்லப்படுகுது.

முன்சொன்னபடியுண்டாயிருக்கிற அநேக அனர்த்தங்களால் நெருக்கமாயிருக்கிறசமுசாரரூபமானபாழுங்கிணற்றுக்குள்ளே ஜனங்கள் முழுகியிருக்கிறதைப்பார்த்து என்மனதானதுசிந்தைரூபமான சேற்றில்முழுந்தியிருக்கின்றது * என்மனதானது முன்சொன்னதனமுதலானதோஷத்தினாற்சுழலுகின்றதுபோலேயிருக்கின்றது பயமும் உண்டாயிருக்கின்றது அது பலமானமரத்தினிலைகள்போலென்னதவயவங்கள் நடுங்குதுகள் * இரட்சித்தற்குவழியின்றியிருக்கிறகணவனையுடைய ஸ்திரியானவள் காடுமுதலானத்திலொரு யிடமகப்படாமலெப்படிபயப்படுவளோ அப்படி என்புத்தியானது உத்தமசந்தோஷத்தைக்கொடுக்கிறதைரியரூபமானமாதாவின்மடியையடையாமலிருக்கிறகுழந்தையைப்போல ஒருநிலையையடையாமற்சஞ்சலத்தையடைந்துபயப்படுகின்றது * பள்ளத்திற்றொங்குகிற அசாரமானபுல்லைபிச்சித்துக்கொண்டிருக்கிறமான்கள் தெரியாமையினால்விழுகின்றதுபோல பொய்யானவிஷயங்களால்வஞ்சிக்கப்பட்டிருக்கிற அந்தக்கரணவிருத்திகளானதுகள் விஷயரூபமானதுன்பமாகிற பள்ளத்தில்விழுகின்றதுகள் * (அ - கை) அதற்கேதுவைச்சொல்லுகிறார் | நிகிர்ஷ்டமாயும் அவிவேகிகளையடைந்துமிருக்கிற கண்முதலான இந்திரியங்களானதுகள்சமுசாரத்திலேயேதிடமான வாசனையையுடையதாகிப் பரமார்த்தவஸ்துவைப்பரிசயம்பண்ணாததினால்பாழுங்கிணர்கள்போலவிருக்கின்றதுகள் * சிந்தையானதுசீவனாகிறகணவனுக்குவசமாகவிருந்து புருஷன்வீட்டிலிருக்கிறஸ்திரியைப்போலஒருநிலையையடைகிறதுமில்லை தனக்கு வேண்டியவிடத்திற்போகிறதுமில்லை * தைமாதத்துக்கொடியானதுபனியினாற் கெடுதலையடைகின்றதுபோல தைரியமானதுவிவேகத்தினாற்சிலவிஷயங்களை இரசமில்லாமல்விட்டு சிலவிடயங்களை இரசமிருக்கிறதாகக் கிரகித்துக்கெடுதலையடைகுது [இரசமாவது மனதினுடைய ஆசை ரசமும்பரத்தைக்கண்டபின்புபோய் விடுமென்றுபகவான் சொல்லியிருக்கின்றமையால ஆத்மதரிசனமில்லாமல்ரசம்போகிறதில்லையென்பதுகருத்து] (அ - கை) கிலேசத்தைச்செய்கிற அந்த நடு அவஸ்தையைத்தானேவிரிவாகச்சொல்லுகிறார் | என்வினை இச்சமுசாரத்தினிருப்பானதுவிவேகத்தினாற்பாதிவிடடும்பா

திபிடித்துக்கொண்டுமிருக்கின்றமையால் ஏஃ. மனது நிலையில்லாமலிருந்
துகொண்டு சமுசாரசுகம் மோட்சசுகமிவ்விரண்டுசுகங்களையுங் கையினாற்
பிடித்துத் தள்ளிக்கொண்டிருக்கின்றது [ஆசையாலிரண்டுங் கிடையாதே
போய்விட்டுதென்பதுகருத்து] கட்டையைப்பார்த்துக்கள்ளனோ கட்டை
யோவென்கிறசமுசியத்தையடைகின்றதுபோலதத்துவநிச்சயமில்லாதவன்
புத்தியானது இதுதத்துவமோ அதத்துவமோவென்கிறசமுசயத்தையடை
ந்துகொண்டிருக்கின்றது * தேவருலவன்பலபோகங்களால் நிறைந்தவி
மானத்தைவிடாததுபோல சஞ்சலமாயும் பலபோகவாசனைகளால் நிறை
ந்தும் உலகங்களில்விளையாடி விளையாடி அப்பியாசிக்கப்பட்டிருக்கிறசா
பல்லியத்தையுடையதாயு மிருக்கின்ற இந்தச்சித்தமானது பலவந்தமா
க அடக்கினபோதிலும் தத்துவக்கியானரூபமானபற்றில்லாததினால்சஞ்சல
த்தைவிடுகிறதில்லை * ஆகையால்புருஷனுக்குபரமார்த்தசத்தியமாயுஞ்சன
னமரணரூபமானஆயாசமில்லாமலுந் தேகமுதலான உபாதியில்லாமலும்
பிராந்தியில்லாமலும் ஒருதுன்பமில்லாமலுமிருக்கிற இளைப்பாறுகிறயி
டம்யாது * சற்சனரானசனகர்முதலானபேர்கள் திருஷ்டபலங்கள் அதிர்
ஷ்டபலங்களுக்கனுகூலமானலௌகிகவைதிகவிவகாரத்தைப்பண்ணிக்கொ
ண்டெப்படிஉத்தமபதத்தையடைந்துசீவன்முத்தர்களானார்கள் * இவ்வுல
கத்தில்புண்ணியபாபரூபமாயும்சோகமோகரூபமாயுமிருக்கிறசமுசாரமாகிற
சேறுசரீரத்தில்மிகுதியாகப்பற்றினபோதிலும் புருஷனையெப்படிபற்றுமலி
ருக்கும் * இவ்வுலகிற்களங்கமற்றவர்களாயும் பெரியோர்களாயும் பெரிதா
னபுத்தியையுடையவர்களாயுமிருக்கிறநீங்களெந்தப்பார்வையை யடைந்து
சீவன்முத்தர்களாகச்சஞ்சரிக்கின்றீர்கள் * விஷயரூபமானசற்பங்களான
துகள்பயத்தின்பொருட்டே ஆசைபபடுத்திக்கொண்டு நசுவரமான கோண
லாயிருக்கின்றவுருவுடையதாயுஞ்செல்வமாகிறவிஷத்தையுடையதாயுமிருக்
கின்றமையால் மங்களரூபமாயிருக்கையையெப்படியடையும் * மோகமாகி
றயானையினாற்கலக்கப்பட்டும் காமமுதலானசேற்றையடைந்து மிருக்கிற
புத்திரூபமானபெரியஓடையானதுஎப்படிதெளிவையடையும் * தாமரையி
லையிற்சலமானதுபற்றியும்பற்றுமலிருக்கின்றதுபோல சனனமரணப்பிற
வாகரூபமானசமுசாரத்திலேயே புருஷனானவன் விவகாரத்தைப்பண்ணிக்
கொண்டிருக்கும்போதும்எப்படிபற்றுமலிருப்பன் * புருஷனானவனிச்சக
லசெகத்தையும் உட்பார்வையினால்பிறனுக்குவந்ததுன்பந்தனக்கு வந்தது
போலவும்வெளிப்பார்வையினால்தனக்குவந்ததுன்பந்துரும்பைப்போலவும்
பார்த்துக்கொண்டுமனதிலேகாமமுதலானவியாபாரத்தையடையாமலெப்ப

டிசீவன் முத்தியையடைகுவன் * புருஷனானவன் அஞ்ஞானரூபமானகட
லைத்தாண்டியிருக்கின்றசீவன்முத்தனான எந்தப்புருஷனுடையநடக்கை
யைநடந்து துன்பத்தையடையாமலிருப்பன் * அடைதற்குயோக்கியமான
மோட்சம் எது யோக்கியமான கருமம் உபாசனை முதலானத்தினுடை
யபலம் எது கெட்டதான இச்சமுசாரத்திலெப்படியிருக்கவேண்டும் * ஒ
ருவிதமாகயிராமலிருக்கிறதெய்வத்தினுடையசெய்கைரூபமானஇச்செகத்து
க்கு உற்பத்திக்குமுன்னும் நாசத்துக்குப்பின்னு மிருந்திருக்கிற வஸ்துவை
எந்தவுபதேசத்தினாலறிவேனோ அந்ததத்துவமானவுபதேசத்தை எனக்கு
ச்சொல்லவேண்டும் * இருதயாகாசத்துக்குச்சந்திரனாயிருக்கின்றசித்தத்தி
னுடைய அஞ்ஞானமாகிறகளங்கம்போகும்படிக்கு ஒருதடங்கலில்லாமற்
றுணைசெய்யவேண்டும் * இவ்வுலகத்தில்நிரிக்கிக்கத்தக்கது எது விடத்தக்கது
எது இவ்விரண்டுமின்றியிருக்கிறதெது சஞ்சலமாயிருக்கிற என்மனதும
லைபோல அசையாமலிருக்கையையெப்படியடையும் * அனேகதுன்பங்க
ளையுண்டுபண்ணுகிற இக்கெட்டசமுசாரமாகிற விஷபேதியானதுபரிசுத்த
மான எந்தமந்திரத்தினாலெளிதாகச் சாந்தியடையும் [ரோகங்களெல்லாம்
பாபத்தினாலேயேயுண்டாகின்றமையால் பாபத்தைப்போக்கடிப்பதைமுன்
னிட்டுக்கொண்டுபரிசுத்தமென்றுசொன்னது] ஆனந்தமாகிறமரத்துக்கு
ப்பூங்கொத்துப்போலவும்தேசகாலங்களாலளவிடப்படாமலுமிருக்கின்றகு
ளுமையைப்பூரணச்சந்திரனைப்போலமனதிலெப்படிநானடைவேன்*மன
தில்நிறைவையடைந்துபூரணனாகவிருந்துகொண்டு திரும்பவுந்துக்கத்தை
யெப்படியடையாமலிருப்பனோ அப்படி தத்துவத்தையறிந்தபேர்களாயும்
பெரியோர்களாயுமிருக்கிறநீங்களிவடத்தில் எனக்கு உபதேசம்பண்ணுங்
கோள் *காட்டில்குத்துயிராகவிருக்கின்றதேகத்தைச்செந்நாய்கள் உபத்தி
ரவப்படுத்துகின்றதுபோல உயர்ந்த ஆனந்தமானவிடத்தில்முக்கியமான
இளைப்பாறுதலையடையாதவனாயிருக்கிற என்னை எப்போதும்விஷ்ஷே
பங்களானதுகள்மிகவும்உபத்திரவப்படுத்துகின்றதுகள்.

முப்பதாவதுசருக்கமுற்றிற்று.



முப்பத்தோராவதுசருக்கம்

இச்சருக்கத்திலிராமரிச்சமுசாரத்தில் பிழைத்திருக்கின்றது மழைகாலக்காட்டினுடைய கெட்டபிழைப்புக்குச்சரியாகவிருக்கின்றதென்றுசொல்லி மோட்சமடையத்தக்கவுபாயத்தைக்கேட்கிறாரென்றுசொல்லப்படுகுது.

ஆயுளானதுமிகவுமுயர்ந்தமரத்திலசைந்து கொண்டிருக்கிற இலையிற்றேங்குகின்றநீர்த்துளிபோலச்சீக்கிரத்தில்நசிக்கிறதாகவிருக்கின்றமையால் சீவன் பரமசிவன்முடியிலொருகலைமாத்திரமிருந்திருக்கிற சந்திரனைப்போல் அற்பமாகவிருக்கும்போது [வருஷாகாலத்தில் சந்திரன் காணக்கூடாதவன் அதிலும் ஒருகலைமாத்திரமிருந்திருக்கின்றசந்திரன் மிகவுங்காணக்கூடாதவனென்பதுகருத்து] கெட்டதேகமானது வயல்களில் கூவிக்கொண்டிருக்கிறதவளையின் கழுத்துத்தோலின் மத்தியம்போலச்சீக்கிரத்தில்நசிக்கின்றதாகவிருக்கும்போது இஷ்டாள்பந்துக்களிவர்கள்சங்கமானது சீவர்களுக்குவலைபோலவிருக்கிற கொடிகளால் சுற்றப்படும்போது [நன்மார்க்கத்தைத்தகைக்கின்றமையால்சுற்றலென்றுசொன்னது] வாசனாரூபமான கீழ்க்காற்றினாற்சூழப்பட்டும் துராசையாகிறமின்னலையுடையதாயும் பிரகாசமாயும் உக்கிரமாயுமிருக்கிற மோகமாகிற திவலை மேகமானது இடிவிழும்படியாகக்கெர்ச்சிக்கும்போது சஞ்சலமாயும் துஷ்டமாயுமிருக்கிற லோபமாகிறமயிலானது அதிகமாகக்கூத்தாடும்போது அனர்த்தமாகிற குடைமல்லிச்செடியானதுகலகமாகிறமொக்குகள் பிறந்துமலரும்போது சீவர்களாகிறஎலிகளைப்புசித்துக்கொண்டும் ஒழிவின்றியிருக்கிறசலப் பிரவாகம்போலச் சஞ்சாரத்தையுடையதாயுமிருக்கின்ற கோரமானகாலனாகிறபூனையானது எங்கேயோ ஓரிடத்திலிருந்துமேலே விழும்போது எது உபாயம் எதுகதி எந்தசிந்தைபண்ணத்தக்கது எது அடையத்தக்கவிடம் எதினாலிந்தபிழைப்பாகிற மழைகாலக்காடானது இனிமேல்துன்பத்தைக்கொடாமலிருக்கும் [காட்டிலுண்டான காற்றுமழைமுதலான பீடைபோகிறத்துக்கு குடை திரை பாய்முதலானத்தை வுபாயமென்றது ரசகுண்டுமருந்துபூசுகிறதுமுதலானத்தினால்மழையில்லாமற்செய்துகொண்டுதூரதேசத்திற்போகையைக்கதியென்றது சங்கடத்தில்நின்றும் விடுவிக்கின்றமந்திரதேவதைமுதலானதைச் சிந்தையென்றது ரக்ஷிக்கையையடைகின்றதையிடமென்றது இவைகள்சாதனங்களாகவுலகத்தில் பிரசித்தமாயிருக்கின்றதுகள் அப்படியிவ்விடத்திலுங்கேட்கப்படுகின்றதுகள் * தவம் ஞானமிவைகளுடையசத்தியினால்திடமானபுத்தியையுடையவர்களான உங்களை

ப்போற்கொத்தபெரியோர்கள் எந்தவஸ்துமிகவுங் கெட்டதாயிருந்தாலும் அந்தவஸ்துவைநல்லதாகப்பண்ணமாட்டார்களா அந்தவஸ்துபூமியிலிருக்கின்றமனுஷியாளுக்குள்ளேயாவது சொற்கத்திலிருக்கிற தேவர்களுக்குள்ளேயாவது ஒரிடத்திலுமில்லை [அதேனெனில் திரிசங்குவுக்குசண்டாளனாகப்போகும்படியான குருவினுடையசாபமும் கற்பகாலபரியந்தமனுபவிக்கத்தக்கசொற்கமாகவாச்சுது சுனசேபனுடையமரணமுந் தீர்க்காயுளாகமுடிந்ததென்பதுகருத்து] எப்போதுந்துக்கசிந்தையினாற் சஞ்சலமாயும் ரசமில்லாததாயுமிருக்கின்ற இந்தநிகிர்ஷ்டமானசமுசாரமானது அக்ஞானத்தைவிட்டுருசித்திருக்குந் தன்மையையெப்படியடையும் * வசந்தகாலத்தில்வெளுத்திருக்கிற புட்பங்களால்பூமியானது அழகையடைந்திருக்கின்றதுபோல இச்சமுசாரமானது ஆசைக்குவிரோதமான பூரணகாமனுயிருக்கையாகிறபால்முழுக்கினால் எப்படி அழகாயிருக்கையையடையும் * மனதுரூபமானசந்திரனிடத்தில்நின்றும் சீவன்முத்தர்களுடைய அனுபவத்திற்பிரசித்தமாயிருக்கிற எந்தவிளக்கத்தினால் காமமுதலான அழுக்குதுடைக்கப்பட்டு சந்தோஷமாகிற கிரணமானதுண்டாகும் * முடிவிலதுக்கத்தையுடையதென்றுசமுசாரநடத்தையையறிந்தவனும் இகபரலோகபோகங்களை விவேகவைராக்கியங்களாற் போக்கடித்தவனுமிருக்கிற எந்தமகாபுருஷனைப்போலநாங்களிச்சமுசாரமானகாட்டுவழிகளில் விவகாரம்பண்ணிக்கொண்டிருக்கவேண்டியத்தைச் சொல்லவேண்டும் * சமுசாரமாகிறசாகரத்திற்சஞ்சரித்துக்கொண்டிருக்கிறசீவர்களை ராகத்துவேஷங்களாகிறபெரிதான ரோகங்களும் போகங்களுடையகூட்டங்களும் சம்பத்துகளும் எபடிதுன்பப்படுத்தாமலிருக்கும் * மூலிகையின்ரசத்தினாற்கட்டப்பட்டிருக்கிற ரசமானது அக்கினியினால்வேகாததுபோல புருஷன் அக்கினிபோற்கொளுத்துகிறசமுசாரத்தில் விழுந்திருந்தபோதிலும் எதினுல்வேகாமலிருப்பன் அந்தசிரேஷ்டமானபதவியாது * (அ-கை) விவகாரந்துக்கமேயாகில்தை விடுமெனிலதற்குச்சொல்லுகிறார் | கடலிலுண்டாயிருக்கிறசீவர்களுக்குசலமின்றியிருக்கிறயிருப்பானதுண்டாகாததுபோல சீவர்களுக்கிச்சகத்தில்விவகாரத்தைவிட்டிருக்கிறயிருப்பானதுண்டாகிறதில்லை * (அ-கை) துஷ்டவிவகாரத்திற்றுக்கமிருக்கட்டும் நன்றானவிவகாரத்திற்றுக்கத்தினுடைய எண்ணிக்கையேயில்லை யெனிலதற்குச்சொல்லுகிறார் | ஆகையாற்சூடன்றியிலிருக்கிற அக்கினிச்சுவாலையானதில்லாததுபோல ராகத்துவேஷங்களாலுஞ்சுகதுக்கங்களாலும்விடுபட்டிருக்கிற நல்லவிவகாரமானதிவ்வுலகத்திலில்லை * (அ-கை) வெளிவிவகாரமிருக்

கட்டு மனதினுடைய ஆசையேபெரிதான துக்கமாகையால் தினுடையசிட்சை யைச்சொல்லவேண்டுமென்றுகேட்கிறார் | மூன்றுலகத்திலும் விஷயத்தை ப்பற்றியிருக்கிற மனதினுடைய இருப்புக்குநாசமான துயுத்தியில்லாமலுண் டாகிறதில்லை யாகையாலுயர்ந்திருக்கிற அந்தயுத்தியையெனக்குப்பூரண மாகச்சொல்லவேண்டும் ❋ விவகாரத்தைப்பண்ணிக் கொண்டிருந்தாலும் விவகாரத்தைப்பண்ணாமலிருந்தாலும் துன்பம்வராமலிருக்கிற உத்தமமா னயுத்தியைச்சொல்லுங்கோள் ❋ உத்தமமாயும்பரிசுத்தமாயுமிருக்கிறமன தானது எந்தயுத்தியினாலிவ்வுபாயத்தை அடைகுதோ அந்தவுபாயத்தை உத்தமமா ன மனதையுடைய எந்தப்புருஷன் முன்னாலெப்படிசெய்து என்னபலத் தையடைந்தான் அதைநீரெப்படியறிந்திருக்கிறீரோ அப்படிசொல்லும்❋ சாதுக்களெந்தவுபாயத்தினால் துக்கமில்லாமலிருக்கின்றதை யடைந்தார்க ளோ அந்தவுபாயத்தைநீரறிந்தபடிஎனக்குமோகம்போகிறத்தின் பொருட்டு நிச்சயமாகச்சொல்லவேண்டும் ❋ (அ - கை) அப்படிக்கொத்தயுத்திகிடை யாவிட்டால் நான்தேகத்தைவிடும்படியான பிறையோபவேசம்பண்ணுகிற தேதவிர சீவன விவகாராதிகள்பண்ணுகிறதில்லையென்றுசொல்லுகிறார் | [பிறையோபவேசமென்றது பிராணனைவிடுகிறேனென்கிற படுக்கை] அப்படிக்கொத்தயுத்தியானதில்லாமலிருந்தாலுமல்லது அந்தயுத்தியிருந்த போதிலும் எனக்கு ஒருவராவது நன்றாகச் சொல்லாமற்போனாலுமல்லது நானேவிசாரணைசெய்தாவது உத்தமமாயும் பிரசித்தமாயுமிருக்கிற இ ளைப்பாறுதலையடையாமற் போனேனேயாகில்போது நான்சகல இச் சைகளையும் அகங்காரத்தையும்விட்டு ஸ்நானம்பண்ணுகிறது வஸ்திரத் தையுடுத்துகிறது தானங்கொடுக்கிறது சலபானம்பண்ணுகிறது புசிக்கி றதுமுதலான விவகாரத்தைப்பண்ணுகிறதுமில்லை ஒருகாரியங்களிலேயு மிருக்கிறதில்லை ஆபத்துசம்பத்துக்களிலுமிருக்கிறதில்லை தேகத்தைவிடு கிறத்தைத்தவிரநானொன்றையுமிச்சிக்கிறதில்லை ❋ மிகவுஞ்சந்தேகமில்லா தவனாகவிருந்து மமதைமாச்சரியமிவைகளைவிட்டுச்சித்திரத்தி லெழுதப்பட் டவுருவத்தைப்போல இவடத்தில்மௌனமாகவேயிருக்கிறேன் ❋ அதன்பி ன்புநாள்வரையில்மூச்சைவிடுகிறது வாங்கிறது வெளிஞானமிதுகளைவி ட்டுத்தேகமென்று பெயருடையதானவுருவோடுகூடின இந்த அனர்த்தத் தைவிடுகிறேன் ❋ நான்தேகத்தையுடையவனுமல்லதேகமும் என்னுடை யதல்லமற்றொருவருமென்னுடையவரல்ல எண்ணெயில்லாததீபம் போலச் சாந்தியையடைந்துசகலத்தையும்விட்டு இத்தேகத்தையும்விடுகிறேன் ❋ வா ன்மீகிசொல்லுகிறார்களங்கமில்லாதசந்திரனைப்போல அழகுபொருந்தின

வராயும்பெரிதான விசாரவிணையினால்மலர்ந்தமனதுள்ளவராயுமிருக்கிற இராமரிந்தப்படி சொல்லிவசிஷ்டர்முதலானவர்கள்முன்னே மேகங்களுக்கெதிரே மயிலானது கேகாவென்கிறசத்தத்தைச் சொல்லிச்சிரமத்தினால்மௌனமாகவிருந்ததுபோல்மௌனமாகவிருந்தார். ※

முப்பத்தோராவதுசருக்கமுற்றிற்று.

முப்பத்திரண்டாவதுசருக்கம்.

இச்சருக்கத்திலிராமருடையவார்த்தையைக் கேட்டவர்களாகவிருக்கிற மனுஷியாள்தேவாளிவர்களுக்குண்டாகிறமிகுந்த ஆச்சரியமும் ஆகாயத்திலிருந்துவிழுகிறபுட்பவருஷமுஞ்சொல்லப்படுகின்றது.

(அ-கை) தங்களுடையவிவேகத்துக்கும் நல்விசாரவிணைக்குமூலமான இராமருடையவசனங்கள்தாங்களாய் விசாரவிணைசெய்தற்குவலியில்லாதவர்களானமுமுட்சுக்களுக்கு உபதேசமாகின்றமையால் விருப்பத்தினாலும் அப்பியாசத்தினாலுங்கிரிகிக்கத்தக்கதென்று தெரியப்படுத்துவதற்காக இராமருடையவசனத்தைச்சந்தோஷத்துடன்கேட்டுச்சபையில் வருகின்றதேவர்கள்முதலானவர்களுடைய உச்சவத்தை ஸ்ரீவான்மீகர் தெரியப்படுத்துகிறார் | தாமரையிதழ்போன்ற கண்களையுடைய இராமர்மனதினுடைய மோகத்தைப் போக்கத்தக்கவசனத்தைச்சொல்லும்போது ※அச்சபையிலிருக்கிறசகலமானபேர்களும்ஆச்சரியத்தினால்நன்றாகமலர்ந்திருக்கிற கண்களையுடையவர்களாகவும் அவர்வார்த்தையைக்கேட்கிறத்துக்காக எழுந்திருந்ததுகள்போலிருக்கிறவுடம்புமயிர்களால்துவாரம் பண்ணப்பட்டிருக்கிறவஸ்திரத்தையுடையவர்களாகவும் வைராக்கியவாசவிணையினால் சகலசம்சாரவாசவிணைகளையுந்தள்ளி ஒருமுகூர்த்தகாலம் அமிர்தசமுத்திரத்தில் முழுகினவர்கள்போலவும் சித்திரத்திலெழுதப்பட்டவர்கள்போலவும் ஆனந்தத்தினுடைய அடையாளத்தினால் பூரித்தசரீரத்தையுடையவர்களாகவுமானார்கள் ※ சபையிலிருக்கிறவசிஷ்டர் விசுவாமித்திரர்முதலானரிஷிகளாலும் ஆலோசவிணதெரிந்தசயந்தன் முதலானமந்திரிகளாலும் தசரதர்முதலான அரசர்களாலும் சிலதேசங்களிலிருந்துவந்திருக்கிற அரசர்களாலும் பட்டணத்துச்சனங்களாலுமிராசகுமாரர்களாலும் பிரமத்தையறிந்த பெரியோர்க

முப்பத்திரண்டாவது சருக்கம்.

ளாலும்பிராமணர்களாலும்சேவகக்காரர்களாலும்அசையாமற்கூண்டிலிரு
க்கிறபட்சிகளாலும் தங்கள்தங்கள்சன்னலிலிருந்துகொண்டு ஆபரணங்களு
டையசத்தமில்லாமலசையாமலிருக்கின்றகௌசல்லியைமுதலான ஸ்ரீகளா
லும் ஆகாயத்திற்சஞ்சரிக்கின்ற சித்த கந்தருவ கின்னராதிகளாலுஞ் சிரே
ஷ்டமான நாரதர் வியாசர் புலகர்முதலானமுனிகளாலும் தேவர்திக்கு
பாலகர் வித்தியாதரர் உரகர் இவர்களாலும் விசித்திரமான அருத்தங்க
ளையுடையதாயுமிகவுஞ் சிரேஷ்டமாயுமிருக்கிறவிராமருடைய வசனங்களா
னதுகள்கேட்கப்பட்டுதுகள் * அதன்பின்பு தாமரையிதழ்போலிருக்கிறக
ண்களையுடையவராயும் இரகுகுலமாகிற ஆகாயத்துக்குச்சந்திரனாயும் பூ
ரணச்சந்திரன் போலழகாயுமிருக்கிற அவ்விராமர்மௌனமாக விருக்கும்
போது * நன்றுநன்றென்றசொற்களோடுகூடச்சித்தர்களாலிறைக்கப்பட்
டமலர்மழையானது ஆகாயத்திலிருந்து அசுமானகிரிபோலவிழுந்தது *
(அ-கை) மலர்மழையைவருணிக்கிறார் | மந்தாரவரும்பிலிவைப்பாறிக்
கொண்டிருக்கிற ஆண்பெண்ணிரண்டுவண்டுகளுடையதொனியையுடைய
தாயும் மதுரம் வாசனை அழகு இதுகளால்மனுஷர்களைச் சந்தோஷிப்பு
ள்ளவர்களாயும் பரவசராயும்பண்ணிக்கொண்டும் ஆகாயத்திலுண்டான
காற்றினாற்றள்ளப்பட்டிருக்கிற நட்சத்திரங்களுடையவரிசைபோலவும் தே
வஸ்திரீகளினுடையநகைபபினதுபிரகாசம் பூமியில்விழுந்தாப்போலவும் வ
ருஷித்துக்கொண்டும் கெற்சனையின்றியுமின்னற்களாற்பிரகாசித்துக்கொ
ண்டுமிருக்கிறமேகலேசங்கள் விழுந்தாப்போலவும் வெண்ணைக்கட்டிகளு
டையவரிசையானது இறைக்கப்பட்டாப்போலவும் முத்துமாலைகள்போல
வுஞ் சிரேஷ்டமானபனிமழைபோலவும் சந்திரகிரணங்களுடைய வரிசை
போலவும் பாற்சமுத்திரத்தலைகளின் வரிசைபோலவும் தாமரை தாழை ஆ
ம்பல் குருக்கத்தி கருநெய்தல்முதலியபுட்பங்கள் சமீபபூமிகள் வீட்டினு
டைய இறப்புகள் நாற்சந்திகளிவைகளை நிறைத்துக்கொண்டும் பட்டண
த்திலவசிக்கின்றபுருடர்கள் ஸ்திரீகளிவர்களால் நிமிர்ந்துபார்க்கப்பட்டும் மே
கமின்றியுங்கருநெய்தற்புட்பம்போலவுமிருக்கிற ஆகாயத்திலிருந்து விழுகி
றமழைபோலவும் நெருக்கமாயும் ஒருநாளுங்காணப்படாமலும் சகலஜ
னங்களுக்கும் ஆச்சரியத்தைப்பண்ணிக்கொண்டும் ஆகாயத்திற்கண்ணுக்
குத்தெரியாமலிருக்கிறசித்தர்களுடையகைகளாலிறைக்கப்பட்டுமிருக்கிற அ
ந்தமலர்மழையானது அரைநாழிகைவரைக்கும் வருஷித்தது * அந்தப்பு
ட்பவருஷமானது சபையையும் சபையிலிருக்கிறசனங்களையும் நிறைத்து
ஓயும்போது அச்சபையிலிருக்கிறசனங்கள் சித்தர்களுடைய விவ்வார்த்தை

யைக்கேட்டார்கள் * சொற்கத்தில்நாலுபக்கலிலும் சித்தர்களுடைய கூட்டங்களிற்கற்பகாலம்வரைக்குஞ் சுற்றிக்கொண்டிருக்கிற நம்மால் ஒருநாளுங் கேட்கப்படாமலுமிஷ்டமாயும் காதுக்கமிர்தமாயும் பெரிதாயும் புண்ணியமாயும் மநோக்கியமாயுமிருக்கிற இவ்வசனமானது கேட்கப்பட்டது ஆச்சரியம் * இரகுகுலத்துக்குச்சந்திரனாகவிருக்கிற இவ்விராமனால்சிரேஷ்டமானயாதொருவசனமானது வைராக்கியத்தினாற் சொல்லப்பட்டதோ அதினுடைய அருத்தமானது வியாழபகவானுக்குந் தெரியமாட்டாது ஆனையாலிதைக்கேளாதசன்மம்வீணாகவாகுது * சாதி குலம் நடக்கை தருமம் ஞானம் முதலானத்தில்வந்திருக்கிற வுயர்ச்சிக்குப் பிரயோசனத்தையுண்டுபண்ணி ரட்சிக்கின்றதாயும் யோக்கியமாயும் உபசாந்திர சத்தினாலழகாயுமிருக்கிறவசனத்தைப் பிரீதியினாற்சொன்னரோ அவ்வசனத்தினால்நாங்களிப்போதுசொற்கமுதலானசுகமும் அசாரமென்றுவிரைவிற் றெரியப்படுத்தப்பட்டோம்.

முப்பத்திரண்டாவதுசருக்கமுற்றிற்று.

முப்பத்துமூன்றாவதுசருக்கம்.

இச்சருக்கத்திற்சித்தர்கள் சபையிலிறங்கித்தகுதியானபடிக்கிருந்திராம வசனத்தைத் தோத்திரஞ்செய்வதைச் சொல்லப்படுகின்றது ஸ்ரீ வான் கிசொல்லுகிறார்.

இரகுவமிசத்தைப்பிரகாசஞ் செய்கின்றவராகவிருக்கிற சொல்லப்பட்ட பரிசுத்தமான இவ்வசனத்துக்கு மகாரிஷிகளாற் சொல்லப் போகிற யோக்கியமானநிச்சயத்தைக்கேட்கவேண்டுமென்றுசித்தர்கள்சொல்லுகிறார்கள் * நாரத வியாச புலகர் முதலான முனிசிரேஷ்டர்களே சகல ரிஷிகளே விக்கினமில்லாமற்கேட்கவேண்டியதற்காகச்சீக்கிரமாகவாருங்கள் * சம்பத்தினால்நிறைந்தும் தனத்தினாலுயர்ந்துமிருக்கிறபிரகாசத்தையுடையதாயும் புண்ணியமாயுமிருக்கிற இந்த தசரதர்சபையினுடைய நாற்பக்கலிலும் தாமரையில்வண்டுகள்போலயிறங்குவோமென்று சொல்லி ஆகாயத்தில் விமானத்தின்மீதிருக்கிற சகலமானமுனிவர்களுடைய வரிசையானது அச்சபையி லிராமன் முதலானவர்களிருக்கிற விடத்திலிறங்கிற்று *

(அ • கை) அச்சபையைவருணிக்கிறார் | அம்முனிவர்களுடைய வரிசையா
னது எப்போதும்வீணையைமீட்டிக்கொண்டிருக்கிற நாரதர் கருநிறத்
தையுடையவியாசர் இவர்களுடையநடுவில் பிருகு ஆங்கிரசுபுலஸ்தியர்மு
தலானமுனிசிரேஷ்டர்களாலலங்கரிக்கபபட்டும் சவனர் உத்தாலகர் உரோ
சரலோமர் இவர்கள்முதலான ரிஷிகளாற்சூழப்பட்டும் * அச்சபையிலுள்ள
வர்கள் ஒருத்தருக்கொருத்தர் நெருக்கத்தினால் மளமளவென்கிற மான்
றோலையுடையவர்களாயும் வளையமாயசைந்துகொண்டிருக்கிற உருத்திரா
ட்சமாலைகளையுடையவர்களாயும் அழகானகமண்டலத்தைத் தரித்தவர்க
ளாயும் ஆகாயத்திலிருக்கிற நட்சத்திரங்களுடையவரிசைபோலவும் சூரியர்
களுடையவரிசைபோலவும் ஒருவருக்கொருவரால் பிரகாசிக்கின்ற அலங்
காரமானமகுடங்களையுடையவர்களாயும் இரத்தினங்களுடைய வரிசைபோ
லொன்றுக்கொன்றினால் பலவிதநிறங்களை யடைந்திருக்கின்ற உருவையு
டையவர்களாயும்முத்துவரிசைகள்போலொன்றுக்கொன்றினால் மிகுந்தகா
ந்தியையடைந்துகொண்டும் வேறானசந்திரகிரணங்களுடைய மழைபோல
வும் சூரியர்களுடையவரிசைபோலவும் வெகுகாலமாக ஒருவிடத்திற்சேர்க்
கப்பட்டிருக்கிற பூரணச்சந்திரர்களுடையவரிசைபோலவுமிருக்கின்றது *
நட்சத்திரங்களுடைய கூட்டத்திற்சந்திரன்போலநாரதர் ஓரிடத்தில்விளங்
குகிறார் தேவர்களுக்குள்ளிந்திரன்போல ஓரிடத்திற்புலஸ்தியர்விளங்குகிறார்
தேவர்களுக்குள்ளேசூரியனைப்போல ஆங்கிரசு ஓரிடத்தில்விளங்குகிறார்
* பின்பு இச்சித்தர்களாகாசத்தைவிட்டுச்சபையிலிறங்கும்போது முனிவ
ர்களால்நிறைந்த அச்சபையானது எழுந்திருந்தது * சித்தர்களும்மனுஷி
யர்களுங்கலந்தொருவருக்கொருவர்சேர்ந்துகொண்டிருக்கிறதேககாந்திக
ளால்பத்துதிக்குகளையும்பிரகாசம்பண்ணிக்கொண்டுவிளங்குகிறார்கள் * அவ
ர்களிற்சிலர்மூங்கிற்றண்டைக்கையிற் பிடித்துக்கொண்டுஞ் சிலர்தாமரை
லைக்கையிற்பிடித்துக்கொண்டுஞ்சிலர் அருகம்புல்லைச்சிகையிற்றரித்துக்
கொண்டுஞ் சிலர்சூடாமணியைச்சிகையிற் றரித்துக்கொண்டுஞ் சிலர்சடை
முடிகளையுடையவர்களாயுஞ் சிலர்சிரசின்முன்பக்கத்தில்மாலைகளைச்சூட்
டிக்கொண்டுஞ் சிலர்கணுக்கையிலுருத்திராட்சமாலையைத்தரித்துக்கொண்
டுஞ்சிலர்மாவுரிகளையுடுத்திக்கொண்டுஞ்சிலர்மாலைகளைத்தரித்துவெண்பட்
டுகளைப்போர்த்துக்கொண்டுஞ்சிலர்முஞ்சிப்புற்கயிற்றைஅரையிற்றரித்துக்
கொண்டுஞ் சிலர்முத்த மாலைகளாலலங்கரிக்கப்பட்டுமிருக்கிறார்கள் * வசி
ஷ்டரும் விசுவாமித்திரரும் வந்திருக்கின்றசித்தபுருஷர்களனைவரையுமருக்
கியம் பாத்தியம் வசனமிவைகளாற்கிரமமாகப் பூசித்தார்கள் * அச்சித்தபு

ருஷிகள்வசிஷ்டரையும் விசுவாமித்திரரையும் பிரீதியோடு அருக்கியம் பாத்
தியம் வசனமிவைகளாற்பூசித்தார்கள் * அதன்பின்புதசரதர்சகலவுபசார
த்தினும் அச்சித்தர்களைப்பூசித்தார் அவர்களும் நன்றாயிருக்கிறீராவெ
ன்கிறவசனத்தினாற்றசரதரைப்பூசித்தார்கள் * சித்தர்கள்மனுஷியாளிவர்க
ளெல்லாரும் பிரீதியாக ஒருவருக்கொருவர் பூசைகளைப்பண்ணிக்கொண்டு
ஆசனங்களிலிருந்தார்கள் * அச்சித்தர்கள் வந்தனஞ்செய்து எதிராகவி
ருக்கிற இராமரைப்பார்த்து யோக்கியமானவசனத்தினும் புட்பவருஷ
த்தினுந்தோத்திரத்தினும் பூசித்தார்கள் * வேதவேதாங்கங்களைக்கரை
கண்டவர்களாயும் அறியவேண்டியதத்தை யறிந்தவர்களாயும் பெரியோர்க
ளாயுமிருக்கிற விசுவாமித்திரர் வசிஷ்டர் வாமதேவர் நாரதர் வியாசர்
மரீசி துர்வாசர் ஆங்கிரசர் கிரது புலஸ்தியர் புலகர் சரலோமர் வாச்சியா
யனர் பரத்துவாசர் வான்மீகி உத்தாலகர் ரிசீகர் சய்யாதி சவனர் முத
லியரிஷிகளும் அச்சபையில்நாயகர்களாகவிருந்தார்கள் ஆசாரியனிடத்தில்
நியமப்படிக்குவேதாப்பியாசம்பண்ணினவர்களான அந்தநாரதர்முதலான
சித்தர்கள் வசிஷ்டர் விசுவாமித்திரர்களுடனேகூடவணக்கமாகவிருக்கின்
ற இராமரைப்பார்த்துச்சொல்லுகிறார்கள் * விசாரணையினால் நிச்சயிக்க
ப்பட்டிருக்கிறபொருட்களையுடையதாயும் பதார்த்தங்களுடைய உண்மை
யான அறிவோடுகூடிக்கொண்டும் வித்துவான்களுடையசபைக்குயோக்கி
யமாயும் பிரகாசமான அட்சரங்களோடுகூடிக்கொண்டும் உள்ளே உயர்
ந்திருக்கிற வெகுகருத்துக்களையுடையதாயு மனதுக்குச்சந்தோஷத்தைப்
பண்ணுகிறதாயும் பெரியோர்களுக்குயோக்கியமாயும் ஒருதோஷமன்றியி
லும் பிரகாசமானபொருளையுடையதாயும் வியாகரணங்களாற்சோதிக்கப்ப
ட்டபதங்களையுடையதாயும் பிரகாசமாயும் இதமாயும் சொற்குற்றமன்றி
யிலும் வைராக்கியரசத்தையுடையதாயும் மிகவுங்கெம்பீரமாயும் ஆசைநீ
ங்குகின்றதனாலுண்டாகிறசந்தோஷத்தையுடையதாயுமிருக்கிறபதினாறுகு
ணங்களையுமுடைய இவ்விராமராற்சொல்லப்பட்டவாக்கியமானது யாருக்
குத்தான் ஆச்சரியத்தைப்பண்ணமாட்டாது * நூற்றிலொருவருக்கேயா
வரினுமுயர்வாகியசமத்காரமும் கருத்தில்வைக்கப்பட்டிருக்கிற அருத்தத்
தை ஒருக்காலும்பிசகாமற்றெரியப்படுத்துகிறவல்லமையுமுடைய வாக்கான
துண்டாகுது * வாரீர் இராசகுமாரரே உம்மைத்தவிரயாருக்குப்பாணம்
போலேசூட்சுமார்த்தங்களைப்பிளந்துகொண்டிருக்கிறபுத்தியாகிறகொடி
யானது விஸ்தாரத்தையடைந்து விவேகமாகிறபழத்தை யுண்டுபண்ணிக்
கொண்டுவிசாரணை வைராக்கியங்களாகிற பூவினாலுந் தளிரினாலும் மிகு

நந்தவிருத்தியையடைகுது * இராமருடையவிருதயத்தில் மற்றொன்றினாலுந்
தோற்றாமலிருக்கின்ற பதார்த்தங்களுடையவுண்மையைத்தோற்றப்பண்ணிக்
கொண்டுசொலிக்கின்றஞானமாகிறதீபச்சுவாலைபோலெந்தப்புருஷனுக்கு
ச்சொலிக்குதோ அவனேபுருஷனென்றுநினைக்கப்படுகிறான் * இப்போது
சொன்னஞானமில்லாதசீவர்களிரத்தமாமிசம் என்புருபங்களானவெகுதே
கங்களையே ஆத்மாவென்றெண்ணுகின்றமையால் சத்தமுதலான பதார்த்
தங்களையனுபவிக்கிற அந்தத்தேகங்களில் ஆத்மாவில்லை [ஆசையாலுல
காயுதமதமே அவர்களுக்குபலித்துதென்பதுகருத்து அவர்களிடத்தில்ஞா
னத்தோடுகூடின ஆத்மாயிருப்பனேயாகில் அவசியப்புருஷார்த்தத்திலே
யே யத்தனம்பண்ணுவன் அப்படி யத்தனஞ்செய்யாததினால் கடம்போல
வுஞ் சுவர்போலவும்புத்தியில்லாதவர்களென்று நிந்திப்பதற்காக ஆத்மாவி
ல்லை என்றுசொன்னது] மோகத்தைப்பொருந்திச்சனன மரணங்களைய
டிக்கடியடைந்துகொண்டுசம்சாரசொரூபத்தை விசாரணைபண்ணாமலிரு
க்கின்றசீவர்களைப்பசுக்களென்றறியத்தக்கது * காமாதிசத்துருக்களை நா
சம்பண்ணிக்கொண்டும் முன்பின்விசாரணைக்கியோக்கியராயு மிருக்கிற
இவ்விராமனைப்போல நிருமலபுத்தியையுடையவரானபுருஷன் எங்கேயோ
ஓரிடத்தில்வெகுபிரயாசத்தினாற் காணப்படுகிறான் * நிரதிசயானந்தத்தை
யுடையவர்களாயும் அழகானவுருவையுடையவர்களாயுமிருக்கிற நல்லோர்க
ள்கட்டுமாங்கனிபோல அரிதாகவிருக்கிறார்கள் * கொண்டாடத்தக்கபுத்தி
யையுடைய இவ்விராமரிடத்தில் உலகவிவகாரங்களைநன்றாக வறிந்துதன்
னுடையவிவேகத்தினாற்றானேதத்துவத்தைக்காணும் படியானசமத்காரமா
னது இவ்வயதிலேயேகாணப்படுகுது * பழங்களாலுந்தளிர்களாலும் விள
ங்கிக்கொண்டும் அழகுபொருந்தியுமேறுதற்கெளிதாயுமிருக்கிற மரங்கள்ச
கலதேசங்களிலுமுண்டாகுதுகள்சந்தனமரமாத்திர முண்டாகிறதில்லை *
சந்திரனிடத்திற்குளிர்ந்தகிரணம்போலவும் நல்மரத்திற்பூங்கொத்துப்போ
லவும்புட்பத்திற்பரிமளம்போலவுமிராமரிடத்திலிந்தச்சமத்காரமானதுகாண
ப்படுகுது * மிகவுந்துஷ்டசொரூபமாயிருக்கிறமுன்கருமத்தினுடைய சிருஷ்
டியினாலுண்டுபண்ணப்பட்டகெட்டதான இச்சமுசாரத்தில் விவேகத்தினா
லுண்டான ஆத்மலாபமானதுமிகவுமரிதாயிருக்கின்றது * எப்போதுங்கீ
ர்த்திக்கிடமானதத்துவவிசாரணைபண்ணிக்கொண்டுமோட்சமடைதற்கெத்
தனஞ்செய்கின்றவர்களேபலமுள்ளவர்களாயுஞ் சத்துருக்களுடைய எதிரே
எண்ணத்தக்கவர்களாயும் புருஷ உத்தமர்களாயுமிருக்கிறார்கள் * உயர்வா
கியவிவேகமும் மேலானமனதுமுடையவராகிய இராமருக்குச்சரியான ஓ

ருபுருஷனிப்போது மூன்றுலகத்திலுமில்லை முன்னாலுங்காணப்படவில்லை இனிமேலுமுண்டாகப் போகிறதில்லையென்று எங்களுடையநிச்சயம் * சகலசெனங்களுக்கும் ஆனந்தத்தையுண்டுபண்ணுகிற இராமருடையமனதுக்கும் நம்முடைய உபதேசத்தினாலிஷ்டமான அருத்தஞ்சித்தியாமற்போனால் அப்போதுமுனிகளென்றுபேர்பெற்றிருக்கிறநாமேமிகவுங்கெட்டபுத்தியையுடையவர்களாகையால் அவசியம் உபதேசிக்கவேண்டும்.

முப்பத்துமூன்றாவதுசருக்கமுற்றிற்று.

கைலாசபதிதுணை.

ஸ்ரீவான்மீகியினாற்பண்ணப்பட்ட
மோட்சோபாயமானமகாராமாயணத்தில்.

வைராக்கியப்பிரகரணம்.





ஓம்.

இரண்டாவது.

முமூட்சுப்பிரகரணம்.

கடவுள்வாழ்த்து.

நித்தியமாயுஞ் சனையில்லாமலுஞ் சகலத்துக்குமுதன்மையாயும் ஒன்றுயுஞ் சொரூபானந்த லேசத்திஞலலங்கரிக்கப்பட்ட விஷயானந்தமுதலான ஆனந்தத்தையுடைத்தானதாயும் மகத்துக்களாற்சித்தத்திற்றியானிக்கப்பட்டும் வேதாந்தங்களாற்றெரியப்பட்ட மோட்சத்துக்கிருப்பிடமாயுமிருக்கின்ற ஆத்மசொரூபத்தை நமஸ்காரஞ் செய்கின்றேன்.

(அ - கை) முன்பிரகரணத்திலிராமர் முதலானவர்களாற்சொல்லியவசனவழியாகசாதனசம்பத்து சொல்லப்பட்டபோதிலுமதைமுமூட்சுக்களால் எந்தக்கிரமமாகவிவகாரம் பண்ணிக்கொண்டுசம்பாதிக்கத்தக்கதோ எப்படியதஞல்தத்துவஞானங்கிடைக்குமோ அப்படிவெவ்வேறுகப்பிரித்து அநுகவௌியுபதேசிப்பதற்காக இவ்விரண்டாவதான முமூட்சுவிவகாரப் பிரகரணத்தை ஸ்ரீவான்மீகிபகவான்சொல்ல ஆரம்பிக்கிருர் |

முதற்சருக்கம்.

இச்சருக்கத்தில் சுகப்பிர்மரிஷிதத்துவ சொரூபத்தைத் தானேவிசாரித்துத்தெரிந்திருந்தாலும்பிதாவிஞல்தன்றுகச் சொல்லப்பட்டபோதிலுமத்தத்துவசொரூபத்தில் விசுவாசம் வாராமற் சனகராஜாவினுபதேசத்திஞல் தத்துவத்தையறிந்தானென்று சொல்லப்படுகின்றது |

(அ - கை) இப்பிரகரணத்தில் முதலில்மந்தமாயிருக்கிற வைராக்கியமுதலானசாதனமுள்ளவர்களுக்குச்சீக்கிரமாகவே சாதனசம்பத்துவந்ததென்கிற அஞ்ஞானத்திஞல் சிரவணுதிகளில் யத்தனம் வரக்கூடாதென்

று சுகப்பிர்மரிஷியினுடைய கதையினுற் சாதனபரிபாக சொரூபங்களைக்கா ண்பித்துக் குருவினிடத்திலிருந தறியப்பட்டவித்தையே நல்லபலத்தை யுண்டுபண்ணுமென்கிற சுருதியினுலிராமருடைய குலத்துக்குக்குருவாயி ருக்கிற ஸ்ரீவசிஷ்டராயிராமருக்குபதேசஞ்செய்வதற்காகப்பூருவநடத்தகா ரியத்தைநதெரியப்படுத்தித்தத்து ய உபதேசத்தைபாரம்பிக்கின்றதுகளாலு ச்சாகப்படுத்தப்போகிறவராயிருக்கிற விசுவாமித்திரர் தன்காரியஞ்சித்திக்கி றதற்காகவுஞ் சிரவணஞ்செய்கிறதற்காகவுமவசரப்பட்டு முன்னதாகச்சொ ல்லுகிறுர் | முன்பிரகரணமுடிவில் சித்தபுருஷர்கள் சொல்லியபின்பு விசு வாமித்திரர் இராமரைப்பார்த்து அன்போடுசொல்லுகிறுர் * சூட்சுமமாகவி ருக்கின்ற உம்முடையபுத்தியினுலேயே சகலரகசியத்தையு மறிந்தவராகவி ருக்கிறீர் உமக்குவேறேயறியத்தக்கதாயதொன்றுமில்லை [சாராசாரங்க ளைப்பிரித்துப்பார்க்கிறத்தில்யோக்கியமாயிருக்கிற உம்முடையபுத்தியினுல் பரமார்த்தமாயும் உத்தமமாயும் பிரிக்கப்படாமலும் அத்துவிதமாயுஞ் சிற் சொரூபமாயுமிருக்கிற ஆத்மசொரூபமும் உம்மாலறியப்பட்டுதென்று தா த்பரியம்] (அ - கை) ஆனுல் எனக்கென்னத்தினுல்நிச்சயம்பிறக்கவில்லை யெனில் | உம்முடையபுத்தியாகிற கண்ணாடியில் நம்பிக்கை யில்லாததினு லுண்டாயிருக்கிற சந்தேகமாகிற அழுக்கைத் துடைக்கவேண்டியதொன் றேசெய்யத்தக்கது [தன்புத்தியினுலறிந்திருந்தாலுஞ் சாஸ்திரங் குருமுத லானவர்களோடு விசாரணை பண்ணுகிறத்தைத்தவிர மற்றென்றினு லு நம்பிக்கை வரமாட்டாதென்பதுகருத்து] சுகப்பிர்மரிஷியினுடைய புத்தி யைப்போலிருக்கிற உம்முடையபுத்தியானது அறியவேண்டியத்தை யெல் லாமறிந்திருந்தபோதிலும் நிச்சயமுண்டாகிறத்தைமாத்திரமபேட்சிக்குதெ ன்று விசுவாமித்திரர்சொல்ல * இராமர்சொல்லுகிறுர் சுகப்பிர்மரிஷிக்கு முன்னேதன்னுலறியத்தக்க தத்துவத்தில் நிச்சயம்பிறவாமல் திரும்பியுங்கு ருவுபதேசத்தோடேகூடினபுத்தியினுலெப்படிநிச்சயம் வந்துதென்றுகே ட்க விசுவாமித்திரர்சொல்லுகிறுர் உமது நடத்தைக்குச் சரியாயும் மோட்ச த்துக்கேதுவாயுமிருக்கிற சுகப்பிர்மரிஷியினுடையநடத்தையைக்கேளும்* உமதுபிதாவினதுசமீபத்திற்சிம்மாசனத்தில் நீலபருப்பதத்தைப் போலிருக் கின்றஇவ்வியாசருக்குச்சகலசாஸ்திரங்களையறிந்தவராயுமகாபுத்திசாலியா யுமிருக்கிறசுகனென்னுமொருபுத்திரருண்டானுர் * அவர் உம்மைப்போல இவ்வுலகசுபாவத்தைவிசாரித்து விவேகமானதுண்டாகி அவ்விவேகத்தினு ற்றன்றுனேவெகுகாலம் விசாரித்துப்பரமார்த்தமாயு மத்துவிதமாயுஞ்சிற் சொரூபமாயுமிருக்கிற ஆத்மதத்துவத்தையறிந்தார் * தன்னுலறியப்பட்ட

உத்தமமானவஸ்துவிலிதுவே வஸ்துவென்று நிச்சயமடையாததனால்மன துக்கிளைப்பாறுதலுண்டாகவில்லைபின்பு அவரது நிராசையானமனதா னதுவெகுவாயும் நசிக்கிறதாயுந் துக்கத்துக்கேதுவாயுமிருக்கிறபோகங்க ளைவிட்டுநீங்கிச்சாதகப்பட்சியானது அகாலவருஷதாரைகளைவிட்டுநீங்குவ துபோல வைராக்கியத்தையடைந்தது * பின்பு அவர்மேருபறுவதத்திற் றவஞ்செய்கிறபிதாவிடத்திற்சென்றுபக்தியுடன்வணங்கி இவ்வஞ்சனையா னசமுசாரமாகிறபொய்யானது எப்படியுண்டாச்சுது எப்படிநாசத்தை யடையும் எவ்வளவுகாலம்யாருக்கிருக்கின்றதென்றுகேட்க [இச்சமுசார ஞ்சரீரத்தையுடையதா இந்திரியத்தையுடையதா மனதையுடையதா பிரா ணனையுடையதாமுன்சொன்னகூட்டத்தையுடையதா இதுகளைவிட்டுவே றுயிருக்கிற சீவனையுடையதாநிருவிகார பிரமத்தையுடையதா வென்று கேட்பவர்யாருக்கிருக்கின்றதென்றோன்பதுகருத்து] ஆத்மசொரூபந்தெ ரிந்தவியாசராற்சொல்லத்தக்கவெல்லாநன்றாகச்சொல்லப்பட்டது * பின்பு சுகப்பிர்மரிஷியானவர்நிருபதேசித்தபொருளைநான்முன்னமறிந்தபிரகார மேசொன்னீரென்றுசொல்ல அவ்வசனத்தினால்நிச்சயமடையாமையைவியா சர்பார்த்து இப்போசொன்னதைத்தவிர வேறொருதத்துவத்தைநானறியவி ல்லை * ஆனபடியினாற்பூமியிற்சனகனென்று ஒராஜனிருக்கிறா ரவரறிய வேண்டியதைநன்றாக அறிந்தவர் அவரிடத்திற்சகலத்தையுமறிகுவாயென் றுவியாசர்சொல்ல * சுகப்பிர்மரிஷிமேருவிலிருந்து பூமியில்வந்து சனக ராலிரட்சிக்கின்ற விதேகமென்கிறதேசத்தில்மிதுலையென்கிறபட்டணத் தையடைந்து அரண்மனைவாசலிற்சேர்ந்தார் * அப்போது அவ்வரண்ம னைவாசலிலிருக்கின்றகாவலாளர்கள் மகாத்மாவான சனகமகாராஜாவினி டத்திற்சென்றுவியாசர்பிள்ளையாகியசுகப்பிர்மரிஷியானவர் வாசலில்வந்தி ருக்கிறாரென்றுசொல்ல சனகர் அவருடையவைராக்கிய முதலானகுணத் தையறிவதற்காக அனாதரவினால்வாசலிலிருக்கட்டுமென்றுசொல்லிஏழுநா ள் சும்மாவிருந்தார் * பின்புநடுக்கட்டிலழைப்பிவித்தார் அந்தச்சுகர்தத்து வத்தையறியவேண்டுமென்கிறமனதுள்ளவராகி அவ்விடத்திலுமுன்போல ஏழுநாளிருந்தார் * அதன்பின்பு அந்தப்புரத்தி லழைப்பிவித்து அவ்வி டத்திலுத்தமமானஸ்திரீகளாலும் போசனங்களாலும் படுக்கைமுதலானது களாலுஞ் சந்திரன்போன்றமுகமுள்ளவரான சுகப்பிர்மரிஷிக்குபசாரஞ் செய்வித்தார் * அரசனாற்செய்வித்த அந்தத்துக்கங்களு மிந்தப்போகங்க ளுஞ் சுகருடையமனதைத்திடமான இருப்பையுடையமலையைத்தென்றற் காற்றுகள்போல விகாரப்படுத்தவில்லை * சமபுத்தியாயுஞ் சுத்தமாயும்

மௌனியாயுஞ்சந்தோஷம் பொருந்தின மனதுள்ளவராயுமிருக்கிற சுகரா னவர் பூரணச்சந்திரன்போல அவ்வந்தப்புரத்திலிருந்தார் ✻ சனகர் தத் துவஞானம்வருகிறவனைக்கும்ஸ்திரமாயிருக்கின்றவிசாரவிணை வைராக்கிய முதலானதுகளுடையபரிபாகத்தையுடைத்தானவராயுஞ் சந்துஷ்டராயுமி ருக்கிறசுகப்பிர்மரிஷியைப்பார்த்து நமஸ்காரஞ்செய்து ✻உலககாரியங்களை யெல்லாம்விட்டு அடையவேண்டியவிஷ்டங்களெல்லா மடைந்தவராக விருக் கின்றவரோ இவ்விடத்திற்கெழுந்தருளிய காரணமென்னவென்றுசீக்கிரமாக க்கேட்க ✻ சுகர்சொல்லுகிறார்வாரீர்குருவே இச்சமுசாரமாகிறபொய்யான து ஏப்படியுண்டாச்சுது ஏப்படிநாசத்தையடையுமிதையெனக்கு ஏதார் த்தமாகச்சீக்கிரத்திற்சொல்லவேண்டுமென்றுகேட்க ✻ சனகர்சுகரைப்பார் த்து அவருடையபிதாவினால்முன்சொல்லப்பட்டதத்துவ சொரூபத்தையே அப்போதுசொல்ல ✻ சுகர்சொல்லுகிறார் ஏன்விவேகத்தினால் முன்னேயே அறியப்பட்டதுதானேஎன்பிதாவினாலும்உம்மாலுஞ்சொல்லப்பட்டதுஇவ் வாக்கியார்த்தந்தான்வேதாந்தசாஸ்திரங்களிலுஞ்சொல்லப்படுகுது ✻சாரமில் லாமற்கெட்டதாயிருக்கிறஇச்சமுசாரமானதுதன்னுடையவிகற்பத்தினாலெ ப்படியுண்டாச்சுதோ அப்படியேதன்னுடையவிகற்ப நசிக்கும்போது நசிக் குமென்றுபெரியவாளுடையநிச்சயம் [அஞ்ஞானத்தினால்மறைக்கப்பட்டஆ த்மாவில்வெகுவிதகற்பனைகளைப்பண்ணிக்கொண்டு அனந்தமானகாமகரு மவாசனைகளாகிறவித்துக்களால்நிறைந்தும்பிரளயசுழுத்திகளிற்சமஷ்டிச மஸ்காரமாகவும் வியஷ்டிசமஸ்காரமாகவும் அவ்வியாகிருதத்தில் மறைந்து மிருக்கிற அனாதியானசீவபாவத்துக்குபாதியான அந்தக்கரணத்தில்நின்று ம் பிரளயகிரமத்துக்கு விபரீதகிரமமாகமுன்னேபஞ்சீகரணமில்லாமலிருக் கிற ஆகாயமுதலானதுகளுடைய உற்பத்திகிரமமாய் சமஷ்டிபிரணியகெ ற்பசொரூபமாகவும் பின்புபஞ்சீகரணத்தினால்விராட்டுசொரூபமாகவும் பி ன்பு உட்கிரமமாய் வியஷ்டிஸ்தூலதேகரூபமாய் அதற்குள்வியஷ்டிலி ங்கதேகரூபமாயுமுண்டானமஹா அனர்த்தரூபமானசம்சாரமானது கரும ம் உபாசவினமுதலானசகலத்தையுஞ் செய்ததனால் அத்தியாத்மீகவியஷ்டி பாவத்துக்குபாதியானவாசவினமாத்திரம்போகிறபோது சமஷ்டியிரணிய கெற்ப சொரூபமாகச்சேஷிக்குது சிரவணமுதலானதுகளாலுண்டாகிற தத்துவசாட்சாத்காரத்தினால் வாசவினயோடுகூடின காரியகாரண அவித் தைநசிக்கும்போதுமூலாவித்தைக்குநாசம்வந்ததினாலே அந்தக்கரணம்மிக வும் போய்விட்டதினாலே சேஷமில்லாமல்நாசத்தையடைகுது இல்லாவிட் டால்சுயம்பிறகாசமான ஆத்மாவினிடத்துண்டானதினாலும் பொய்யாயி

ருக்கிறத்தினாலும்முன்னேயேவெந்துபோனதாகையினாற்சாரமில்லாமலுமி
ருக்கிறசமுசாரமானது ஆத்மசாட்சாத்காரமாகிற பிரளயாக்கினிவியாபிக்
கும்போதுமறுபடியுமெப்படியிருக்கு மென்றுதாற்பரியம் மேலேசொலுத்
தப்பட்டாலும்உள்ளேசாரத்தோடுகூடினபுல்லைப போலமறுபடியுமுளைக்
குமென்கிறசங்கையைப்போக்குவதற்காகச்சாரமில்லாமலிருக்கிற தென்று
சொல்லப்பட்டது] என்னாலறியப்பட்ட இந்த அருத்தம்யெதார்த்தந்தானோ
சந்தேகம்நீங்கும்படிசொல்லும் அலைந்துகொண்டிருக்கிற மனதோடுகூ
டிய நானும்மாலிளைப்பாறுதலையடைய வேண்டுமென்று சுகர்கேழ்க்க *
சனகர்சொல்லுகிறார் உம்மால்சுயமாக அறியப்பட்டும் உம்முடைய பிதாவி
னிடத்தில்மறுபடியுங்கேழ்க்கப்பட்டுமிருக்கிற இந்த அருத்தத்தைத்தவிர
வேறே ஒருநிச்சயமான அருத்தங்கிடையாது * (அ - கை) இப்போ
துசொன்னதையேமறுபடியும் நன்றாகநிச்சயம்வருதற்காகச்சொல்லுகிறா
ர் | அகண்டமானசிதாகாசபுருஷனொருவனே இங்கிருக்கிறான்வேறொன்று
மில்லை அந்த ஆத்மாவேதன்னுடையசங்கற்பத்தினால் சமுசாரியாகிறான்ச
ங்கற்பநாசத்தினால் அகண்டமாயிருக்கிறமுத்தியையடைகிறான் * அப்படிப்
பட்ட ஆத்மஞானத்தைச்செவ்வையாகநீயிப்போதறிந்தாயாதலால்போகங்
களிடத்தாசையையும்திரிசியதிருஷ்டியையும்விட்டுநீங்கினாய் * வாரீர்பாலரா
யிருக்கிற மகாசூரரே உம்முடையபுத்தியானதுபோகங்களாகிறபெரியவியா
திகளிலிருந்து ஒழிவையடைந்தது இன்னம்வேறே எதைக்கேழ்க்கவேண்
டுமென்று இச்சைப்படுகிறீர் * உமக்குப்பரிபூரணமாயிருக்கை எப்படியுண்
டாச்சுதோ அப்படிச்சகலமானஞானங்களுக்குமிருப்பிடமாகவும் பெரிதான
தபசைப்பண்ணிக்கொண்டுமிருக்கிறஉம்முடையதகப்பனாருக்கு வரவில்லை
[இப்படிசொன்னதுசுகருக்கு நிச்சயமுண்டாவதற்காக ஸ்தோத்திரம்பண்
ணினதென்பதுகருத்து இப்படியேமேலும்பார்த்துக் கொள்ளவும்] வியா
சரிலும்நானதிகமாகவேயிருக்கிறேன் அவருக்குச்சிஷ்யராகவிருக்கிற உமக்
குப்போகத்திலிச்சையில்லாததினால் என்னிலுமிகவு மதிகமாகவிருக்கிறீர் *
பரிபூரணமான மனதுள்ளவராக விருக்கிற வும்மாலடையத்தக்கதெது
ல்லாமடையப்பட்டது மறுபடியுந்திரிசியங்களையடையாதவராயும் முத்த
ராயுமிருக்கிறநீர் பிராந்தியைவிட்டுவிடும் * மகாத்மாவாயிருக்கிற சனகர்
இந்தப்பிறகாரம் அகண்டமானசிதாகாசசொரூபம் நீதானென்றுபதேசிக்
க அந்தச்சுகர் நிருமலமான பரமாத்மவஸ்துவினிடத்திற் சும்மாவிருந்தார்
*சனனபயமும் மரணதுக்கமும் மனவருத்தமும் சுத்தவாசனையிச்சையும்
அனுபவசந்தேகமும் நீங்கியிருக்கிற சுகர்சத்துவகுணத்தோடுகூடினதேவ

தைகளிருக்கிறத்தினாலும் மனதுக்கு விக்ஷேபஹேதுக்களில்லாததினாலுஞ் சமாதிக்கியோக்கியமான மேருவினுடைய சிகரத்தையடைந்து * அவ்விடத்திற்பதினாயிரம் வருஷம் நிருவிகற்பசமாதிபண்ணி சலனமில்லாத தீபம் போலபரமாத்மாவிலேசாந்தியையடைந்தார் * [விதேகமுத்தரானென்பது கருத்து] திரிசியப்பார்வையும் அதற்குமூலமான அஞ்ஞானமும் நீங்கினத்தினால் சுத்தராயும்மகாத்மாவாயுமிருக்கிற சுகப்பிரமரிஷியானவர் ஆகாமியமென்கிற புண்ணியபாவங்களுடைய சம்மந்தமில்லாததினாலுஞ் சஞ்சிதநாசத்தினாலும் நிர்மலசொரூபமாயும் பிராரத்தகருமமும் அசுத்தமானதேகமுதலானதும் நீங்கினதினாற் பரிசுத்தமாயுந்தானாயுமிருக்கிறபரமாத்மவஸ்துவில் சமுத்திரத்தை விட்டு வேறாகவிருக்கையும் மேகசம்மந்தமுமில்லாத சலத்திவலையானது பரிசுத்தமாயுந் தெளிவாயுமிருக்கிற சமுத்திரத்திலொன்றாகச் சேருகின்றதுபோல சகலவாசனைகளுமற்று ஒன்றாயிருக்கையையடைந்தார்.

முதற்சருக்கமுற்றிற்று.

இரண்டாவதுசருக்கம்.

இச்சருக்கத்தில் ஸ்ரீராமருக்குபதேசஞ்செய்வதற்காகவிசுவாமித்திரர் வசிஷ்டரைப்பிரார்த்திக்கின்றதும் அதனாலவருக்குண்டானவுச்சாகத்தையுஞ் சொல்லப்படுகின்றன.

(அ-கை) சுகப்பிரமரிஷியினுடையகதையை பிரகிருதத்திலனுகூலமாகச்சேர்த்துக்கொண்டு ஸ்ரீராமருக்குபதேசஞ்செய்வித்தற்காக வசிஷ்டரைப்பிரவிர்த்திபண்ணிவைத்தற்காரம்பிக்கின்ற விசுவாமித்திரர்சொல்லுகிறார் | வாரீர்இராமரேவியாசருடையபிள்ளையானசுகருக்கெப்படிச் சந்தேகமாத்திரம்போக்கவேண்டியதோ அப்படி உமக்குஞ்சந்தேகமாத்திரம்போக்கவேண்டியது* (அ-கை) சொன்னகாரியத்திற்சகலமானரிஷிகளுக்குஞ்சம்மதியுண்டாவதற்காகச் சொல்லுகிறார் | வாருங்கோள் முனீசுவரர்களேபுத்திசாலியாயிருக்கின்ற இவ்விராமருக்குப்போகங்களானதுகள்ரோகங்கள்போல ருசிக்காததினாலிவராலறியத்தக்கதெல்லாங்குறைவில்லாமலறியப்பட்டது * சகலமானபோகங்களும்ருசிக்காமலிருக்கின்றதுவே அறியவேண்டியத்தையறிந்தமனதுக்குலட்சணம் இது நிச்சயந்தான் * உலகத்தில் பொய்யாயிரு

க்கிறபந்தமானதுபோகங்களுடையவாசனையினால்வலுவாயிருக்கின்றது அப்போகவாசனைசாந்தியடையும்போது பந்தமானது குறைந்து போகின்றது * அவ்வாசனைகளுடையகுறைவே மோட்சமென்றும் பதார்த்தங்களிற்கெட்டியாயிருக்கிறவாசனையேபந்தமென்றும் பெரியோர்களாற் சொல்லப்படுகின்றது [வாசனைநீங்கியவளவுபந்தநீங்கும் சுத்தமாய்வாசனை போய்விடில்நன்றாகமுத்தியுண்டாகுமென்றுதாற்பரியம்] மனுஷியாளுக்குக் கொஞ்சஞ்சிரவணமுதலான யத்தனத்தினால் ஆத்மஞானமானதுமேலெழுந்தபார்வையினாலுண்டாகும் விஷயவைராக்கியமோவென்றால்வெகு யத்தனத்தினாலுண்டாகுது [ஆத்மஞானம்திரிசியத்தைப்பிரித்துப்பார்க்கிறத்தினாலேயே யெளிதாகப்பரிசயம்பண்ணலாமென்பதுகருத்து] (அ-கை) அப்போது திரிசியவிவேகமேபோதும் வைராக்கியத்தினாலாகவேண்டுவதென்னெனில் | ஆசைமுதலானவைகளாற் கெடுக்கப்படாமலிருந்து ஆத்மசொரூபத்தைப்பார்க்கின்றபுருஷனே அந்த ஆத்மசொரூப ஞானத்தினால் அஞ்ஞானத்தைப்போக்கியதனாலுண்டானபிரமானந்தபலத்தை யடைந்தவனென்றும் அறியவேண்டியத்தையறிந்தவனென்றும்பண்டிதனென்றுஞ்சொல்லபடுகிறான் மேலெழுந்தவாரியாகப்பார்க்கிறவனோவென்றால் அகங்காரம்போகாததினாலவனைப்போலயல்லவென்றுதாற்பரியம் அப்பேர்ப்பட்டமகாத்மாவுக்குப்போகங்கள்பலவந்தமாகவும்ருசிக்கிறதில்லை *பூமியிலிருக்கிறபோகங்களெல்லாவற்றினும் ருசியில்லாதவன்போலவெளிக்கிக்காண்பி வித்தால்நமக்குக்கீர்த்தியுண்டென்றும் நம்மையெல்லாரும் பூசிப்பார்களென்கிற வுத்தேசத்தையும்விட்டுப்பரமார்த்தமாகருசியில்லாதபுருஷனே சீவன்முத்தனென்று சொல்லப்படுகிறான் * (அ-கை) வைராக்கியம் ஞானம் உபசாந்தி இவைகள் விருத்தியாகும்போது ஒன்றுக்கொன்றுசகாயத்தினால் பரிபக்குவமாயிருக்கிறஞானத்தினாலேயே அஞ்ஞானம்போகிறத்தினால் மிகவும் ஆசைநசித்துப்போகுமென்றுசொல்லுகிறார் | எவ்வளவுஎவ்வளவுகாலத்துக்குள்ளே புருஷனுக்கு அறியத்தக்க ஆத்மசொரூபமானதறியப்படவில்லையோ அவ்வளவு அவ்வளவுகாலத்துக்குள்ளேவிஷயங்களில்வைராக்கியமானது பாலைநிலத்திற்கொடியுண்டாகாததுபோலவுண்டாகிறதில்லை [பிரமத்தைக்கண்டபின்பு ஆசைசுத்தமாகப்போகுமென்று கீதையிற்பகவான் சொல்லியிருக்கிறானென்பதுகருத்து] யாதொருகாரணத்தினாலழகாயிருக்கிற விஷயங்களிராமரை ஆசைப்படுத்தவில்லையோ அதினாலேயே இவரை அறியவேண்டியதெல்லாமறிந்தவராக எண்ணத்தக்கது * (அ-கை) இராமர்தத்துவத்தையறிந்தாரானால் அப்போது உபதேசம்பண்ணவேண்டியதற்காகவசிஷ்

டரைப்பிரார்த்திப்பது என்னத்துக்கெனில் | வாருங்கோள்முனீசுவரர்களே
இராமர்புத்தியினாலெதையறிந்திருக்கிறாரோ அதுவேபரமார்த்த வஸ்துவெ
ன்று இராமருமின்னஞ்சில அதிகாரிபுருஷர்களும் வசிஷ்டருடைய சன்னி
தானத்தில்நின்றுங்கேட்டுமனதுக்கிளைப்பாறுதலையடைவார்கள் [சகலரு
ம்முத்தியடைவதற்காக வசிஷ்டரைப் பிரார்த்திக்கிற தென்பதுகருத்து]
(அ - கை) அதைத்தானே நன்றாகச்சொல்லுகிறார் | சரற்கால இலட்சுமியா
னவள்நிருமலாகாசத்தை எப்படியபேட்சிப்பளோ அப்படிஇராமருடையபு
த்தியும் ஒன்றான சிற்சொரூபத்தை யபேட்சிக்குது * இப்போதுமகாத்மா
வாயிருக்கிற இராமருடையமனதுக்கிளைப்பாறுத லுண்டாகிறத்துக்காகப்
பகவானாயிருக்கிறவசிஷ்டரானவர்யுத்தியைச்சொல்லவேண்டும் * (அ - கை)
உம்மாலேயே என்னத்தினாலுபதேசிக்கப்படவில்லையெனில் | சகலசாஸ்தி
ரமுந்தெரிந்தவராயும் சகலபதார்த்தங்களுக்குஞ்சாட்சியாயு மூன்றுலகங்க
ளிலுநிருமலமானமனதுடையவராயுமிருக்கிற வசிஷ்டரானவர் இரகுவம்ச
த்திராஜாக்களுக் கெல்லாங்குலகுருவாயும் பிரபுவாயுமிருக்கிறார் [இவரை
அதிக்கிரமித்ததிரிசங்குமுதலானபேர்களுக்கு நன்மையில்லாததினால் இவரே
யுபதேசிக்கவேண்டுமென்பதுகருத்து] வாரீர்பகவானாயிருக்கிற வசிஷ்டரே
உமக்குஞாபகமிருக்குதா முன்னால்நம்மிருவருக்குமுண்டானதுவேஷம் நீங்
குதற்காகவும் மகாவிவேகிகளானமுனிவர்களுக்குமோட்சமுண்டாவதற்காக
வும்நிடதபர்வதத்தினுடையதாழ்வரையில் பகவானாயிருக்கிற பிரமாவானவ
ர் தாமேவெகுபுத்திகளோடுகூடினஞானத்தையுபதேசித்தாரோ அந்தஞான
த்தினாலிந்தச் சமுசாரவாசனையானதுசூரியனா லிராத்திரியானது போலச்
சாந்தியை நிச்சயமாகவடைகின்றதோ அந்தஞானத்தை சிஷியராகிய இ
வ்விராமருக்கு இளைப்பாறுதலுண்டாகும்படிக்குச் சீக்கிரமாகவுபதேசம்ப
ண்ணும்* இராமர்மலினவாசனையைவிட்டுச்சாதன சம்பத்தோடுகூடியிரு
க்கின்றதனால் உம்முடையவுபதேசமானது பலமற்பமாகவும் பிரயாசமதி
கமாகவுமுள்ளதல்ல அதெப்படியெனில் நிருமலமான கண்ணாடியில்முகமா
னது எத்தனமில்லாமற் பிரதிபலிக்கின்றதுபோலவாகும் * (அ - கை) இ
ராமருக்குபதேசஞ்செய்வதனால் உம்முடையதெரிந்தநன்மைக்குந்தயவுமுத
லானகுணங்களுக்கும் பிரயோசனமுண்டாவதினால் நன்றென்று சொல்லு
கிறார் | வைராக்கியத்தோடுகூடினநல்லசிஷியனுக்கு உபதேசம்பண்ணுகி
றதுதான்ஞானம் அதுதான்வேதாந்தசாஸ்திரத்தினுடைய அருத்தம் அது
தான்வுத்தமமான பாண்டித்தியம் [வித்தையைநல்ல பாத்திரத்திற்கொடா
மற்போனால் வீணாகப்போகிறத்தினால் நிந்திக்கப்படுமென்பதுகருத்து]

வைராக்கியமில்லாதவனாயுஞ் சிஷியனல்லாமலுமிருக்கிறவனுக்கு ஏதாவது உபதேசித்தால் அந்தவுபதேசநாய்த்தோலாற் செய்யப்பட்டதுருத்தியிலிருக்கிறபசுவின்பாலைப்போல அசுத்தமாகப்போகும் ❋ அவித்தையினாலுண்டாகிற ஆசைமுதலானதுகளவித்தைபோனத்தினால் போய்விடுமாகையால் ஆசை பயம் கோபம் அபிமானம் பாபமுதலானதுகளில்லாத உம்மைபோற்கொத்தபேர்கள் ஏந்தபுருஷனுக்குபதேசம்பண்ணுகிறார்களோ அந்தப்புருஷனுடையபுத்தியானது இந்தவுபதேசகாலத்திலேயே யிளைப்பாறுதலையடைகுதென்றுவிசுவாமித்திரர் சொல்லும்போது வியாசர்நாரதர்முதலானபேர்கள் அவர்சொன்னதையே நன்றுநன்றென்றுதுதிசெய்தார்கள் ❋ அதன்பின்புதசரதர்பக்கத்திலிருக்கின்ற முனீஸ்வரராகிய வசிஷ்டர்சொல்லத்துடங்கினார் ❋ (அ - கை) தத்துவத்தையறிந்தோர்கட் கடையாளமாயிருக்கிற அகங்காரமில்லாமலிருக்கைமுதலானகுணங்களைத்தன்னுடையநடத்தைகளினாலிதராளுக்குச் சிட்சிபபிக்கின்றவர்போல வணக்கமுள்ளவார்த்தையினால் தன்னைப்பிரார்த்திக்கப்பட்டகாரியத்தைவசிஷ்டர்பிரதிக்கினைபண்ணுகிறார் ❋ வாரீர்முனீசுவரரோநீர் ஏனக்கு ஏதை ஆக்கினைபண்ணுகிறீரோ அதைவிக்கினமில்லாமல் நான்செய்கிறேன் சமர்த்தனாகவிருந்தாலும் ஏவன்றான்பெரியவாளுடையவார்த்தையைத்தள்ளுகிறத்துக்குயோக்கியன் ❋ தீபத்தினாலிராத்திரியிலிருக்கிற இருட்டைப் போக்கிறதுபோல இராமர்முதலான இராஜகுமாரர்களுடையமனதிலிருக்கிற அஞ்ஞானத்தை ஞானோபதேசத்தினாற்சீக்கிரமாகநான் போக்கிவைக்கிறேன் ❋ யாதொருஞானமானதுபிரமாவினால் சமுசாரப்பிராந்திபோவதற்காக முன்னாலேநிடதபற்வதத்திற்சொல்லப்பட்டதோ அதையெல்லாத்தையுங்குறைவில்லாமற்கிரந்தத்தோடும் அருத்தத்தோடும்நினைத்துக்கொண்டிருக்கிறேன் அல்லது அளவில்லாமலிருக்கிறதினால் பூரணமாயும் ஞானசொரூபமாயுமிருக்கிற அந்த ஆத்மசொரூபத்தை ஏப்போதும் அனுசந்தானம் பண்ணிக்கொண்டிருக்கிறேன் ❋ ஸ்ரீவான்மீகிசொல்லுகிறார் மகாத்மாவாயிருக்கிற இந்தவசிஷ்டரானவர்பிரகாசமாக முன்சொன்னபடிக்குப் பிரதிக்கினைபண்ணிக்கொண்டு சூரனாவது அல்லது கூத்தாடியாவது ஆயுதங்களையெடுத்துக்கொள்ளுகிறது அலங்காரங்களைப் பண்ணிக்கொள்ளுகிறதுமுதலானசாமக்கிரியைகளோடுகூடிக்கொண்டெப்படிவிளங்குகிறானோஅப்படிசிஷியனுக்குஆத்மஞானம்வரவேண்டியத்துக்காகசாதகங்களான திஷ்டாந்தங்கள் கதைகள் பிரமாணங்கள்யுத்திகள்முதலானதுகளை நினைத்துப்பார்க்கிறத்தினாலுண்டான உச்சாரகமுதலானசாதனங்களாலடையப்பட்டும் விசேஷமா

கவுபதேசம்பண்ணுகிறபேர்க ளுடையதேசசையுடைத்தானவராயு மிருந்துகொண்டு சகலசெனங்களுடைய அஞ்ஞானமும் வேரோடுபோவதற்காகச்சொல்லப்படுவதாயும் பரமபதத்தை முக்கியமாகத் தெரியப்படுத்துவதாயுமிருக்கிற இந்தச்சாஸ்திரத்தைச்சொல்லத்துடங்கினார்.

இரண்டாவதுசருக்கமுற்றிற்று.

மூன்றுவது சருக்கம்.

இச்சருக்கத்தில்இராமருடையசங்கையைப்போக்கடிக்கிறகாரணமாகஸ்தூலமுதலானதுகளாயிருக்கிறசெகத்துகளுடையஅத்தியாரோபஅபவாதங்களால் உட்பார்வையினா லறியப்பட்டிருக்கிற சிதாத்மாவை இச்சாஸ்திரத்திற்குவிஷயமாகச்சொல்லப்படுகின்றது.

(அ-கை) இந்தப்பிரகாரம்முன்னடந்தகாரியத்தையெல்லாம் விஸ்தாரமாகச்சொல்வதற்காக ஸ்ரீவசிஷ்டர் ஆரம்பிக்கிறார் | சிருஷ்டியினுடைய ஆதியில்பகவானாயிருக்கிற பிரமாவினால் செனங்களுடையதுக்கம்போகவேண்டியதற்காகமுன்னாலெனக்குஞானசாதனமாயிருக்கிறயாதொருசாஸ்திரமானதுசொல்லப்பட்டுதோ அந்தச்சாஸ்திரத்தைநான்சொல்லுகிறேன் வேறேசொல்லவில்லை [இப்படிசொன்னதினாற்சம்பிரதாயஞ்சுத்தமென்பதுகருத்து] (அ-கை) இந்தப்பிரகாரம்பிரதிக்கினை பண்ணினத்தினால் சிரவணத்திற்சாவதானப் படுத்தப்பட்டிருக்கிற இராமர்வேறொன்றைக்கேழ்க்கவேண்டுமென்கிற ஆசையிருக்கும்போது முன்சொன்னத்திற் சாவதானமாகமனதிருக்கமாட்டாததினால் சூசிகடாகநாயம்போல முன்னாலேவேறொன்றை அறியவேண்டுமென்கிற ஆசையைப்போக்கடிக்கிறத்தைப்பிரார்த்திக்கிறார் | வாரீர்பகவானேவிரிவானமோட்சசாஸ்திரத்தைச்சொல்லப்போகிறநீரிப்போதெனக்குண்டானசமுசியத்தைப்போக்கினபின்புசொல்லும்* (அ கை) அந்தச்சமுசியமாவதெதென்னவெனில் | சகலமுந்தெரிந்தவராயும் மகாபுத்திசாலியாயும் குருவாயும் சுகருக்குப்பிதாவாகியுமிருக்கிறவியாசரொன்னத்தினால்விதேகமுத்தராகவில்லை அவர்பிள்ளையானசுகப்பிர்மரிஷி யெப்படிவிதேகமுத்தரானார் [சேஷமில்லாமற்றுக்கங்கள்போகிறத்தினால் நிரதிசயானந்தசொருபமாயுஞ்சுயம்பிரகாசமாயுமிருக்கிறஆத்துமாமாத்திர

மாகச்சேஷித்திருக்கையினால் விதேகமுத்திதானே ஞானபலமானால் அந்தஞானபலமானது சகலத்தையுமறிந்தவராயிருக்கிற வியாசருக்குண்டாகாமற்போனால்ஞானம் அனித்தியமானபலத்தோடுகூடினதாகவாகுமு ஞானத்தினால் அஞ்ஞானஞ்சுத்தமாகப்போய்விட்டால்அப்போதேகமுதலானகாரியங்களுக்கு அஞ்ஞானரூபமான முக்கியகாரணம் நசித்துப்போகும்போதுகாரியங்களுடையயிருப்புக் கூடாததினாற்பிழைத்திருக்கிறதில்லாமற்போகும்பிழைத்திருக்கிறதில்லாமற்போனால் பிரமவித்தையைத்தெரிவிக்கிறபேரில்லாததினாற்சம்பிரதாயம்விட்டுப்போகும் அஞ்ஞானஞ்சுத்தமாகப்போகவில்லையெனில்மோட்சமில்லாமற்போகுங்கருமங்களைப்போலஞானமும்புண்ணியரூபமாகமரணம்வந்தபின்புபலிக்குமென்றுசொல்லக்கூடாதுஅதேனெனில்ஞானங்கருமத்தைப்போலவிதிக்கப்படாததினாற்சீவன்முத்திசித்திக்கமாட்டாதென்றுதாற்பரியம்] (அ-கை) இந்தப்பிரகாரங்கேட்கபகவானாயிருக்கிறவசிஷ்டர்இவ்வளவுக்குள்ளிராமர்அவித்தையின்சொரூபத்தையும்அதனாலுண்டானபந்தத்தையும்அதற்குச்சாட்சியாயும்அளவிடப்படாமலுமிருக்கிறசிற்சொரூபத்தையும்அறியவில்லையோ அவ்வளவுமட்டுஞ்சீவன்முத்தியில்விசுவாசப்படமாட்டாரென்றுமுன்னதைத்தெரிவித்தபின்புசந்தேகத்துக்குச்சமாதானம்பண்ணுவோமென்று அதைத்தெரிவித்தற்காகச்சாட்சியினிடத்தில்ஸ்தூலப்பிரபஞ்சத்தினுடையஅத்தியாரோபத்தைத்தெரிவிக்கிறார் | (சூரியன்சந்திரன்நட்சத்திரங்கள்முதலானபிரகாசங்கள்ஆத்மப்பிரகாசத்தினால்பிரகாசிக்குதென்கிறசுருதியினால்) சூரியன்முதலானசகலசெகத்தையும்பிரகாசம்பண்ணிவைக்கிறத்தினாலுத்தமமானசூரியனாயிருக்கிறபரமாத்மாவாகிறசிற் பிரகாசத்துக்குள்ளேமூன்றுலகங்களோடுகூடினபிரமாண்டங்களாகிறஅணுக்களிருந்திருந்து லயத்தையடைந்ததிவ்வளவென்றெண்ணக்கூடாது * துவக்கப்பட்டும்முகிக்கப்படாமலுமிருக்கிறமூன்றுலகங்களுடையகோடிகள்ஒருவனாலுமிவ்வளவென்றெண்ணக்கூடாது*பரமாத்மாவாகிறசமுத்திரத்திலுண்டாகப்போகிறதுகளாயிருக்கிற பிரமாண்டங்களாகிற அலைகளைக்கணக்கிடுகிறவாக்கேகிடையாது * (அ-கை) தான்கேட்ட அருத்தத்தை உபேட்சைபண்ணிவேறேசொல்லுகிற குருவினுடையமனதிலிருக்கிற தாற்பரியம் தன்னால்நன்றாக அறியப்பட்டதென்றுகுருவுக்கு உச்சாகம்வருதற்காகத்தன்னுடைய சாமர்த்தியத்தைக் காண்பிக்கின்ற இராமரானவர் அம்மூன்றுசிருஷ்டிகளில் தானொருவிசேஷத்தைச் சொல்லுகிறார் | பூதங்களாயும்பவுஷியங்களாயுமிருக்கிறசகங்களுடை யசிருஷ்டிவரிசைகளைக் கணக்கில்லையென்றுசொல்லவது நியாயந்தான்இவ்விரண்டுக்கும் நடுவிலிருக்கிறவர்த்த

மானசகத்துக்கள் பூதகாலசகத்துக்கவிளப்போலவா பவுஷியகாலசகத்துக் கவிளப்போலவா இவ்விரண்டுமல்லாததாலுங் குறைந்தகணக்குள்ளதாலு ம்மூன்றையுஞ்சரியாகச் சொல்லக்கூடாது [ஆகையாலாரோபிக்கப்பட்டி ருக்கிற அனந்தசகங்களுக்குஉபாதானகாரணமாயும் ஆத்மதத்துவமாயும் நாசமில்லாததாயும் ஒன்றாயும் அதிஷ்டானமாயுமிருக்கிற சிதாத்மாவா னவர் உம்மால் தெரிசிக்க வென்றுவெறியப் பட்டுதென்று தாற்பரியம்] (அ - கை) இந்தப்பிரகாரந்தன் மனதிலிருக்கிறதாற்பரியத்தை இராமர றிந்துமதிலொருவிசேஷஞ் சொன்னதினாற்சந்தோஷத்தையடைந்து முன் சொல்லப்பட்ட ஸ்தூலப்பிரபஞ்சத்தைப் பொய்யென்றறிவதற்காக சூட்சு மபூதங்களே பஞ்சீகரணத்தினால்ஸ்தூலபூதமாகத் தோற்றுகின்றமையாற் சூட்சுமப்பிரபஞ்சமாத்திரமா யிருக்கையைக் காண்பிக்கப்போகிறவராயி ருக்கிற ஸ்ரீவசிஷ்டர் சொல்லுகிறார் | பசுபட்சிமுதலானதுகள் மனுஷி யாள்தேவாளிவர்களுக்குள்ளே யாதொருபிராணியானவன் ஏந்தத்தேசத் தில் ஏந்தக்காலத்தில மரிக்கிறானோ பிரத்தியகாத்மாவாயிருக்கிற அந்தப்பி ராணியானவன் அந்தத்தேசத்தில் அந்தக்காலத்தில் மூன்றுலகத்தையுஞ்சீ க்கிரமாகப் பார்க்கிறான் * (அ - கை) அந்தப்பிராணியானவன் ஏந்த சாதனங்களோடுகூடனந்தச்சொருபமாகவிருந்துமுன்சொன்னமூன்றுல கத்தையும்பார்க்கிறானெனில் | தூமமார்க்கம் அர்ச்சராதி மார்க்கங்களுக் கபிமானிகளானதேவதைகளால் பரலோகத்தையடையப் பண்ணுகிறத்து க்குயோக்கியமாயும் ஆதிவாகிகமென்று பேரோடுகூடியும் சித்தம் அகங் காரம் மனது புத்தி தசேந்திரியங்கள்பஞ்சப்பிராணன்கள்இவ்வுருவமாயும் வாசனாமயமாயுமிருக்கிற சூட்சுமசரீரத்தோடுகூடின அந்தப்பிராணி யா னவன்றன்னிருதயமத்தியிலிருக்கிற தகராகாசத்திலேயே வாசனாமயமாயி ருக்கிற இந்தமூன்றுலகத்தையும்பிராந்தியினாலனுபவிக்கிறான் ஏதார்த்த மாகவோவென்றாலந்தப் பிராணியானவன் சென்மமுதலானவிகாரங்களில் லாமலிருக்கிற சிதாகாசசொருபனாகவிருக்கிறான் ஃ சங்கை ஃ இந்தச்சீவாத் மாவானவன் கண்வழியாகவாவது சிரசுவழியாகவாவது இன்னஞ் சரீரத் தில்வேறாகவிருக்கிற இடைவெளிவழியாகவாவது சரீரநசிக்கிற காலத்தில் வெளியிற்கிளம்பிப்போகிறான் அவனோடுகூட பிராணனுங் கிளம்பிப்போ குதென்றுசொல்லுகிற சுருதிமுதலானதுக்குவிரோதமாக மரித்தபுருஷ னானவன் தன்னிருதயத்திலேயேபரலோகத்தைப் பார்க்கிறானென் றெப்ப டிசொல்லப்படுமென்று கேட்கும்போது ஃ சமாதானம் ஃ நீர்சொல்லுகிற துசரிதான் ஆனாலும் கருமம் உபாசனைகளையனுசரித்துப் பரலோகமுத

லானவிவகாரப்பார்வையினாலிந்தச்சுருதிமுதலானது சொல்லுகின்றது இவ்விடத்திலேயோவென்றால் பரமார்த்தப்பார்வையினால் ஆகாசம்பூமிமுதலானது இந்தச்சிதாகாசத்துக்குள்ளேயிருக்கிறதென்று சொல்லுகிறசுருதியைப்போல இருதயாகாசத்திலேதானே பரலோககற்பனையானதுசொல்லப்படுகின்றது [சாட்சியிருதயாகாசமாத்திரமென்கிற நியமத்தைத்தள்ளிக் கிரியையில்லாமலிருக்கிறனென்கிறத்தையும் பிரபஞ்சம்வாசனாமாத்திரமாகயிருக்குதென்கிறத்தையும் தெரியப்படுத்துகிறத்துக்காக பரலோகத்துக்குப்போகிறதுபோல உயரக்கிளம்புகிறது நடக்கிறதுமுதலானதும் அவ்விடத்திலேயேகற்பனாமாத்திரமாக விருக்கின்றமையால் முன்சொன்னது கூடலாமென்றுதாற்பரியம்] (அ - கை) ஓரிடத்திற்சொன்னஞாயத்தைப்பலவிடத்திலுங்காண்பிவிக்கிறார் — இந்தப்பிரகாரம்மரித்ததுகளாயும் மரிக்கிறதுகளாயும் மரிக்கப்போகிறதுகளாயுமிருக்கிறபிராணிகளுடைய கோடிகளானதுகள் மரணகாலத்தில்வாசனாமயமாய்த்தங்களிடத்தில் வியித்தும் அவ்வாசனாநுகுணமாக தேவமனுஷியாதிரூபமாய் வெவ்வேறாகவுண்டாகியும்விளங்கிக்கொண் டிருக்கிற செகத்துக்களை யடையுதுகள் * (அ - கை) இந்தப்பிரகாரஞ்சகத்துவாசனாமயமாயிருக்கும்போதுண்டானபலத்தை ஆறுசுலோகத்தினாற் சொல்லுகிறார் | மனதினாற்செய்யப்பட்டபூசைமுதலானதுகளில் ரத்தனப்பட்டு இரத்தினமயமான உப்பரிகைமுதலானதுகளைச்செய்கிற சங்கற்பசிருஷ்டிபோலவும் ரத்தனமில்லாமலிருக்கிறமனோராச்சியவிலாசம்போலவும் மாலைபோலவரிசையான இந்திரசாலப்பிராந்திபோலவும் கதையினுடைய அருத்தங்கள் தோற்றுகிறது போலவும் வாதரோகவிசேஷத்தினாற்பூமி அலைகிறபிராந்தி போலவுங் குழந்தையைப்பயப்படுத்துகிறத்துக்காகக் கற்பிக்கப்பட்டபிசாசம்போலவும் நிருமலமான ஆகாயத்திற்றோற்றுகிற முத்துக்கூட்டம்போலவும் ஓடத்திலேறிப்போகிறபுருஷனுக்கு கரையிலிருக்கிறமரம்நடக்கிறதுபோலவுஞ் சொப்பனத்திற்காணுகிறபட்டணம்போலவும் நினைவினாலுண்டாயிருக்கிற ஆகாசபுட்பம்போலவுமிருக்கிற சகத்தினுடையதோற்றுதலை மரித்தபுருஷனானவன் தன்னிருதயத்திற்றானே அனுபவிக்கிறான் * (அ - கை) அப்போதுசாக்கிரத்துக்குஞ்சொப்பனத்துக்கு மிகவுங்குணபேதமிருக்கின்றமையால் சொப்பனமுதலானதுபோலச் சாக்கிரமாக மாட்டாதென்று சொல்லுகிறவியாசருடைய சூத்திரமும் அந்தச்சாக்கிரத்தையனுபவிக்கிற புருஷனுக்கு வெகுகாலம்நியமமாகத்தொடர்ந்துவருகிற விவகாரமானது சத்தியமாகத் தோற்றுகையுமெப்படி கூடலாமெனில் | சொப்பனத்தைப்

போலத் தோற்றுகிறபிரபஞ்சமானது நெடுநாளானபரிசயத்தினாலும் ப
ஞ்சீகரணத்தினாலும் வலுவாயிருக்கிறஅந்தச்சகத்தே இகலோகமென்றேசீ
வாகாசத்திற்றோற்றுகிறது [அந்தப்பேதத்தினாலேயே சொப்பனசாக்கிரங்
களுக்குக்குணபேத விவகாரமேதவிரவேறொன்றினாலும் பேதமில்லையெ
ன்பதுகருத்து] (அ - கை) ஓருநிலையில்லாதசுபாவத்தையுடைத்தாயி
ருக்கையினாலுஞ்சகம் பொய்யென்கிறத்தைத்தெரிவிக்கிறார் | திரும்பவுஞ்
சிவனானவன் அந்தச்சகத்திலேயே செனனமுதல்மரணபரியந்தமிருக்கிற
நடத்தைகளையும் மரணமுதலானதுகளையுமனுபவித்துக்கொண்டுபரலோ
கத்தைக்கற்பித்து அவ்விடத்தில்மரித்தவனாய்க் கொண்டுதிரும்பவுமுன்சொ
ன்னபடியனுபவிக்கிறான் * அந்தப்புருஷனுக்குள்ளேவேறேவெகுபுருஷா
ளிருக்கிறார்கள் அவர்களுக்குள்ளேயும் வேறேவெகுபுருஷாளிருக்கிறார்கள்
இந்தப்படிஇந்தச்சமுசாரங்களானதுகள் வாழைப்பட்டைகள்போலொன்
றுக்குளொன்று வரிசையாகவிருக்கின்றதுகள் * (அ - கை) இந்தப்பிற
காரஞ்சகத்துபொய்யாயிருக்கை சித்திக்கும்போது அந்தச்சகத்தினுடைய
அபவாதத்தினால் ஆத்மாமாத்திரமாகச்சேஷிக்கிறதுசித்திக்குதென்கிறகருத்
தினாற்சொல்லுகிறார் | மரணத்தையடைந்த அந்தப்புருஷர்களுக்கு அந்த
ப்பரலோகத்திலும் பூமிமுதலானமகாபூதங்களுடைய கூட்டங்கள் சகத்து
க்களுடையநடக்கைகள் இதுகள்யாதொன்றுங்கிடையாது ஆனாலும் அ
ந்தந்தப் புருஷாளுக்கு பிராந்தியினாற் சகத்துக்கள் தோற்றுகின்றதுகள்
* (அ - கை) அவித்தைவேரோடுநசிக்கிறத்தைத்தவிர அந்தப்பிராந்
திகள்போகிறதில்லையென்கிற கருத்தினால்வித்தையினால் நசிக்கிறதுசித்தி
க்கவேண்டியதற்காகச் சூட்சுமரூபமாகத் தெரியப்படுத்தப்பட்ட பிரபஞ்ச
த்துக்குக்காரணமாயிருக்கிற அவித்தையாமாத்திரமாயிருக்கையைச் சொல்
லுகிறார் | அளவிடப்படாமலிருக்கிற இந்த அவித்தையாகிறமகாநதியா
னது நானாவிதமாக ஓடிக்கொண்டும் மூடர்களுக்குத் தாண்டக்கூடாததா
கியும் அலைந்துக்கொண்டிருக்கிறசகத்தாகிற அலைகளோடு கூடிக்கொ
ண்டுமிருக்கின்றது * (அ - கை) அவித்தை முதலான சகலகற்பனைக்
குமிருப்பிடமான பிரமத்தைக் காண்பிக்கிறார் | பரமாத்மாவாகிற பெரி
தானசமுத்திரத்தில்சகத்தாகிற அலைகளானதுகளடிக்கடிமுன்னுண்டா
னதாயும் வேறேபுதிதாயுமனேகவிதமாயுமிருக்கின்றதுகள் * உலகத்தில்
சிலசனங்கள்குலங்களுடையவரிசை மனது குணங்களிதுகளெல்லாத்தினா
லும்முன்போற்சரியாயும் சிலசனங்கள் முன்போற்பாதிசரியாயும் பாதிவே
றேபிரகாரமாயுஞ் சிலசனங்கள்முழுதும்வேறே பிரகாரமாயுமிருக்கின்ற

துகள் ✻ (அ - கை) பிரகிருத சங்கையினுடைய சமாதானத்துக்காக ச்சகத்தினுடையநிலையாமையையு மிச்சாஸ்திரத்துக்கு விஷயத்தையுங்கா ண்பிக்கிறார் | புராணமுதலான செய்கை யோக்கியமானசனனம் சாஸ் திரமுதலானஞானம் ஆத்மவித்தை யிவைகளோடுகூடிய வியாசருடைய அவதாரமாகிற அவைகளில் எதிரேயிருக்கிற இவ்வியாசமுனியைமுப்பத்தி ரண்டாவதாகநினைக்கிறேன் ✻ (அ - கை) அந்தமுப்பத்திரண்டுவியாச ரிஷிகளுக்குள்ளே தாரதன்மியத்தைச் சொல்லுகிறார் | அவ்வியாசமுனி களுக்குள்ளேபனிரெண்டுவியாசமுனிகள் குலம்உருவம்அதிகாரம்நடத்தைஇ துகளினால்சரியாயுந் துரியத்தையடைந்தவிசேஷப்பாறுதலில்லாமலிருக்கிறத்தி னாற்புபுத்தியாயுமிருக்கிறார்கள் மறுபடிபத்து வியாசமுனிகள் சரியான உருவத்தையுடையவர்கள் மறுபடிபத்துவியாசமுனிகள் குலத்தினால்வே றுவேறாயிருக்கிறார்கள் ✻ இப்பவும்வேறேயாயிருக்கிற மனுஷியாள்வி யாசவான்மீகிகளாக வுண்டாகப்போகிறார்கள் பிருகு ஆங்கிரசு புலஸ்திய ரிவர்கள்முன்போலும் அதற்குவேறேயாயு முண்டாகப்போகிறார்கள் ✻ ம னுஷியாள் தேவரிஷிகள் தேவதைகளிவர்களுடைய கூட்டங்களானதுக ள் ஒருக்கால்சேர்ந்துகொண்டு அதிகமாகவுண்டாகிநாசத்தையடைகிறார்க ள் ஒருக்கால்வெவ்வேறாகவுண்டாகிநாசத்தையடைகிறார்கள் ✻ பிரமகற்ப த்தினுடைய எழுபத்திரண்டாவதா யிருக்கிறதிரேதாயுகமான திப்போதிரு க்கின்றது கற்பந்தோறும்முன்னேயுமிருந்தது உண்டாகவும்போகுது நீ யும் நானுமிந்தவுலகங்களும் முன்போலவும் அதற்குவிலக்ஷணமாகவும் முன்னாலுண்டாயும் மேலுமுண்டாகவும்போகிறோ மிதுகளெல்லாம் நா னறிந்திருக்கிறேன் ✻ ஆச்சரியமாயிருக்கிற காரியங்களோடுகூடியும் மு னீசுவரராயும் திரிகாலக்கியானமுள்ளவராயும் எதிரேயிருக்கிறவியாச மு னியினுடைய இச்சனனமானது சீவன்முத்தகிறமத்தினால் பத்தாவதாகக் காணப்படுகுது [முப்பத்திரண்டாஞ் சன்மத்தை யுடையவ ராகமுன்னே சொன்னதுசாமானியமென்றும் பத்தாவது சன்மத்தையுடையவராக இ ப்போதுசொன்னதுசீவன்முத்தகிற மத்தினாலென்றுமறிவது] வியாசவா ன்மீகிகளோடுகூடிக்கொண்டிருக்கிற நாங்களனேகந்தரமுண்டானோமிந் தநாங்களே வெவ்வேறாகவுமனேகந்தா முண்டானோமிந்தநாங்களே ஒருவ ருக்கொருவர்சரியாயுஞ்சரியில்லாமலுந் தெரிந்தவர்களாயுஞ் சரியானமன துள்ளவர்களாயும்நாநாவிதமானவுருவங்களையுடையவர்களாயும் உண்டா யிருந்தோம் ✻ இவ்வுலகிலிவ்வியாசரின்னம் எட்டுஅவதாரஞ்செய்துஅனே ககதைகளோடுகூடினமகாபாரதமென்கிறகிரந்தத்தையும்வேதங்களுடைய

பிரிவினையையுஞ்செய்துதன்வமிசத்துக்குப் பிரசித்தியைச்செய்துவைத்துப் பிரம பட்டத்தைப் பிரசித்தமாகவனுபவித்துப் பின்பு விதேகமுத்தியையடையப்போகிறார் * (அ - கை) இவ்வியாசருக்கிப்போது சீவன்முத்தியைத்தெரிவிக்கிறார் | சாந்திகுணமுள்ளவராயுமஞ்ஞானமில்லாதவராயும்பானனதென்கிற அத்தியாசகற்பனையில்லாதவராயுந் துக்கம்பயமிதுகளில்லாதவராயும் மனதைச்செயித்தவராயுமிருக்கிற இவ்வியாசரானவர்சீவன்முத்தரென்று சொல்லப்படுகிறார் * பிராணிகளானதுகள் திரவியம் பந்துக்கள் வயது கருமம் வித்தை ஞானம் நடத்தை இதுகளால் ஒருக்காலசரியாயும் ஒருக்கால்சரியில்லாமலுமிருக்கின்றதுகள் * அந்தப்பிராணிகளானதுகள் ஓரிடத்தில் ஒருகாலத்தில் அனேகசென்மங்களிலுண்டாகின்றதுகள் ஒருக்கால் உண்டாகிறதுகளில்லை இத்தமையையானது இந்தப்பிரகாரம்ஒழிவில்லாமலிருக்கின்றது * இந்தப்பிராணிகளுடையவரிசையானது அடிக்கடிஅளக்கப்பட்டுக்கும்பலாகச்சேர்க்கப்பட்டவிளாப்பட்டடையைப்போலமேலதுகீழதாயுங்கீழதுமேலதாயும்வித்தியாசத்தையடைகின்றது *காலமாகிறசமுத்திரத்திலிருந்துஞ்சிருஷ்டிரூபமானஅலைகளானதுகள்அடிக்கடிமுன்னிருந்தகிரமமாயும் அதற்கு வித்தியாசமான கிரமமாயும் உண்டாகுதுகள் * (அ - கை) சீவன்முத்தருக்குயோகாப்பியாசபலத்தினலெதிகாரத்துக்கு யோக்கியமானவெகு விதமானசரீரத்தையடைந்த போதிலும் உண்டாயிருக்கிற முத்திக்குக்குறைவில்லையென்று சொல்லுகிறார் | சீவன்முத்தனாயிருக்கிற புருஷனானவன் சமசித்தமுள்ளவனாயும் அவித்தையினுடைய மறைவில்லாததினால அசாரமாயிருக்கிற தேகமுதலானத்தில் ஆத்மபுத்தியில்லாதவனாயும் விகற்பமில்லாதவனாயும் ஆத்மசொரூபத்தினுடையசாரமயனாயும் முக்கியமாயிருக்கிற சமகுணமாகிற அமிர்தத்தினால் திருத்தியடைந்தவனாயுமிருக்கிறான் [ஆகையால ஞானத்துக்குச்சீவன்முத்திதான்பலம் அந்தச்சீவன்முத்தியும் ஒருக்காலுண்டாகிறது ஒருக்காலுண்டாகிறதில்லையென்பதுகிடையாதென்றுகருத்து.] *

மூன்றாவதுசருக்கமுற்றிற்று.



நான்காவது சருக்கம்.

இச்சருக்கத்தில் முத்தியடைந்தபேர்களுடைய அனுபவத்தினால் சீவன்முத்தி விதேகமுத்திகளுக்குப்பேதமில்லையென்னும் மோட்சோபாயத்தைச் சொல்லுகிற மூலக்கிரந்தங்கெட்டிப்பட வேண்டியதற்காக சாஸ்திரங்களிற்சொல்லியிருக்கிற புருஷ வர்த்தனமாக்குதியாகச் சொல்லப்படுகின்றன.

(அ - கை) நித்தியமுத்தசுபாவமாயிருக்கிற ஆத்மாவுக்கு அஞ்ஞானத்தினாலுண்டாயிருக்கிற மனோவிகாரமே பந்தமென்னும் ஞானத்தினால் அந்தப்பந்தம் நசிக்கிறதே முத்தியென்றுஞ்சொல்லப்படும் அந்த அஞ்ஞானஞ் சேஷமில்லாமல் நசிக்கும்போது சித்திரமென்று அறியப்பட்டசித்திரப்புலியானதுபோல் உலகவிவகாரமானது காணப்பட்டபோதிலுஞ் சந்தோஷத்துக்கேதுவே தவிர துக்கத்துக்கேதுவல்லவென்று சீவன்முத்தன் விதேகமுத்தனிவர்களுக்குப்பேதமில்லையென்று முன்கேட்ட சங்கையைச்சமாதானம்பண்ணிப்பிரகிருதமாயிருக்கிற ஆத்மதத்துவத்தை விஸ்தாரமாய் உபதேசிக்கவேண்டுமென்கிற இச்சையுள்ள ஸ்ரீவசிட்டரானவர் மூலக்கிரந்தங்கெட்டிப்படவேண்டியதற்காக புருஷ வர்த்தனத்தைமுன்னே சமர்த்திக்கிறார் வாரீசாந்தமாயிருக்கின்ற இராகவனே அசைவில்லாம லிருக்கும்போதும் அவிரூபமாக அசைந்துகொண் டிருக்கும்போதுஞ் சமுத்திர சலமானது எப்போதுஞ் சலமாகவே யிருக்குதோ அப்படியே சீவன்முத்தவிதேகமுத்த முனீஸ்வரருக்கு ஆத்ம சொரூபமாக யிருக்கையானது சரியாகவே யிருக்கின்றது * புருஷனுக்கு விதேகமுத்தி வந்தாலுஞ் சீவன் முத்திவந்தாலும் அது விஷயத்தைப் பற்றி வரப்பட்ட தல்ல [அதேவெளவில் சுவற்க முதலானது போல முத்தியும்விஷயத்தைப்பற்றிவருமேயானால் அப்போது அப்படியேவிஷயங்களுடைய ஏற்றத்தாழ்ச்சியினால் முத்தியும் ஏற்றத்தாழ்ச்சியாகுமென்பது கருத்து] (அ - கை) ஆனாலுந் தேகத்தினுடைய இருப்பானது போகத்தைப்பிரயோசனமாகவுடைத்தாயிருக்கையினால் சீவன்முத்தனுக்குப்போகங்களுண்டு விதேகமுத்தனுக்குப் போகங்களில்லையென்கிற விசேஷமிருக்குமென்று கேட்கும்போது சொல்லுகிறார் | சத்தியபுத்தியினாற்போகங்களைப்புசியாமலிருக்கிறசீவன்முத்தனுக்குப்போகங்களுடைய அனுபவங்களானதுக ளெப்படிவரும் [போகங்களிற்சத்தியபுத்தியினால் நான்புசிக்கிறேனென்கிற அபிமானத்தினாற்போகத்தைப்புசிக்கும்போது போகத்தினாற்பண்ணப்பட்ட விசேஷமுண்டாகுஞ்சம்பந்தமில்லாமலும் உதாசினனாயுமிருக்கிற ஆத்மாவோடே வொன்றாயிருக்

கிறபார்வையுள்ள சீவன்முத்தனுக்கு விசேஷமில்லையென்பது கருத்து ||
(அ - கை) அப்பேர்ப்பட்ட வியாசருக்கு தேகமென்னத்தினா லிருக்கு
தென்றுகேட்கும்போது சொல்லுகிறார் | வன்முத்தராயும் முனீஸ்வரரா
யுமிருக்கிற இவ்வியாசரைதேகத்தோடே கூடினவர்போல் நம்முடையக
ற்பனையினால் எதிரேயிருக்கிறவராகப் பார்க்கிறோமேதவிர அவருடையம
னதில் தேகமில்லாமலிருக்கிற நிச்சயத்தைநாமறியோம் ※ ஞானசொரூப
மானசீவன்முத்தருக்கும் விதேகமுத்தருக்கும் பேதத்துக்கேதுவாயிருக்கி
ற அஞ்ஞானம்போகும்போதும் ஞானமாத்திரமாகச் சேஷித்திருக்கும்போ
து என்னபேதமிருக்குது அலையாக இருக்கும்போதெந்தச்சலமிருக்குதோ
அந்தச்சலந்தான் அலையில்லாமற் றெளிவாயிருக்கையிலு மிருக்குது ※
(அ - கை) சலத்தில் ஒருக்கால் தெளிவில்லாததினால்விசேஷமிருக்கலாமென்று
வேறேதிஷ்டாந்தத்தினாற்சொன்ன அருத்தத்தைச்சாதிக்கிறார் | வாயுவான அ
சைவோடேகூடினபோதிலுமசைவில்லாதபோதிலும் வாயுவாகவேபேதமி
ல்லாமலெப்படியிருக்குதோ அப்படிசீவன்முத்தனுக்கும்விதேகமுத்தனுக்கு
மற்பமும்பேதமில்லை ※ (அ - கை) சீவன்முத்தியென்றும் விதேகமுத்தியென்
றும்பந்தமென்றும்மோட்சமென்றுமிதுமுதலானவிவகாரமானது அஞ்ஞா
னியினுடையபார்வையினால் கற்பிக்கப்பட்டதேதவிர ஞானியினுடையபார்
வையினால் கற்பிக்கப்பட்டதல்லவென்று சொல்லுகிறார் | எப்போதும்பிரி
வில்லாமலும் ஒன்றாயுமிருக்கிற ஆத்மசொரூபமானசீவன்முத்திதானாவது
விதேகமுத்திதானாவது எங்களுக்கு மிவ்வியாசருக்கும் பரமார்த்தமான
பார்வைக்குப் பேதமில்லை ஞானத்துக்குப் பலமாயிருக்கிற அவ்வாத்
மாவினுடைய லாபத்தில்விசேஷமில்லாததினால் ஞானத்துக்கு ஒருக்கால்
பலமுண்டு ஒருக்காலபலமில்லையென்கிற தோஷத்துக்கிடமில்லை ஞான
முண்டாகும்போது தேகம்போய்விடவேண்டுமென்கிற சங்கையுமில்லை
அதேதெனில் தனக்குவிரோதியாயிருக்கிற அஞ்ஞானந்தானே ஞானத்தி
னாற் போகிறபடியால் தேகமிருக்கிறதும் பிராரத்துவ கருமத்தினுடைய
பலமாயிருந்துகொண்டு ஞானத்துக்குச்சமானமாகவு மதற்கேதுவாகவுமி
ருக்கிறத்தினால் ஞானத்துக்குவிரோதியல்ல அதெப்படியென்றால் முக்கிய
காரணமாயிருக்கிற நித்திரைபோனபோதிலுஞ் சொப்பனத்தினுடைய அ
னுபவத்தினாலுண்டான சமுஸ்காரமானது சிறிதுகாலமிருக்கின்றதுபோ
ல அஞ்ஞானம்போனபோதிலும்பிராரத்த கருமமிருக்கிறவரைக்குந்தேகமு
தலானதுகளுடைய தோற்றுதல்கூடலாமென்பதுகருத்து ※ (அ - கை)
இந்தப்பிரகாரமிராமருடைய சமுசயத்தைநீக்கிமோட்ச சாஸ்திரத்தைச்

சொல்வதற்கு ஆரம்பிக்கிறார் | ஆகையால் முதன்மையாய்க்கேட்கிறது
க்கழகாயும் அஞ்ஞானிகளுடைய அஞ்ஞானமாகிற குருட்டுத்தனத்தைப்
போக்குகிறதாயு மிருக்கிற ஞானசாஸ்திரத்தைக்கேளும் ※ (அ - கை) சா
ந்திமுதலானசாதன சம்பத்தோடுகூடின சுகப்பிரமரிஷி முதலான பெரி
யோர்களுக்குவேதாந்த சிரவணம்பலித்திருக்குது சாந்திமுதலானசாதனங்
களைச்சம்பாதிக்கிறது வருத்தமானபடியினா லிப்போதிருக்கிறபேர்களுக்கு
அந்தவேதாந்த சிரவணமெப்படி பலிக்குமெனில் புருஷப்ரயத்தனத்தினாற்
சாத்தியமாகுமென்று சொல்லுகிறார் | வாரீர் இராமரே இச்சமுசாரத்தி
ற்சகலமானபேர்களாலும் செம்மையாகச்செய்யப்பட்ட புருஷப்ரயத்தனத்தி
னாலெப்போதுஞ் சகலகாரியங்களு மடையப்படுகுது [அப்போதுசிறிதி
டத்திற்புருஷப்ரயத்தனம் பலியாமற்போகிறதென்னத்தினாலெனில் காரிய
ஞ்சித்திக்கிறவரைக்கும் சோம்பலினால் நடுவில்விட்டுப்போகாமலிருக்கிறபு
ருஷப்ரயத்தனமில்லாததினா லென்பதுகருத்து] இவ்வுலகத்தில்புருஷப்ரயத்
தனத்தினாலேயே சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்டும் மனவாக்குக்காயங்களு
டைய அசைவுரூபமாயுமிருக்கிற கருமத்துக்குப்பலமான ஞானமானதுசி
த்தசுத்திவழியாய் வந்திருக்கும்போது இருதயத்தில் காமக்குரோதமுதலா
னத்தினாலுண்டான சந்தாபத்தினாற் கேடுபடாமலுஞ் சந்திரனுடையகுளு
மையைப்போற் குளிர்ந்துமிருக்கிற ஜீவன்முத்திச்சுகமான துண்டாகுதே
தவிர வேறொன்றினாலும் வுண்டாகிறதில்லை [பிரமத்தையறிந்தவனு
டையசுகத்தி லணுமாத்திரமிரணிய கெற்பர்முதலானவர்களுடைய சுகமெ
ன்றுசுருதிசொல்லுகிறபடியினாலும் காமபோகத்தினாலுண்டாகிறசுகமுஞ்
சுவற்காதிபோகத்தினாலுண்டாகிறசுகமும் திரர்சையுள்ள புருஷனுடைய
சுகத்தில் பதினாறிலொருபங்குக்குச்சரியாகமாட்டாதென்று ஸ்மிருதிசொல்
லுகிறபடியினாலு மிச்சுகங்களெல்லாம் புருஷப்ரயத்தனத்தினாலேயேவுண்
டாகுதென்பது கருத்து] ※ (அ - கை) தெய்வம்பிரதிகூலமாயிருக்கும்
போதுபுருஷப்ரயத்தனம் வீணாகக்காணப்படுகுது அப்படியேநல்லகாரியங்க
ளெல்லாம் வெகுவிக்கினத்தோடேகூடினதென்று பிரசித்தியினால்புருஷ
ப்ரயத்தனம்பலிக்குமென்கிறதில் விசுவாசம்வரமாட்டாதெனில் புருஷப்ரயத்
தனத்துக்குள்ளே தெய்வமடங்கியிருக்கையு மத்தெய்வத்துக்குத்துற்பல
மாயிருக்கையுஞ் சொல்லப்போகிறதைக் கருத்தில்வைத்துக்கொண்டுதெ
ய்வத்தினுடைய சுவாதந்திரியத்தைத்தள்ளுகிறார் | புசிக்கிறது நடக்கிற
துமுதலானபுருஷப்ரயத்தனமானது அசைவுவழியாக இன்னமொருகிராமத்
தையும் திருத்திமுதலானத்தையு மடையப்பண்ணிக்கொண்டுபிரத்தியக்ஷ

மாகக்காணப்படுகின்றது மோகத்தையடைந்திருக்கிறபுத்தியில்லாதவனால் கற்பிக்கப்பட்டதெய்வமானதொன்றுமில்லை * (அ - கை) துதிக்கத்தக்கதானபுருஷ யத்தனமானதெப்படிப்பட்டதென்று கேட்கும்போது சொல்லுகிறார் மகான்களாற்சொல்லப்பட்டமார்க்கத்தில் மனவாக்குக்காயங்களாற்செய்யப்பட்ட யாதொருவியாபாரமுண்டோ அதுதான்பலத்தோடேகூடின புருஷ யத்தனம் மற்றது பயித்தியக்காரநடத்தை * எந்தப்புருஷனானவன் எந்தப்பதார்த்தத்தையிச்சிக்கிறானோ அந்தப்புருஷன் அந்தப்பதார்த்தஞ்சித்திக்கவேண்டியதற்காக சாஸ்திரத்திற்சொல்லியிருக்கிறபடிக்கு யத்தனம்பண்ணி பாதியில்விடாமற் செய்தால்வசியமாக அந்தப்பலத்தையடைகிறான் * (அ - கை) முன்சொன்னநியமத்தைத்தானேதிஷ்டாந்தங்களினால் திடப்படுத்துகிறார் | விசேஷமாயிருக்கிற ஒருபிராணியானவன்புருஷ யத்தனத்தினாலேயே மூன்றுலகத்திலுமுள்ள பாக்கியங்களினால்மூகாயிருக்கிற இந்திரபட்டத்தையடைந்தான் * விசேஷமாயிருக்கிற ஒருபிராணியானவன்புருஷயத்தனத்தினாலேயே அன்னப்பக்ஷியோடுகூடிக்கொண்டிருக்கிற பத்மாசனத்தையுடைய பிரமபட்டத்தை யடைந்தான் * ஒருபுருஷன்தன்னுடைய வலுவானபுருஷ யத்தனத்தினாலேயே கருடக்கொடியையுடையதாயிருக்கின்ற விஷ்ணுபட்டத்தையடைந்தான் * இவ்வுலகத்தில் ஒருபிராணியேபுருஷயத்தனத்தினாலேயே சந்திரனுடனும் அருத்தநாரீச்சுவரனுமிருக்கின்ற உருத்திரபட்டத்தையடைந்தான் * புருஷயத்தனமானது முன்னுண்டானதென்றுமிப்போதுண்டானதென்றுமிரண்டுவிதமாகவறியும்அதிலிப்போதுண்டானயத்தனமானது முன்னுண்டானயத்தனத்தைச்செயிக்கின்றது * (அ - கை) அனந்தகோடிகற்பகாலங்களாற்சம்பாதிக்கப்பட்டும்அனேகமாயுமிருக்கிறமுன்சென்மத்திற்செய்யப்பட்டகருமங்களுக்குஇப்போதுசெய்கிற அற்பமானபுருஷயத்தனத்தினால்நாசமெப்படிவருமெனில் | யத்தனமுள்ளவர்களாயும்வலுவான அப்பியாசமுள்ளவர்களாயும் நல்லபுத்திசந்தோஷங்களோடுகூடிக்கொண்டும்பிரளயகாலத்துக்கதிகாரியான தேவதையாயிருக்கையையடைந்துமிருக்கிற புருஷர்களால் மகாமேருமுதலான பற்வதமுந்தங்களுக்குள்ளே மறைக்கப்பட்டுப்போகின்றதுகளாகையால் முன்செய்யப்பட்ட கருமமனேகமாயிருந்தபோதிலும் அதற்கெல்லாமூலமான அஞ்ஞானமொன்றான படியினால் அதுநசிக்கும்போது அந்தக்கருமங்களும்வருத்தமில்லாமற்றானேசெயிக்கப்படுமென்கிறத்துக்குக் கேட்கவேண்டியதென்னவிருக்கின்றது * (அ - கை) இப்போதுசொன்ன அருத்தத்தை முடித்து அந்தப்புருஷ

ர்ந்தனத்தைச்சாஸ்திரப்படி செய்யாமற்போனாலுண்டாகுமனர்த்தத்தைச் சொல்லுகிறார் | சுருதிமுதலானதுகளால் நியமம் பண்ணப்பட்ட புருஷர்த்தனத்தையே எப்போதும் அவசியஞ் சம்பாதிக்கத் தக்கது அதுதான் வேண்டியபலத்தினுடைய சித்தியின்பொருட்டாகுது விரோதமானபுருஷர்த்தனமோவென்றால் அனர்த்தத்தின்பொருட்டாகுது * (அ-கை) அற்பதனங்கள் அற்ப பலங்கள் அற்பபுத்தி யுள்ளவர்களுக்கு அதிகமாயிருக்கிறதனங்கள் அதிகமானபலங்கள் அதிகமான புத்திகளுள்ளவர்களால் சாதிக்கத்தக்கபுருஷர்த்தனங்களுடையபலமானது எப்படிகிடைக்குமெனில் அவர்களுக்குந் தன்சக்தியினாற்செய்யப்பட்ட புருஷர்த்தனங்களுடையவரிசையினாலிச்சென்மத்திலாவது சென்மாந்தரத்திலாவது பலஞ்சித்திக்குது நல்லநிசையாவது கெட்டநிசையாவது ஒருவனுக்கெப்போதுமிருக்கிறதில்லை எங்கிறகருத்தினால் சாஸ்திரப்படிக்குச்செய்கிற ர்த்தனத்துக்கும் அதற்கு விரோதமாகச்செய்கிற ர்த்தனத்துக்கும் மிகவும் பலத்தினாலுண்டான பேதத்தைத்தெரிவிக்கிறார் | புருஷனுக்குச்சாஸ்திரங்களிற்சொல்லப்பட்ட ர்த்தனங்களைச்செய்யாமலிருக்கும்போது தனக்குத்தானே உண்டாயிருக்கிற ஆசைமுதலான தோஷங்களாலுண்டான கெட்டமார்க்கத்தில் தானிருக்கிறத்தினாலுண்டான தாரித்திரியம் ரோகம் பந்தமுதலானகெட்டதிசைவந்திருக்கும் போது தன்கைகால்முதலானதும் சுவாதீனமா யிருக்காததினால் நுனிவிரல்களுடையவணக்கத்தினால்சம்பாதிக்கத் தக்கதாயும் உள்ளங்கைக்குள்ளடங்கியிருக்கிறதாயுமிருக்கிற சலம் வாயில்விடத்தக்க ஒருபிந்துகூட சிரமப்பட்டுங்கிடைக்காததினால் மிகவும்பெரிதாகுது அந்தப்புருஷனுக்குத்தானே சாஸ்திரங்களிற்சொல்லப்பட்ட புருஷர்த்தனம் பலத்திருக்கும்போது தருமங்களுடையஆதிக்கத்தினாலே பிரியவிரதன்முதலான அரசாகளைப்போலஎழுதீவுக்குமதிகாரியாயிருக்கிறஒருநிசையிலிரட்சிக்கத் தக்கவர்களானபிள்ளைகளைக்குறித்து அந்தத் தீபாந்தரங்களைப்பிரிவினைபண்ணுகிறதும் பெரிதல்ல அப்படியேபுராணத்தில் பிரியவிரதர் உத்தானபாதரிவர்களிரண்டுபேருமுன்னாலேகஷ்டப்பட்டுத் தபசுபண்ணிக்கொண்டிருக்கும்போதுமேலே மண்மூடி கள்ளிமரமுளைத்திருந்து அதன்பின்பு அரசர்களாகவிருந்து வெகுசுகங்களை அனுபவித்தாரென்றுபிரசித்தமாயிருக்கின்றது. *

நான்காவதுசருக்கமுற்றிற்று.

[மற்றவை நடந்துவருகின்றன.]

னாகக்காணப்படுகின்றது மோகத்தையடைந்திருக்கிறபுத்தியில்லாதவனுங்
கற்பிக்கப்பட்டதெய்வமானதொன்றுமில்லவில்லை * (அ - கை) துதிக்கத்
தக்கதானபுருஷயத்தனமானதெப்படிப்பட்டதென்று கேட்கும்போது
சொல்லுகிறார் மகான்களாற்சொல்லப்பட்டமார்க்கத்தில் மனவாக்குக்காய
ங்களாற்செய்யப்பட்ட யாதொருவியாபாரமுண்டோ அதுதான்பலத்தோ
டேகூடின புருஷயத்தனம் மற்றது பயித்தியக்காரநடத்தை * யெந்தப்பு
ருஷனானவன் யெந்தப்பதார்த்தத்தையிச்சிக்கிறானோ அந்தப்புருஷன் அந்த
ப்பதார்த்தஞ்சித்திக்கவேண்டியதற்காக சாஸ்திரத்திற்சொல்லியிருக்கிறபடி
க்கு யத்தனம்பண்ணி பாதியில்விடாமற் செய்தாலவசியமாக அந்தப்பல
த்தையடைகிறான் * (அ - கை) முன்சொன்னநியமத்தைத்தானேசி
த்தாந்தங்களினால் திடப்படுத்துகிறார் | விசேஷமாயிருக்கிற ஒருபிராணி
யானவன்புருஷயத்தனத்தினாலேயே மூன்றுலகத்திலுமுள்ள பாக்கியங்க
ளினாலழகாயிருக்கிற இந்திரபட்டத்தையடைந்தான் * விசேஷமாயிருக்
கிற ஒருபிராணியானவன்புருஷயத்தனத்தினாலேயே அன்னப்பட்சியோடு
கூடிக்கொண்டிருக்கிற பத்மாசனத்தையுடைய பிரமபட்டத்தை யடைந்
தான் * ஒருபுருஷன்தன்னுடைய வலுவானபுருஷயத்தனத்தினாலே
யே கருடக்கொடியையுடையதாயிருக்கின்ற விஷ்ணுபட்டத்தையடைந்
தான் * இவ்வுலகத்தில் ஒருபிராணியேபுருஷயத்தனத்தினாலேயே சந்தி
ரனுடனும் அருத்தனாரீச்சுவரனுமிருக்கின்ற உருத்திரபட்டத்தையடை
ந்தான் *புருஷயத்தனமானது முன்னுண்டானதென்றுமிப்போதுண்டா
னதென்றுமிரண்டுவிதமாகவறியும் அதிலிப்போதுண்டானயத்தனமானது
முன்னுண்டானயத்தனத்தைச்செயிக்கின்றது * (அ - கை) அனந்தகோ
டிகற்பகாலங்களாற்சம்பாதிக்கப்பட்டும் அனேகமாயுமிருக்கிறமுன்சென்மத்
திற்செய்யப்பட்டகருமங்களுக்குஇப்போதுசெய்கிற அற்பமானபுருஷயத்த
னத்தினால் நாசமெப்படிவருமெனில் | யத்தனமுள்ளவர்களாயும்வலுவான
அப்பியாசமுள்ளவர்களாயும் நல்லபுத்திசந்தோஷங்களோடுகூடிக்கொண்டு
ம்பிரளயகாலத்துக்கதிகாரியான தேவதையாயிருக்கையையடைந்துமிருக்
கிற புருஷர்களால் மகாமேருமுதலான பற்வதமுந்தங்களுக்குள்ளே மறை
க்கப்பட்டுப்போகின்றதுகளாகையால் முன்செய்யப்பட்ட கருமமனேகமா
யிருந்தபோதிலும் அதற்கெல்லாமூலமான அஞ்ஞானமொன்றானபடியி
னால் அதுநசிக்கும்போது அந்தக்கருமங்களும்வருத்தமில்லாமற்றானேசெ
யிக்கப்படுமென்கிறத்துக்குக் கேட்கவேண்டியதென்ன விருக்கின்றது *
(அ - கை) இப்போதுசொன்ன அருத்தத்தை முடித்து அந்தப்புருஷ

வர்த்தனத்தைச்சாஸ்திரப்படி செய்யாமற்போனாலுண்டாகுமனர்த்தத்தைச் சொல்லுகிறார் | சுருதிமுதலானதுகளால் நியமம் பண்ணப்பட்ட புருஷ வர்த்தனத்தையே யெப்போதும் அவசியஞ் சம்பாதிக்கத் தக்கது அதுதான் வேண்டியபலத்தினுடைய சித்தியின்பொருட்டாகுது விரோதமானபுருஷ வர்த்தனமோவென்றால் அனர்த்தத்தின்பொருட்டாகுது * (அ-கை) அற்பதனங்கள் அற்ப பலங்கள் அற்பபுத்தி யுள்ளவர்களுக்கு அதிகமாயிருக்கிறதனங்கள் அதிகமானபலங்கள் அதிகமான புத்திகளுள்ளவர்களால் சாதிக்கத்தக்கபுருஷ வர்த்தனங்களுடையபலமானது எப்படிகிடைக்குமெனில் அவர்களுக்குந் தன்சத்தியினாற்செய்யப்பட்ட புருஷ வர்த்தனங்களுடையவரிசையினாலிச்சென்மத்திலாவது சென்மாந்தரத்திலாவது பலஞ்சித்திக்குது நல்லதிசையாவது கெட்டதிசையாவது ஒருவனுக்கெப்போதுமிருக்கிறதில்லை என்கிறகருத்தினால் சாஸ்திரப்படிக்குச்செய்கிற வர்த்தனத்துக்கும் அதற்கு விரோதமாகச்செய்கிற வர்த்தனத்துக்கும் மிகவும் பலத்தினாலுண்டான பேதத்தைத்தெரிவிக்கிறார் | புருஷனுக்குச்சாஸ்திரங்களிற்சொல்லப்பட்ட வர்த்தனங்களைச்செய்யாமலிருக்கும்போது தனக்குத்தானே உண்டாயிருக்கிற ஆசைமுதலான தோஷங்களாலுண்டான கெட்டமார்க்கத்தில் தானிருக்கிறத்தினாலுண்டான தாரித்திரியம் ரோகம் பந்தமுதலானகெட்டதிசைவந்திருக்கும்போது தன்கைகால்முதலானதும் சுவாதீனமாயிருக்காததினால் நுனிவிரல்களுடையவணக்கத்தினால்சம்பாதிக்கத் தக்கதாயும் உள்ளங்கைக்குள்ளடங்கியிருக்கிறதாயுமிருக்கிற சலம் வாயில்விடத்தக்க ஒருபிடி அதுகூட சிரமப்பட்டுங்கிடைக்காததினால் மிகவும்பெரிதாகுது அந்தப்புருஷனுக்குத்தானே சாஸ்திரங்களிற்சொல்லப்பட்ட புருஷவர்த்தனம் பலத்திருக்கும்போது தருமங்களுடையஆதிக்கத்தினாலே பிரியவிரதன்முதலான அரசர்களைப்போலஏழுதீவுக்குமதிகாரியாயிருக்கிறஒருதிசையிலிரட்சிக்கத் தக்கவர்களானபின்னவர்களைக்குறித்து அந்தத் தீபாந்தரங்களைப்பிரிவினைபண்ணுகிறதும் பெரிதல்லஅப்படியேபுராணத்தில் பிரியவிரதர் உத்தானபாதரிவர்களிரண்டுபேருமுன்னாலேகஷ்டப்பட்டுத் தபசுபண்ணிக்கொண்டிருக்கும்போதுமேலே மண்முடி கள்ளிமரமுளைத்திருந்து அதன்பின்பு அரசர்களாகவிருந்து வெகுசுகங்களை அனுபவித்தாரென்றுபிரசித்தமாயிருக்கின்றது. *

நான்காவதுசருக்கமுற்றிற்று.

[மற்றவை நடந்துவருகின்றன.]

பிழை திருத்தல்.

பக்கம்	வரி	பிழை	திருத்தல்	பக்கம்	வரி	பிழை	திருத்தல்
௫	௰௧	ஞல	ஞல்	௫௫	௰௯	ஞல	ஞல
	௰௨	ஞல	ஞல்	௫௮	௨௮	கும்ப	குமர
	௰௬	அதன	அதன்	௫௯	௩	லென்	லென
	௰௭	குற்றம	குற்றம்		௨௩	வேகு	வெகு
	௨௧	நநக	நந்க	௬௨	௩௰	அப	அக
	"	வமெநள	வமெநள	௬௭	௨௯	கா	கர
௬	௨	தனமி	தன்மி	௬௮	௮	ஞல்ல	ஞலல
	௫	தரா	தார	௭௧	௰௨	யடபா	யடையா
	"	தன	தன்	௭௫	௩௰	கைகி	கைக்கி
	௰௨	முதல	முதல்		௩௩	தலர	தலா
	௰௩	இதற	இதற்	௮௫	௨	ளிக	ளிலக
	௰௭	வன	வன்	௮௭	௰௭	சென்ன	செனன
	௰௯	ருப	ரு	௮௮	௨௭	கின்	கின்
௭	௰௫	ஆகம	ஆத்ம		௩௰	வர்க்	வர்க
	௨௫	டைவ	டையவ		௧	விநக்கிக்	விநக்கி
	௨௬	துறப	துற்ப	௮௯	௬	யோகி	யோகி
௮	௩௩	சஸ்	சஸ		௨௧	மரன	மான
௰௨	௩௧	பொல	போல	௯௫	௰௧	பொது	போது
௰௫	௨	ருப	ருப	௯௬	௨௧	நகிக்கி	நசிக்கி
	௬	ருப	ருப	௱௧	௰௯	யிநக்கிற்	யிநக்கிற
	௨௯	தரா	தார	௱௭	௨௪	கெம்பீர்	கெம்பீர
௨௬	௰௮	டிரு	டுமிரு	௱௰௪	௩௩	சாரவிண	சாரவிண
௨௭	௫	தால	தால்		௯	யர	யா
௨௮	௰௫	கால	கால்	௱௰௫	௨௬	பிரமர	பிரமா
௪௧	௰௬	கரல	கால	௱௨௭	௩	வன்மு	சிவன்மு
௪௪	௬	சென	சென	௱௩௪	௨௧	அவ்வத்	அவ்வாத்
௪௫	௰௯	பைந	யைப்				
௫௪	௨௰	சித்த	சித்த				

இப்புத்தகம் வேண்டியவர்கள் புதுவையில் தருமசிவ செங்குசெட்டியார்வீட்டிலும். மோரீசு - முத்துசாமிபிள்ளைவீட்டிலும் வாங்கிக்கொள்ளலாம்.

கலியுக ௵ ௪௲௯௱௪௰௫

குரோதி ௵ கார்த்திகை ௴

 இதன் விலை ரூ. ௩.